# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

**B.A TAMIL**

ஆறாம் பருவம் - **Semester VI**

# சைவசித்தாந்தம்

தொலைதூரத் தொடர்கல்வி இயக்ககம்

**DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION**

| LearningObjectives–கற்றல்மநாக்கங்கள் |
|---|
| • சைவசித்தாந்த்தின் உட்கருத்தை எடுத்துரைத்தல் |
| • அறிவு நிலைக்கு இட்டு செல்லும் சித்தாந்த மரபை கூறுதல் |
| • வேத நிலை கடந்த சமயக் கருத்துக்களை விளக்குதல் |
| • சித்தாந்த இலக்கியங்களின் தன்மையினை அறிதல் |
| • சித்தாந்த இலக்கியங்கள் எடுத்துரைக்கும் வாழ்வியல் வழுமியங்களை அறிதல். |

## பொருளடக்கம்


அலகு 1 - உண்மைவிளக்கம் 1 முதல் 26 பாடல்கள்

அலகு 2 - உண்மைவிளக்கம் 1 முதல் 26 பாடல்கள்

அலகு 3 - சிவப்பிரகாசம் 1 முதல் 50 பாடல்கள்

அலகு 4 - சிவப்பிரகாசம் 51 முதல் 75 பாடல்கள்

அலகு 5 - சிவப்பிரகாசம் 76 முதல் 100 பாடல்கள்


## அலகு - 1

## உண்மைவிளக்கம்1 முதல் 26 பாடல்கள்

## காப்பு

வண்மைதரும்ஆகமநூல்வைத்தபொருள்வழுவா
உண்மைவிளக்கம்உரைசெய்யத்- திண்மதஞ்சேர்
அந்திநிறத்தந்திமுகத்தொந்திவயிற்றைங்கரனைப்
பந்தமறப்புந்தியுள்வைப்பாம்.

**கொண்டுகூட்டு**: (நாம்) வண்மைதரும்ஆகமநூல்வைத்தபொருள்உண்மைவழுவாவிளக்கம்உரைசெய்ய,(எமது) பந்தம்அற, திண்மதம்அந்திநிறம்தந்திமுகம்தொந்திவயிறுசேர்ஐங்கரனைபுந்தியுள்வைப்பாம்.

**பதவுரை**:வண்மைதரும்ஆகமநூல்- பேரின்பமாயஉண்மைச்செல்வத்தைத்தருகின்றஆகமநூலிலே, வைத்த - ஆன்மாக்கள்உய்யும்பொருட்டுஇறைவன்அருளிச்செய்துவைத்த, பொருள்- பதிபசுபாசம்என்னும்முப்பொருள்களினதும், உண்மைவழுவாவிளக்கம் - உண்மை(யானது) சற்றேனும்தவறாமல்காட்டும்தெளிவினை, உரைசெய்ய - (இவ்வுண்மைவிளக்கம்என்னும்நூலில்) சொல்லுவதற்கும், பந்தம்அற-மலபந்தம்ஒழியும்பொருட்டும், திண்மதம்அந்திநிறம்தந்திமுகம்தொந்திவயிறுசேர்ஐங்கரனை - (ஞானாசத்திகிரியாசத்திஆகியஇரண்டு) வலியமதங்களும், செவ்வானத்தையொத்துப்பிரகாசிக்கின்றநிறமும் [பிரணவக்குறியாகிய) யானைமுகமும், பெரியவயிறும்பொருந்தியஐந்துதிருக்கரங்களையுடையவிநாயகக்கடவுளை, புந்தியுள்வைப்பாம் - நாம்எமதுசித்தத்துள்இருத்தித்தியானிப்பாம்.

மதம்மூன்றாகவும்அவற்றுள்இரண்டையேஎடுத்துக்கொண்டுஅவற்றுக்குக்கிரியாசத்திஞானாசத்தியென ப்பொருளுரைத்தமைக்குரியவிளக்கத்தைஅநுபந்தத்துட்காண்க.

**பொழிப்பு:**பதிபசுபாசஉண்மையைத்தெளிவுபடஉரைக்கவும்பாசமறுத்துவீடெய்தவும்விநாயகக்கடவுளைத்தி யானிப்போமாக.

## நூல்

### மாணாக்கனின்வினாவிண்ணப்பம்

1. பொய்காட்டிப்பொய்யகற்றிப்போதானந்தப்பொருளாம்
மெய்காட்டும்மெய்கண்டாய்விண்ணப்பம் -- பொய்காட்டா
மெய்யா! திருவெண்ணெய்வித்தகா! சுத்தவினா
வையாநீதான்கேட்டருள்.

**கொண்டுகூட்டு** : (பக்குவான்மாவுக்குப்) பொய்காட்டி,பொய்அகற்றி, போதஆனந்தப்பொருளாம்மெய்காட்டும்மெய்கண்டாய்,

(அபக்குவான்மாவுக்கு)பொய்காட்டாமெய்யா,திருவெண்ணெய்வித்தகா, ஐயா, நீதான்சுத்தவினாவிண்ணப்பம்கேட்டருள்.

**பதவுரை**:பொய்காட்டி-பக்குவான்மாவுக்குத்தநுகரணபுவனபோகங்கள்பொய்எனக்காட்டி, பொய்அகற்றி - அப்பொய்அனுபவங்களைஆன்மாபெற்றுக்கொள்ளுவதினின்றும்நீக்கி, போதஆனந்தப்பொருளாம்மெய்காட்டும் - (அங்ஙனம்நீங்கச்செய்தவிடத்துப்பரிசுத்தமாய்நின்ற) ஆன்மாவின்அறிவிலேபேரானந்தம்தந்தருளுகின்றஇறைவனின்உண்மைஇயல்பினைவிளக்கியருளுகின்ற, மெய்கண்டாய் - (சுவேதவனப்பெருமாள்என்னும்இயற்பெயரையுடையமெய்கண்டநாதனே,பொய்காட்டாமெய்யா- (அபக்குவான்மாவுக்குப்) பொய்யைவிளக்கிக்காட்டாதசத்தியத்தைஉடையவனே, திருவெண்ணெய்வித்தகா - திருவெண்ணெய்நல்லூரிலேஎழுந்தருளியிருக்கின்றஞானதேசிகனே, ஐயா - தலைவனே, சுத்தவினாவிண்ணப்பம்நீதான்கேட்டருள் - எனதுபரிசுத்தமானவினாமுறையில்அமைந்தவேண்டுகோளைநீதிருச்செவிசாய்த்துஅருளவேண்டும்.

**பொழிப்பு**:பக்குவர்களுக்குப்பொய்யகற்றிமெய்அருளுகின்றதிருவெண்ணெய்மெய்கண்டதேசிகனேநீஅடியேனதுவினாவாய்அமைந்தவிண்ணப்பத்தைக்கேட்டருளுவாயாக.

### மாணாக்கனின்வினாக்கள்

2.ஆறாறு தத்துவமேதாணவமேதன்றேதான்
மானாவினையேதுமற்றிவற்றின் -வேறாகா
நானேதுநீயேதுநாதன்நடம்அஞ்செழுத்துத்
தானேதுதேசிகனேசாற்று.

**கொண்டுகூட்டு**:தேசிகனே, ஆறுஆறுதத்துவம்ஏது? அன்றே (உளதாய்இன்றுவரையும்) தான்மாறாஆணவம்ஏது? வினைஏது? (மற்று) இவற்றின்வேறுஆகாநான் (ஆன்மா) ஏது? நீ (பதி) ஏது? நாதன்நடம்ஏது? அஞ்சுஎழுத்துத்தான்ஏது? (நீ) சாற்று.

**பதவுரை**:தேசிகனே - எனதுஞானாசிரியனே, ஆறுஆறுதத்துவம்ஏது - முப்பத்தாறுதத்துவங்கள்எனச்சொல்லப்படுபவையாவை? அன்றேதான்மாறஆணவம்ஏது - அநாதியேஆன்மாவோடுஉளதாய்இன்றுவரைவிட்டுநீங்காதஆணவமலம்யாது? வினைஏது - வினைஎன்றுசொல்லப்படுவதுயாது?(மற்று) இவற்றின்வேறுஆகாநான்ஏது? - இம்மும்மலங்களைப்பற்றிநின்றவிடத்துஇவற்றின்வேறாகாமல்இவையேயாய்நின்றஎனதுசொரூபஇலக்கண

ம்யாது? நீரேது- இறைவனதுசொரூபஇலக்கணம்யாது? நாதன்நடம்ஏது- ஆன்மநாதனாகியஇறைவனதுதிருநடனம்யாது? அஞ்செழுத்துத்தான்ஏது - திருவைந்தெழுத்தின்உண்மைப்பொருள்யாது? (நீ) சாற்று - (இவ்வினாக்களுக்குரியவிடைகளைநீ) சொல்லியருளுவாயாக.

'நாதன்நடம்அஞ்செழுத்துத்தானேது?' என்பதனை 'நாதன்நடம்ஏது?' 'அஞ்செழுத்துஏது?' 'தான்ஏது?' எனமூன்றுவினாக்களாகவகுத்துக்கொண்டுஅவற்றுள் 'தான்ஏது?' என்பதற்குஇறைவன்தானேயாய்நிற்கும்அத்துவிதமுத்தியின்இலக்கணம்யாது?" எனவும்பொருள்கொள்ளலாம்.

பொழிப்பு:ஆறாறுதத்துவம்,ஆணவம், வினை, ஆன்மா, பதி, திருநடனம், திருவைந்தெழுத்துஎன்பனயாவை? ஞானாசிரியனேகூறுவாயாக.

## தேசிகனின்முன்னுரை

3. உள்ளபடிஇத்தைஉரைக்கக்கேள்உன்றனக்கு
வள்ளலருளாலன்றுவாய்மலர்ந்து - தெள்ளியசீர்
ஆகமங்கள்சொன்னஅடைவிலேஆனந்த
யோகம்நிகழ்புதல்வாஉற்று.

கொண்டுகூட்டு:ஆனந்தயோகம்நிகழ்புதல்வா, உன்றனக்கு, வள்ளல்அருளால்அன்றுவாய்மலர்ந்துசொன்னசீர்ஆகமங்கள்உள்ளபடி, அடைவிலேதெளிய, இத்தைஉரைக்கஉற்றுக்கேள்.

**பதவுரை:**ஆனந்தயோகம்நிகழ்புதல்வா - பேரானந்தநிலையைப்பொருந்திஇருப்பதற்குப்பக்குவமானமாணாக்கனே, உன்றனக்கு- உனக்கு, வள்ளல்அருளால்-பரோபகாரியானஇறைவன்தம்மிடம்இயல்பாகவேபொருந்தியிருக்கும்பேரருளினாலே, அன்றுவாய்மலர்ந்துசொன்ன - அநாதியேதிருவாய்மலர்ந்தருளிய, சீர்ஆகமங்கள்உள்ளபடிஅடைவிலேதெளிய - சிறப்புப்பொருந்தியசிவாகமங்களில்உள்ளஉண்மைஇருந்தபடிமுறைமையாகத்தெளியும்பொருட்டு, இத்தைஉரைக்கஉற்றுக்கேள்- இதனை (-நீகேட்டவினாக்களுக்குஉரியவிடைகளை) யான்சொல்லப்புலவொடுக்கத்தோடுகேட்பாயாக.

**பொழிப்பு:**மாணாக்கனே,

இறைவன்அருளியஆகமங்களில்உள்ளபடிஇதனையான்தெளிவாகச்சொல்லநீகேட்பாயாக.

### ஐம்பூதவடிவும்அவற்றாலாம்உடம்பும்

4. நாற்கோணம்பூமிபுனல்நண்ணுமதியின்பாதி
ஏற்குமனல்முக்கோணம்எப்போதும் - ஆர்க்கும்
அறுகோணங்கால்வட்டம்ஆகாயம்ஆன்மா
உறுகாயம்ஆமிவற்றால்உற்று.

**கொண்டுகூட்டு** :பூமிநாற்கோணம்(நண்ணும்), புனல்மதியின்பாதிநண்ணும், அனல்முக்கோணம்ஏற்கும்,கால்எப்போதும்அறுகோணம்ஆர்க்கும், ஆகாயம்வட்டம் (ஆர்க்கும்), ஆன்மாஉற்றுஉறுகாயம்இவற்றால்ஆம்.

**பதவுரை:**பூமிநாற்கோணம் (நண்ணும்)-நிலம்நாற்கோணமாய்இருக்கும், புனல்மதியின்பாதிநண்ணும் - நீர்பாதிச்சந்திரனைப்போன்றதாய் (நிலத்தில்)அமைந்திருக்கும்,அனல்முக்கோணம்ஏற்கும் - தீமுக்கோணவடிவினைப்பொருந்திநிற்கும்,கால்எப்போதும்அறுகோணம்ஆர்க்கும் - காற்றுஎக்காலமும்ஆறுகோணமாகஇருக்கும்,ஆகாயம்வட்டம் (ஆர்க்கும்) - ஆகாயம்வட்டவடிவத்தைப்பொருந்தும்,ஆன்மாஉற்றுஉறுகாயம்இவற்றால்ஆம் - ஆன்மாவானதுவேறுபடப்பொருந்திநிற்கும்உடம்புஇந்தஐம்பூதங்களினால்உண்டாகும்.

**பொழிப்பு:**நாற்கோணம்பாதிமதிமுக்கோணம்அறுகோணம்வட்டம்என்னும்வடிவங்களைமுறையேபொருந்தி னநிலம்நீர்தீகாற்றுஆகாயம்என்னும்தூலபஞ்சபூதங்களினால்உடம்புஆனது.

### ஐம்பூதநிறமும்எழுத்தும்

5. பொன்பார்புனல்வெண்மைபொங்குமனல்சிவப்பு
வன்கால்கருமைவளர்வான்றூமம் - என்பார்
எழுத்துலவரயவப்பாராதிக்கென்றும்
அழுத்தமாய்நிற்குமது.

**கொண்டுகூட்டு :**பார்பொன், புனல்வெண்மை, பொங்கும்அனல்சிவப்பு, வன்கால்கருமை, வளர்வான்தூமம், என்பார்,பார்ஆதிக்குஎழுத்துலவரய அ,அதுஎன்றும்அழுத்தமாய்நிற்கும்.

**பதவுரை:**பார்பொன் - நிலம்பொன்நிறமானது,புனல்வெண்மை-நீர்வெண்மைநிறமானது. பொங்கும்அனல்சிவப்பு - மேல்எழுந்துஎரிகின்றதீசிவப்புநிறமானது, வன்கால்கருமை -

வலிமைபொருந்தியகாற்றுகருமையானது, வளர்வான்தூமம் - மேன்மேலும்விரிந்துசெல்வதாய்க்காணப்படும்ஆகாயம்புகைநிறமானதுஎன்பார்என்றுபெரியோர்கூறுவார்கள். பார்ஆதிக்குஎழுத்துலவரயலவரய அ-நிலத்துக்குலகரமும்நீருக்குவகரமும்தீயுக்குரகரமும்காற்றுக்குயகரமும்ஆகாயத்துக்குஅகரமும்பொருந்தியஎழுத்துக்களாம். அதுஎன்றும்அழுத்தமாய்நிற்கும். அவ்வெழுத்துக்கள்எப்போதும்அவற்றைஉறுதியாகப்பொருந்திநிற்பனவாம்.

**பொழிப்பு:**நிலம்நீர்தீகாற்றுஆகாயம்ஆகியஐம்பூதங்களுக்கும்முறையேபொன், வெண்மை, சிவப்பு,கருமை,தூமம்ஐந்தும்உரியநிறங்களாம்; லவரயஅஐந்தும்அழுத்தமாய்ப்பொருந்தியஎழுத்துக்களாம்.

## ஐம்பூதஅடையாளம்

6. குறிகுலிசங்கோகநதங்கொள்சுவத்திகுன்றா
அறுபுள்ளியாரமுதவிந்துப் - பிறிவின்றி
மண்புனல்தீக்கால்வானம்மன்னும்அடைவேயென்
றொண்புதல்வாவாகமமோதும்.

**கொண்டுகூட்டு** :ஒண்புதல்வா, மண்புனல்தீகால்வானம் (என்பவற்றின்) குறிஅடைவே; குலிசம், கோகநதம், கொள்சுவத்தி, குன்றாஅறுபுள்ளி, ஆர்அமுதவிந்து; (இவை) பிறிவுஇன்றிமன்னும்என்றுஆகமம்ஓதும்.

**பதவுரை**:ஒண்புதல்வா - நல்லமாணவனே, மண்புனல்தீகால்வானம் (என்பவற்றின்) குறி: நிலம்நீர்தீகாற்றுஆகாயம்என்பவற்றின்அடையாளம், அடைவே-முறையே, குலிசம்வச்சிரமும், கோகநதம்-தாமரைமலரும். கொள்சுவித்தி - பொருந்தியசுவத்திகமும், குன்றாஅறுபுள்ளி - குறைவுபடாதஆறுபுள்ளியும், ஆர்அமுதவிந்து - பொருந்தியஅமுதத்துளியும்ஆகும்; (இவை) பிறிவுஇன்றிமன்னும்என்றுஆகமம்ஓதும்.இவைவேறுபடுதலின்றிப்பொருந்திநிலைபெற்றிருக்கும்என்றுஆகமம்உரைக்கும்.

சுவத்திகம்- ஓர்அடையாளம், அதுநான்குவிரலும்தம்முள்ஒட்டிநிமிரப்பெருவிரல்குந்தநிறுத்திநிற்கும்பதாகைக்கைஇரண்டினையும்மணிக்கட்டில்ஏற்றிவைக்கும்ஒருவகைஇணைப்புக்குறியாம்.

**பொழிப்பு:**நிலம்நீர்தீகாற்றுஆகாயம்ஆகியஐம்பூதங்களுக்கும்முறையேவச்சிரம், தாமரைமலர், சுவத்திகம், அறுபுள்ளி,அமுதத்துளிஎன்பனஅடையாளங்களாய்ப்பொருந்திநிலைபெற்றிருக்கும்.

## ஐம்பூதத்துக்கும்அதிதெய்வமுந்தொழிலும்

7. பாராதிஐந்துக்கும்பன்னுமதிதெய்வங்கள்
ஆராரயனாதியைவராம் - ஓரோர்
தொழிலவர்க்குச்சொல்லுங்கால்தோற்றமுதலைந்தும்பழுதறவேபண்ணுவர்காண்பார்.

**கொண்டுகூட்டு** : (மாணாக்கனேபன்னும்பார்ஆதிஐந்துக்கும்அதிதெய்வங்கள்ஆர்ஆர்? எனில், அவர்:) அயன்ஆதிஐவராம்; அவர்க்குஓர்ஓர்தொழில்சொல்லுங்கால் (அவைதோற்றம்முதல்ஐந்தும் (ஆம்); (அவைகளைஅவர்கள்) பழுதுஅறவேபண்ணுவர்காண் (-பார்.)

**பதவுரை** :பன்னும்பார்ஆதிஐந்துக்கும்அதிதெய்வங்கள்ஆர்ஆர் - சொல்லப்படுகின்றநிலம்நீர்தீகாற்றுஆகாயம்என்னும்ஐம்பூதங்களுக்கும்மேலானதெய்வங்கள்யாவரெனில், அயன்ஆதிஐவராம் -அவர்கள்முறையேபிரமாவிஷ்ணுஉருத்திரன்மகேசுரன்சதாசிவன்என்போராவர்; அவர்க்குஓர்ஓர்தொழில்சொல்லுங்கால்தோற்றம்முதல்ஐந்தும்ஆம்- அவர்களுக்குப்பொருந்தியஒவ்வொருதொழில்சொல்லுமிடத்து, அவைமுறையேபடைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்என்னும்ஐந்துமாம்; பழுதுஅறவேபண்ணுவர்காண்பார்- அவர்கள்தத்தம்தொழில்களைப்பிழையறச்செய்வார்கள்என்றுஅறிவாயாக.

**பொழிப்பு:**நிலம்நீர்தீகாற்றுஆகாயம்ஆகியஐம்பூதங்களுக்கும்ஆதிதெய்வங்கள்முறையேபிரமாவிஷ்ணுஉருத்திரன்மகேசுரன்சதாசிவன்என்போராவர்.

அவர்கள்படைத்தல்முதலியஐந்தொழில்களுள்ஒவ்வொருதொழிலைப்பொருந்துவர்.

## இதுவுமது

8. படைப்பனயனளிப்பன்பங்கயக்கண்மாயன்
துடைப்பனுருத்திரனுஞ்சொல்லில்- திடப்பெறவே
என்றுந்திரோபவிப்பரீசர்சதாசிவரும்
அன்றேயனுக்கிரகராம்.

**கொண்டுகூட்டு** :சொல்லில், அயன்படைப்பன்; பங்கயக்கண்மாயன்அளிப்பன்; உருத்திரன் (+உம்) துடைப்பன்: ஈசர்என்றும்திடம்பெறவேதிரோபவிப்பர்; சதாசிவர் (+உம்) அன்றேஅனுக்கிரகர்ஆம்

**பதவுரை**:சொல்லில் -ஒவ்வொருவருக்கும்அவ்வவர்தொழிலைப்பொருந்தச்சொல்லுமிடத்து; அயன்படைப்பன்- பிரமாபடைத்தலைச்செய்வர்; பங்கயக்கண்மாயன்அளிப்பன் - செந்தாமரைமலர்போலும்கண்களையுடையவிஷ்ணுகாத்தலைச்செய்வர்; உருத்திரன்துடைப்பன் - உருத்திரமூர்த்திஅழித்தலைச்செய்வர்; ஈசர்என்றும்திடம்பெறவேதிரோபவிப்பர்-

மகேசுவரமூர்த்திஎக்காலமும்நிச்சயமாகவேமறைத்தலைச்செய்வர், சதாசிவர்அன்றேஅனுக்கிரகராம்-சதாசிவமூர்த்திஅநாதியாகவேஅருளலைச்செய்பவராம்.

**பொழிப்பு:**பிரமன்படைத்தலையும், விஷ்ணுகாத்தலையும், உருத்திரன்அழித்தலையும், மகேசுவரர்மறைத்தலையும், சதாசிவர்அருளலையும்செய்வர்.

## ஐம்பூதஇயல்பு

9. மண்கடினமாய்த்திரிக்கும்வாரிகுளிர்ந்தேபதமாம்
ஒண்கனல்சுட்டொன்றுளிக்கும்ஓவாமல் - வண்கால்
பரந்துசலித்துத்திரட்டும்பார்க்கிலாகாயம்
நிரந்தரமாய்நிற்கும்நிறைந்து.

**கொண்டுகூட்டு** :பார்க்கில், மண்கடினமாய்த்திரிக்கும்; வாரிகுளிர்ந்து (+ ஏ) பதமாம்; ஒண்கனல்கட்டுஒன்றுவிக்கும்; வண்கால்ஓவாமல்பரந்துசலித்துத்திரட்டும்; ஆகாயம்நிரந்தரமாய்நிறைந்துநிற்கும்.

**பதவுரை:**பார்க்கில்ஐம்பூதங்களின்இயல்பைஆராய்ந்துபார்க்குமிடத்து, மண்கடினமாய்த்திரிக்கும் -நிலம்பொருள்களிடத்துக்கடினமானகுணத்தைக்கொடுத்துநிற்கும் (இயல்பினையுடையதாம்). வாரிகுளிர்ந்து (+ஏ) பதமாம் -நீர்விடயங்களிற்குளிர்ச்சியுடையதாய்நெகிழ்வுபொருந்திநிற்கும் (இயல்பினையுடையதாம்); ஒண்கனல்சுட்டுஒன்றுவிக்கும் -ஒளிபொருந்தியதீவிடயங்களில்சுடுதலைச்செய்துஅவைகளைச்சேரச்செய்துநிற்கும் (இயல்பினையுடையதாம்); வண்கால்ஓவாமல்பரந்துசலித்துத்திரட்டும் -வளப்பம்பொருந்தியகாற்றுநீங்குதலின்றிஎங்கும்பரந்துஅசைந்துஒலித்துவிடயங்களைத்திரட்டிநிற்கும் (இயல்பினையுடையதாம்); ஆகாயம்நிர்ந்தரமாய்நிறைந்துநிற்கும் -ஆகாயம்எப்பொழுதும்எவ்விடயங்களும்நடைபெறுதற்குஇடங்கொடுத்து(அதனால்நிறைவுடையதாய்நிற்கும் (இயல்பினையுடையதாம்)

**பொழிப்பு:**நிலம்கடினகுணத்தையும்நீர்குளிர்ச்சிபொருந்தியநெகிழ்ச்சியையும், தீசுட்டுஒன்றுவித்தலையும், காற்றுஎங்கும்பரந்துவிடயங்களைத்திரட்டுதலையும், ஆகாயம்எல்லாவிடயங்களும்நடைபெறு தற்குஇடமாய்நிறைந்துநிற்றலையும்இயல்பாகப்பொருந்தியுள்ளன,

## ஐம்புலன்

10. உள்ளபடிமாபூதம்ஓதினோம்உன்றனக்குக்

கள்ளமிகும்ஐம்புலனுங்கட்டுரைக்கில் - மெள்ளவே
ஓசைபரிசம்உருவம்சுவைநாற்றம்
ஆசைதரும்ஐம்புலனேயாம்.

**கொண்டுகூட்டு** : உன்றனக்குமாபூதம்உள்ளபடிஓதினோம்; (இனி) கள்ளம்மிகும்ஐம்புலனும்மெள்ள (+ஏ) கட்டுரைக்கில், ஓசைபரிசம்உருவம்சுவைநாற்றம் (ஆம்இவை ) ஆசைதரும்ஐம்புலன் (+ஏ) ஆம்.

**பதவுரை**:உன்றனக்குமாபூதம்உள்ளபடிஓதினோம்(மாணவகனே) இதுவரைஉனக்குப்பஞ்சபூதங்களையும்அவற்றின்உண்மைஇயல்புகளையும்அவைபொருந்தியிருந்தபடிஉரைத்தோம்; (இனி) கள்ளம்மிகும்ஐம்புலனும்மெள்ள (+ஏ) கட்டுரைக்கில் - இனிநேரியநெறியிற்செல்லாமல்இழிந்தகள்ளவழியிலேஆன்மாவைஇட்டுச்சென்றுதீமைவிளைக்கின்றஐந்துபுலன்களைச்சொல்லுமிடத்து, ஓசைபரிசம்உருவம்சுவைநாற்றம்ஆம் (இவை) ஓசையும்ஊறும்ஒளியும்சுவையும்நாற்றமும்ஆகியஇவை, ஆசைதரும்ஐம்புலன் (+ஏ) ஆம்- ஆன்மாவுக்குநிலையற்றஉலகவிடயங்களில்ஆசையைஉண்டாக்குகின்றஐம்புலன்களாம்.

**பொழிப்பு**:சத்தம்பரிசம்உருவம்இரசம்கந்தம் (ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்) என்பனஐந்தும்ஐம்புலன்களாம். இவைஆன்மாவுக்குஉலகவிடயங்களில்ஆசையைவிளைவிப்பன.

## ஐம்பொறிகள்

11.ஞானேந்திரியங்கள்நன்றாவுரைக்கக்கேள்
ஊனமிகுபூதம்உற்றிடமா - ஈனமாம்
சத்தாதியையறியுந்தானஞ்செவிதோல்கண்
அத்தாலுமூக்கென்றறி.

**கொண்டுகூட்டு** : (மாணாக்கனே) ஞானஇந்திரியங்கள்நன்றா(க) உரைக்கக்கேள்; (அவை) ஊனம்மிகுபூதம்இடமாஉற்று, ஈனம்ஆம்சத்தம்ஆதியைஅறியும்தானம் (ஆகிய) செவிதோல்கண்அத்தாலுமூக்குஎன்றுஅறி.

**பதவுரை**:ஞானஇந்திரியங்கள்நன்றா(க) உரைக்ககேள் - மாணாக்கனே (ஐம்புலன்களைச்சொன்னோம்இனி) ஐம்பொறிகளைநன்றாகச்சொல்லுகிறோம்கேட்பாயாக; (அவை) ஊனம்மிகுபூதம்இடமாஉற்றுஅவ்வைம் = பொறிகளும்ஆன்மாவுக்குத்துன்பத்தைமிகுதியாகச்செய்கின்றபஞ்சபூதங்கள்இடமாகப்பொருந்திநின்று, ஈனம்ஆம்சத்தம்ஆதியைஅறியும் -இழிவுஉடையசத்தம்முதலியபுலன்களைஅறிகின்ற, தானம் (ஆகிய) செவிதோல்கண்அத்தாலுமூக்குஎன்றுஅறி - இடங்களாகியகாதும்தோலும்கண்ணும்நாக்கும்மூக்கும்என்றுஅறிவாயாக.

**பொழிப்பு:**ஐம்பொறிகள்: பஞ்சபூதங்களிடமாகப்பொருந்திநின்றுசத்தம்முதலியபுலன்களைஅறிகின்றஇடங்களாகியகாதுதோல்கண்நாக்குமூக்குஎன்னும்ஐந்துமாம்.

## ஐம்பொறிகளின்புலன்களும்அவைபஞ்சபூதங்களில்தொடர்புறுமாறும்

12. வானிடமாநின்றுசெவிமன்னும்ஒலியதனை
ஈனமிருந்தோல்கால்இடமாக - ஊனப்
பரிசந்தளையறியும்பார்வையிற்கண்அங்கி
விரவியுருவங்காணுமே.

**கொண்டுகூட்டு :**செவிவான்இடமா(க) நின்றுமன்னும்ஒலிஅதனைஅறியும்; ஈனம்மிகும்தோல்கால்இடமாக (நின்று) ஊனப்பரிசம்தனைஅறியும்; பார்வையில்கண்அங்கிவிரவி (நின்று) உருவம்காணும் (+ஏ).

**பதவுரை:**செவிவான்இடமா(க) நின்றுமன்னும்ஓவிஅதனைஅறியும் - செவியானதுஆகாயத்தைப்பொருந்திநின்றுவிளங்குகின்றசத்தத்தைஅறியும்; ஈனம்மிகும்தோல்கால்இடமா(க) (நின்று) ஊனப்பரிசம்தனைஅறியும் - இழிந்ததன்மையைஅதிகமாகவுடையதோலானதுகாற்றைப்பொருந்திநின்றுகுறைவுபாடுடையபரிசத்தைஅறியும்! பார்வையில்கண்அங்கிவிரவி (நின்று) உருவம்காணும் (+ஏ) - பார்க்கும்சக்தியுடையதாகியகண் (நெருப்பின்) ஒளியைப்பொருந்திஉருவத்தைஅறியும்.

**பொழிப்பு:**செவிஆகாயத்தின்தொடர்பால்சத்தத்தையும், தோல்காற்றின்தொடர்பால்பரிசத்தையும், கண்ஒளியின்தொடர்பால்உருவத்தையும்அறியும்.

### இதுவுமது

13, நன்றாகநீரிடமாநாவிரதந்தானறியும்
பொன்றாமணம்மூக்குப்பூவிடமா-நின்றறியும்
என்றோதுமன்றேயிறையாகமமிதனை
வென்றார்சென்றாரின்பவீடு,

**கொண்டுகூட்டு** :நா (தான்) நீர்இடமா(க) நின்றுஇரதம்நன்றாகஅறியும்; மூக்குபூஇடமா(க) நின்றுபொன்றாமணம்அறியும்; என்றுஇறைஆகமம்அன்றேஓதும்; இதனைவென்றார்இன்பவீடுசென்றார்.

**பதவுரை:**நா (தான்) நீர்இடமா(க) நின்றுஇரதம்நன்றாகஅறியும் - நாக்குநீரைப்பொருந்திநின்றுஇரதத்தைநன்குஅறியும்; மூக்குபூஇடமா(க) நின்றுபொன்றாமணம்அறியும்-

மூக்குநிலத்தைப்பொருந்திநின்றுகெடாதகந்தத்தைஅறியும்; என்றுஇறைஆகமம்அன்றேஓதும் - என்றுஇவ்வாறுசிவாகமங்கள்அநாதியேஉரைக்கும்; இதனைவென்றார்இன்பவீடுசென்றார்இப்பஞ்சப்புலன்களின்வழிச்செல்லாமல்அவற்றைவென்றுநின்றவர்கள் பேரானந்தப்பேறுதவும்முத்தியைப்பெற்றோராவர்.

("புலன்அடக்கித்தம்முதற்கண்புக்குறுவார்போதார், தலம்நடக்கும்ஆமைதக" என்னும்திருவருட்பயனாசிரியர்கூற்றும், "உரனென்னுந்தோட்டியான்ஓரைந்துங்காப்பான், வரன்என்னும்வைப்பிற்கோர்வித்து." என்னும்வள்ளுவர்வாய்மொழியும்ஈண்டுப்பொருத்திஉணரத்தக்கன. புலன்வென்றார்தப்பாமலேவீட்டின்பந்துய்ப்பார்என்னுந்தெளிவுபற்றிவந்ததுணிவுகாட்டச் 'சென்றார்' எனஇறந்தகாலத்தாற்கூறினார்.- (மலர்மிசைஏகினான்' என்புழிப்போல.)

**பொழிப்பு:**நாக்குநீரின்தொடர்பால்இரத்தத்தையும். மூக்குநிலத்தின்தொடர்பால்கந்தத்தையும்அறியும். இவ்வைம்புலன்களையும்வென்றவர்கள்பேரின்பமடைவர்.

## கன்மேந்திரியங்களும்அவற்றின்இயல்பும்

14. கண்ணுதல்நூலோதியிடுங்கன்மேந்திரியங்கள்
எண்ணும்வசனாதிக்கிடமாக- நண்ணியிடும்
வாக்குப்பாதம்பாணிமன்னுகுதம்உபத்த
மாக்கருதுநாளுமது.

**கொண்டுகூட்டு**:மன்னும்வாக்குபாதம்பாணிகுதம்உபத்தமா(க) நாளும்கருதும்கன்மஇந்திரியங்கள் (அது) - நாளும்எண்ணும்வசனம்ஆதிக்குஇடம்ஆகநண்ணியிடும், (என்று) கண்ணுதல்நூல்ஓதியிடும்.

**பதவுரை**:மன்னும்வாக்குபாதம்பாணிகுதம்உபத்தமா(க) நாளும்கருதும்கன்மஇந்திரியங்கள் (அது) - பொருந்தியவாக்கும்பாதமும்கையும்மலவாயிலும் (ஆண்பெண் ) குறியும்எனஎப்போதும்மதிக்கப்படுகின்றகன்மேந்திரியங்களாகியஅவைஐந்தும், எண்ணும்வசனம்ஆதிக்குஇடம்ஆகநண்ணியிடும் - நினைக்கப்படுகின்றவசனித்தல்நடத்தல்தானஞ்செய்தல்சுழித்தல்இன்புறுதல்ஆகியஐந்தினுக்கும்இடமாகப்பொருந்திநிற்கும்; (என்று) கண்ணுதல்நூல்ஓதியிடும்என்றுஇங்ஙனம்இறைவனருளியஆகமநூல்கள்சொல்லும்.

(அது - ஒருமைப்பன்மைமயக்கம், வாக்கு -ஆகுபெயராய்வாயைக்குறித்துநின்றது. பாணி - கை. குதம்-மலவாயில்,உபத்தம் -ஆண்பெண்குறி. கழித்தல்என்றதுமல (சல) நீக்கம்செய்தல்என்றபடி.)

**பொழிப்பு:**வாக்குபாதம்பாணிபாயுஉபத்தம்ஆகியஐந்துகன்மேந்திரியங்களும்முறையேவசனம்நடைதானம்கழிவுஆனந்தம்என்பவற்றுக்குஇடமாகநிற்கும்.

## கன்மேந்திரியங்கள்தூலபஞ்சபூதங்களைப்பொருந்திஇயங்குமாறு

15. வாக்காகாயம்இடமாவந்துவசனிக்குங்கால்
போக்காருங்காற்றிடமாப்புல்கியனல்-ஏற்கும்
இடுங்கைகுதநீரிடமாமலாதி
விடும்பாரிடமுபத்தம்விந்து

**கொண்டுகூட்டு**:வாக்குஆகாயம்இடமா(க) வந்துவசனிக்கும்; கால்காற்றுஇடமா(க)ப்போக்குஆரும்; கைஅனல்புல்கிஏற்கும். இடும்; குதம்நீர்இடமா(க) மலம்ஆதிவிடும்; உபத்தம்பார்இடம்விந்து (விடும்),

**பதவுரை**:வாக்குஆகாயம்இடமா(க) வந்துவசனிக்கும்-வாய்ஆகாயம்இடமாகப்பொருந்திநின்றுவார்த்தைபேசும்; கால்காற்றுஇடமா(க)ப்போக்குஆரும் -பாதம்காற்றினிடமாகப்பொருத்திநின்றுநடத்தல்செய்யும்; கைஅனல்புல்கிஏற்கும், இடும் -கைதீயின்இடமாகப்பொருந்திநின்றுஏற்றலும்ஈதலும்செய்யும்; குதம்நீர்இடமா(க) மலம்ஆதிவிடும்-மலவாயில்நீரைப்பொருந்திநின்றுமலம் (சலம்) கழிக்கும்; உபத்தம்பார்இடம்விந்து (விடும்)- (ஆண்பெண்) குறிநிலத்தினிடமாகப்பொருந்திநின்றுதாதினைவிட்டுஇன்பமடையும்

**பொழிப்பு:**வாக்குஆகாயத்தையும், கால்காற்றையும், கைஅனலையும், குதம்நீரையும்உபத்தம்நிலத்தையும்பொருந்திநின்றுமுறையேபேசுதலையும்நடத்தலையும்ஈதலேற்றலையும் மலசலவிமோசனத்தையும்விந்துவிடுதலையும்செய்யும்.

## அந்தக்கரணங்களும்அவற்றினியல்பும்

16. அந்தக்கரணமடைவேயுரைக்கக்கேள்
அந்தமனம்புத்தியுடனாங்காரம் - சிந்தையிவை
பற்றியதுநிச்சயித்துப்பல்காலெழுந்திருந்தங்
குற்றதுசிந்திக்குமுணர்

**கொண்டுகூட்டு** : (மாணவகனே) அந்தக்கரணம்அடைவேஉரைக்கக்கேள், அந்தமனம்புத்திஆங்காரம்உடன்சிந்தைஇவை (அந்தக்கரணமாம்); இவற்றுள் (மனம்) பற்றியது (புத்தி) நிச்சயித்து (ஆங்காரம்) பல்கால்எழுந்துஇருந்து (ஊக்குவிக்க) (சித்தம்) அங்குஉற்றதுசிந்திக்கும் (என்றுநீ ) உணர்.

**பதவுரை**:அந்தக்கரணம்அடைவேஉரைக்கக்கேள்மாணவகனே,
(கன்மேந்திரியங்களைப்பற்றிச்சொன்னோம்இனி)

அந்தக்கரணங்களைப்பற்றிமுறையேசொல்லுகிறோம்கேட்பாயாக;

அந்தமனம்புத்திஆங்காரம்உடன்சிந்தைஇவை (அந்தக்கரணமாம்) அந்தமனம்புத்திஅகங்காரம்என்பவற்றுடன்சித்தமும்சேரஇந்நான்கும்அந்தக்கரணங்களாகும்; (இவற்றுள்மனம்) பற்றியது - இந்நான்கினுள்மனமானதுவிரும்பிச்சேர்த்துக்கொண்டவிடயத்தை, (புத்தி) நிச்சயித்து - புத்திஆராய்ந்துவரையறைசெய்துஉறுதியாய்நிற்க, (ஆங்காரம்) பல்காலெழுந்துஇருந்துஅகங்காரம்இதனைச்செய்வேன்எனப்பலமுறையும்எழுந்திருந்துஊக்குவிக்க, (சித்தம்) அங்குஉற்றதுசிந்திக்கும்(என்றுநீ ) உணர் - சித்தம்அதன்பயனாய்அங்கேநிகழ்ந்தவிடயத்தைச்சிந்தித்துமுடிந்தமுடிபாகஏற்றுக்கொள்ளும்என்றுநீஉணர்வாயாக.

## ஆன்மதத்துவங்கள்இருபத்துநான்கு

17. ஓதியிடும்நாலாறுமுற்றான்மதத்துவமென்
றாதியருணூல்அறையுங்காண் - தீதறவே
வித்தியாதத்துவங்கள்தன்மைவிளம்பக்கேள்
உத்தமனேநன்றாவுனக்கு,

**கொண்டுகூட்டு**:உத்தமனே. ((முன்) ஓதியிடும்நாலாறும்உற்றுஆன்மதத்துவம்என்றுஆதிஅருள்நூல்அறையும்காண்: (இனி) வித்தியாதத்துவங்கள் (அவற்றின்) தன்மைதீதுஅறவேஉனக்குவிளம்ப (நீ) நன்றா{க) உற்றுக்கேள்.

**பதவுரை**:உத்தமனே - சிறந்தமாணவகனே, ஓதியிடும்- முன்னேசொல்லப்பட்ட, நாலாறும்உற்றுஇருபத்துநான்குதத்துவங்களும்பொருந்தி; ஆன்மதத்துவம்என்றுஆதிஅருள்நூல்அறையும்காண் - ஆன்மதத்துவம்ஆகியபெயரைப்பெறும்என்றுமுதல்வன்ஆகியஇறைவன்அருளியஆகமநூல்கள்உரைக்கும்என நீஅறிவாயாக; வித்தியாதத்துவங்கள்தன்மை- இனிவித்தியாதத்துவங்களையும்அவற்றின்இயல்புகளையும்,தீதுஅறவேஉனக்குவிளம்ப- குற்றமில்லாதபடிஉனக்கு (நான்) சொல்ல, நன்றா(க) உற்றுக்கேள் - நீநன்குகவனித்துக்கேட்பாயாக.

நிலம்நீர்காற்றுஆகாயம்ஆகியபூதங்கள்ஐந்தும்; ஓசைபரிசம்உருவம்சுவைநாற்றம்என்னும்புலன்களைந்தும்; செவி, தோல், கண், நாக்கு. பாதம், பாணி, பாயு, உபத்தம்ஆகியகன்மேத்திரியங்கள்ஐந்தும்;மனம், புத்திஅகங்காரம்,சித்தம்ஆகியஅந்தக்கரணங்கள்நான்கும்ஆகஆன்மதத்துவங்கள்இருபத்துநான்காம்.

இவைஆன்மாவோடுசம்பந்தமாயிருத்தல்பற்றிஆன்மதத்துவம்எனவும்அனுபவிக்கப்படும்பொருள்களாயிருத்தல்பற்றிபோக்கியகாண்டம்எனவும், ஆன்மாவுக்குஇராசாதம்தாமதம்சாத்துவீகம்ஆகியமுக்குணங்களினாலேசுகதுக்கமோகங்களைஉணடாக்குதல் பற்றிஅசுத்ததத்துவம்எனவும், வழங்கப்பெறும். (போக்கியம்- அநுபவிக்கப்படும்பொருள், காண்டம்கூட்டம், திரள்).

**பொழிப்பு:**முற்கூறப்பட்டஇருபத்துநான்கும்ஆன்மதத்துவங்களாம். இனிவித்தியாதத்துவங்கள்கூறுவோம்.

## வித்தியாதத்துவங்கள்ஏழு

18. காலம்நியதிகருதுங்கலைவித்தை
ஏலவிராகம்புருடனேமாயை - மாலறவே
சொன்னோமடைவாகச்சொன்னவிவைதம்முண்மை
உன்னிஉரைக்கும்நாமுற்று.

**கொண்டுகூட்டு:**காலம்நியதிகருதும்கலைவித்தைஇராகம்புருடன் (+ஏ) மாயை (என்னும்தத்துவங்கள்ஏழையும்) மால்அற (+ஏ) அடைவாகஏலச்சொன்னோம்; (இங்ஙனம்) நாம்சொன்னஇவைதம்உண்மை(யைஇனி) உற்றுஉன்னி (அடைவாக) உரைக்கும்.

**பதவுரை:**காலம்நியதிகருதும்கலைவித்தைஇராகம்புருடனேமாயை - காலமும்நியதியும்கருதப்படுகின்றகலையும்வித்தையும்இராகமும்புருடனும்மாயையும்ஆகியவித்தியாதத்துவங்கள்ஏழையும்மால்அறவேஅடைவாகஏலச்சொன்னோம் (உனது) மயக்கம்அகலும்படிமுறையேபொருந்துமாறுகூறினோம்; நாம்சொன்னஇவைதம்உண்மைஉற்றுஉன்னி (அடைவாக) உரைக்கும்.இனி, நாம்இங்ஙனம்கூறியஇவைகளின்உண்மைஇயல்புகளைப்பொருந்தஆராய்ந்துநோக்கி(அவ்வியல்புகளை) முறையாகச்சொல்லுவோம்.

'ஏ' இரண்டும் அசை

**பொழிப்பு:**வித்தியாதத்துவங்கள், காலம், நியதி,கலை, வித்தை, இராகம், புருடன், மாயைஎன்பனவாம். இவற்றின்உண்மைஇயல்புகளைஇனிக்கூறுவோம்.

## வித்தியாதத்துவங்களின்இயல்புகள்

19. எல்லைபலம்புதுமைஎப்போதும்நிச்சயித்தல்
அல்லல்தருங்கிரியைஆன்மாவுக்(கு) -ஒல்லை

அறிவாசைஐம்புலனும்ஆரவருங்காலம்

குறியாமயக்கென்றுகொள்

**கொண்டுகூட்டு**:ஆன்மாவுக்குஎல்லைபலம்புதுமை(என்பவற்றைக்காலதத்துவம்வரையறைசெய்யும்எனவும்), (நியதிதத்துவம்) எப்போதும்நிச்சயித்தல் (செய்யும்எனவும்), (கலாதத்துவம்அல்லல்தரும்கிரியை(எழுப்பும்எனவும்), (வித்தியாதத்துவம்வித்தை) ஒல்லைஅறிவு (விளக்கும்எனவும்), (இராசுதத்துவம்) ஆசை (தரும்எனவும்). ஐம்புலனும்ஆரவரும்காலம் (அதுபுருடதத்துவமாம்எனவும்), ( மாயை ) குறியாமயக்கு (செய்யும்)என்றும்கொள்.

**பதவுரை**:ஆன்மாவுக்குஎல்லைபலம்புதுமை - ஆன்மாவுக்குஇறந்தகாலத்எல்லையையும்நிகழ்காலத்துப்பலத்தையும்எதிர்காலத்துப்புதுமையையும்காலதத்துவம்வரையறைசெய்துநிற்கும்எனவும்,எப்போதும்நிச்சயித்தல்நியநிதத்துவம் (அவ்வான்மாமுன்னேசெய்த) கன்மங்களைஅநுபவிக்கும்படிஎக்காலமும்நிச்சயம்பண்ணிநிறுத்தும்எனவும்,அல்லல்தரும்கிரியை - காலதத்துவம்ஆணவத்தைச்சிறிதேநீக்கிவிடயங்களைப்பொருந்தும்படிஅவ்வான்மாவின்கிரியாசத்தியைஎழுப்பிநிற்கும்எனவும், ஒவ்லைஅறிவு - வித்தியாதத்துவம்விடயங்களைப்பொருந்துவதற்குரியஅறிவைஆன்மாவிடத்தில்விளக்கிநிற்கும்எனவும், ஆசை- இராகதத்துவம் (கன்மத்துக்கீடாகப்பெற்றபோகங்களில்அநுபவித்தவற்றைச்சிறிதெனக்காட்டி, அநுபவியாதனவற்றைப்பெரிதாக்கிஅவற்றிலே) ஆசையைமிகுவிக்கும்எனவும், ஐம்புலனும்ஆரவருங்காலம் - தன்னிடத்துப்பொருந்துகின்றவினைப்போகங்களைஐம்புலஉணர்வால்ஆன்மாபொருந்திஅனுபவிக்கக்கருதும்காலத்திலேஅதுபுருடதத்துவமாம்எனவும், குறியாமயக்குஎன்றுகொள்- மாயாதத்துவம்ஒன்றைநினைக்கவொட்டாமல்மயக்கத்தைச்செய்யும்எனவும்அறிந்துகொள்வாயாக.

இந்தத்தத்துவங்களின்இயல்புகள்இங்ஙனமாதலைச்சிவப்பிரகாசம் 39, 40, 41-ம் செய்யுள்களானும்அறிக. இவைஆன்மாவுக்குச்சற்றேஅறிவுவிளக்கம்செய்தல்பற்றிவித்தியாதத்துவம்எனவும், போகத்தைக்கொடுத்துஅனுபவிக்கச்செய்வதுபற்றிப்போககாண்டம்எனவும், அங்ஙனம்செய்யும்உதவிபற்றிப்போசயித்திருகாண்டம்எனவும், சிற்றறிவுசிறுதொழில்களைவிளக்குவதற்குச்சாதனமாயமைந்துசுத்தமாயும்சூக்குமதேகத்தின்வழிக்குணரூபமாய்ச்சுகதுக்கமோகங்களைஉண்டாக்கிநின்றுஅசுத்தமாயும்அமைதல்பற்றிச்சுத்தாசுத்ததத்துவம்எனவும், அங்ஙனம்சுத்தமும்அசுத்தமும்கலந்துநின்றமைபற்றிமிச்சிராத்துவாஎனவும்வழங்கப்படும். (போசயித்திரு- அநுபவிப்பிப்பது, புசிப்பிப்பது; மிச்சிரம் - கலப்பு; அத்துவா - அதுஆன்மாவுக்குக்கன்மமேற்றுவதற்கும்பரகதிஅடைவதற்கும்ஆயவழிஎன்றபடி.)

**பொழிப்பு:**காலதத்துவம்எல்லை,பலம்,புதுமைஎன்பவற்றைவரையறைசெய்யும். நியதிதத்துவம்கன்மத்தைநிச்சயித்துநிறுத்தும். கலாதத்துவம்ஆணவத்தைச்சிறிதுநீக்கிக்கிரியைஎழுப்பும். வித்தியாதத்துவம்அறிவைஎழுப்பிவிளக்கிநிற்கும். இராகதத்துவம்அநுபவியாதவிடயத்தில்ஆசையைஎழுப்பும். புருடதத்துவம்விடயத்தில்அழுந்துதலைச்செய்யும். மாயாதத்துவம்மயக்கஞ்செய்துநிற்கும்.

### சிவதத்துவங்கள்ஐந்து (சுத்ததத்துவங்கள்)

20, வித்தியாதத்துவங்கள்ஏழும்விளம்பினோம்
சுத்தமாந்தத்துவங்கள்சொல்லக்கேள்-நித்தமாம்
சுத்தவித்தைஈசுரம்பின்சொல்லும்சதாசிவம்நற்
சத்திசிவங்காணவைகள்தான்.

**கொண்டுகூட்டு:**வித்தியாதத்துவங்கள்ஏழும்விளம்பினோம்; (இனி) சுத்தமாம்தத்துவங்கள்சொல்லக்கேள்; அவைகள் (தான்) நித்தமாம்சுத்தவித்தை, ஈசுரம், பின்சொல்லும்சதாசிவம், நல்சத்தி,சிவம்காண்.

**பதவுரை:**வித்தியாதத்துவங்கள்ஏழும்விளம்பினோம் - சுத்தாசுத்ததந்துவங்களாகியவித்தியாதத்துவங்கள்ஏழையும்முன்புசொன்னோம்; சுத்தமாம்தத்துவங்கள்சொல்லக்கேள் - இனிசுத்தமாகிய (சிவ) தத்துவங்களைச்சொல்லுகிறோம்கேட்பாயாக; அவைகள் (தான்) நித்தமாம்சுத்தவித்தை-அவைகளாவனநித்தியமாய்இருக்கின்றசுத்தவித்தையும், ஈசுரம்-மகேசுரமும், பின்சொல்லும்சதாசிவம் - பின்னேகூறப்படும்சாதாக்கியமும், நல்சத்திசிவம்காண் - நல்லசத்தியம் (விந்துவும்), சிவமும் - (நாதமும்) ஆகியஐந்துமாகும்என்றுஅறிவாயாக.

தான் - அசை

**பொழிப்பு:**சுத்ததத்துவங்களாகியசிவதத்துவங்கள்சுத்தவித்தை, மகேசுரம்,சாதாக்கியம், சத்தி, சிவம்என்னும்ஐந்துமாம்.

### சிவதத்துவங்களின்இயல்புகள்

21.சுத்தவித்தைஞானமிகுந்தொன்மையாமீசுரந்தான்
அத்தன்தொழிலதிகமாக்கியிடும் - ஒத்தலிவை
சாதாக்கியமென்றுஞ்சத்திசிவங்கிரியை
ஆதாரஞானவுருவாம்.

**கொண்டுகூட்டு**:சுத்தவித்தைஞானம்மிகும், தொன்மையாம்ஈசுரம் (தான்)அத்தன்தொழில்அதிகம்ஆக்கியிடும்: சதாசிவம்இவைஒத்தலாம்; சத்திஎன்றும்கிரியை (ஆம்); சிவம்ஆதாரஞானஉருவாம்.

**பதவுரை**:சுத்தவித்தைஞானம்மிகும் - சுத்தவித்தையானதுகிரியைகுறைந்துஞானம்கூடியதாய்அமைந்திருக்கும்; தொன்மையாம்ஈசுரம்தான்அத்தன்தொழில்அதிகம்ஆக்கியிடும் -பழைமையதாகியஈசுர (மகேசுர) தத்துவம்ஞானம்குறைந்துகிரியைஅதிகரித்ததாய்இருக்கும்; சாதாக்கியம்இவைஒத்தல்ஆம்- சாதாக்கிய (சதாசிவ) தத்துவம்ஞானமும்கிரியையும்ஒத்தஅளவில்பொருந்தியிருப்பதாம்; சத்திஎன்றும்கிரியை (ஆம்) - சத்தி (விந்து)தத்துவம்எப்போதும்கிரியைஉடையதாய்இருக்கும்; சிவம்ஆதாரஞானஉருவாம் - சிவ (நாத) தத்துவம் (யாவும்நடைபெறுவதற்கு)ஆதாரமானஞானஉருவமாகஇருக்கும்.

தான் - அசை

இந்தத்தத்துவங்களின்இயல்புகள்இங்ஙனமாதலைச்சிவஞானசித்தியாரில் "ஞானமேயானபோது" (சுபக் ; சூத். 1 செய்; 65.) 'வித்தையோடீசர்' (சுபக்: சூத்: 1. செய்: 66) என்னும்தொடக்கத்துச்செய்யுள்களாலுமறிக.

சுத்ததத்துவங்கள்ஐந்தும்அவற்றிலமைந்தஆன்மாக்களுக்குஎல்லாவற்றையும்அறியும்தன்மையையும், எல்லாவற்றையும்செய்பவனதுதன்மையையும்,தருதல்பற்றிச்சுத்ததத்துவம்எனவும், சுத்தாத்துவாஎனவும், அசுத்ததத்துவங்களைச்செலுத்துதல்பற்றிப்பிரேரகாகாண்டம்எனவும்கூறப்படும். இவைஐந்தும்சடமாயினும்சிற்சத்திக்குச்சுதந்திரவடிவங்களாதலால்சைதன்னியம்எனவும்,ஏனையமுப்பத்தொன்றனுள்புருடதத்துவம்சார்ந்ததன்வண்ணமாதல்பற்றிச்சிதசித்துஎனவும், அஃதொழிந்தமுப்பதும்அசித்தெனவும்படும். (சித்தி: சூத்,2, செய்: 69 பார்க்க; பிரேரகம் - செலுத்துதல் ; காண்டம்- கூட்டம்; சைதன்னியம் - அறிவுடைமை; சித்து - அறிவுடையது; சித்து+ அசித்து = சிதசித்து - அறிவுள்ளதும்இல்லதுமானது; அசித்து - அறிவற்றது.)

இதுவரைகூறப்பட்டமுப்பத்தாறுதத்துவங்களோடும்ஆன்மாகூடிமயங்கிப்பெருந்துன்பத்தைஅநுபவித்தும், தூலசரீரம்அழியுங்காலத்துக்கலைமுதலியதத்துவங்களாலாகியசூக்குமசரீரத்தைப்பொருந்திச்சென்றுசுவர்க்கம்நரகம்முதலியஇடங்களில்பூதாசாரம்பூதம்முதலியசரீரங்களைஎடுத்துவினைப்பயன்களைஅநுபவித்துக்கழித்தும், மேலும்இப்பூமியில்வந்துபிறக்கும். இவ்வுண்மையைச்சிவப்பிரகாசம் 46 ம்செய்யுளானறிக.

**பொழிப்பு**:சுத்தவித்தைஞானமேறிக்கிரியைகுறைந்தும், ஈசுரம்கிரியைஏறிஞானம்குறைந்தும், சாதாக்கியம்ஞானம்கிரியைஇரண்டும்ஒத்தஅளவிற்பொருந்தியும்இருக்கும்இயல்பின. சத்திஎன்றும்கிரியைஉடையதாயிருப்பது. சிவம்ஞானவுருவாம்இயல்பினது.

## ஆணவமும்கன்மமும்

22, ஆறாறுதத்துவமுஞ்சொன்னோமடைவாக
மாருமலமிரண்டும்வாசொல்லக் - கூறில்
அறியாமைஆணவம்நீயானசுகதுக்கம்
குறியாவினையென்றுகொள்.

**கொண்டுகூட்டு** :ஆறாறுதத்துவமும்அடைவாகச்சொன்னோம்; (இனி) மாறாமலமிரண்டும்சொல்ல, வா; (அவற்றைக்)கூறில். அறியாமைஆணவம் (எனவும்), சுகம்துக்கம்குறியாநீஆனவினைஎன்றும்கொள்.

**பதவுரை:** ஆறாறுதத்துவமும்அடைவாகச்சொன்னோம் - ((மும்மலங்களுள்மாயையிலிருந்துஉளவாகும்) முப்பத்தாறுதத்துவங்களையும்முறையாகஉரைத்தோம்; மாறாமலமிரண்டும்சொல்ல,வா- (இனி) விட்டுநீங்காமல்இருக்கின்ற (ஏனைய) இரண்டுமலங்களையும்சொல்லுகிறோம், வந்துகேட்பாயாக; கூறில்அம்மலங்களைக்கூறுமிடத்து, அறியாமைஆணவம் - ஆன்மாவினிடத்துஅநாதியேஅறியாமையைச்செய்துநிற்பதுஆணவமலம்எனவும், சுகம்துக்கம்குறியாநீஆனவினைஎன்றுகொள் -இன்பம்துன்பம்ஒன்றையும் (உன்னின்வேறாய்) நினையாமல் (அவ்வின்பதுன்பஉருவமே) நீயாய் (அவற்றின்செயலைஉன்செயலாய்ப்) பொருந்திஇருப்பதுதான்கன்மமலம்எனவும்அறிந்துகொள்வாயாக

சிவப்பிரகாசத்தில் "இருள்ஒளிரஇருண்டமோகமாய் ... அறிவுமுழுதினையும்மறைக்கும்" செய். 20) எனவும்திருவருட்பயனில் "பன்மொழிகள்என்னுணரும்பான்மைதெரியாததன்மைஇருளார்தந்தது." (இருண்மல. செய்.6.) எனவும்ஆணவவியல்புரைத்தமைகாண்க. கன்மம்புத்திதத்துவம்பற்றுக்கோடாய்க்கலந்து, ஆன்மாவைத்தன்மயமாக்கிஅதனைவிட்டுநீங்காததாய், மனம்வாக்குக்காயங்களினால்செய்யப்படுவதாய், இன்பதுன்பமாகியபயனைத்தரும்புண்ணியபாவவடிவாயமையும்என்பதை "நண்ணியிடும்உருவதனுக்கேதுவாக...." (செய். 28.) என்னும்சிவப்பிரகாசச்செய்யுளால்அறியத்தக்கது.

**பொழிப்பு:**மும்மலங்களுள் (மாயையை) முப்பத்தாறுதத்துவங்களையும்முன்சொன்னோம். ஏனையஇரண்டுமலங்களாவனஆணவம்கன்மம்என்பனவாம்.

## மாணவகன்வேண்டுகோள்

23. ஆறாறுதத்துவமும்ஆணவமும்வல்வினையும்
மாறாஅருளால்வகுத்துரைத்தீர் - வேறாகா

என்னைஎனக்கறியக்காட்டீரிவைகண்டேன்
உன்னரியதேசிகரேயுற்று.

**கொண்டுகூட்டு**:உன்னரியதேசிகரே, ஆறாறுதத்துவமும்ஆணவமும்வல்வினையும்மாறாஅருளால்வகுத்துஉரைத்தீர்; இவைஉற்றுக்கண்டேன்; (இனிஇவற்றின்) வேறுஆகாஎன்னை (நான்) அறியஎனக்குக்காட்டீர்.

**பதவுரை**:உன்னரியதேசிகரே-அபக்குவிகளால்நினைத்தற்குஅரியஞானாசாரியரே, ஆறாறுதத்துவமும்-முப்பத்தாறுதத்துவங்களையும், ஆணவமும்ஆணவமலத்தையும், வல்வினையும் - வலியகன்மமலத்தையும்மாறாஅருளால்வகுத்துஉரைத்தீர்என்றும்விட்டுநீங்காதபெருங்கருணையினாலேவகைப்படுத்திச்சொல்லிஅருளினீர், இவைஉற்றுக்கண்டேன் - இந்தமும்மலங்களையும்பொருத்திஅறிந்துகொண்டேன்; வேறுஆகாஎன்னைஅறியஎனக்குக்காட்டீர் - இனி, (இம்மலங்களைப்பற்றியதால்) இவற்றிற்குவேறுஆகாமல் (இவைகளேயாய்) ஒன்றுபட்டுஇருக்கின்றஎன்னுடையசொரூபஇலக்கணத்தைநான்அறியும்படிஎனக்குக்காட்டியருளுவீராக.

இதுவரைஆறாறுதத்துவமும், அன்றேதான்மாறாஆணவமும், வினையும்கூறுமுகத்தால்மாணவகனுக்குப்பாசதரிசனம்காட்டியஆசிரியர்இனி, மேல்வரும்மூன்றுசெய்யுள்களால்ஆன்மதரிசனம்பண்ணுவிக்கின்றார்.

**பொழிப்பு**:தேசிகரே, நீர்இதுபரியந்தம்மும்மலங்களைப்பற்றிக்கூறக்கேட்டறிந்துகொண்டேன்; இனி 'நான்' ஆகியஆன்மாவின்சொரூபஇலக்கணத்தைக்கூறியருளுவீராக.

## சார்ந்ததன்வண்ணமாம்ஆன்மாசதசத்து

24.நன்றாஉரைக்கக்கேள்நல்லசித்தின்முன்னசித்திங்(கு)
ஒன்றாதுசித்தசித்தைஓராது - நின்றிவற்றை
அன்றேபகுத்தறிவதான்மாவேஎன்றுமறை
குன்றாமல்ஓதும்குறித்து.

**கொண்டுகூட்டு** :நன்றாஉரைக்கக்கேள்; நல்லசித்தின்முன்அசித்துஇங்குஒன்றாது; சித்துஅசித்தைஓராது; இவற்றைஅன்றேநின்றுபகுத்துஅறிவதுஆன்மாவே; என்றுமறைகுன்றாமல்குறித்துஓதும்.

**பதவுரை**:நன்றாஉரைக்கக்கேள் - (மாணவகனேநீவினாவியஆன்மதரிசனத்தை) நன்றாகச்சொல்லுகிறோம்கேட்பாயாக; நல்லசித்தின்முன்அசித்துஇங்குஒன்றாதுசிறந்தஅறிவுடைப்பொருளாகியசிவத்தின்முன்அறிவில்பொருளாகியபாசம்கூடிநில்லாது; சித்துஅசித்தைஓராது- (அச்) சிவம்பாசத்தைச்சுட்டிஅறியவேண்டியதில்லை;

இவற்றைஅன்றேநின்றுபகுத்துஅறிவதுஆன்மாவே - சித்தாகியசிவத்தையும்அசித்தாகியபாசத்தையும்அநாதியாகவேபொருந்திநின்று (சார்ந்ததன்வண்ணமாய்அவ்வவற்றை) விசாரித்துஅறியுந்தன்மையுடையதுஆன்மாவேயாகும்; என்றுமறைகுன்றாமல்குறித்துஓதும்- எனவேதங்கள் (அவற்றைக்) குறைவுபாடின்றிச்சுட்டியுரைக்கும்.

வேதாந்தத்தெளிவேசைவசித்தாந்தம்ஆதலால் 'மறை...... ஓதும்' என்றார். இறைவன்எவ்விடத்திலும்எப்பொருளிலும்நீக்கமறவியாபித்துள்ளவன்; அவனைஅகன்றுஎங்கும்எவையும்இன்று; எனவே, ஆணவம்முதலியபாசங்களும்அவனைஅகன்றுஇல்லை. அங்ஙனம்வியாபித்துள்ளஅவன்அவற்றைஅவற்றிற்குப்புறம்பேநின்றுசுட்டிஅறியவேண்டியதில்லை. ஆதலால் "சித்துஅசித்தைஓராது" என்றார். சித்துஆகியசிவம்ஒளிபோன்றது; அசித்துஆகியபாசம்இருள்போன்றது. ஒளிமுன்இருள்கூடிக்கலந்துநிற்பதில்லை; ஒளியைஅறிவதுமில்லை. அங்ஙனமேசித்தின்முன்அசித்தும்ஒன்றாது; சித்தைஅறியவும்மாட்டாதுஎன்க.

இதனைச் 'சத்தசத்தைச்சாராதுஅசத்துஅறியாதங்கண்இவைஉற்றசதசத்தாமுயிர்" (திருவருட்பயன். உயி.செய்.7) எனவும், 'யாவையும்சூனியம் ..... இருதிறன்அறிவுளதிரண்டலாஆன்மா" (சிவஞானபோதம்,சூத்.7) எனவும்வருவனவற்றாலும்அறிக.

**பொழிப்பு:**- சித்துஅசித்தைஅறிந்துஅநுபவியாது; அசித்துசித்தைஅறியவும்அநுபவிக்கவும்மாட்டாது; ஆகவேஇவ்விரண்டினையும்அறிந்துஅநுபவிக்கும்இயல்புடையதுஒன்றுஉளது. அதுசார்ந்ததன்வண்ணமாகும்இயல்புடையஆன்மாவேயாம்.

## தத்துவங்கள்ஆன்மாவன்று

25. தத்துவங்களாறாறுந்தம்மைத்தாமென்றறியா
எத்தன்மையென்னிலியம்பக்கேள் - சுத்தமாம்
ஆறுசுவையுமறியாதுதன்னைத்தான்
கூறிலவையிவைபோற்கொள்.

**கொண்டுகூட்டு:**ஆறாறுதத்துவங்களும்தம்மைத்தாம்என்றுஅறியா; (இது) எத்தன்மைஎன்னில்இயம்ப (ந்) கேள்; கூறில், சுத்தமாம்ஆறுசுவையும்தன்னைத்தான்அறியாது; இவைபோல்அவைகொள்.

**பதவுரை** :ஆறாறுதத்துவங்களும்தம்மைத்தாம்என்றுஅறியா - முப்பத்தாறுதத்துவங்களும்அறிவில்பொருள்களாதலால்அவைதம்முடையசொரூபத்தை (எக்காலத்திலும்எவ்வகையாலும் ) அறியமாட்டா,எத்தன்மையென்னில்- இதுஎந்தமுறைமைபோன்றதுஎனவினாவில், இயம்பக்கேள் - சொல்லுகிறோம்கேட்பாயாக, கூறில் -

அம்முறைமையைக்கூறுமிடத்து. சுத்தமாம்ஆறுசுவையும்தன்னைத்தான்அறியாது - தூய்மையாய்இருக்கின்றஅறுவகைச்சுவைகளும்தாம்இன்ன்இன்னசுவையுடையோம்எனத்தம்மைஅறியமாட்டா, இவைபோல்அவைகொள்- இவ்வியல்புடையசுவைகளைப்போலத்தத்துவங்களும்தம்முடையசொரூபத்தைஅறியமாட்டாஎனநீஉணர்ந்து கொள்ளுவாயாக

"தத்துவங்கள்தம்மையேனும்பிறவற்றையேனும்அறிவித்தக்காலும்அறியமாட்டாமையால், அவைஅறிவிக்கஅறியும்தன்மையுடையஆன்மாவன்று" என்பதுஇச்செய்யுளால்வலியுறுத்தப்பட்டது.

**பொழிப்பு:**தம்மியல்புணராதுநின்றஅறுவகைச்சுவைகளைஒத்தனவே, அசத்தாகியதத்துவங்களெனஅறிவாயாக.

## தத்துவங்களுக்குவேறாய்ஆன்மாஉண்டு

26.ஆறுசுவையுமருந்தியவைதம்மை
வேறொருவன்கூறியிடும்மேன்மைபோல் -ஆறாறும்
ஒன்றொன்றாநாடியுணர்ந்தோதிலதிலுற்றறிவாய்
நின்றபொருள்தானேகாண்நீ.

**கொண்டுகூட்டு** : (ஆன்மாஎதுஎன்பதை) ஓதில்,(ஆறுவகைச்சுவைக்கும்) வேறு (ஆகிய) ஒருவன்ஆறுசுவையும் (ஒன்றுஒன்றாய்) அருந்தி (நாடிஉணர்ந்து ) அவைதம்மைக்கூறியிடும்மேன்மைபோல், ஆறுஆறும்ஒன்றுஒன்றாய்நாடிஉணர்ந்து, அதில்உற்று. அறிவாய்நின்றபொருள்தானேநீ(என்று) காண்.

**பதவுரை**:ஓதில்-ஆன்மாஎதுஎன்பதைஉரைக்குமிடத்து, வேறுஒருவன்-(ஆறுவகைப்பட்டசுவைகளுக்கும்) வேறுபட்டுநின்றஒருவன்,ஆறுசுவையும்அருந்தி -(அவ்) ஆறுசுவைகளையும் (ஒன்றுஒன்றாகப்) புசித்துகூறியிடும்மேன்மைபோல் -(ஆராய்ந்துஅறிந்து) இதுகைக்கிறது; இதுகார்க்கிறது; இதுகூர்க்கிறது; இதுதுவர்க்கிறது; இதுபுளிக்கிறது; இதுஇனிக்கிறதுஎனச்சொல்லுந்தன்மைபோல, ஆறுஆறும் - முப்பத்தாறுதத்துவங்களையும், ஒன்றுஒன்றாநாடிஉணர்ந்து -ஒவ்வொன்றாகவிசாரித்துஅறிந்து, அதில்உற்று - அவ்வதுபவத்தில்பொருந்தி, அறிவாய்நின்றபொருள்தானேநீகாண் - அறியும்இயல்பினதாய்நின்றபொருள்தான்நீஆகியஆன்மாவாம்.

**பொழிப்பு:**ஒருவன்ஆறுசுவைகளையும்ஒவ்வொன்றாகப்புசித்துஅவற்றின்இயல்புகளைக்கூறுந்தன்மைபோல, முப்பத்தாறுதத்துவங்களையும்விசாரித்தறியும்இயல்பினதாய்நின்றபொருளேஆன்மாவாம்.

வினாக்கள்

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஐம்பூதஅடையாளங்கள்யாவை? | K3 | CO1 | PO5 |
| 2 | மாணவகனின்வேண்டுகோள்யாது? விளக்குக. | K2 | CO4 | PO2 |
| 3 | ஐம்பொறிகள்யாவை? | K4 | CO3 | PO4 |
| 4 | சிவதத்துவங்களைஎடுத்துரைக்க. | K5 | CO4 | PO5 |
| 5 | அந்தகரணங்களும்அவற்றின்இயல்பும்குறித்துவிளக்குக. | K3 | CO5 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கன்மேந்திரியங்களும்அவற்றின்இயல்பும்குறித்துவிவரிக்க. | K2 | CO3 | PO2 |
| 2 | ஐம்பூதங்களின்இயல்புகளைத்தொகுத்துரைக்க. | K4 | CO1 | PO5 |
| 3 | ஆத்மதத்துவங்களைவிவரி. | k1 | CO2 | PO6 |
| 4 | வித்தியாதத்துவங்களின்இயல்புகளைவிளக்குக. | K5 | CO5 | PO4 |
| 5 | மாணாக்கனின்வினாக்களையும், வினாவிண்ணப்பங்களையும்தொகுத்துரைக்க | K3 | CO4 | PO4 |

## அலகு - 2

## உண்மைவிளக்கம் 27 முதல் 53 பாடல்கள்

### அறிவுக்குஅறிவாய்நின்றுஅறிவிப்பதுபதி

27. குன்றாவருளாலேகூறினீரென்வடிவு

பொன்றாதநும்முருவம்போதியீர் - நின்றருக்கன்

கண்ணுக்குக்காட்டுமாப்போலேயுனதறிவின்

நண்ணியறிவித்திடுவோம்நாம்.

**கொண்டுகூட்டு**: "(தேவரீர் ) குன்றாஅருளாலேஎன்வடிவுகூறினீர்; (இனி) பொன்றாதநும்உருவம்போதியீர்;" (எனமாணவகன்வினாவியதற்குஞானாசிரியர்) "அருக்கன்நின்று (பொருள்களைக்) கண்ணுக்குக்காட்டுமாபோலே, நாம்உனதுஅறிவில்நண்ணிஅறிவித்திடுவோம்." (என்றார்)

**பதவுரை**:குன்றாஅருளாலேஎன்வடிவுகூறினீர்- தேவரீர்என்றும்குறைவுபடுதலில்லாதபேரருளினாலேஅடியேனுடையசொரூபத்தைஅருளிச்செய்தீர்; போன்றாதநும்உருவம்போதியீர் -இனி, கெடாததேவரீருடையசொரூபம்எப்படிப்பட்டதென்பதைஅடியேனுக்குஅருளிச்செய்யவேண்டும்; (எனமாணவகன்வினாவினானாகஆசிரியர்) அருக்கன்நின்றுசுண்ணுக்குக்காட்டுமாபோலே - சூரியனதுஒளிநிலைபெற்றுநின்றுஇருளைநீக்கிக்கண்ணொளியையும்பிறபொருள்களையும்காட்டுவதுபோல, நாம்உனதுஅறிவில்நண்ணிஅறிவித்திடுவோம் - நாம்உனதுஅறிவிலே (அறிவுக்கறிவாய்ப்) (அறிவுக்கறிவாய்ப்) பொருந்திநின்றுபாசம்பசுபதிஆகியவற்றின்உண்மைஇயல்புகளைஅறிவித்துவருவோம் (என்றார்).

சுயஒளிஇருந்தும்தானேகாணும்இயல்பற்றகண்ணுக்குச்சூரியனதுபிரகாசம்துணைசெய்கின்றது. அதுஉலகப்பொருள்களைவிளக்கிஇவைஇத்தகையவெனவும், பிரகாரமாகியதன்னைவேறறக்கலந்துள்ளசூரியனைவிளக்கிஅச்சூரியன்இத்தகையதெனவும்கண்ணுக்குக்காட்டும். அங்ஙனமேஇறைவன்தன்னின்வேறறநின்றதிருவருளால், தன்னறிவுகொண்டுதானேஎதையும்அறியமாட்டாதஆன்மாவுக்குமும்மலவியல்புகளையும்தன்னியல்புகளையும்விளக்கிஅருளுவான்என்க.இதனைக் "கண்டொல்லைகாணுநெறிகண்ணுயிர்நாப்பணொளிஉண்டில்லையல்லாதொளி" என்னுந்திருவருட்பயனாலும்உணர்க.

**பொழிப்பு:**மாணவகன்தேவரீர்என்வடிவாகியஆன்மவியல்பினைஉரைத்தருளினீர்கள்,இனியும்சொரூபமாகிய பதியியல்பினைஅருளிச்செய்வீர்களாக" என்றானாக. ஞானசாரியர்: ' சூரியன்கண்ணுக்குஉதவுமாப்போலப்பதிஆன்மாவுக்குஅறிவிக்கும்இயல்பினது" என்றார்.

## இறைவன்அறிவுக்கறிவாய்நிற்றல்

28. அன்றியுங்கேளான்மாவாலாய்ந்தறியுமைம்பொறிக

னின்றியறியாவிவையென்ன- நின்றதுபோல்

ஓவாமலுன்னையுணர்த்துவோமுன்னறிவில்

மேவாமல்மேவிநாமே

**கொண்டுகூட்டு** : (அஃது) அன்றியும் (வேறும்உள) கேள்;ஆன்மாவால்ஆய்ந்துஅறியும்ஐம்பொறிகள் (ஆன்மா) இன்றிஅறியா;இவைஎன்னநின்றதுபோல், நாமேஉன்அறிவில்மேவாமல்மேவி, (உனக்கு) உணர்த்துவோம். உன்னைஓவாமல் (உனக்கு) உணர்த்துவோம்.

**பதவுரை:**அன்றியும்கேள் - முன்கூறியஅஃதேயல்லாமல்வேறும்உள; அவைகளைச்சொல்லுகிறோம்கேட்பாயாக; ஆன்மாவால்ஆய்ந்துஅறியும்ஐம்பொறிகள்இன்றிஅறியா- ஆன்மாவின்துணையினால்விடயங்களைஅறிந்துகாரியப்பட்டுவருகின்றபஞ்சேந்திரியங்கள் "ஆன்மாவின்துணையினாலேயே (நாம்) அங்ஙனம்காரியப்பட்டுவருகின்றோம்" எனஉணரமாட்டா; இவைஎன்னநின்றதுபோல் -இங்ஙனம்நின்றஇப்பஞ்சேந்திரியங்கள்(ஆன்மாவைஅறியாமல்காரியப்பட்டமை) போல, நாமேஉன்அறிவில்மேவாமல்மேவி - (உனதுஇயக்கத்துக்குஉறுதுணையாய்நின்றஎம்மைநீஉணராதிருக்கும்நிலையில்) நாம்உனதுஅறிவிலே (அறிவுக்கறிவாய்) பொருந்தாமல்பொருந்தி, உன்னைஓவாமல்- உன்னைவிட்டுநீங்காமல்நின்றுஉணர்த்துவோம்-உனக்குஅறிவித்துவருவோம் (அதனைநீஅறிவாய்)

ஐம்பொறிகள்சடமானவை. அங்ஙனமாகவும், "கண்கண்டது; காதுகேட்டது" என்பதெல்லாம்உபசாரமாத்திரையே. காண்டல்கேட்டல்முதலியவற்றைஇப்பொறிகள்மூலம்ஆன்மாவேஉணர்கின்றது; பொறிகள்உணர்வதில்லை. மேலும்ஆன்மாவின்துணையால்வாழ்ந்துகாரியப்படும்பொறிகள்ஆன்மாவையும்உணர்வதில்லை.இவைதமக் குத்துணையானஆன்மாவைஉணராமைபோலஆன்மாவும்தனதுஉணர்வுக்குஇறைவன்இன்றியமையாதவன்எ ன்பதைஉணர்வதில்லை, இக்கருத்தேபற்றி "ஊன்உயிரால்வாழும்ஒருமைத்தேஊனொடுயிர் - தானுணர்வோடொன்றாந்தரம்" எனத்திருவருட்பயன்வலியுறுத்துவதுங்காண்க.

**பொழிப்பு:**தமதுகாரியப்பாட்டுக்குஉறுதுணையாய்நின்றஆன்மாவைஅறியாதஐம்பொறிகள்போல, நீ (ஆன்மா) உனதுகாரியப்பாட்டுக்குஉறுதுணையாய்எம்மை (இறைவனை) அறியாதுநிற்க, நாம்உனதுஅறிவில்பொருந்திவிட்டுநீங்குதலின்றிஅறிவித்துவருவோம்.

## இறைவன்உயிர்க்குயிராய்நிற்றல்

29.அக்கரங்கட்கெல்லாமகரவுயிர்நின்றாற்போல்

மிக்கவுயிர்க்குயிராய்மேவினோம்-எக்கண்ணும்

நில்லாவிடத்துயிர்க்குநில்லாதறிவென்று

நல்லாகமமோதும்நாடு.

**கொண்டுகூட்டு** :அகரஉயிர்அக்கரங்கட்குஎல்லாம்(அக்கரமாய்) நின்றாற்போல்; (நாம்) மிக்கஉயிர்க்குஉயிராய்மேவினோம்; (சடசித்துக்கள்) எக்கண்ணும் (இறைவன்) நில்லாஇடத்துஉயிர்க்குஅறிவுநில்லாதுஎன்றுநல்ஆகமம்ஓதும்; நாடு.

**பதவுரை:**அகரஉயிர்அக்கரங்கட்குஎல்லாம் (அக்கரமாய்) நின்றாற்போல் 'அ' என்னும்உயிர்எழுத்தானதுஏனையஉயிர்எழுத்துக்களுக்கெல்லாம்உயிராய்நின்றுஇயக்குமாறுபோல, மிக்கஉயிர்க்குஉயிராய்மேவினோம் - நாம்எண்ணிறந்தஆன்மாக்களிடத்தும்அவைகளைஇயக்கும்உயிராகப்பொருந்திநின்றோம். எக்கண்ணும்நில்லாஇடத்துஉயிர்க்குஅறிவுநில்லாதுஎன்று - சடசித்துக்கள்எல்லாவற்றிலும்இறைவன்பொருந்திநின்றுஅறிவியாதவிடத்துஉயிர்ஒன்றையும்அறியமாட்டாதுஎன,நல்ஆகமம்ஓதும்நல்லசிவாகமங்கள்அறுதியிட்டுரைக்கும்; நாடு - நீஇந்தஉண்மையைவிசாரித்துஅறிவாயாக.

அங்காத்தலின்றிஎவ்வெழுத்துக்களுக்கும்இயக்கமில்லை. அங்காத்தலேஅகரத்தின்பிறப்பு. எனவே, ஏனைய 'ஆ'முதல்'ஔ' இறுதியாயஉயிர்கள்அகரமின்றிஇயங்காதாக, அகரம்உயிர்க்குயிராயது. அங்ஙனமேஇறைவனும்ஆன்மஇயக்கத்துக்குக்காரணனாய்உயிர்க்குயிராயினன். "அகரவுயிரின்றேல்அக்கரங்களின்றாம்" "அகரவுயிர்போல்அறிவாகியெங்கும்நிகரிலிறைநிற்கும்நிறைந்து" "அகரமுதலவெழுத்தெல்லாமாதிபகவன்முதற்றேயுலகு" முதலியஆன்றோர்வாக்குக்கள்ஈண்டுஉய்த்துணரத்தக்கன.

**பொழிப்பு:** 'அ' என்னும்உயிர்ஏனையஉயிர்களுக்குஉயிராயினாற்போல, நாம்உயிர்க்குஉயிராய்ப்பொருந்தினோம்; (இக்கருத்தேபற்றி) "சடசித்துக்கள்யாவற்றிலும் (நாமே -) இறைவனேநிறைந்து. நின்றுஅறிவித்தாலன்றிஆன்மாஒன்றையும்அறியமாட்டாது" எனச்சிவாகமங்கள்கூறும்உண்மையைவிசாரித்துஅறிவாயாக.

## மாணவகனதுவேண்டுகோள்

30. நற்றவத்தோர்தாங்காணநாதாந்தத்தஞ்செழுத்தால்
உற்றுருவாய்நின்றாடல்உள்ளபடி-பெற்றிடநான்
விண்ணார்பொழில்வெண்ணெய்மெய்கண்டநாதனே
தண்ணாரருளாலேசாற்று.

**கொண்டுகூட்டு**:விண்ஆர்பொழில்வெண்ணெய்மெய்கண்டநாதனே. நல்தவத்தோர்தாம்காணநாதஅந்தத்துஅஞ்சுஎழுத்தால்உருவாய்உற்றுநின்றுஆடல்நான்உள்ளபடிபெற்றிட, (நீஉனது) தண்ஆர்அருளாலேசாற்று

**பதவுரை**:விண்ஆர்பொழில்வெண்ணெய்மெய்கண்டநாதனே - ஆகாயத்தைஅளாவும்படிவளர்ந்தசோலைகளால்சூழப்பெற்றதிருவெண்ணெய்நல்லூரில்எழுந்தருளியிருக்கின்றமெய்கண்டதேவரே, நல்தவத்தோர்தாம்காண - முன்னைத்தவவிசேடமுடையநல்லான்மாக்கள்தரிசிக்கும்படி, நாதஅந்தத்துஅஞ்சுஎழுத்தால்உருவாய்உற்றுநின்றுஆடல்- நாதத்தின்முடிவிலேஇறைவன்திருவைந்தெழுத்தேதிருமேனியாகக்கொண்டுநின்றுதிருநடனம்செய்யும்முறைமையை, நான்உள்ளபடிபெற்றிட - அடியேன்உண்மையாகத்தரிசிக்கும்படி, தண்ஆர்அருளாலேசாற்று- நீஉனதுகுளிர்ந்தகிருபையினாலேசொல்லிஅருள்வாயாக.

**பொழிப்பு**:மெய்கண்டநாதனே, (முன்னைத்தவவிசேடமுடையோர்காணும்படி) நாதாந்தத்தில்இறைவன்திருவைந்தெழுத்தேதிருமேனியாகக்கொண்டுதிருநடனம்செய்யும்முறைமையைஅடியேன்தரிசிக்கும்படிகூறிஅருளுவீராக.

### நடனத்திருமேனியும்நடனநோக்கமும்

31.எட்டுமிரண்டுமுருவானலிங்கத்தே
நட்டம்புதல்வாநவிலக்கேள் - சிட்டன்
சிவாயநமவென்னுந்திருவெழுத்தஞ்சாலே
அவாயமறநின்றாடுவான்.

**கொண்டுகூட்டு**:புதல்வா, (சிட்டன்) நட்டம்நவிலக்கேள், சிட்டன்சிவாயநமஎன்னும்திருஎழுத்துஅஞ்சால், (+ஏ) எட்டும்இரண்டும்உருஆனஇலிங்கத்து (+ஏ) அவாயம் அற நின்றுஆடுவான்.

**பதவுரை**:புதல்வா- மாணவகனே, நட்டம்நவிலக்கேள் - சிவபெருமானதுதிருநடனத்தைச்சொல்லுகிறோம்கேட்பாயாக; சிட்டன்- (அச்) சிவபெருமான், சிவாயநமஎன்னும்திருஎழுத்துஅஞ்சாலேசிகாரம்ஆதியாகவுடையஸ்ரீபஞ்சாக்கரத்தையேதிருமேனியாக்கொண்டு, எட்டும்இரண்டும்உருஆனஇலிங்கத்தேஅவாயம்அறநின்றுஆடுவான் - அகரம்உகரம்இரண்டும்சேர்ந்தஉருவமாயிருக்கின்றயகரமாகியஆன்மாவிடத்திலே (அவ்வான்மாவினது) பிறவித்துன்பம்நீங்கும்படிநின்றுநிருத்தம்செய்தருளுவான்.

'ஏ' இரண்டும்அசைகள்.

எட்டு -'அ' என்னும்எழுத்தையும், இரண்டு - 'உ' என்னும்எழுத்தையும்உணர்த்திநின்றகுறிப்புமொழிகளாம். எட்டுஆகிய 'அ'வும்இரண்டுஆகிய 'உ'வும்சேரப்பத்துஆகிய 'ய' உளதாம். இந்த 'ய' என்னும்குறி 'ய்' என்னும்எழுத்தைக்குறிப்பதாய்ஆன்மாவைஉணர்த்திற்று. எனவே. (இங்ஙனம்) உய்த்துணரவைக்கும்உத்திபற்றிஆன்மாவை "எட்டும்இரண்டும்உருவானலிங்கம் " எனஆசிரியர்குறிப்பிட்டார்என்ப.

**பொழிப்பு:**சிவபெருன்ஸ்ரீபஞ்சாக்கரத்தைத்திருமேனியாகக்கொண்டுயகரமாகியஆன்மாவிடத்திலே (அவ்வான்மாவினது) பிறவியொழியும்படிதிருநடனம்செய்தருளுவான்.

## இதுவுமது

## நகராதிபஞ்சாக்கரத்திருமேனி

32. ஆடும்படிகேள்நல்லம்பலத்தான்ஐயனே
நாடும்திருவடியிலேநகரம்- கூடும்
மகரம்உதரம்வளர்தோள்சிகரம்
பகருமுகம்வாமுடியப்பார்.

**கொண்டுகூட்டு:**ஐயனே, நல்அம்பலத்தான்ஆடும்படிகேள்: நாடும்திருஅடியிலேநகரம் (ஆகவும்), கூடும்உதரம்மகரம் (ஆகவும்), வளர்தோள்சிகரம் (ஆகவும்), பகரும்முகம்வா (ஆகவும்). முடி'ய' (ஆகவும்கொண்டுஅவன்நிருத்தம்செய்வான்என்பதைவிசாரித்துப்) பார்.

**பதவுரை:**ஐயனே- மாணாக்கனே,அம்பலத்தான்ஆடும்படிகேள் - நல்லகனகசபையிலேஎழுந்தருளியிருக்கின்றசிவபெருமான்திருநடனம்செய்கின்றமுறையைச்சொல்லுகிறோம்கேட்பாயாக; நாடும்திருஅடியிலேநகரம் - நாடாநின்றதிருவடியிலேநகாரமாகவும்கூடும்உதரம்மகரம் - பொருந்தியதிருவுந்தியிலேமகாரமாகவும், வளர்தோள்சிகரம் - வளராநின்றதிருத்தோளிலேசிகாரமாகவும், பகரும்வா - சொல்லப்பட்டதிருமுகத்திலேவகாரமாகவும், முடி'ய - திருமுடியிலே ய காரமாகவும் (கொண்டுஅவன்திருநடனம்செய்தருளுவான்என்பதைப்) பார் - (நீ)விசாரித்துஅறிந்துகொள்வாயாக.

இதனால்லயாங்கமெனக்கூறப்படும்நகாராதிபஞ்சாக்கரஅமைப்பும்திருநடனமும்உரைக்கப்பட்டன.

**பொழிப்பு:**கனகசபையில்எழுந்தருளியஇறைவன், திருவடியிலேநகாரமும். திருவுந்தியிலேமகாரமும்,திருத்தோளிலேசிகாரமும், திருமுகத்திலேவகாரமும், திருமுடியிலேயகாரமும்பொருந்த (நின்றதிருமேனிகொண்டு) திருநடனம்செய்தருளுவான்.

## இதுவுமது

### சிகாராதிபஞ்சாக்கரத்திருமேனி

32.சேர்க்குந்துடிசிகரஞ்சிக்கனவாவீசுகரம்
ஆர்க்கும்யகரம்அபயகரம் -பார்க்கிலிறைக்(கு)
அங்கிநகரம்அடிக்கீழ்முயலகனார்
தங்கும்மகரமதுதான்.

**கொண்டுகூட்டு** :பார்க்கில், இறைக்கு, ஆர்க்கும்துடிசேர்க்கும் (கரம்) சிகரம் (ஆகவும்),சிக்கனவீசுகரம்வா (ஆகவும்),அபயகரம் (ஆகவும்),அங்கிநகரம் (ஆகவும்), முயலகனார்தங்கும்அடிக்கீழ்மகரம் (அதுஆகவும்) பொருந்தஅவ்விறைவன்திருநடனம்செய்தருளுவன்எனஅறிவாயாக.

**பதவுரை**:பார்க்கில்- ஆராய்ந்துபார்க்குமிடத்து,இறைக்கு - சிவபெருமானுக்கு, ஆர்க்கும்துடிசேர்க்கும் (கரம்) சிகரம் -ஒலிக்கின்றடமருகம்ஏந்தியதிருக்கரத்திலேசிகாரமாகவும், சிக்கனவீசுகரம்வா-நன்றாகவீசியதிருக்கரத்திலேவகாரமாகவும், அபயகரம்யகரம் -அஞ்சல்எனஅமைத்ததிருக்கரத்திலேயகாரமாகவும், அங்கிநகரம்-அக்கினிஏந்தியதிருக்கரத்திலேநகாரமாகவும்,முயலகனார்தங்கும்அடிக்கீழ்மகரம்அது (தான்) முயலகனார்பொருந்தியிருக்கும் (மிதித்த) திருவடியிலேமகாரமாகவும்பொருந்தஅவ்விறைவன்திருநடனம்செய்தருளுவன்எனஅறிவாயாக.

இதனால்போகாங்கமென்னும்சிகாராதிபஞ்சாக்கரஅமைப்பும்திருநடனமும்உரைக்கப்பட்டன. 'அது' பகுதிப்பொருள்விகுதி; 'தான்' - அசை.

**பொழிப்பு**:இறைவன்டமருகமேந்தியதிருக்கையில்சிகாரமும்,வீசியதிருக்கையில்வகாரமும், அபயகரத்தில்யகாரமும், அக்கினியேந்தியதிருக்கையில்நகாரமும்ஊன்றியதிருவடியில்மகரமும்பொருந்த(ப்பஞ்சகிருத்திய) த்திருநடனம்செய்தருளுவான்.

## இதுவுமது

### திருபாசி -ஓங்காரமும், பஞ்சசக்கரநடனதரிசனத்துக்குஅதிகாரிகளும், பயனும்

34. ஒங்காரமேகல்திருவாசிஉற்றதனில்
நீங்காவெழுத்தேநிறைசுடராம் - ஆங்காரம்
அற்றாரறிவரணியம்பலத்தானாடயிது
பெற்றார்பிறப்பற்றார்பின்.

**கொண்டுகூட்டு** :ஓங்காரமேநல்திருவாசி; அதனில்உற்றுநீங்காஎழுத்தேநிறைசுடராம்; (இவற்றை) ஆன்காரம்அற்றார்அறிவர்; அணிஅம்பலத்தான்ஆடல்இதுபெற்றார்பின்பிறப்புஅற்றார்.

**பதவுரை**:ஒங்காரமேநல்திருவாசி -ஓம்என்னும்பிரணவமந்திரமேநல்லதிருவாசியாகும்; அதனில்உற்றுநீங்காஎழுத்தேநிறைக்கடராம் - அப்பிரணவத்தைப்பொருந்திஅதனைவிட்டுநீங்காதபஞ்சாக்கரமேதிருவாசியில்சுடராயமைந்துநிறைந்துதின்ற (உள்) ஒளியாகும். ஆங்காரம்அற்றார்அறிவர் - இவைஇங்னமாதலையான்எனதுஎன்னும்செருக்கறுத்தபக்குவான்மாக்கள்அறிவார்கள்; அணிஅம்பலத்தான்ஆடல்இதுபெற்றார்பின்பிறப்புஅற்றார்அழகியபொன்னம்பலமுடையான்செய்கின்றதிருநடனத்தைத்தரிசிக்கப்பெற்றவர்களேபின்புபிறப்புஇல்லாதவராவர்.

இதனால்சூக்குமபஞ்சாக்கரஅமைப்பும்,திருநடனதரிசனத்துக்குஅதிகாரியாவாரியல்பும், தரிசனப்பயனும்கூறப்பட்டன. ஆங்காரம்ஆணவமயக்கத்தான்உளதாகியசெருக்கு; அதுதான்அல்லாதஉடம்பை "யான்" என்றலும், தனதல்லாத - தன்னோடுசம்பந்தமில்லாதபொருளை 'எனது' என்றலுமாம். திருவாசியிலுள்ளசுடர்கள்ஐம்பத்தோரக்கரங்களென்ப, பிரணவத்துள்பஞ்சாக்கரம்உற்றுநீங்காதிருக்கும்என்றமைக்கு "இறைசத்திபாசம்எழின்மாயைஆவி, உறநிற்கும்ஓங்காரத்துள்" (திரு அ. பய. அதி. 9. செய்.1) என்பதுசான்றாதல்உணர்க.

**பொழிப்பு**:பிரணவமேதிருவாசியாதலையும், பிரணவத்துள்அடக்கமானபஞ்சாக்கரமேதிருவாசியில்நிறைந்தசுடராதலையும், ஆணவமுனைப்பகன்றார்அறிவர். (இங்ஙனம்உட்பொருள்உணர்ந்து) இறைவனின்திருநடனத்தைத்தரிசித்தவர்களே (இனிப்) பிறவியற்றோராவர்.

## இதுவுமது

### பஞ்சகிருத்தியநடனம்

33. தோற்றந்துடியதனில்தோயுந்திதியமைப்பிற்
சாற்றியிடும்அங்கியிலேசங்காரம் - ஊற்றமா
ஊன்றுமலர்ப்பதத்திலுற்றதிரோதம்முத்தி
நான்றமலர்ப்பதத்தேநாடு.

**கொண்டுகூட்டு** : (இறைவன்) துடிஅதனில்தோற்றம்(ஆகவும்),அமைப்பில்தோயும்திதி (ஆகவும்), சாற்றியிடும்அங்கியில் (+ஏ) சங்காரம் (ஆகவும்), ஊற்றம்ஆ(க)

ஊன்றும்மலர்ப்பதத்தில்உற்றதிரோதம்தம்(ஆகவும்), நான்றமலர்ப்பதத்து (+ ஏ) முத்தி (ஆகவும்திருநடனம்செய்வான்என்பதை நீ) நாடு

**பதவுரை:**துடிஅதனில்தோற்றம் - இறைவன்டமருகம்ஏந்தியதிருக்கரத்திலேபடைத்தலாகவும், அமைப்பில்தோயும்திதி-அபயகரத்திலேஆன்மாபொருந்துகின்றகாத்தலாகவும், சாற்றியிடும்அங்கியில் (+ஏ)சங்காரம் - சொல்லப்பட்டஅக்கினிஏந்தியதிருக்கரத்திலே (மலம்நீக்கிச்சுகம்செய்தலாகிய) அழித்தலாகவும்,ஊற்றம் ஆ(க) ஊன்றும்மலர்ப்பதத்தில்உற்றதிரோதம்- உறுதிபெறஊன்றிநின்றதிருவடியிலேபிரபஞ்சத்தைமறைத்தலாகவும், நான்றமலர்ப்பதத்து (+ ஏ)முத்திநாடு - தூக்கியமலர்போலும்திருவடியிலேமுத்தியளித்தலாகியஅனுக்கிரகமாகவும்திருநடனம்செய்வானென்பதைநீ விசாரித்துஅறிவாயாக.

'ஏ' இரண்டும்அசைகள்.

**பொழிப்பு:**இறைவன்டமருகமேந்தியதிருக்கரத்திலேபடைத்தலாகவும், அபயகரத்திலேகாத்தலாகவும், அக்கினியேந்தியதிருக்கரத்திலேஅழித்தலாகவும்,
ஊன்றியதிருவடியிலேமறைத்தலாகவும்தூக்கியதிருவடியிலேமுத்திஅனுக்கிரகமாகவும்பஞ்சகிருத்தியநடனம்செய்வான். இவ்வுண்மையைநீஆராய்ந்தறிவாயாக.

### மும்மலம்நீக்கிமுத்தியளிக்குந்திருநடனம்

36. மாயைதனையுதறிவல்வினையைச்சுட்டுமலஞ்
சாயஅமுக்கியருள்தானெடுத்து - நேயத்தால்
ஆனந்தவாரிதியில்ஆன்மாவைத்தானமுத்தல்
தானெந்தையார்பரதந்தான்.

**கொண்டுகூட்டு** :எந்தையார்பரதம் (செய்யும்திருநடனமுறைமைதான்) மாயைதனைஉதறி, வல்வினையைச்சுட்டு, மலம்சாயஅமுக்கி, அருள் (தான்) எடுத்து, நேயத்தால்ஆனந்தவாரியில்ஆன்மாவை (தான்) அமுத்தல்தான்.

**பதவுரை:**எந்தையார்பரதம் (தான்) -எமதுதந்தையாகியபரமேஸ்வரனதுதிருநடனமுறைமையாவது, மாயைதனைஉதறி-டமருகம்ஏந்தியதிருக்கரத்தினாலேமாயையைநீக்கி, வல்வினையைச்சுட்டு- அக்கினிஏந்தியதிருக்கரத்தினாலேகன்மத்தைஅழித்து,
மலம்சாயஅமுக்கிஊன்றியதிருவடியினாலேஆணவமேலிடாமல்அழுத்தி, அருள் (தான்) எடுத்துதூக்கியஆணவமலம்திருவடியினாலேதிருவருளேஉடம்பாகநிறுத்தி,
நேயத்தால்ஆனந்தவாரிதியில்ஆன்மாவைத் (தான்) அளுத்தல்தான் -

பெருங்கருணைகொண்டுஅஞ்சலெனஅமைத்ததிருக்கரத்தினாலேபேரானந்தசாகரத்தில்ஆன்மாவைமூழ்குவித்தலேயாம்.

முதல்மூன்று'தான்'களும்அசை

**பொழிப்பு:**பரமேசுவரனதுதிருநடனமுறைமையாவது: மாயையைநீக்கி, கன்மத்தைஅழித்து, ஆணவமலம்மேலிடாமல்அழுத்தி, திருவருளைநிறுத்தி, தமதுபெருங்கருணையினாலேஆன்மாவைப்பேரானந்தத்தில்மூழ்குவித்தலேயாம்.

### அம்பலத்தான்கூத்தின்பயன்அந்தமிலின்பமாம்

37. மோனந்தமாமுனிவர்மும்மலத்தைமோசித்துத்
தானந்தமானிடத்தேதங்கியிடும் - ஆனந்தம்
மொண்டருந்திநின்றாடல்காணுமருள்மூர்த்தியாக்
கொண்டதிருவம்பலத்தான்கூத்து.

**கொண்டுகூட்டு** :அந்த(ம்) மோனமாமுனிவர்மும்மலத்தைமோசித்து,'தான்' அந்தம்ஆனஇடத்து (+ஏ) தங்கியிடும்ஆனந்தம்மொண்டுஅருந்திநின்று, ஆடல்காணும்(அதுதான்) அருள்மூர்த்தியா(க)க்கொண்டதிருஅம்பலத்தான்கூத்து (முறைமையாம்).

**பதவுரை:**அந்தம்மோனமாமுனிவர்மும்மலத்தைமோசித்து - முடிவானமௌனதவமுடையசிறந்தஞானிகள்அவனருளாலேமும்மலங்களையும்நீக்கி, 'தான்' அந்தம்ஆனஇடத்தேதங்கியிடும் - 'நான்பிரமம்' என்னும்ஆன்மபோதம்முடிவடைந்தகாலத்திலேதோன்றிநிலைத்துநிற்கின்ற, ஆனந்தம்மொண்டுஅருந்திநின்று,ஆடல்காணும் (அதுதான்) - ஆனந்தவெள்ளத்தைமுகந்துகொண்டுஅதனைஅநுபவித்திருத்தலேபயனாகத்திருநடனத்தைத்தரிசிப்பதுதான், அருள்மூர்த்தியா(க)க்கொண்டதிருஅம்பலத்தான்கூத்து - எல்லாஆன்மாக்களும்ஈடேறவேண்டும்எனஇயல்பாகஎழுகின்றகருணையேதிருமேனியாகக்கொண்டதிருவம்பலமுடையானதுதிருநடனமுறைமையாகும்.

இதனால்அவனருளேபற்றுக்கோடாகமும்மலம்நீங்கிஆன்மபோதமும்அகன்றநிலையிலேயேஆன்மாபக்குவியாகுமென்பதும், அப்பக்குவநிலையிலேஉளதாகும்பதிஞானத்தினாலேயேஆனந்தம்மொண்டருந்தலாகியபயன்பெறற்பாலதென்பதும்வலியுறுத்தப்பெற்றன.

**பொழிப்பு:**மௌனவிரதமுடையமுனிவர்கள்மும்மலங்களையும்நீக்கி, ஆன்மபோதம்அதன்றநிலையில்நிலைத்துநிற்பதாகியபேரானந்தத்தைமுகந்துஅநுபவித்துஇருத்தலேபயனாகத் திருநடனத்தைத்தரிசிப்பதுதான், கருணையேஉருவமானதிருவம்பலமுடையானின்திருநடனமுறைமையாகும்.

**பிரான்நடனம்பேணுவார்க்குப்பிறப்பில்லை.**

38.பரையிடமாநின்றுமிகுபஞ்சாக்கரத்தால்
உரையுணர்வுக்கெட்டாவொருவன் - வரைமகள்தான்
காணும்படியேகருணையுருக்கொண்டாடல்
பேணுமவர்க்குண்டோபிறப்பு.

**கொண்டுகூட்டு:**உரைஉணர்வுக்குஎட்டாஒருவன்,மிகுபஞ்சாக்கரத்தால்கருணைஉருகொண்டு, பரைஇடமா(க) நின்று, வரைமகள்'தான்' காணும்படி (+ஏ) ஆடல் (செய்வதைப்) பேணும்அவர்க்குப்பிறப்புஉண்டோ? (இல்லை).

**பதவுரை:**உரைஉணர்வுக்குஎட்டாஒருவன்-வாக்குமனாதீதனாகியஒப்பற்றஇறைவன், மிகுபஞ்சாக்கரத்தால்கருணைஉருகொண்டு - மேன்மைமிக்கஸ்ரீபஞ்சாக்கரத்தினாலேகருணையேதிருமேனியாகக்கொண்டு, பரைஇடமாகநின்று - பராசத்தியாகியபொன்னம்பலமேஇடமாகநின்று, வரைமகள்காணும்படி (+ஏ) - மலையரையன்மகளாகியஉமையம்மைகாணும்படி, ஆடல்-திருநடனம்செய்தருளுவதை, பேணும்அவர்க்குப்பிறப்புஉண்டோ - விரும்பி(த்தரிசித்து) வாழுகின்றவர்களுக்குத்தொடர்ந்துவருவதாகியபிறவித்துன்பம்இல்லையாம்.

'தான்,' 'ஏ' அசைகள்

5. மன்னுவர்இவ்வகைஐவர்:- பரமசிவன்ஞானசத்தியைப்பொருந்துதலாற்சிவமும், கிரியாசத்தியைப்பொருந்துதலாற் 'சத்தியும், ஞானசத்தியையும்கிரியாசத்தியையும்சமமாய்ப்பொருந்துதலாற்சதாசிவமும், கிரியைஏறிஞானம்குறையப்பொருந்துதலால்மகேசுவரரும், ஞானம்ஏறிக்கிரியைகுறையப்பொருந்துதலால்சுத்தவித்தையும், ஆகஐவரும்அவ்வச்சத்திகளின்வடிவமாகவேதோன்றி,நாதத்துவத்திற்சிவமும். விந்துதத்துவத்திற்சத்தியும், சாதாக்கியதத்துவத்திற்சதாசிவரும். மகேசுவரதத்துவத்தில்மகேசுவரரும், சுத்தவித்தியாதத்துவத்திற்சுத்தவித்தையும்எனஐவராய்நின்றுதொழில்செய்வர்.

இத்தத்துவங்களேயன்றிச்சாந்தியதீதைசாந்திவித்தைபிரதிட்டைநிவிர்த்திஎன்னும்பஞ்சகலைகளும், இருநூற்றிருப்பத்துநான்குபுவனங்களும்இச்சுத்தமாயையிலிருந்துதந்துதோன்றும். கலை, தத்துவம், புவனம்என்னும்மூன்றும்பொருட்பிரபஞ்சமாம்.

6. வாய்மை-வலி.

7. மேற்சொல்லியபொருட்பிரபஞ்சத்தையன்றி,முன்சொன்னவிந்துவிலிருந்துசூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரிஎன்னும்நான்குவாக்குக்களும்தோன்றும். அன்றி, எண்பத்தொருபதங்களும்பதினொருமந்திரங்களும்தோன்றும்.வாக்குக்களாலாவதுவன்னம் (எழுத்து)வன்னமும்பதமும்மந்திரமுமாகியமூன்றும்சொற்பிரபஞ்சமாம். இவைபுவனத்தில்தோன்றியசரீரங்களைப்பற்றிநிற்கும். புவனங்கள்தத்துவங்களாலுண்டாகும். தத்துவங்கள்கலைகளிலிருக்கும். கலைகள்இவ்வெல்லாவற்றையும்வியாபரித்துத்தாம்இவற்றில்வியாபகமாயிருக்கும்.

சொல்வடிவும்பொருள்வடிவுமானஇந்தஆறும்அத்துவாஎனப்படும். (பார்.செ.9.)

8. சுத்தமாயையிலேதோன்றும்தநுகரணபுவனபோகங்களுக்குக்காரணமாகக்கலைமுதற்பிருதிவியீறாகமுப்பத்தொருதத்துவங்கள்அச்சுத்தமாயையிலிருந்தேதோன்றிக்காரியப்படும். இவைஅசுத்தமாயையிற்றோன்றும்கலைமுதலியதத்துவங்களின்வேறாய்ச்சுத்தமாயாகாரியமாகவேயிருக்கும். சரீரம்இந்திரியம்அந்தக்கரணம்முதலியவைகளெல்லாம்அவற்றால்உண்டாகும்.

9. சுத்தமாயைஅதிகாரமுத்தர்க்கும்அபரமுத்தர்க்கும்இருப்பிடமாகும். அதிகாரமுத்தராவார்விஞ்ஞானாகலரிலிருந்துமலபரிபாகமெய்தப்பெற்றும், அதிகாரஞ்செய்யவேண்டும்என்னும்இச்சையால்ஈஷத்மலம்இருந்தமையால், சுத்தவித்தைமகேசுவரம்சாதாக்கியம்என்னும்தத்துவங்களில்அதிகாரஞ்செய்துகொண்டிருப்பர். சாதாக்கியத்தில்அணுசதாசிவரும், மகேசுவரத்தில்அநந்தர்முதலியஅட்டவித்தியேசுரரும், சுத்தவித்தையிலேசத்தகோடிமகாமந்திரர்நந்திமுதலியகணநாதர்எண்மர். இந்திரன்முதலியதிக்குப்பாலகர்என்னும்இவர்களும்இருப்பர். அபரமுத்தராவார்ஞானத்திற்சரியைகிரியையோகங்களில்நின்றவரும், ஞானத்தின்ஞானத்தில்முடிந்தஞானம்மேவப்பெறாமையாற்பரமுத்தியடையாதுதப்பினவருமாவர்.

10. இச்சுத்தமாயைசிவத்தினதுஇலயபோகஅதிகாரவடிவங்களின்தொழிலுக்குஇடமாயிருக்கும். சிவம்ஞானசொரூபமாகையால்மலகன்மங்களோடுகூடிய அசுத்தமாயையிலேதொழில்செய்யமாட்டாது. இலயத்தானமாயிருக்கும்சிவதத்துவசத்திதத்துவங்களிற்பரமசிவமேயன்றிவேறேகிருத்தியஞ்செய்யும்ஆன்மாக்களில்லை.

## பொழிப்பு:-

பரமசிவனதுசத்தியின்வியாபாரத்தால்சுத்தமாயையிலேநாதந்தோன்றும்நாதத்தில்விந்துதோன்றும்.

விந்துவிற்சாதாக்கியம்தோன்றும். சாதாக்கியத்தில்மகேசுவரம்தோன்றும். மகேசுவரத்தில்சுத்தவித்தைதோன்றும். இத்தத்துவங்கள்ஐந்தினையும்அதிட்டித்துநிற்கும்சிவம்முறையேசிவம்சத்திசதாசிவன்மகேசுவரன்சுத்தவித்தை எனப்பெயர்பெற்றுநிற்கும். அன்றி, முன்சொன்னவிந்துவினின்றுசூக்குமைபைசந்திமத்திமைவைகரிஎன்னும்வாக்குக்கள்நான்கும்தோன்றும்.

### b. அசுத்தமாயை.

22. உருவாதிசதுர்விதமாயொன்றொன்றொவ்வா
வுண்மையதாய்நித்தமாயொன்றாயென்றும்
அருவாகிக்கன்மாந்தமணுக்களியார்க்கு
மாவாரமாயசித்தாயசலமாகி
விரிவாயதன்செயலின்வியாபியாயெல்லாம்
விரிந்தவகைபுரிந்தடைவின்மேவியவையொடுங்க
வருகாலமுயிர்களெல்லாமருவிடமாய்மலமாய்
மன்னியிடுமரனருளான்மாயைதானே.

பதவுரை:- மாயைதான் - அசுத்தமாயையானது, உருஆதிசதுர்விதமாய்-காரியப்பாட்டிலேதநுகரணபுவனபோகம்என்னும்நால்வகைப்பொருள்களாய், ஒன்றுஒன்றுஒவ்வாஉண்மையதாய்-ஒன்றுக்கொன்றுஒவ்வாததூலசூக்குமஇயல்பினையுடையதத்துவங்களாய், நித்தமாய் -காரணரூபத்தில்நித்தமாய், ஒன்றாய்- ஒன்றாய்,என்றும்அருவாகி-எப்பொழுதும்அருவமாயிருப்பதாய்,கன்மஅந்தம்அணுக்கள்யார்க்கும்ஆவாரமாய் -கன்மம்நீங்குமளவும்ஆன்மாக்கள்யாவர்க்கும்மயக்கஞ்செய்வதாய், அசித்தாய் -சடமாய், அசலமாகி -சலனமற்றதாய், விரிவாயதன்செயலில்வியாபியாய்-தன்னிடத்தினின்றும்விரிந்தகாரியப்பொருள்களில்தான்வியாபித்துநிற்பதாய், எல்லாம்விரிந்தவகைபுரிந்தஅடைவில் - அக்காரியங்களெல்லாம்விரிந்துதோன்றச்செய்தமுறையில், அவைமேவிஒடுங்கவருகாலம் -அவைபொருந்திஒடுங்கவருகிறசங்காரகாலத்திலே,உயிர்கள்எல்லாம்மருவுஇடமாய் -ஆன்மாக்கள்எல்லாம்பொருந்தியிருத்தற்கிடமாய், மலமாய் -மும்மலங்களுள்ஒன்றாய், அரன்அருளால்மன்னியிடும் - சிவத்தினதுதிரோதானசத்தியாற்காரியப்படுத்தப்படுவதாய்நிலைபெறும்.

**குறிப்பு:-** 1. மாயை:- பிரபஞ்சமெல்லாம்தன்னிடத்துவந்துஒடுங்குதற்கும்தன்னிடத்துநின்றுதோன்றுதற்கும்காரணமாயுள்ளபொருள் மாயையெனப்படும். மாயாஎன்னும்வடமொழிதமிழில்மாயைஎன்றுவிகாரமாயிற்று.மா - ஒடுங்குதல். யா- வருதல்.

மாயை, மலகன்மங்களோடுவிரவி 'அசுத்தப்படுதலால், அசுத்தமாயையெனப்படும்.

2. உருவாதிசதுர்விதமாய்:- தநு -பஞ்சபூதங்களின்காரியமானபௌதிகதேகம். கரணம்- புறக்கரணம்அகக்கரணம்முதலியன. புவனம்-உயிர்கள்இன்பத்துன்பங்கள்அநுபவித்தற்கிடமாகியஉலகம். போகம் -இன்பத்துன்பங்கள்அநுபவித்தற்கேதுவாகியபொருள்கள். மாயையிலிருந்துகலைமுதற்பிருதிவியீறாகத்தோன்றும்தத்துவங்களால்தநுகரணம்புவனம்போகம்ஆகியஇவைகளுண்டாம்.

3. ஒன்றொன்றொவ்வாவுண்மையதாய்:- உண்மை -தத்துவம். அவைகலைமுதற்பிருதிவியீறானமுப்பதுமாம். ஒன்றுக்கொன்றுஒவ்வாமையாவதுதூலசூக்குமமுறையாய்நிற்றல். பூதங்கள்தூலம். தன்மாத்திரைகள்சூக்குமம். அகங்காரம்அதனினுஞ்சூக்குமம். புத்திஅதனினுஞ்சூக்குமம். குணதத்துவம்அதனினுஞ்சூக்குமம், பிரகிருதியும்கலையும்ஒன்றுக்கொன்றுசூக்குமம்.இப்படியேஇந்திரியம்அந்தக்கரணம்உள்அந்தக்கரணம்முதலியவைகளுமாம். பஞ்சபூதங்களினுட்பிருதிவிதூலம், அப்புசூக்குமம், தேயுஅதனினுஞ்சூக்குமம், வாயுஅதனினுஞ்சூக்குமம். ஆகாயம்அதனினுஞ்சூக்குமம். இப்படியேதத்துவங்கள்யாவும்ஒன்றோடுஒன்றுஒவ்வாதுதூலசூக்குமமுறையாய்வியாபகவியாப்பியபாவமுற்றுநிற்கும். அன்றியும், இவைதன்மையினாலும்வேறுபட்டனவாம். இந்திரியங்கள்புறக்கருவிகளாய்மாத்திரம்உபயோகப்படும்.அந்தக்கரணங்கள்அகக்கருவிகளாய்மாத்திரம்நின்றுஇயங்கும். உள்ளந்தக்கரணங்கள்ஆன்மாவின்அறிவிச்சைதொழில்களைஎழுப்பிப்புருடனைப்போகத்திற்செலுத்தும். இப்படிஇவற்றின்வேறுபாடுகள்உணரப்படும்.

4. நித்தமாய்ஒன்றாய்:- பிரபஞ்சம்தநுவாதிகளாய்ப்பலதன்மையவாய்த்தோன்றுவதும்ஒடுங்குவதுமாய்க்காரியப்படினும், அவற்றின்காரணமானமாயைஅக்காரியப்பாடுகளின்றிநித்தமாய்ஒன்றாயிருக்கும். பிரபஞ்சம்மாயையினின்றுதோன்றி, அழியுங்காலம்அம்மாயையிலேஒடுங்குதலால், அப்பிரபஞ்சம்அநித்தமென்றும், மாயைநித்தமென்றுஞ்சொல்லப்படும்.

5. என்றும்அருவாகி:- தநுகரணபுவனபோகங்கள்அருவமாயும்அருவுருவமாயும்உருவமாயும்தோன்றிநின்றுஒடுங்குவனவாம். சங்காரகாலத்தில்இவைதத்தம்நிலைகுலைந்துஅருவமாய்மாயையில்ஒடுங்கும். மாயைநிலைகுலையாதுஎன்றும்ஒருபடித்தாய்அருவமாகவேயிருக்கும்

6. கன்மாந்தம்அணுக்கள்யார்க்கும்ஆவாரமாய்:- மாயைஉயிர்களுக்குத்தநுகரணபுவனபோகங்களைத்தருதல்கன்மநுகர்ச்சியின்பொருட்டேயாம். கன்மமில்லையாயின், அவைகளும்வேண்டப்படுவதில்லை. மயக்குதலாவதுதநுகரணபுவனபோகங்களைமெய்யென்றுஎண்ணச்செய்தல். கன்மாநுபவத்தின்பொருட்டெஇவ்வெண்ணமும்உண்டாம். ஆதலால்கன்மமில்லாதவரைமாயைமயக்காது.

இங்கேஅணுக்களென்றதுமும்மலமுமுடையசகலரை. விஞ்ஞானாகலருக்குமாயாதநுகரணபுவனங்களிருப்பினும், கன்மமும்பிரகிருதியுமில்லாமையால்அவரைமாயைமயக்கமாட்டாது. பிரளயாகலருக்குத்தநுகரணபுவனமும்கன்மமுமிருப்பினும், மாயாகாரியங்களுள்மயக்குந்தொழிலையுடையமுக்குணங்களும்பிரகிருதியுமில்லாமையால்மயக்கம்நிகழ்வதில்லை. சகலருக்குப்பிரகிருதிசம்பந்தமும்முக்குணமயக்கமும்இருத்தல்பற்றியேமாயைமயக்கும்எனப்பட்டது.

7. அசித்து-அறிவில்லாதது,சடப்பொருள்.

8. அசலம் - அசைவின்மை, தத்துவங்கள்தோன்றிஒடுங்கத்தான்அசைவின்றிநித்தமாயிருத்தலால்,மாயைஅசலம்எனப்பட்டது.

9. எல்லாம்விரித்தவகை. . . . . . .முயிர்களெல்லாமருவிடமாய் - தநுகரணபுவனபோகங்களாய்விரிந்தவற்றுள், தநுவும்புவனமும்போகமும்பூதங்களில்ஒடுங்கும். பூதம்தன்மாத்திரையில்ஒடுங்கும். தன்மாத்திரைபூதாதியகங்காரத்தில்ஒடுங்கும். ஞானேந்திரியங்களும்மனமும்தைசதவகங்காரத்தில்ஒடுங்கும். கன்மேந்திரியங்கள்வைகாரிகவகங்காரத்தில்ஒடுங்கும். அகங்காரம்புத்தியிலும், புத்திஅவ்வியத்தத்திலும், அவ்வியத்தம்பிரகிருதியிலும்ஒடுங்கும். பிரகிருதிஅராகம்வித்தைமூன்றும்கலையிலும், கலைநியதிகாலம்மூன்றும்மாயையிலும்ஒடுங்கும். இதுவேஒடுங்குமுறையாம்.

இவைகளெல்லாம்ஒடுங்கும்அச்சங்காரகாலத்துத்தான்தாரகமாய்நின்றுஉயிர்ஒடுங்கப்பெறும். உயிருக்குஇந்தநிலைகேவலம்எனப்படும். இந்நிலையில்ஆணவமலமேயன்றிமாயைகன்மம்இல்லைஎன்பதுமாயையின்காரியமில்லைஎன்றபடியாம்.

மாயையின்காரியம்தநுகரணபுவனங்கள். கன்மத்தின்காரியம்போகங்கள். அக்கேவலநிலையில்ஆணவமலம்ஆன்மாவின்அறிவுமுழுவதையும்மறைத்துநிற்கும். கன்மம்சஞ்சிதமாய்ப்பயன்தராதுமாயையிலிருக்கும். மாயைஉயிர்களுக்குத்தாரகமாய்மாத்திரமிருக்கும்.

10. மலமாய்:- மாயைகலாதிதத்துவங்களால்அறிவைவிளக்குமாயினும், போகநுகர்ச்சியின்பொருட்டுமயக்கஞ்செய்தலால், மலம்எனப்படும்.

11. அரன்அருளால்மன்னியிடும்:- மாயைபிரபஞ்சமாய்த்தோன்றுதலும், ஒடுங்குதலும், உயிர்களுக்குக்கருவியாய்நின்றுஅறிவைவிளக்குதலும், போகந்தருதலும்ஆகியஇவையெல்லாம்செய்தற்குஅறிவில்லாதசடமாகையால், அதனால்இயலாது. கன்மத்துக்கேற்பஇவற்றைக்காரியப்படுத்தும்தன்மைசித்தாகியமுதல்வனுக்கேஉள்ளதாம். ஆதலால், முதல்வனதுஅருளாகியதிரோதானசத்தியின்செயலால்மாயைகாரியப்படும்.

**பொழிப்பு:**அசுத்தமாயையானதுகாரியப்பாட்டிலேதநுகரணபுவனபோகம்என்னும்நால்வகைப்பொருள்களாய்ஒன்றுக்கொன்றொவ்வாததூலசூக்குமஇயல்பினையுடையதத்துவங்களாய், காரணரூபத்தில்நித்தமாய்ஒன்றாய், எப்பொழுதும்அருவமாயிருப்பதாய். கன்மம்நீங்குமளவும்ஆன்மாக்களுக்குமயக்கஞ்செய்வதாய், சடமாய், அசலமாய்தன்னிடத்திருந்துவிரிந்தகாரியங்களனைத்தினும்வியாபித்துநிற்பதாய், அக்காரியங்கள்யாவும்தோன்றியமுறையில்வந்துஒடுங்கஅவைஒடுங்குமிடமாய்,அவ்வொடுக்கமாகியசங்காரகாலத்துஆன்மாக்களெல்லாம்வந்துபொருந்துமிடமாய், மும்மலங்களுள்ஒன்றாய், திரோதானசத்தியாற்காரியப்படுத்தப்படுவதாயிருக்கும்.

## C. உலகுக்குமுதற்காரணம்மாயை.

23. என்னையிதுவெனிலுலகுக்குபாதானமில்லை
 யிறைவனலதெனினசித்துச்சித்தினிடத்துதியா
மன்னியுளதேன்முதல்வனென்கொலென்னின்
 மாயைதானசித்துருவாய்மருவமாட்டா
தன்னவனுமிதுவொழியவாக்கமாட்டா
 சைத்தனாமெனினதுவுமவன்போனித்த
முன்னவனவ்வசித்தைவிரித்தெவையுமாக்கு
 முதன்மையதுகொடுத்ததெனமொழிந்திடாரே

**பதவுரை:-**இதுஎன்னைஎனில்-மாயைஎன்னும்ஒருபொருள்காரணமாயுண்டென்னும்இஃதுஎன்னையெனில், உலகுக்குஉபாதானம் - அதுபிரபஞ்சந்தோன்றுதற்குமுதற்காரணமாயிருக்கும்,

இறைவன்அலதுஇல்லைஎனின் -
உலகுக்குப்பிரமத்தையன்றிவேறொருமுதற்காரணம்இல்லையென்றுநீசொல்லின்,
அசித்துச்சித்தினிடத்துஉதியா-சடமாகியபிரபஞ்சம்சித்தாகியபிரமத்தினின்றுதோன்றா,
மன்னிஉளதேல்முதல்வன்என்கொல்என்னின்-
மாயைகாரணமாய்ப்பொருந்தியுள்ளதாயின்முதல்வன்வேண்டப்படுவதுஎதன்பொருட்டெனின்,
மாயைதான்அசித்துஉருவாய்மருவமாட்டாது-
மாயையானதுசடமாகையால்அதுசித்தாகியஒருமுதல்வனையின்றித்தானேதநுவாதிகளாகக்காரியப்படமாட்டாது. அன்னவனும்இதுஒழியஆக்கமாட்டான்அசத்தனாம்எனின் -
அந்தமுதல்வனும்இந்தமாயையின்றிப்பிரபஞ்சத்தைஉண்டாக்கமாட்டான்,
அதனால்அவனும்மாயைபோலஅசத்தனேஎன்னின், அவ்வாறன்று,அதுவும்அவன்போல்நித்தம்-
அந்தமாயையும்அவனைப்போலஅநாதியாயுள்ளது, முன்னவன்அவ்வசித்தைவிரித்துஎவையும்ஆக்கும்-
சித்தாகியமுதல்வன்அந்தஅறிவில்லாதமாயையைவிரித்துப்பிரபஞ்சம்எல்லாவற்றையும்உண்டாக்குவன்,
முதன்மைஅதுகொடுத்ததுமொழிந்திடார் -
அதனாற்பிரபஞ்சத்தைஉண்டாக்குந்தலைமையைஅந்தமாயையேகொடுத்ததென்றுஅறிவுடையோர்சொல்லமாட்டார்.

குறிப்பு:-

மேற்செய்யுளிலேதநுவாதிபிரபஞ்சம்மாயையிலேதோன்றிஒடுங்குமென்றுகூறியதற்குஏகான்மவாதிமுதலியோர்ஆசங்கையும்மறுப்பும்:-

**ஆசங்கை**. 1. பிரபஞ்சத்தோற்றஒடுக்கங்களுக்குமாயைமுதற்காரணம்என்றதென்னை, பிரமமேமுதற்காரணம். மறுப்புபிரபஞ்சம்அசித்துப்பொருள். பிரமம்சித்துப்பொருள். அசித்தாகியபிரபஞ்சம்சித்தாகியபிரமத்தினின்றும்தோன்றாது.
சடப்பொருளின்தோற்றத்துக்குக்காரணம்சடமாகவேஇருத்தல்வேண்டும். சித்துகாரணமாகாது. அன்றியும், தோன்றிநின்றுஅழிதலாகியகாரியப்பாடுறுதல்சடத்தின்இயல்பேயன்றிச்சித்தின்இயல்பன்று. ஆகையால், மாயையேபிரபஞ்சத்திற்குமுதற்காரணம்.

**ஆசங்கை.** 2. மாயைமுதற்காரணமானால்முதல்வன்வேண்டப்படுவதுஎதன்பொருட்டு? மறுப்பு. மாயைசடமாதலால்அதுசித்தாகியமுதல்வனையின்றித்தானேதநுவாதிகளாய்க்காரியப்படமாட்டாது.

**ஆசங்கை,** 3. மாயையைக்கொண்டன்றிப்பிரபஞ்சத்தைஉண்டாக்கமாட்டான்ஆகையால், முதல்வனும்வல்லமையில்லாதவனாவன். மறுப்பு.

தனக்கெனஒருசெயலில்லாதசடமாகியமாயையைமுதல்வன்விரித்துப்பிரபஞ்சத்தைக்காரியப்படுத்துதலால், அப்பிரபஞ்சத்தைக்காரியப்படுத்துந்தலைமையைஅம்மாயைகொடுத்ததன்று.

**பொழிப்பு**:-பிரபஞ்சத்தோற்றஒடுக்கங்களுக்குப்பிரமம்முதற்காரணமாகமாட்டாது. மாயையேமுதற்காரணம். அம்மாயைமுதல்வனாலேதநுவாதிகளாகக்காரியப்படும்.

### d. வினைக்கேற்றஉடம்பைக்கொடுப்பவர்கடவுள்

24. படைத்ததொருபடியின்றிப்பறவைபசுநரராப்
பண்ணியதென்முன்னைவினைப்பான்மையென்பர்
அடுத்தவினையுளதாயினிறையேனென்னி
லசேதனமற்றவையாவிக்கமைத்ததாகும்
எடுத்தவினையுருவுறுவதுயிரேற்றனே
யிருவினைக்குத்தக்கவுடலெய்துமென்னிற்
சடத்திரளுங்கர்த்தாவாயறிவொன்றில்லாத்
தன்மையனுங்கூடவொருசங்கையின்றே.

**பதவுரை**:-படைத்ததுஒருபடிஇன்றிப்பறவைபசுநரராப்பண்ணியதுஎன் - கருத்தாவேபடைப்பராயின்படைக்கப்பட்டபிரபஞ்சத்தைஒருதன்மையதாகப்படையாமற்பறவைபசுமனிதராகப் படைத்தகாரணம்என்னைஎன்றுகேட்கின், முனைவினைப்பான்மைஎன்பர்- ஆன்மாக்கள்முற்பிறவிகளிலேசெய்தநல்வினைதீவினைகளுக்கேற்றபடிஎன்றுசொல்லுவர்பெரியோர், அடுத்தவினைஉளதாயின்இறைஏனெனில்- முன்கூடினசஞ்சிதவினையுண்டாயின்கடவுள்வேண்டப்படுவதுஎதன்பொருட்டென்னின், அசேதனம் - அவ்வினைஅறிவில்லாதசடமாம். ஆதலின், மற்றவைஆவிக்குஅமைத்ததுஆகும்- பறவைமுதலியபடைப்புக்கள்அவரவர்செய்தவினைக்கேற்பமுதல்வன்உயிர்களுக்குவிதித்தனவாகும், எடுத்தவினைஉருஉறுவதுஉயிரேல்- செய்தவினைக்கேற்றஉடம்பைப்பொருந்துவதுஆன்மாவாயின், தானேஇருவினைக்குத்தக்கஉடல்எய்தும்என்னில்- அவ்வான்மாவேநல்வினைதீவினைகளுக்கேற்றஉடம்பைஎடுத்துக்கொள்ளும்அதற்குக்கடவுள்வேண்டுவதில் லைஎன்னில், சடத்திரளுங்கர்த்தாவாய்அறிவொன்றில்லாத்தன்மையனும்கூடஒருசங்கைஇன்று - சடமாகியவினைமாயைகளும்தனக்கெனஒருசெயலும்அறிவுமில்லாதஆன்மாவும்தம்முட்கூடுதற்குவேறோ ரேதுவுமில்லை,

**குறிப்பு:-**உலோகாயதன்வினா:-

மேற்சொல்லியவாறுபிரபஞ்சத்தைக்காரியப்படுத்துவோன்ஒருமுதல்வனாயின், ஆன்மாக்களெல்லாவற்றையும்ஒருதன்மையாகப்படையாது, தேவர்மனிதர்விலங்குபறவைஊர்வனநீர்வாழ்வனதாவரம்என்னும்எழுவகைப்பிறப்பாகவும், அவற்றுள்ளும்எண்பத்துநான்குநூறாயிரயோனிபேதமாகவும், பலபடப்படைத்தகாரணம்என்னை? விடை: முற்பிறவிகளிலேசெய்தநல்வினைதீவினைகளுக்குஏற்றபடியாம்.

நிரீச்சுரசாங்கியன்வினா:- 1. வினையேபிறவிகளைத்தருமாயின்கடவுள்எதன்பொருட்டுவேண்டப்படும். விடை: வினைஅறிவில்லாதசடப்பொருள். தானாகப்பிறவிகளைத்தரமாட்டாது. அவ்வினையைப்புசிக்கும்படிபிறவிபேதங்களைவினைக்கேற்பஅமைப்பவர்கடவுளே.

வினா :-2. வினைக்கேற்றஉடம்பைஅடைவதுஆன்மாவாயின், அவ்வான்மாக்களேதத்தம்வினைக்குத்தக்கஉடம்புகளைஎடுத்துக்கொள்ளும், அதற்குக்கடவுள்வேண்டுமா? விடை: சடமாகியவினையும்உடம்பும், தனக்கெனஒருசெயலும்அறிவுமில்லாதஆன்மாவும்தம்முட்கூடும்தன்மைஅவைகளுக்கில்லை.

**பொழிப்பு:**கடவுள்உலகத்தைப்படைக்குங்காலத்துயாவரையும்ஒருதன்மையாகப்படையாமல்,பறவைமுதலியஎழுவகைப்பிறப்பாகப்பலபடப்படைத்தகாரணமென்னையெனின், அதுமுற்பிறவிகளிலேசெய்தநல்வினைதீவினைகளுக்கேற்றபடியாம்.

வினையேபிறவிகளைத்தருமெனின், கடவுள்வேண்டப்படுவதுஎதன்பொருட்டெனில், வினைஅறிவில்லாதசடமாம். ஆதலின்பறவைமுதலியபடைப்புக்கள்அவரவர்செய்தவினைக்கேற்பமுதல்வன்உயிர்களுக்குவிதித்தனவாகும்.

இனி, முன்செய்தவினையையும்அதற்கேற்றஉடம்பையும்அடைவதுஉயிராயின், அவ்வுயிர்களேதத்தம்வினைகளுக்குத்தக்கஉடல்களைஎடுத்துக்கொள்ளும். அதற்குக்கடவுள்வேண்டுவதில்லையெனின், சடமாகியவினையும்மாயாகாரியங்களும்தனக்கெனஒருசெயலும்அறிவும்இல்லாதஉயிரும்தம்முட்கூடுவதற்குவேறோரேதுவுமில்லை. ஆதலால். கடவுளேஅவைகளைக்கூட்டுவர்என்பதாம்.

## e. மும்மலங்களும்அநாதி

25. அல்லன்மிகவுயிர்க்கிவைதானணைத்ததீச

னருவினைகவருந்துதற்கோவினையோவன்றிச்

சொல்லிவருமாயையோவணுவைமுந்தச்

சூழ்ந்ததெனுமுரைமுதலோர்தொடக்கிலார்பால்

ஒல்லைவருமெனினுளதாமுயிருண்டாவே

யுளதுமலமலமுளதாவொழிந்தவெல்லா

நெல்லின்முளைதவிடுமிபோலநாதியாக

நிறுத்திடுவரிதுசைவநிகழ்த்துமாறே.

**பதவுரை**:-ஈசன்-இறைவன், உயிர்க்குஅல்லல்மிகஇவைதான்அணைத்தது - ஆன்மாக்களுக்குத்துன்பம்மிகஉண்டாகஇவ்வுடல்களைக்கூட்டியது, அருவினைகள்அருந்துதற்கோ-அரியவினைப்பயன்களைப்புசிப்பதற்காகவோ, அப்படியாயின், வினையோஅன்றிச்சொல்லிவரும்மாயையோஅணுவைமுந்தச்சூழ்ந்தது-இந்தவினையோஅல்லதுசொல்லப்பட்டுவரும்மாயையோஆன்மாவைமுதலிற்கூடியது, எனும்உரை - என்னும்வினா,

முதல்ஓர்தொடக்கிலார்பால்ஒல்லைவரும்எனின்உளதாம்அநாதியில்ஒருபந்தமும்இல்லாதவரிடத்தில்இடையில்வந்துஇவைவிரைவாகப்பொருந்துமெனின்அவ்வினாஉண்டாம், உயிர்உண்டாலேஉளதுமலம் - உயிர்உளதாகவேஆணவமலமும்அதனோடுசகசமாயுள்ளது.

ஆனால்மாயையுங்கன்மமும்பின்புண்டானதோஎன்னில், மலம்உளதாஒழிந்த (உள) - ஆணவமலம்அநாதியேஉளதாகமற்றையமாயைகன்மங்களும்அநாதியேஉள்ளனவாம்.

எல்லாம்நெல்லின்முளைதவிடுஉமிபோல்அநாதியாகநிறுத்திடுவர் - இவைமூன்றையும்நெல்லிடத்துள்ளமுளையும்தவிடும்உமியும்போலஅநாதியாகச்சொல்வர், இதுசைவம்நிகழ்த்துமாறு-இதுவேசிவாகமங்கள்சொல்லும்முறைமை.

குறிப்பு:- 1. மேற்கூறியவாறுகடவுள்உயிர்களுக்குமாயாசரீரங்களைக்கொடுப்பதுவினைப்பயன்களைஅநுபவித்தற்பொருட்டாயின், வினா: வினையோமாயையோஉயிர்களைமுந்திப்பற்றியது? விடை: அநாதியில்ஒருபந்தமும்இல்லாதவரிடத்துஇடையில்இவைவருமாயின், இவ்வினாஉண்டாகலாம்ஆன்மாஎன்றுள்ளதோ, அன்றேஆணவமலமும்அதனோடு 'சகசமாயுள்ளதாம். அதுஉள்ளதாகவே, கன்மமும்மாயையும்அன்றேஉள்ளனவாம். இவைமூன்றும்நெல்லினிடத்துள்ளமுளையும், தவிடும். உமியும்போலஅநாதியாகவேஉள்ளன.

2. நெல்லின்முளைதவிடுமிபோல்:- முளைகன்மத்துக்கும், தவிடுமாயைக்கும், உமிஆணவத்துக்கும், அரிசிஆன்மாவுக்கும்உவமை.

நெல்லிலுள்ளமுளைத்தற்சத்திமுளையைத்தோற்றுவிக்குமாறுபோலக்கன்மமலம்உயிரினிடத்துச்சுகதுக்கங்களைமுதற்காரணமாய்நின்றுதோற்றுவிக்கும். தவிடுமுளைத்தற்குஅநுகூலஞ்செய்துஉடனிற்குமாறுபோல, மாயாமலம்அச்சுகதுக்கங்கள்தோன்றுதற்குத்துணைக்காரணமாய்த்தன்காரியமாகியதநுகரணம்முதலியவற்றையும்உயிரையும்இயைவித்துநிற்கும். உமிஅம்முளைதோன்றுதற்குநிமித்தகாரணமாயிருப்பதுபோல, ஆணவமலம்அச்சுகதுக்கத்தோற்றத்திற்குநிமித்தகாரணமாய்நின்றுஅவற்றைமுறுகுவித்துஉயிர்நுகருமாறுநிலைபெறுத்தும். "ஆணவமாயையுங்கன்மமும்மாமலங்,
காணுமுளைக்குத்தவிடுமியான்மாவுந்தாணுவையொவ்வாமற்றண்டுலமாய்நிற்கும்,
பேணுவாயமற்றுநின்பாசம்பிரித்தே." (திருமந். 468.)

**பொழிப்பு:**ஆணவம்கன்மம்மாயைமூன்றும்நெல்லினிடத்துள்ளஉமியும்முளையும்தவிடும்போலஆன்மாவோடுஅநாதியாய்உள்ளனவாம்.

## 4. மாயேயம்

## தத்துவங்கள்தோன்றும்முறை

26. அருத்திமிகுங்கலைகாலநியதியுடன்வித்தை
யராகமிவையநந்தரான்மாயைதனிலாகும்
உருத்திரராற்கலையதனிற்பிரகிருதிகுணங்க
ளுளவாகுமகங்காரம்புத்தியினிலுதிக்குந்
தெரித்தவிதுதிரிவிதமாந்தைசதவைகாரி
திகழ்தருபூதாதியெனத்திருந்தியசாத்துவிதம்
விரித்தகுணமனம்புத்தியிந்திரியமென்று
விளம்பியசோத்திராதிமுதல்விளங்கியிடும்விரிந்தே.

**பதவுரை:-**மாயைதனில் - அசுத்தமாயையினிடத்திலே, அநந்தரால்-அநந்ததேவரின்செயலால், அருத்திமிகும்கலைகாலம்நியதியுடன்வித்தைஅராகம்இவைஆகும் - போகத்தில்இச்சையைமிகவுண்டாக்கும்கலைகாலம்நியதியும்அக்கலையிலிருந்துவித்தைஅராகமும்ஆகியஇவைஐந்தும்தோன்றும், உருத்திரரால்கலைஅதனில்பிரகிருதிகுணங்கள்உளவாகும்- சீகண்டருத்திரரின்செயலால்முன்சொன்னகலையினின்றும்மூலப்பிரகிருதியும்அதனினின்றும்குணதத்துவமும்தோன்றும், புத்தியினில்அகங்காரம்உதிக்கும் -

அக்குணதத்துவத்திலேதோன்றினபுத்திதத்துவத்தினின்றும்அகங்காரதத்துவம்தோன்றும், தெரித்தஇதுதிகழ்தருதைசதவைகாரிபூதாதிஎனத்திரிவிதமாம்- சொல்லப்பட்டஇந்தஅகங்காரமானதுவிளக்கத்தையுடையதைசதவகங்காரமும்வைகாரியகங்காரமும்பூதாதியகங்காரமும்எனமூவிதமாம், முதல்-முதலிற்சொல்லப்பட்ட தைசவகங்காரத்திலே, திருந்தியசாத்துவிகம்விரித்தகுணம் - சிறந்தசாத்துவிககுணசம்பந்தமான, மனம்புத்திஇந்திரியம்என்றுவிளம்பியசோத்திராதி- மனமும்ஞானேந்திரியம்என்றுசொல்லப்பட்டசோத்திரம்தொக்குசட்சுசிங்நுவைஆக்கிராணம்என்பவையும், விரிந்தேவிளங்கியிடும் - விரிந்துதோன்றும்.

**குறிப்பு:-**

1. இதுமுதல்இரண்டுசெய்யுளாலும்அசுத்தமாயாகாரணத்தினின்றும்அதன்காரியமானதத்துவங்கள்தோன்றும்முறைமையைஅருளிச்செய்கின்றார்.

மாயேயம் - மாயாகாரியம். அவைதநுகரணபுவனபோகங்கள்.

2. அருத்திமிகும்:- ஆன்மாவின்ஆணவமலஇருளைச்சற்றேநீக்கிப்போகங்களைஅறியும்ஞானத்தைக்கொடுத்து, அப்போகங்களைஅநுபவிக்கும்காலத்தைநியமனஞ்செய்து, அப்போகங்களில்இச்சையுண்டாக்குவித்துப்போகநுகர்ச்சியைக்கலைமுதலியனவருவித்தலால் "அருத்திமிகும்" என்றார்.

3. கலைகாலநியதியுடன்வித்தைஅராகம்:- பிரவிருத்திக்கிரமத்திற்கலாதத்துவம்முதல்வேண்டப்படுவதாகையால், இங்கேகலையைமுதற்கூறினார். பிரவிருத்திக்கிரமம் - ஆன்மாக்களுக்குப்போகநுகர்ச்சியைச்செய்யும்கிரமம். இக்கிரமப்படிமாயையிலிருந்துகலைகாலம்நியதிஎன்பனவும், கலையிலிருந்துவித்தைஅராகம்என்பனவும்தோன்றும்.

பிரபஞ்சசிருட்டிக்கிரமத்தில்மாயையினின்றும்முறையேகாலம்நியதிகலைஎன்னும்தத்துவங்களும். கலையினின்றும்வித்தையும்மூலப்பிரகிருதியும், வித்தையினின்றும்அராகமும்தோன்றும். (பார். சி.சி. 2. 54.57)

அராகதத்துவம்வித்தையினின்றுதோன்றுமென்றுசிவஞானசித்தியாரிலும், கலையினின்றுதோன்றுமென்றுமிருகேந்திரத்திலுஞ்சொல்லப்பட்டிருக்கிறது. (மிருகே. கலாதி. 11.)

4. அநந்தர்:- வித்தியேசுரர்எண்மரில்ஒருவர்.வித்தியேசுரர்எண்மரும்ஈசுரதத்துவத்திலிருப்பர். அநந்தேசுரர்ஏனையவித்தியேசுரருக்கும்சுத்தவித்தியாதத்துவவாசிகட்கும்மற்றையவர்களுக்கும்தலைவராய்

மாயையைக்கலக்கிமாயாதத்துவபுவனங்களைஉண்டாக்குவர்.

இவர்பரமசிவனுக்குவேறாய்அதிகாரமலமொன்றுடையவராயிருப்பர்.

பாகம்வந்தகாலத்திற்பரமசிவனருளாற்பரமுத்தியைஅடைவர். (சித்தாந்தப்பிரகாசிகை)

5.

பிரளயாகலருள்மலபரிபாகமுடையோராய்ப்பரமசிவன்அநுக்கிரகம்செய்யப்பெற்றவர்நூற்றுப்பதினெட்டுஉருத்திரர்.இவருள்ளேசீகண்டருத்திரர்மத்தியப்பிரளயமுடிவில்பிரகிருதிதத்துவத்திற்குக்கீழ்ப்பட்டதத்துவங்களையும்புவனங்களையும்உண்டாக்கிசகலருள்ளேசிறந்தவரைப்பிரமபதவிட்டுணுபதங்களில்இருத்துவர்.

படைப்புக்காலத்தில்அசுத்தஅத்துவாக்களைப்படைத்து,

பிரமாவும்விட்டுணுவும்செய்யும்சிருட்டிகளைஅதிட்டித்துநின்று.

கீழ்ப்பட்டபுவனேசுரரையும்முப்பத்துமுக்கோடிதேவர்களையும்பிரமாண்டம்முதலியஅண்டங்களையும்உண்டாக்குவர்.

மத்தியப்பிரளயம்வரையும்பிரமவிட்டுணுக்களுடனேகூடக்குணதத்துவத்தில்அதிகாரஞ்செய்துகொண்டிருந்து, பின்புஅந்தப்பிரமவிட்டுணுக்களையும்ஒடுக்கிக்கொண்டுஅராகதத்துவத்திலிருப்பர்என்றுசித்தாந்தப்பிரகாசிகையில்சிவஞானமுனிவர்கூறுகிறார்.

6.கலையதனிற்பிரகிருதிகுணங்களுளவாகும்:-

மூலப்பிரகிருதியானதுஅரும்பினிடத்துமணம்விளங்காமலடங்கிநின்றாற்போலத்தன்னிடத்துஉண்டாகியகுணங்கள்சற்றும்விளங்காமல்கலாதத்துவத்திற்றோன்றும்,அஃதுஅவ்வியத்தகுணவடிவாயுள்ளது. அவ்வியத்தம்-பிரிந்துதோன்றாதது, வெளிப்படாமலிருப்பது. அதனால்குணங்கள்பிரகிருதியல்ல.

அப்பிரகிருதியிலிருந்துகுணதத்துவம்தோன்றும்.

முக்குணங்களும்பிரிந்துதோன்றாதுசமமாயிருக்கும்அவதரம்குணதத்துவமாம்.

இக்குணதத்துவத்திலேதோன்றும்புத்திமுதற்பிருதிவியீறானதத்துவங்களெல்லாம்முக்குணங்களால்வியாபிக்கப்பட்டும்இவற்றில்ஒருகுணமாயினும்கலந்துமிருக்கும்.

7. அகங்காரம்புத்திதனிலுதிக்கும்.....:- அக்குணதத்துவத்திலிருந்துபுத்திதத்துவம்தோன்றும். புத்தியிலிருந்துஅகங்காரம்தோன்றும்.

இந்தஅகங்காரம்முக்குணசம்பந்தத்தினாலேதைசதம்வைகாரிகம்பூதாதிஎனமூவகையாயிற்று. தைசதம், சாத்துவிகசம்பந்தமுடையது. வைகாரிகம், இராசதகுணசம்பந்தமுடையது. பூதாதிதாமதகுணசம்பந்தமுடையது.

தைசதவகங்காரத்திலிருந்துதோன்றும்மனமும்ஞானேந்திரியங்களும்பிரகாசரூபமாகையால்சாத்துவிகங்களாம். தைசதம்-பிரகாசமுடையது.

சாத்துவிகம்விரித்தகுணம் - சாத்துவிகம்பரவியகுணம், சாத்துவிகசம்பந்தமானகுணம்.

**பொழிப்பு:**அசுத்தமாயையிலிருந்துகலைகாலம்நியதியும், கலையிலிருந்துவித்தைஅராகம்மூலப்பிரகிருதிஎன்பனவும்தோன்றும். பிரகிருதியிலிருந்துகுணதத்துவமும், அதிலிருந்துபுத்தியும், அப்புத்தியில்அகங்காரமும்தோன்றும், அவ்வகங்காரம்தைசதவகங்காரம்வைகாரியகங்காரம்பூதாதியகங்காரம்எனமூவகையாம். அவற்றுள், தைசதஅகங்காரத்திலிருந்துசாத்துவிககுணசம்பந்தமானமனமும்செவிமுதலியஞானேந்திரியம்ஐந்தும்தோன்றும்.

## இதுவுமது

27. மன்னியகன்மேந்திரியமானவிராசதஞ்சேர்
வாக்காதிவைகாரிமருவிவருஞ்சத்தந்
தன்னைமுதலாகியதாமதமிகுமாத்திரைபின்
றருமதனில்வானநிலமனல்புனன்மண்சத்த
முன்னதனில்வெளியாதியொன்றொன்றகு
முறையிலுறுமிருமையயன்முடிவாமுன்னே
உன்னுசதாசிவராதியதிபதிகளொடுக்க
முதித்தவடைவெனவுரைப்பருணர்ந்துளோரே.

பதவுரை:- மன்னியகன்மேந்திரியமானஇராசதம்சேர்வாக்காதி- நிலைபெற்றகன்மேந்திரியங்களானஇராசதகுணசம்பந்தமானவாக்குபாதம்பாணிபாயுஉபத்தம்என்னும்ஐந்தும், வைகாரிமருவிவரும்-வைகாரியகங்காரத்தைப்பொருந்தித்தோன்றும், சத்தம்தன்னைமுதலாகியதாமதம்மிகுமாத்திரை -சத்தத்தைமுதலாகவுடையதாமதகுணம்மிகுந்த 'தன்மாத்திரைகள்ஐந்தையும், பின்தரும்- பின்னையதாகியபூதாதியகங்காரமானதுதரும், அதனில் - அந்தச்சத்தம்முதலியதன்மாத்திரையிலே, வான்அநிலம்அனல்புனல்மண் ((முறையில்உறும்)- ஆகாயம்வாயுதேயுஅப்புபிருதிவிஎன்னும்ஐந்துபூதங்களும்முறையேதோன்றும், வெளியாதி - ஆகாயம்முதலியபூதங்கள், சத்தம்முன்னதனில் -சத்தம்முதலியகுணங்களில், ஒன்றுஒன்றுஆகும்முறையில்உறும் - ஒவ்வொருகுணங்களைஏற்றமாகமுறைப்படிபொருந்தும், இருமைஅயன்முடிவா-பெருமைபொருந்தியபிரமனீறாக, முன்னேஉன்னுசதாசிவர்ஆதி - பஞ்சமூர்த்திகளுக்கும்முதன்மையாகஎண்ணப்படும்சதாசிவதேவர்முதலியோர், அதிபதிகள் -

அப்பூதங்களுக்குத்தெய்வங்களாயிருப்பர், ஒடுக்கம்உதித்தஅடைவுஉரைப்பர்உணர்ந்துளோர்- தத்துவங்கள்ஒடுங்கும்முறைமையும்தோன்றினமுறைமைப்படியேயாகும்என்றுசொல்லுவர்அறிஞர்கள்.

**குறிப்பு:-** 1. மன்னியகன்மேந்திரியமானஇராசதம்சேர்வாக்காதிவைகாரிமருவிவரும்:- வாக்குமுதலியகன்மேந்திரியம்ஐந்தும்செய்கையுள்ளவைகள்ஆகையால்இராசதங்களாம். இவற்றிற்குக்காரணமாகியவைகாரியகங்காரமும்இராசதமே. வைகாரி- விகாரமுடையது.

2. சத்தந்தன்னைமுதலாகியதாமதமிகுமாத்திரைபின்தரும் - தன்மாத்திரை, காரணதன்மாத்திரைஎனவும்விடயதன்மாத்திரைஎனவும்இருவகைப்படும். இங்கேகூறியதுகாரணதன்மாத்திரையையாம். சத்தம்பரிசம்உருவம்இரதம்கந்தம்என்னும்ஐந்தும்தத்தம்குணவிசேடங்களைக்காட்டாமல்குணசமூகமாய்ச்சூக்குமமாயிருக்கும்நிலையிற்காரணதன்மாத்திரைஎன்றும்சூக்குமபூதங்கள்என்றும்சொல்லப்படும். இவைபிரகாசரூபஞானேந்திரியங்களையும்செய்கையோடுகூடியகன்மேந்திரியங்களையும்விடவேறாய்ப்பிரகாசிக்கப்படுவதாயிருப்பதால்தாமசங்களாம். இவற்றிற்குக்காரணமாகியபூதாதியகங்காரமும்தாமசமே (மிருகேந்.102.)

3. அதனில்வான்அநிலம்அனல்புனல்மண்:- மேற்சொல்லியவாறுசத்தம்முதலியகுணங்கள்குணகுணிஎனப்பிரிவுபடாமல்குணசமூகமாய்நிற்கும்நிலையில் சூக்கும்பூதங்களெனப்படும். அவைகுணம்என்றும்குணிஎன்றும்ஒருகுணம்இருகுணம்முக்குணம்நான்குகுணம்ஐந்துகுணம்என்றும், இக்குணங்களையுடையகுணிப்பொருள்களென்றும்வெளிப்படத்தூலவடிவாய்விளங்கியவிடம்பஞ்சபூதமாம். அப்பொழுதுஅவைதூலபூதங்களெனப்படும். அவைபுலனாதலின்றிநுண்மைப்பட்டுமறைந்துநிற்கும்பொழுதுசூக்குமபூதம்என்றும், எவர்க்கும்புலனாம்படிதூலமாய்வெளிப்பட்டுநிற்கும்பொழுதுதூலபூதம்என்றும்சொல்லுவதாகியஇந்தவேற்றுமையேஅவ்விரண்டினிடத்தும்உள்ளவேற்றுமையாம்.

இச்சூக்குமபூதங்களினின்றுபஞ்சபூதங்கள்தோன்றும்வகைஎப்படியெனில், சத்தத்தினின்றுஆகாயம்தோன்றும்.பரிசத்தினின்றுவாயுதோன்றும். உருவத்தினின்றுதேயுதோன்றும். இரதத்தினின்றுஅப்புதோன்றும். கந்தத்தினின்றுபிருதிவிதோன்றும்.

4. சத்தமுன்னதனில்வெளியாதியொன்றொன்றாகுமுறையிலுறும் :- ஆகாயம், சத்தமாகியஒருகுணமுடையது. வாயு, சத்தத்தோடுபரிசமுமாகியஇரண்டுகுணமுடையது. தேயு, சத்தபரிசங்களோடுஉருவமுமாகியமூன்றுகுணமுடையது. அப்பு,

சத்தபரிசஉருவங்களோடுஇரதமுமாகியநான்குகுணமுடையது. பிருதிவி, சத்தபரிசஉருவஇரதங்களோடுகந்தமுமாகியஐந்துகுணமுடையது.

மாயாவாதிகள்ஆகாயத்தினின்றுவாயுவும், வாயுவினின்றுதேயுவும், தேயுவினின்றுஅப்புவும், அப்புவினின்றுபிருதிவியுமாகப்பூதங்கள்ஒன்றினின்றுஒன்றுதோன்றுமென்பர். சத்தமொன்றேயுடையஆகாயம்சத்தம்,பரிசம்என்னும்இரண்டுகுணமுடையவாயுவுக்குக்காரணமாகமாட்டாது. காரணத்தில்குணமும்குணியும்அடங்கிச்சூக்குமமாயிருந்துகாரியத்திலேதூலமாய்வெளிப்பட்டுத்தோன்றும். ஆகாயம்வெளிப்பட்டசத்தகுணத்தையுடையது. பரிசகுணம்அதிலில்லை. ஆகையால்சத்தம்ஒன்றேயுடையஆகாயம்சத்தமும்பரிசமுமாகியஇரண்டுகுணமுமுடையவாயுவுக்குக்காரணமாகாதென்பதுதானேபோதரும். மற்றையவைகளுமிப்படியே. ஆதலால்தன்மாத்திரைகளிலிருந்துபூதங்கள்தோன்றுமென்பதேஉண்மையாம்.

**பொழிப்பு:**வைகாரியகங்காரத்திலிருந்துஇராசதகுணசம்பந்தமானவாக்காதிகன்மேந்திரியம்ஐந்துந்தோன்றும். பூதாதியகங்காரத்திலிருந்துதாமதகுணசம்பந்தமானசத்தாதிதன்மாத்திரைகள்ஐந்தும்தோன்றும். அப்பஞ்சதன்மாத்திரைகளுள், சத்தத்திலிருந்துஆகாயமும், பரிசத்திலிருந்துவாயுவும், உருவத்திலிருந்துதேயுவும், இரதத்திலிருந்துஅப்புவும், கந்தத்திலிருந்துபிருதிவியுந்தோன்றும்.

அப்பூதங்களில்ஆகாயமானதுசத்தம்என்னும்ஒருகுணத்தையும், வாயுசத்தம்பரிசம்என்னும்இரண்டுகுணங்களையும், தேயுசத்தம்பரிசம்உருவம்என்னும்மூன்றுகுணங்களையும், அப்புசத்தம்பரிசம்உருவம்இரதம்என்னும்நான்குகுணங்களையும், பிருதிவிசத்தம்பரிசம்உருவம்இரதம்கந்தம்என்னும்ஐந்துகுணங்களையும்வியத்தமாகப்பெற்றுவிளங்கும்.

இந்தஆகாயம்முதலியபஞ்சபூதங்களுக்கும்முறையேசதாசிவன்மகேசுவரன்உருத்திரன்விட்டுணுபிரமா என்னும்ஐவரும்அதிதேவதைகளாம். இத்தத்துவங்கள்ஒடுங்குங்காலத்துத்தோன்றியமுறையிலொடுங்கும்.

## 5.கன்மம்

### a. கன்மமலத்தினியல்பு

28. நண்ணியிடுமுருவதனுக்கேதுவாகி
நாநாபோகங்களாய்நாசோற்பத்தி
பண்ணிவருமாதலாலநாதியாகிப்
பலவாகியணுக்கடொறும்படர்வதாகி
எண்ணிவருமனவாசகன்மத்தாலியற்று

மியல்பினதாய்மதிகதமாயிருபயனாம்பாவ

புண்ணியமாய்ப்புலர்காலைமாயைமேவிப்

பொருந்துமிதுகன்மமலம்புகலுமாறே.

**பதவுரை:-**கன்மமலம்-கன்மமலமானது,நண்ணியிடும்உருவதனுக்குஏதுவாகி-ஆன்மாக்கள்பொருந்துகின்றஉடம்புகளுக்குக்காரணமாய், நாநாபோகங்களாய் -அவ்வுடம்புகளால்அநுபவிக்கப்படும்பலவிதமானபோகங்களைத்தருவதாய், நாசஉற்பத்திபண்ணிவரும்ஆதலால்அநாதியாகி-அழிந்தும்தோன்றியும்வருதலால்பிரவாகாநாதியாய், பலவாகி - பலவிதப்படுவதாய், அணுக்கள்தொறும்படர்வதாகி - ஒவ்வோர்ஆன்மாவிலும்செறிந்திருப்பதாய், எண்ணிவருமனம்வாசம்கன்மத்தால்இயற்றும்இயல்பினதாய் -நினைக்கின்றமனத்தினாலும்வாக்கினாலும்காயத்தினாலும்செய்யப்படும்இயல்பினையுடையதாய், மதிகதமாய்-புத்திதத்துவம்பற்றுக்கோடாய், இருபயனாம்புண்ணியபாவமாய்-இன்பமும்துன்பமுமாகியஇருபயன்களையும்தரும்புண்ணியபாவவடிவாய், புலர்காலைமாயைமேவிப்பொருந்தும் -சகலதத்துவங்களும்ஒடுங்கும்சங்காரகாலத்திலேமாயையைச்சென்றுபொருந்தும், இதுபுகலுமாறு-இதுவேஆகமங்கள்சொல்லும்முறையாம்.

**குறிப்பு:-** 1. நண்ணியிடும்உருவதனுக்கேதுவாகி:-முன்செய்தகன்மத்துக்கீடாகஆன்மாக்கள்சரீரங்களைப்பெறுதலால், கன்மமேஅச்சரீரங்களுக்குக்காரணமாம். அக்கன்மம்சஞ்சிதம்எனப்படும்.

2. நாநாபோகங்களாய்:- கன்மம்பலவிதமானசுகதுக்கவிடயங்களாகஆன்மாவினால்அநுபவிக்கப்படுவதினால். "நாநாபோகங்கள்" என்றார். போகங்கள் - சுகதுக்கங்கள். இதுபிராரத்தகன்மம்.

3.நாசோற்பத்திபண்ணிவருமாதலால்அநாதி:-நாசோற்பத்திபண்ணுதலாவதுஒருகன்மம்கெடும்பொழுதுமற்றொருகன்மத்தைஉண்டாக்கிவிடுதல். கன்மம்பிராரத்தமாய்நுகர்ச்சிக்குவரும். அந்நுகர்ச்சியினால்முன்செய்தகன்மம்அழியும், ஆயினும், நுகரும்பொழுதுஅதற்குத்துணையாகச்செய்யும்முயற்சியில்பிறருக்குஇதம்அகிதஞ்செய்தலால், ஆகாமியம்வந்தேறும்இப்படிப்பிராரத்தஅழிவில்ஆகாமியம்வந்தேறிப்பிரவாகம்போலத்தொடர்ச்சியாய்த்தொன்றுதொட்டுவருதலால், கன்மம்பிரவாகாநாதிஎனப்படும். சஞ்சிதம்பிராரத்தம்ஆகாமியம்என்னும்மூவகைவினைக்கும்முதற்காரணமானமூலகன்மம்ஒன்றுண்டு; அஃதுஅநாதிநித்தியமாம். (பார். செய்.25; சி. போ. 2.2.). பிரவாகாநாதி -இடையறாதோடும்நீர்ப்பெருக்குப்போலத்தொடர்ச்சியாய்த்தொன்றுதொட்டுவருதல்.

4. பலவாகி:- கன்மம்நல்வினைதீவினைஎனஇருதிறப்பட்டு, அவற்றுள், ஒவ்வொன்றும்பலவிதப்படுதலால், "பலவாகி" என்றார்.

5.அணுக்கடொறும்படர்வதாகி:-

ஆணவமலம்ஆன்மாக்களோடுஅநாதியாயிருத்தல்போலக்கன்மமும்ஆன்மாக்களைஅநாதியேபொருந்தியிருக்கும்.

6.மனவாசகன்மத்தா. . . . . . .மாயைமேவிப்பொருந்தும்:- கன்மம்மனம்வாக்குக்காயங்களினாற்செய்யப்படுவது. அப்பொழுதுஅஃதுஆகாமியம்எனப்படும். பின்புஅக்கன்மம்பக்குவமாகுமளவுஞ்சூக்குமமாய்ப்புத்திதத்துவம்பற்றுக்கோடாகமாயையிற்கிடக்கும். அப்பொழுதுஅதுபுண்ணியபாவம்எனவும்சஞ்சிதம்எனவம்படும். இப்புண்ணியபாவங்களின்பயனாகியஇன்பத்துன்பங்களைத்தரும்பொழுது, அதுபிராரத்தம்எனப்படும்

சங்காரகாலத்தில்உயிர்கள்மாயையிலொடுங்கும்பொழுதுகன்மமும்அவ்வுயிர்களைவிட்டுநீங்காதுஅம்மாயையிலொடுங்கும். (பார்செய். 22.)

7. கன்மம்திருஷ்டஜன்மோபபோக்கியகன்மம்என்றும், அதிருஷ்டஜன்மோபபோக்கியகன்மம்என்றும்,அநியதகாலோபபோக்கியகன்மம்என்றும்மூவகைப்படும். அவற்றுள், திருஷ்டஜன்மோபபோக்கியகன்மமாவது. காணப்படுகிறஇந்தச்சன்மத்திலேயேசெய்யப்பட்டுமுன்னுள்ளவைகளோடுஇம்மையிலேசேர்த்துஅநுபவிக்கப்படுகிறகன்மங்களாம். இம்மையிலேசெய்தகொலைகளவுமுதலியனவற்றிற்குஇம்மையிலேயேஅரசரால்தண்டிக்கப்படுதல்திருஷ்டஜன்மோபபோக்கியகன்மமாம். திருஷ்டஜன்மம் - காணப்படுகிறஇந்தச்சன்மம். இம்மையிற்செய்தவினைமறுமையிற்பலிப்பதுஅதிருஷ்டஜன்மோபபோக்கியகன்மமாம். அதிருஷ்டஜன்மம்- காணப்படாதசன்மம், அடுத்துவரும்சன்மம். இப்பிறப்பிலேபலிப்பனவாகாமலும், அடுத்தசன்மத்தில்பலிப்பனவாகாமலும், பக்குவமின்மைகாரணமாகஅநுபவத்துக்குவாராதுஇன்னகாலத்துப்பக்குவமாமென்றும்இன்னகாலத்துஅநுபவத்துக்குவருமென்றும்சொல்லுதற்குஇடமின்றிநின்று, காலாந்தரத்திற்பக்குவமுற்று, ஏதேனும்ஒருசன்மத்தில்அநுபவத்துக்குவரநிற்கும்கன்மம்அநியதகாலோபபோக்கியகன்மமாம். அநியதகாலம் - வரையறுத்துச்சொல்லஇயலாதகாலம். (பௌஷ்கரம்)

## பொழிப்பு:-

கன்மமலமானதுஆன்மாக்களெடுக்கும்உடம்புகளுக்குக்காரணமாய்ப்பலவிதமானபோகங்களைத்தருவதாயிருக்கும். அக்கன்மம்பிரவாகாநாதியாய், பலபேதங்களாய், ஆன்மாவைவிட்டுநீங்காததாய்,

மனம்வாக்குக்காயங்களாற்செய்யப்படுவதாய்,புத்திதத்துவம்பற்றுக்கோடாயிருப்பதாய்,இன்பமும்துன்பமுமாகியபயனைத்தரும்புண்ணியபாவவடிவாயிருப்பதாய், சங்காரகாலத்திலேமாயையைப்பொருந்துவதாயிருக்கும்.

## b. சஞ்சிதமும்பிராரத்தமும்

29. கன்மநெறிதிரிவிதநற்சாதியாயுபோகக்
கடனதெனவருமூன்றுமுயிரொன்றிற்கலத்தல்
தொன்மையதூழல்லதுணவாகாதானுந்
தொடங்கடைவினடையாதேதோன்றுமாறித்
தன்மைதருதெய்விகமுற்பவுதிகமான்மிகமாந்
தகையிலுறுமசேதனசேதனத்தாலுஞ்சாரு
நன்மையொடுதீமைதருசேதனனுக்கிவணூ
ணாடிலதனூழ்வினையாநணுகுந்தானே.

**பதவுரை:-**கன்மநெறிதிரிவிதம் - கன்மம்பயன்தரும்முறைமூன்றுவிதமாம், நல்சாதிஆயுபோகக்கடனதுஎனவரும்-நல்லசாதிஆயுள்போகம்என்னும்முறைமையையுடையதாகவரும், மூன்றும்உயிர்ஒன்றிற்கலத்தல்தொன்மையது - இவைமூன்றும்ஓரான்மாவிலேகூடுகிறதுபழவினையினாலாம், ஊழ்அல்லதுஉணவாகா-ஊழல்லாதவேறொன்றும்ஆன்மாவுக்குஅநுபவமாய்வரமாட்டாது, தானும்தொடங்குஅடைவின்அடையாதேமாறித்தோன்றும் - அக்கன்மப்பயனும்செய்தமுறைமையிலன்றிப்பக்குவமானமுறையில்முன்செய்தனபின்னும்பின்செய்தனமுன்னுமாகமாறிவரும், தன்மைதருதெய்விகம்-இயல்பாகவருகின்றதெய்விகத்தாலும், உத்பவுதிகம்ஆன்மிகமாம்தகையில்உறும்அசேதனசேதனத்தாலும்சாரும்-ஆதிபௌதிகம்ஆத்தியான்மிகம்என்னும்தன்மையோடு "பொருந்துகின்றஅசேதனசேதனங்கள்வாயிலாகவும்வரும், நன்மையொடுதீமைதருசேதனனுக்குஇவண்ஊண்நாடில்-நன்மைதீமைகளைச்செய்துவருகிறஆன்மாவுக்குஇப்பிறவியில்புசிப்பைவிசாரிக்கில், அதன்ஊழ்வினையால்நணுகும் - அவைஅவ்வான்மாமுற்பிறவியிற்செய்தவினையின்பயனாகப்பொருந்துவனவாம்.

குறிப்பு:- 1. கன்மநெறிதிரிவிதநற்சாதியாயுபோகக்கடனதெனவரும்:- சாதிஆயுள்போகங்கள்நல்வினைதீவினைகளுக்குத்தக்கபடிஉயர்ந்தசாதிதாழ்ந்தசாதி, அதிகஆயுள், அற்பஆயுள், அதிகபோகம்அற்பபோகம்எனஒவ்வொன்றும்இவ்விரண்டாய்அறுவகைப்படும். அவற்றுள்ளும்பலபேதமுண்டாம். இவைகளெல்லாம்கன்மத்தின்பயனாகவருவன. இவற்றிற்குக்காரணம்கன்மமாம். கடன்- முறை.

2. ஊழல்லதுணவாகா:- சஞ்சிதவினையின்றிப்பிராரத்தஅநுபவம்வராதென்றபடி.

3.தானும்தொடங்கடைவினடையாதேமாறித்தோன்றும்:- கன்மம்செய்தமுறையினன்றிப்பக்குவமானமுறையிற்பயன்தரும். அதனால்முன்செய்தவினைப்பயன்பின்னும்பின்செய்தவினைப்பயன்முன்னுமாகமாறிவரும், அஃதுஒருவன்செய்தபயிர்களுள்கீரைகத்தரிவாழைதென்னைபனைஎன்பனசெய்தமுறையினன்றி,விளைவுபெற்றமுறையில்முன்பின்னாகப்பயன்தருதல்போலாம்.

4. தெய்விகம்:-ஒருவாயிலானன்றித்தெய்வந்தானேகாரணமாகவருவது. மாதாவின்கருப்பத்திலிருக்குமிடத்துண்டானவிசனம், சனனமரணத்திலுண்டானவிதனம், இயமதண்டனைநரகவேதனைமுதலியவற்றால்வருந்துக்கம்முதலியனஆதிதைவிகமாம்.

5. உற்பவுதிகம்:- பஞ்சபூதங்கள்வாயிலாகவருவது.குளிர்வெப்பம்மழைகாற்றுமின்இடிசுவர்விழுதல்கல்விழுதல்முதலியவற்றால்வருந்துக்கம்ஆதிபௌதிகமாம். உத்-பிரதானம், மேல்எனப்பொருள்படும்ஒருவடமொழிஉபசர்க்கம். உத்பவுதிகம்-ஆதிபௌதிகம்.

6.ஆன்மிகம் :- உயிர்களால்வருவது. ஆத்தியான்மிகம்சரீரத்தோடுசம்பந்தப்பட்டதும், மனத்தோடுசம்பந்தப்பட்டதுமெனஇருவிதம். தத்தம்சரீரத்திலுண்டானவியாதிகளினாலும்மிருகங்களினாலும்அரசராலும்பசாசுகளாலும்கள்வராலும்மனிதராலும்உண்டாகும்துக்கம்சரீரசம்பந்தமானதுக்கங்கள். மனோதுக்கமாவதுபிறருடையகல்வியும்சௌந்தரியமும்செல்வமும்கண்டுபொறாமைகொள்ளல்முதலியவற்றால்வருந்துக்கம்

மற்றைச்சுககன்மங்களும்இந்தமுறையில்வருவனவாம்.

7. சேதனம் - அறிவுடையன.

8. ஊழ்வினை - பழையவினை, சஞ்சிதவினை

பொழிப்பு:- கன்மத்தின்பயன்சாதி, ஆயுள்,போகம்எனமூன்றுவிதமாய்வரும். இவைஆன்மாவிற்கூடிவருதல்பழவினையினாலாம்.

ஊழல்லாதவேறொன்றும்ஆன்மாவுக்குஅநுபவமாய்வரமாட்டாது.

கன்மத்தின்பயன்செய்தமுறைமையினன்றிப்பக்குவமானமுறையில்முன்செய்தனபின்னும்பின்செய்தனமுன்னுமாகமாறிவரும்.

இயல்பாகவருகின்றதெய்விகத்தாலும்ஆதிபௌதிகம்ஆத்தியான்மிகங்களாகியஅசேதனசேதனங்கள்வாயிலாகவும்வரும்.

இப்பிறவியில்ஆன்மாஅநுபவிக்கும்இன்பத்துன்பங்களுக்குக்காரணம்முற்பிறவியிற்செய்தஊழ்வினையாம்.

## c.ஆகாமியம்

30. மேலைக்குவருவினையேதென்னிலங்கண்
விருப்புவெறுப்பெனவறியன்விளைவுமெல்லா
மூலத்தவினைப்பயில்வாமென்னினாமென்
முற்றியதன்பயனுனக்குமுளைக்குமென்பர்
ஞாலத்துவினைகளிருதிறமாகும்புந்தி
நண்ணாதவினைநணுகும்வினையெனவொன்றிரண்டாய்
ஏலத்தானிதமகிதமாமிதனால்வழுவா
தெய்தியிடும்புண்ணியபாவங்களென்றே.

**பதவுரை**:-மேலைக்குவருவினைஏதென்னில் -

(இப்பிறவியில்வருவனவெல்லாம்முற்பிறவியில்செய்தஊழ்வினையின்பயனானால்)

இனிவரும்பிறவிக்குஏதுவாய்வரும்ஆகாமியவினைவிளைவதுஎப்படியெனில்,

அங்கண்விருப்புவெறுப்புஎனஅறி -

அவ்வினைப்பயனைநுகரும்காலத்துஅதில்வைத்தவிருப்புவெறுப்புக்களால்விளைவதுஎனஅறிவாயாக,

அவ்விளைவும்எல்லாம்மூலத்தவினைப்பயில்வாம்என்னின் -

அவ்விருப்புவெறுப்புக்களும்எல்லாம்ஊழ்வினையின்பயனாமென்னில்,

நாம்என்முற்றிஅதன்பயன்உனக்குமுளைக்கும்என்பர்அவைகளைஊழின்பயன்என்றுஉணராமல்நான்செய்கின்றேன்நான்அனுபவிக்கின்றேன்என்னும்முனைப்புமுதிர்ந்துஅம்முனைப்பின்பயன்உனக்குஆகாமியமாய்வந்துஏறுமென்றுபெரியோர்சொல்லுவர், புந்திநண்ணாதவினைநணுகும்வினைஎனஞாலத்துவினைகள்இருதிறமாகும் -

அபுத்திபூர்வமானவினையும்புத்திபூர்வமானவினையும்எனப்பூமியின்கண்செய்யப்படும்வினைகள்இரண்டுவகையாம், ஒன்றுஇரண்டாய்ஏலத்தான்இதம்அகிதமாம் -

அவைஒவ்வொன்றும்இவ்விரண்டாய்ப்பொருந்தஇதம்அகிதங்களாகியநல்வினைதீவினைகளுண்டாம், இதனால்வழுவாதுபுண்ணியபாவங்கள்என்றுஎய்தியிடும் - இந்தநல்வினைதீவினைகளாலேதப்பாமற்புண்ணியபாவங்கள்என்றுநின்றுஉயிர்களைப்பொருந்தும்.

**குறிப்பு:-** 1. மேலைக்குவருவினை . . . . . . .முளைக்குமென்பர்- இப்பிறவியிற்புசிக்கப்படுவனவெல்லாம்முற்பிறவியிற்செய்தவினையின்பயனேயாயின், ஆகாமியம்ஏறுவதுஎப்படியெனில், அதனைஅநுபவிக்கும்பொழுதுவிருப்புவெறுப்புநிகழ்தலால், அவ்விருப்புவெறுப்புக்களாகியஇதம்அகிதங்களால்அவ்வாகாமியம்உண்டாகும். அவ்விருப்புவெறுப்பும்பிராரத்தமாமெனின், அப்படியன்று. பிராரத்தத்தைஅநுபவிக்கும்பொழுதுமுன்செய்தகன்மத்துக்கீடாகஇப்பொழுதுஅநுபவிக்கிறோமென்றுகருதாது, நான்செய்தேன்பிறர்செய்தாரென்றுவிரும்பியும்வெறுத்தும்இதம்அகிதங்களாய்ச்செய்தலால், அக்கருத்துவகைபற்றிஆகாமியம்உண்டாம். இவ்வாறுசெய்வகையாற்பிராரத்தமாய்வரும்அவற்றிலிருந்துகருத்துவகையால்ஆகாமியம்ஏறும்.

2. அவ்விளைவும்எல்லாம்:- விருப்புவெறுப்புகள்மனத்தின்நினைவில்நிகழ்வன. இங்ஙனமன்றிவாக்கின்செயலாலும்காயத்தின்தொழிலாலும்ஆகாமியம்ஏறும்என்பதைஉணர்த்த "எல்லாம்" என்றார்.

மூலத்தவினை - முன்புள்ளவினை, ஊழ்வினை.

3. புந்திநண்ணாதவினைநணுகும்வினை:-புத்திபூருவம் - தெரிந்துசெய்யும்வினை. அபுத்திபூருவம் - தெரியாமற்செய்யும்வினை.

4. ஒன்றிரண்டாயேலத்தான்:- அபுத்திபூருவநல்வினைதீவினை, புத்திபூருவநல்வினைதீவினை; ஏலுதல்- பொருந்துதல். தான் - அசை.

5. இதம்அகிதம்- இதம்நன்மை; அகிதம் - தீமை. பிறவுயிருக்குஇதம்செய்தல்நல்வினை; அகிதஞ்செய்தல்தீவினை. இவைசெய்யப்படும்பொழுது,ஆகாமியம்எனப்படும்.இச்செயல்களால்வருவனபுண்ணியபாவம், அவைசஞ்சிதம். புண்ணியம்இன்பத்தையும்பாவம்துன்பத்தையும்கொடுக்கும்பொழுதுஅவைபிராரத்தமாம். பிராரத்தம் -பிறவிக்குத்தொடக்கமுடையது.

**பொழிப்பு:**இப்பிறவியில்வருவனவெல்லாம்முற்பிறவியிற்செய்தஊழ்வினையின்பயனாயின், இனிவரும்பிறவிக்குஏதுவானஆகாமியம்விளைவதுஎப்படியெனில், அவ்வினைப்பயனைநுகருங்காலத்துஅதில்வைத்தவிருப்புவெறுப்புக்களால்ஆகாமியம்உண்டாம். அவ்விருப்புவெறுப்பும்ஊழ்வினையின்பயனன்றோவெனின்,

அவைகளைஊழின்பயனென்றுஉணராமல்நான்செய்கின்றேன்நான்அநுபவிக்கின்றேன்என்னும்முனைப்போடு விரும்பிவெறுத்துஇதம்அகிதங்களைச்செய்துஅநுபவித்தலால், நான்என்னும்முனைப்பின்பயன்அக்கருத்துவகையால்ஆகாமியமாய்வந்தேறும்.

அவ்வினைகள்புத்திபூருவம்அபுத்திபூருவம்எனஇருதிறப்படும். அவையும்புத்திபூருவநல்வினைதீவினை, அபுத்திபூருவநல்வினைதீவினைஎனஒவ்வொன்றுஇவ்விரண்டாய்நான்குவகைப்பட்டுபொதுவகையாற்புண்ணியபாவங்களெனநின்றுஉயிர்களைவிடாதுபொருந்தும்.

## d. புண்ணியபாவங்கள்வரும்வழியும்பாவம்போம்வழியும்

31. உற்றதொழினினைவுரையிலிருவினையுமுளவா
மொன்றொன்றாலழியாதூணொழியாதுன்னின்
மற்றவற்றினொருவினைக்கோர்வினையால்வீடு
வைதிகசைவம்பகரும்மரபிலாற்றப்
பற்றியதுகழியுமிதுவிலையாலேற்கும்
பான்மையுமாம்பண்ணாதுபலிக்குமுன்னஞ்
சொற்றருநூல்வழியின்வரின்மிகுதிசோரும்
சோராதங்கதுமேலைத்தொடர்ச்சியாமே.

**பதவுரை**:-உற்றதொழில்நினைவுஉரையில்இருவினையும்உளவாம் -காயத்தின்தொழிலாலும்மனத்தின்நினைவினாலும்வாக்கின்செயலாலும்நல்வினைதீவினைகள்வருவனவாம். ஒன்றுஒன்றால்அழியாது- நல்வினைதீவினையாலும்தீவினைநல்வினையாலும்அழியாது, உன்னின்ஊண்ஒழியாது -ஆராயுமிடத்துஅவ்வினைகளின்பயனைஅநுபவிப்பதுதவிராது, வைதிகசைவம்பகரும்மரபில் -(ஆயினும்) வேதாகமங்கள்சொல்லும்முறையிலே, அவற்றின்ஒருவினைக்குஒருவினையால்வீடுஆற்ற- அவ்விருவினைகளுள்தீவினையாகியபாவத்துக்கு 'நல்வினையாகியபிராயச்சித்தத்தால்நிவிர்த்திசெய்ய, பற்றியதுகழியும் -பற்றியஅப்பாவம்நீங்கும், இது -இப்பிராயச்சித்தம், விலையால்ஏற்கும்பான்மையுமாம் -தான்செய்யாதுபிறராற்செய்துகிரயத்துக்குக்கொள்ளும்முறைமைஉடையதுமாம், பண்ணாதுபலிக்கும்-ஒருபிராயச்சித்தமுஞ்செய்யாதுசித்திக்கும். முன்னம்சொல்நூல்தருவழியின்வரின்மிகுதிசோரும் -அஃதெங்ஙனமெனில்முன்சொன்னவேதாகமங்கள்விதிக்கும்வழியிலேஒழுகிவரின்அதிகப்பற்றானபாவம்நீங்கு

ம், அங்குச்சோராததுமேலைத்தொடர்ச்சியாம்- அந்தவழியால்நீங்காதுஎஞ்சியவைமேல்வரும்பிறவிகளில்தொடர்ந்துபயன்தரும். மற்று- அசை.

**குறிப்பு:-** 1. உற்றதொழில்நினைவுஉரையில்இருவினையுமுளவாம்:- காயத்தினாற்செய்யப்படும்புண்ணியபாவங்கள்:- அரியதவங்களைச்செய்தல், பூசைகள்ஓமங்கள்செய்தல், பகுத்துண்ணல், நந்தவனம்சோலைகள்உண்டாக்குதல், பிறர்மனைவிழையாமை, குளம்தோண்டல், கூவல்தோண்டல், தன்மசாலை,பள்ளிக்கூடம்திருக்கோயில்மடங்கட்டுவித்தல்முதலியனபுண்ணியங்கள். இவைக்குமாறுசெய்தல்பாவங்கள்.

மனத்தின்நினைவாலுண்டாகும்புண்ணியபாவங்கள், அருள், நினைவு, பொறை, பிறர்பொருள்விரும்பாமை,செய்ந்நன்றிமறவாமை, அபிமானம்பேணல், அழுக்காறின்மை. அவாவறுக்கை, பிறர்துயர்கண்டிரங்கல்முதலியனபுண்ணியங்கள்.

இதற்குமாறானநினைவுகள்பாவங்கள்.வாக்கினாலுண்டாகும்புண்ணியபாவங்கள்:- புறங்கூறாமை, உண்மைபேசுதல், இனியனசொல்லுதல், கடுஞ்சொல்விலக்கல். வேதாகமங்களைஓதல், முதலியனபுண்ணியங்கள். இவைக்குமாறானசொற்கள்பாவங்கள்.

உற்ற:- உறுதல் - பொருந்துதல், உண்டாதல்உற்றதொழில்- காயத்திலுள்ளதொழில்.

2. ஓர்வினைக்கோர்வினையால் . . . . . . :-பற்றியதுகழியும்:- வேதாகமங்களின்கருமகாண்டங்களிற்சொல்லியமுறைப்படிசாந்திசெய்வதினாற்பாவகன்மங்கள்நீங்குமென்பதுஓர்வினை-தீவினை, ஓர்வினை -ஒருதொழில், கன்மம்.

3. விலையாலேற்கும்பான்மை:- தானாகச்சாந்திசெய்துகொள்ளஇயலாதவிடத்துதிரவியங்கொடுத்துவல்லவர்களைக்கொண்டுசெய்வித்தல்

4. பண்ணாதுபலிக்கும்முன்னஞ்சொற்றருநூல். . . . .:- வேதாகமங்களின்ஞானகாண்டங்களிற்சொல்லியமுறைப்படிசரியைகிரியையோகங்கள்முதலியவற்றைச்செய்துவரின்அப்பாவகன்மங்கள்சாந்திசெய்யாதும்ஒழியும்என்பது.

**பொழிப்பு**:நல்வினைதீவினைகள்மனம்வாக்குக்காயங்களால்வருவனவாம். நல்வினையால்தீவினையும், தீவினையால்நல்வினையும்அழியமாட்டாது, இவ்விரண்டுவினைகளும்அநுபவித்தேஒழியவேண்டும். ஆயினும், வேதாகமங்களின்கன்மகாண்டமுறைப்படிபிராயச்சித்தஞ்செய்தாற்பாவகன்மம்நீங்கும். அப்பிராயச்சித்தம்திரவியங்கொடுத்துமற்றவர்களைக்கொண்டுசெய்வித்தலுமாம்.

ஒருபிராயச்சித்தமும்செய்யாதுவேதாகமங்களின்ஞானகாண்டமுறைப்படிநடந்துவரின், அதிகப்பற்றானபாவங்கள்நீங்கும். நீங்காதனமேலுஞ்செனனத்தைஉண்டாக்கும்.

## 6. மலங்களின்தொகை

32. மோகமிகவுயிர்கடொறுமுடனாய்நிற்கு
மூலவாணவமொன்றுமுயங்கிநின்று
பாகமிகவுதவுதிரேதாயியொன்று
பகர்மாயையொன்றுபடர்கன்மமொன்று
தேகமுறுகரணமொடுபுவனபோகச்
செயலாருமாமாயைத்திரட்சியொன்றென்
றாகமலமைந்தென்பரைந்துமாற
தருளென்பததென்பரறிந்துளோரே.

**பதவுரை**:மோகம்மிகவுயிர்கள்தொறும்உடனாய்நிற்கும்மூலஆணவம்ஒன்று - அஞ்ஞானம்மிகும்படிஆன்மாக்கடோறும்சகசமாய்அறிவைமறைத்துநிற்கும்மூலமலமாகியஆணவமலம்ஒன்று, முயங்கிநின்றுபாகம்மிகஉதவுதிரோதாயிஒன்று - அந்தஆணவமலத்தைப்பொருந்திநின்றுபக்குவத்தைமிகவுண்டாக்குகின்றதிரோதானசத்திஒன்று,பகர்மாயைஒன்று - முன்சொன்னமாயாமலம்ஒன்று, படர்கன்மம்ஒன்று - ஆன்மாக்கடோறும்செறிந்திருக்கும்கன்மமலம்ஒன்று,தேகம்உறுகரணமொடுபுவனபோகச்செயல்ஆகும்மாமாயைத்திரட்சிஒன்றுஎன்று- தநுகரணபுவனபோகங்களாகியமாயாகாரியங்கள்பொருந்தியிருக்கும்பெரியமாயைக்கூட்டமாகியமாயேயம்ஒன்றுஎன்று,ஆகமலம்ஐந்துஎன்பர் - எல்லாமாகமலம்ஐந்தென்றுசொல்லுவார்கள், ஐந்தும்மாறாதுஅருள்என்பதுஅரிதுஎன்பர்அறிந்துளோர் - இவ்வைந்துமலமும்நீங்காதுஅருள்பெறுதல்அரிதென்றுசொல்லுவர்அறிவுடையோர்.

**குறிப்பு:-** 1. திரோதாயி. மலங்களைத்தொழிற்படுத்துஞ்சிவசத்திபராசத்தியிலடங்குமாயினும், தொழில்வேற்றுமைபற்றிவேறுவைத்தெண்ணப்பட்டது. பராசத்திகருணையொன்றேசெய்துநிற்கும். திரோதானசத்திகன்மத்திற்கேற்கஉயிரின்அறிவைமறைத்துநிற்கும்.

2. செயல் -காரியம்.

3. மாமாயைத் 'திரட்சி: மாயையின்காரியமானதநுகரணபுவனபோகங்கள்இவைமாயேயம்எனவும்படும். மாயையின்சாரியமானதநுவாதிகள்மாயையில்அடங்குமாயினும், பந்தப்படுத்தும்வேற்றுமைபற்றிவேறுவைத்தெண்ணப்பட்டது. மாயைஉயிரின்அறிவோடுகூடிஅவ்வறிவைமயக்கும்.

மாயாகாரியம்அம்மயக்கத்திற்குமுன்னிலைப்பொருளாயிருக்கும்.

இவையேஇவ்விரண்டுக்கும்வேற்றுமையாம்.

**பொழிப்பு:**ஆணவம், திரோதாயி,மாயை, கன்மம்,மாயேயம்எனமலம்ஐந்து.

இந்தஐந்துமலமும்நீங்கினாலன்றித்திருவருளைப்பெறுதல்ஏலாதாம்.

## IV. அவத்தையிலக்கணம்

1. **கேவலாவத்தை. (33)**
    - ஆணவமலத்தைப்பற்றியஆசங்கை, (34).
    - ஆணவமலம்உண்டென்பதற்குப்பிரமாணம், (35-36).

**2.சகலாவத்தை**

- சகலாவத்தைநிகழும்முறையும்சூக்குமைவாக்கின் தொழிலும், (37).
- பைசந்திமத்திமைவைகரிவாக்குக்களின்தொழில், (38).
- ஆன்மஅறிவுவிளங்கும்வகையும்,கலைவித்தைகளின் தொழிலும்.(39).
- அராகம்நியதிகாலம்என்னும்தத்துவங்களின்தொழில் (40)
- புருடதத்துவமும்பிரகிருதியும், (41).
- முக்குணங்களின்தொழிலும், புத்தியின்தொழிலும், (42)
- அகங்காரம்மனம்சித்தம்என்னும்தத்துவங்களின்தொழில், (43).
- ஞானேந்திரியகன்மேந்திரியங்களின்தொழில். (44)
- பஞ்சபூதங்களின்தொழில், (45).
- ஆன்மாதத்துவங்களோடுகூடிப்பிறந்திறந்துவினைப்பயனைஅநுபவிக்கும்வகை. (46)
- யோனிபேதம். (47)

**3.சுத்தாவத்தை**

- இருவினையொப்பும்சத்திநிபாதமும்,(48)
- சத்திநிபாதவகையும்தீவிரதரபக்குவர்அடையும்பேறும், (49).
- உண்மைமுத்தி, (50)

## 1. கேவலாவத்தை

33. ஓங்கிவரும்பலவுயிர்கண்மூன்றவத்தைபற்றி
யுற்றிடுங்கேவலசகலசுத்தமெனவுணர்வர்

ஈங்குவருங்கலாதியொடுகுறியுருவமொன்று

மின்றிமலமன்றியொன்றுமில்லையெனுமியல்பாய்

ஆங்கறிவையறிவரிதாயறிகருவியணையா

வாதலினாலிருண்மருவுமலர்விழியோலதுவாய்

நீங்கும்வகையின்றிநித்தவியாபகமாயங்க

ணிற்பதுகேவலமென்றுநிகழ்த்துநூலே.

**பதவுரை**:-ஓங்கிவரும்பலஉயிர்கள் - பக்குவப்பாட்டில்உயர்ந்துவரும்இவ்வெண்ணில்லாதஉயிர்களும், மூன்றுஅவத்தைபற்றிஉற்றிடும் -மூன்றுஅவத்தைகளைப்பொருந்திநிற்கும். கேவலம்சகலம்சுத்தம்எனஉணர்வர் - அவற்றைக்கேவலாவத்தைசகலாவத்தைசுத்தாவத்தைஎன்றுஅறிஞர்சொல்லுவர், கேவலம்- அவற்றுட்கேவலாவத்தையாவது, ஈங்குவரும்கலாதியொடுகுறிஉருவம்ஒன்றும்இன்றி- இச்சகலாவத்தையில்நிகழும்கலையாதிதத்துவங்களும்பரவுடம்புசூக்குமஉடம்புதூலஉடம்புகளுமின்றி, மலம்அன்றிஒன்றும்இல்லைஎனும்இயல்பாய் - ஆணவமலம்ஒன்றேயன்றிவேறொன்றுமில்லைஎன்னும்தன்மையுடையதாய், அறிகருவிஅணையாஆதலினால் - அறிதற்கேதுவாகியகருவிகள்கூடாவாதலாலே,ஆங்குஅறிவை. அறிவுஅரிதாய் - அவ்விடத்தேஒருபொருளையும்அறியக்கூடாததாய், இருள்மருவும்அலர்விழிபோல்அதுவாய்--இருளைப்பொருந்தியவிழித்தகண்போலஅம்மலவிருளிலேஅழுந்தி, நீங்கும்வகையின்றி-அதனைவிட்டுநீங்கும்வகையின்றி,நித்தவியாபகமாய்- பிறப்பிறப்பும்ஏகதேசத்தன்மையுமின்றி,அங்கண்நிற்பதுஎன்று -ஆணவமலத்தோடுமாத்திரங்கூடிநிற்பதென்று, நூல்நிகழ்த்தும் - ஆகமங்கள்சொல்லும்.

**குறிப்பு**:- 1. கேவலசகலசுத்தம்:- இங்கேகூறியகேவலம்சகலம்சுத்தம்என்னும்மூன்றும்காரணாவத்தைகள்எனப்படும. காரணகேவலத்தின்இயல்புஇச்செய்யுளாலும், காரணசகலத்தின்இயல்பு 48ஆம் செய்யுளாலும், காரணசுத்தத்தின்இயல்பு 19ஆம் செய்யுளாலும்கூறுகின்றார்.

காரணகேவலம்மருட்கேவலம்என்றும்அநாதிகேவலம்என்றும்சொல்லப்படும்.

2. ஈங்குவருங்கலாதியொடு. . . . .மலமன்றியொன்றுமிக்லையெனுமியல்பாய்:- சகலாவத்தையில்ஆன்மாகலைமுதலியதத்துவங்களோடுகூடிஅதன்இச்சாஞானக்கிரியைகள்விளங்கப்பெற்று ம்பரசூக்கும்தூலஉடம்புகளைப்பொருந்தியுமிருக்கும். கேவலாவத்தையில்கலைமுதலியதத்துவங்களொன்றுமின்றியும்,

இச்சாஞானக்கிரியைகள்சிறிதும்விளங்கப்பெறாமலும், பரசூக்குமதூலஉடம்புகளின்றியும்ஆணமலத்தோடுமாத்திரங்கூடிநிற்கும்

ஈங்கு - இவ்விடம்,சகலாவத்தை, குறி-சூக்குமசரீரம். உருவம் - தூலசரீரம். "ஒன்றுமில்லை" என்றதனால்பரவுடம்புவருவிக்கப்பட்டது. பரவுடம்பாவது,காரணசரீரம்கஞ்சுகசரீரம்குணசரீரம்என்னும்மூன்றுமாம்.

3. ஆங்கறிவையறிவரிதாயறிகருவியணையாவாதலினால்:- கேவலநிலையில்மனம்முதலியஅறிகருவிகள்இன்மையால், ஆன்மாபோகங்களைஅறிந்துபற்றிஅனுபவிக்கஇயலாதிருக்கும்என்பது,ஆங்கு- அவ்விடத்தில்கேவலநிலையில், அறிவை - அறியப்படும்பொருள்களை.

4. இருள்மருவும்அலர்விழிபோல்அதுவாய்:-கண்ஒன்று, அதன்ஒளிஒன்று, ஒளிக்குக்காணும்குணமொன்று, காணும்தொழிலொன்று,கண்இருளோடுகூடியபொழுதுவிழித்திருப்பினும், இருள்மறைப்பால்ஒன்றையுங்காண்பதில்லை. இதனால்கண்ணுக்காதல், அதன்ஒளிக்காதல்ஒளியின்காணும்குணத்துக்காதல்ஒருகேடில்லை.காணும்தொழிலொன்றேஅவ்விருள்மறைப்பினால்நிகழவில்லை. அதுபோலஆன்மாவுக்காவதுஆன்மஅறிவுக்காவது, அவ்வறிவின்அறியும்குணத்துக்காவதுயாதாமொருகேடின்றி,அதுமலமறைப்பினால்அறியுந்தொழில்நிகழாமல், மலம்என்றும்தான்என்றும்பிரிப்பின்றிஅம்மலலிருளில்அழுந்தியிருக்கும், அதுவாய்- ஆணவமலத்தோடுஅம்மலமாத்திரையாயிருத்தல்.

5. நீங்கும்வகையின்றி:- வியஞ்சகமின்றியிருத்தல்,இருளில்அழுந்தியகண்சூரியன்பிரகாசித்தபொழுதுஅதன்உதவியால்அவ்விருளினின்றுநீங்கும். அதுபோல, சிவஞானப்பிரகாசத்தினால்உயிர்மலவிருளில்நீங்கப்பெறும். கேவலத்தில்சிவஞானப்பிரகாசமின்மையால்,மலத்தினின்றுநீங்கும்வகையின்றியிருக்கும். கண்ணொளிக்குவியஞ்சகம்சூரியனதுஒளி. ஆன்மஅறிவுக்குவியஞ்சகம்சிவஞானம். வியஞ்சகம் - வெளிப்படுத்துங்கருவி, துணைக்கருவி.

6. நித்தவியாபகமாய்:- நித்தம்-சரீரத்தோற்றக்கேடுகளின்மை, பிறப்பிறப்பின்மை.

**வியாபகம்** :பிறப்பிறப்புக்குஏதுவாகியஏகதேசமின்றியிருத்தல். ஏகதேசமாவதுகலையாதிகளால்அறிவுசெயல்கள்சிறிதேவிளங்கப்பெறுதல்; இருளில்அழுந்திஇருப்பவனுக்குவிளக்கொளிஏகதேசவிளக்கஞ்செய்வதுபோலாம். ஏகதேசவிளக்கம்சகலத்திலுண்டாம்; கேவலத்தில்வியாபகஅறிவுமுழுதும்மறைபட்டிருக்கும்.

7. அங்கண்:- அவ்விடம், ஆணவமலத்தோடு.

**பொழிப்பு:-**ஆன்மாக்கள்கேவலம்சகலம்சுத்தம்எனமூன்றுஅவத்தைஉறுவர். அவற்றுள், கேவலமாவதுகலைமுதலியதத்துவங்களும்பரசூக்குமதூலஉடம்புகளுமின்றி, ஆணவமலம்ஒன்றேயன்றிவேறொருபொருளுமில்லையெனும்இயல்பினையுடையதாய், அந்தக்கரணம்முதலியஅறிகருவிகளின்மையால்ஒன்றையும்அறியவியலாததாய், மலவிருளில்அழுந்திஅதைவிட்டுநீங்கும்வாயில்இல்லாமலும், பிறப்பிறப்பும்ஏகதேசத்தன்மையுமின்றிஅம்மலத்தோடுமாத்திரங்கூடியிருக்கும்நிலையாம்.

## ஆணவமலத்தைப்பற்றியஆசங்கை

34. இன்மைமலமாயைகன்மமென்றிரண்டேயிறைதா
னிலங்குபலவுயிர்களுமுன்புரிந்தவிருவினையின்
றன்மைகளாலெவர்களுக்குந்ததுகரணபுவனந்
தந்திடுமிங்கிதனாலேயிருபயனுஞ்சார்ந்து
கன்மமெலாநேராகநேராதன்மருவக்
கடவுளருளாலெவையுங்கழித்திடுவனதனாற்
பின்மலமானவையணுகாபெருகொளிமுன்புளதே
பெற்றிடுமென்றித்திறமென்பேசுமாறே.

**பதவுரை:-**இன்மைமலம்-ஆணவமலம்எனஒன்றில்லை. மாயைகன்மம்என்றுஇரண்டே - மாயையும்கன்மமும்எனஇரண்டேயுள்ளன,இறைதான்இலங்குபலஉயிர்களும்முன்புரிந்தஇருவினையின்தன்மைகளால்எவர்களுக்கும்ததுகரணபுவனம்தந்திடும்-கருத்தாவானவன்விளங்காநின்றபலஆன்மாக்களும்முன்செய்தநல்வினைதீவினைகளுக்கீடாகஅவ்வுயிர்கள்எவற்றுக்கும்ததுகரணபுவனபோகங்களைக்கொடுத்திடுவன்,இங்குஇதனாலே- இப்படிஇறைவன்கொடுத்தலாலே, இருபயனுஞ்சார்ந்து-இன்பத்துன்பங்களைஅநுபவித்து, கன்மம்எல்லாம்நேராகநேராதல்மருவ-எல்லாக்கன்மங்களும்நேரொத்துவரும்பொழுது,கடவுள்அருளால்எவையும்கழித்திடுவன்-இறைவன்குருமூர்த்தியாய்எழுந்தருளிவந்துதிருவருள்புரிந்துஅக்கன்மங்கள்எல்லாவற்றையும்நீக்கியருளுவன்,அதனால்பின்மலமானவைஅணுகா - அவர்செய்யும்தீக்கையினால்பின்புஅந்தமாயைகன்மங்கள்வந்துபொருந்தா, பெருகுஒளிமுன்புஉளதேபெற்றிடும் - ஆன்மாக்களும்முன்புள்ளதாகியபேரறிவையேபெற்றிடும், என்றுஇத்திறம்பேசுமாறுஎன்-என்றிப்படிச்சொல்லும்முறைமைஎன்ன?

**குறிப்பு:-** 1.

கன்மமெலாநேராகநேராதல்மருவ:யாதாமொருசிவபுண்ணியவிசேடத்தால்புண்ணியபாவங்களிரண்டும்துலை யொத்துஒருசெனனத்தில்எல்லாக்கன்மங்களும்புசித்துத்தொலையத்தக்கதாகவரும்பொழுது. இஃதுஐக்கியவாதிகள்கொள்கை.

2.பெருகுஒளி - பேரறிவு. ஒளி - அறிவு. ஐக்கியவாதிகள்ஆன்மாஅநாதியேசுத்தமாய்அறிவாயுள்ளதுஎன்பர்.

## பொழிப்பு:-

ஐக்கியவாதசைவர்ஆணவமலம்என்பதொன்றில்லை.மாயையும்கன்மமுமாகியஇருமலமேயுள்ளன. கடவுள்ஆன்மாக்கள்முன்செய்தநல்வினைதீவினைகளுக்கேற்றபடிதநுகரணபுவனபோகங்களைக்கொடுப்பர். அவைகளைக்கொண்டுஆன்மாக்கள்இன்பத்துன்பங்களைஅநுபவிப்பர். இப்படிஎல்லாக்கன்மங்களும்துலைபுகுபொருள்போலநேரொத்தபொழுதுகடவுள்குருமூர்த்தியாய்எழுந்தருளித் திருவருள்புரிந்துஅக்கன்மங்கள்எல்லாவற்றையும்நீக்கியருளுவர். அவர்செய்யும்தீக்கையினால்அதன்பின்புமாயைகன்மங்கள்வந்துபொருந்தா. அந்நிலையில்ஆன்மாக்களுக்குமுன்புள்ளபேரறிவேவெளிப்பட்டுத்தோன்றஆன்மாதன்னறிவையேதான்பெற்று ப்பேரறிவாளனாம்என்பர்.

### ஆணவமலம்உண்டென்பதற்குப்பிரமாணம்

35. மாயைமுதலெனவினையின்பான்மைமுதலெனவே
மன்னுபனைவிதைமரபின்மயங்குமலஞ்சுத்தற்
கேயுநெறியென்கொலதனியல்பாயின்முத்தி
யென்பதென்மற்றிவைநிற்கவிருங்கலாதியுணர்வாய்
மேயபினர்த்தன்னுருவம்விளங்காமைவிளக்கு
மிகுமுலகந்தனிலென்னிலிவைவிடுங்காலுணர்வுள்
தோயுநெறியிலதாதலறியாமையெனநீ
சொல்லியதுமலமென்பர்துணிந்துளோரே.

**பதவுரை:-**மாயைமுதல்எனவினையின்பான்மைமுதல்எனவேமன்னுபனைவிதைமரபின்மயங்கும் - மாயைமுந்தியதென்றும்வினைப்பகுதிமுந்தியதென்றுஞ்சொல்லுமிடத்துநிலைபெற்றபனையோவிதையோமு ந்தியதென்னும்முறைமைபோலமயங்கநேரும், சுத்தற்குமலம்ஏயும்நெறிஎன்கொல் - அன்றியும்முன்சுத்தனாயிருந்தஆன்மாவுக்குஅம்மாயைகன்மங்கள்பொருந்தும்முறைஎவ்வாறு, அதன்இயல்புஆயின் -அம்மலங்களின்இயற்கையாயின், முத்திஎன்பதுஎன்- (முத்திஅடைந்தபின்னும்அவைவந்துபொருந்துமாதலால்) முத்தியுண்டென்றுசொல்லுவதென்னை,

இவைநிற்க -இவைநிற்க, இரும்கலாதிஉணர்வாய்மேயபினர்பெரியகலைமுதலியதத்துவங்கள்ஆன்மாவுக்குஅறிவைத்தருவதாய்ப்பொருந்தியபின், தன்உருவம்விளங்காமைமிகுஉலகம்தனில்விளக்கும்என்னில் -ஆன்மசொரூபம்விளங்காதபடிமறைத்துமிக்கபிரபஞ்சரூபத்தையேகாட்டிநிற்குமென்றுசொல்லின், இவைவிடுங்கால்உள்உணர்வுதோயுநெறிஇலதாதல்-இக்கலையாதிகள்நீங்கினகேவலத்தில்ஆன்மஅறிவுவிளங்காதிருத்தற்குக்காரணம், அறியாமைஎன -அறியாமையாம்என்று, நீசொல்லியது-நீசொல்லியஅதனையே, மலம்என்பர்துணிந்துளோர்-ஆணவமலம்என்றுசொல்லுவர்அதனைஉணர்ந்தோர்.

குறிப்பு:- 1. மாயைமுதலெனவினையின்பான்மைமுதலெனவே.......:- மேற்செய்யுளில் 'முன்புரிந்தவிருவினையின்றன்மைகளாலெவர்களுக்குந்தநுகரணபுவனந்தந்திடும்" என்றுஐக்கியவாதிசொன்னதில், இருவினைபுரிதற்குச்சரீரம்வேண்டுமாகையால்ஆன்மாவைமாயாசரீரம்முந்திக்கூடியதோஅல்லதுகன்மத்துக்கீடாகச்சரீரங்கிடைப்பதால்கன்மம்முந்திக்கூடியதோஎன்னும்வினாநிகழ்ந்துபனைமுந்தியதோஅதன்விதைமுந்தியதோஎன்னும்முடிவுபெறாதவழக்கிற்பட்டுமயங்கநேரிடும். பனைவிதைமரபு - தாலபீசநியாயம். தாலம் - பனை. பீசம் - விதை.

2. மலஞ்சுத்தற்கேயுநெறியென்கொல்:- ஆன்மாக்கள்அநாதியேசுத்தமாயுள்ளன. மாயாகன்மங்கள்இடையிலேவந்துஅவ்வான்மாக்களைப்பொருந்துவனஎன்பர்ஐக்கியவாதிகள். அவ்வாறாயின், அநாதியிலேசுத்தமாயிருக்கும்ஆன்மாவைஇடையிலேமாயாகன்மங்கள்வந்துபொருந்துதற்குஏதுவில்லை. அன்றியும். இம்மலங்கள்இடையேவந்துஆன்மாவைப்பொருந்துமென்பதற்குஆதியில்இவ்வான்மாவுக்குமலமென்பதொன்றுண்டாய்அதுகாரணமாகவந்துகூடினதென்றுசொல்லவேண்டும்.

3. அதனியல்பாயின்முத்தியென்பதென்:- அப்படிமலம்என்பதொன்றில்லை. இம்மாயாகன்மங்கள்இயல்பாகவந்துபொருந்துமென்னில், முத்தியைப்பெற்றிருப்பவரிடத்திலும்மாயாகன்மங்கள்இயல்பாகவந்துபொருந்தவேண்டும். அங்ஙனமாயின்முத்தியென்பதொன்றுஇல்லையாய்முடியும்.

4. உள்உணர்வுதோயுநெறி - ஆன்மஅறிவுபொருந்தும்முறை.

**பொழிப்பு:-**அப்படியாயின், மாயைகன்மம்என்னும்காரணஇரண்டனுள், மாயையோகன்மமோஆன்மாவைமுந்திப்பொருந்தியது? அன்றியும், முன்சுத்தமாயிருந்தஆன்மாவுக்குஅம்மாயைகன்மங்கள்வரக்காரணமென்னை?

அப்படிவருதல்அவற்றின்இயல்பென்னில், முத்தியடைந்தபின்னும்வருமெனப்பட்டுமுத்தியென்பதொன்றுஇல்லையாய்முடியும். இவைநிற்க, கலைமுதலியதத்துவங்கள்ஆன்மாவைப்பொருந்தியபின்தம்மறிவையேஅதற்குக்கொடுத்துஆன்மசொரூபம்விளங்காதபடிமறைத்துப்பிரபஞ்சத்தையேகாட்டிநிற்குமென்னில், மிகநன்று; கலைமுதலியதத்துவங்கள்நீங்கியதுரியாதீதத்தில்ஆன்மஅறிவுவிளங்காதிருத்தற்குஏதுஎன்னை? அறியாமைஎன்னில், அதனையேஅறிவுடையரேர்ஆணவமலம்என்பர். ஆதலால், அவ்விருமலங்களோடுஆணவமலமும்உண்டென்பதேதுணிபாம்.

## இதுவுமது

36. அந்நியமானவையுணர்த்தியநந்நியமாய்நிறைந்த
வறிவறியாமையினானுமருணிலவுங்காலந்
தன்னிலவனேயாவுமாய்நின்றதொன்மை
தாமுணர்தலானுமுயிர்தானெனவொன்றிலதா
மன்னியிடுமலமாயைகன்மங்கண்மாறி
வந்திடுமிங்கிதுவழுவாதாதலினான்மனத்தால்
உன்னரியதிருவருளையொழியமலமுளதென்
றுணர்வரிதாமதனுண்மைதெரிவரிதாமுனக்கே.

**பதவுரை**:மலம் - ஆணவமலமானது,அந்நியமானவைஉணர்த்தி - ஆன்மாக்களுக்குவேறாயபொய்ப்பிரபஞ்சத்தைமெய்ப்பொருளெனஅறிவித்துநிற்றலால், அந்நியமாய்நிறைந்தஅறிவுஅறியாமையினாலும் - அவ்வான்மாக்கள்தமக்குவேறின்றிப்பரிபூரணமாய்நிற்கும்அறிவாகியசிவத்தைஅறியாமையினாலும், அருள்நிலவும்காலம்தன்னில்அவனேயாவுமாய்நின்றதொன்மைதாம்உணர்தலானும்- திருவருள்பிரகாசமானசுத்தநிலையில்சிவமேஎல்லாமாய்நின்றபழைமையைஅவைஅறிகையாலும், உயிர்தான்எனஒன்றுஇலதாமன்னியிடும் - ஆன்மாஎனஒருபொருள்இல்லையாகஅவ்வான்மாதானேயாய்நிலைபெற்றுநிற்கும், மாயைகன்மங்கள்மாறிவந்திடும் - மாயையும்கன்மமும்சகலத்திற்பற்றுவதும்கேவலத்தில்விடுவதுமாய்ஆகந்துகமாயிருக்கும், இங்குஇதுவழுவாது -இந்தஆணவமலம்கேவலத்திலும்சகலத்திலும்நீங்காதுசகசமாயிருக்கும், ஆதலினான்மனத்தால்உன்னஅரியதிருவருளைஒழியமலம்உளதென்றுஉணர்வுஅரிதாம் -

ஆதலால்மனத்தினாலேநினைத்தற்கரியதிருவருளின்சகாயத்தாலன்றிஆணவமலம்உண்டென்று அறியமுடியாது, அதன்உண்மைஉனக்குதெரிவுஅரிதாம்- அத்திருவருளில்லாதஉனக்குஅம்மலத்தின்உண்மைஅறிதல்அரிதாம்.

**குறிப்பு:-** 1. உணர்த்துதல் - உணர்விற்கேதுவாதல்.

2. **மாயைகன்மங்கள்மாறிவந்திடும்- ஆணவமலம்போலமாயையும்**கன்மமும்அநாதி, அவற்றின்காரியங்களேசிருட்டிசங்காரங்களிலேபற்றியும்விட்டும்வருவன, அக்காரியங்கள்தருகரணபுவனபோகங்களாம்.

**பொழிப்பு:**சகலநிலையில்தனக்குவேறறநின்றுபிரபஞ்சத்தைஅறிவித்தருளுந்திருவருளைஆன்மாஅறியாது. சுத்தநிலையிலேசிவமேஎல்லாமாய்நிற்கும்முறைமையைஅத்திருவருளைக்கொண்டறியும்,சகலத்தில்ஆன்மாவோடுசகசமாய்க்கலந்துநின்றுதிருவருளைஅறியாதபடிசெய்வதுஆணவமலமாம். மாயைகன்மங்கள்சகலத்தில்சேர்வதும்கேவலத்தில்நீங்குவதுமாயிருக்கும். ஆணவமலம்சகலகேவலங்கள்இரண்டிலும்நீங்காதிருக்கும். ஆதலால், அத்திருவருள்பிரகாசமானசுத்தநிலையிலன்றிஆணவமலம்உண்டென்பதைஅறியஇயலாது.

## 2.சகலாவத்தை

## சகலாவத்தைநிகழும்முறையும்சூக்குமைவாக்கின்தொழிலும்

37. புகலுமலமொழித்தற்குக்கலாதிமுதன்மாயை
பொருந்தியிடுமரனருளாற்போதந்தீபஞ்
சகலமெலாமுடனாயவாறுபோலுந்
தருமருளைமலமுயிர்கள்சாராமன்மறைக்கும்
இகலிவருமிவையுணரினிருள்வெளியாத்தன்மை
யெய்தும்வகைதன்செய்தியிலங்குவிந்து
பகர்வரியவுணர்வாகியொளியாயுள்ளப்
பான்மையினாலொருநாதம்படருந்தானே.

**பதவுரை:**புகலுமலம்ஒழித்தற்கு-மேற்சொல்லியஆணவமலமறைப்பைநீக்குதற்பொருட்டு, அரன்அருளால் - சிவத்தினருளால், முதல்மாயைகலாதிபொருந்தியிடும் - சுத்தமாயாகாரியமானவாக்குகளும்கலையாதிதத்துவங்களும்ஆன்மாவைவந்துபொருந்தும்,தீபம்சகலம்எலாம் உடனாயவாறுபோலும்போதம்- தீபமானதுஅதைச்சேர்ந்ததண்டுதகழிநெய்திரிமுதலியபகுதிகள்எல்லாவற்றுடனும்கூடிப்பிரகாசித்துஎரிந்தாற்

போலஆன்மாவின்அறிவுஇவ்வாக்குக்களோடுந்தத்துவங்களோடுங்கூடிவிளக்கமுறும், தரும்அருளைஉயிர்கள்சாராமல்மலம்மறைக்கும் - அவ்வாறுவாக்கு,கலைமுதலியவற்றால்அறிவைத்தருகின்றதிருவருளைஆன்மாக்கள்அறிந்துபொருந்தாதபடி ஆணவமலம்மறைத்துநிற்கும். இகலிவரும்இவைஉணரின்இருள்வெளியாம்தன்மை- இப்படிமாறுபட்டுவரும்மலமாயைகளின்இயல்பைஅறியுமிடத்துஇருளும்ஒழியும்போன்றதன்மையுடையன வாம், எய்தும்வகைதன்செய்தி- ஆன்மாஅறிவைப்பொருந்தும்முறையும்அம்மாயாகாரியங்களின்செயலும்என்னவெனில், இலங்குவிந்து- மூலாதாரத்தில்விளங்கும்விந்துதத்துவத்திலிருந்து, பகர்வுஅரியஉணர்வாகி - சொல்லுதற்கரியஞானமாத்திரைக்குஏதுவாகியும்,ஒளியாய்-பரசரீரத்தினுள்ளாப்பிரகாசமாய்விளங்கியும், உள்ளப்பான்மையினால்-ஆன்மாஅறியும்அறிவுக்கீடாக, ஒருநாதம்படரும் - ஒப்பற்றசூக்குமைவாக்குத்தோன்றிஉந்தித்தானத்திற்குச்செல்லும்.

**குறிப்பு:-** 1. சகலம்- பகுதி.

2. இருள்வெளியாந்தன்மை:- ஆணவமலம்உயிரோடுகலந்துநின்றுஅதன்அறிவிச்சைசெயல்களைமறைக்கும். மாயைதநுகரணபுவனங்களாய்உயிருக்குவேறாய்நின்றுஅதன்அறிவிச்சைசெயல்களைவிளக்கும்.

3. விந்து - அபரவிந்து. பரநாதம்எனப்படும்ஞானசத்தியும்பரவிந்துஎனப்படும்கிரியாசத்தியும்சுத்தமாயையைப்பொருந்துதலினால்முறையேஅபரநாதமும்அபரவிந்துவுமுண்டாம். அபரவிந்துவிலிருந்துஅக்கரங்கள்தோன்றும், அபரநாதம்தொனிவடிவாயுள்ளது. அபரவிந்துசங்கற்பரூபமாயுள்ளது. அக்கரம்வன்னரூபமாயுள்ளது.

4. உணர்வாகிஒளியாய்ஒருநாதம்படரும்:-நாதம் - சூக்குமைவாக்கு. இதுமூலாதாரத்தில்விந்துவிலிருந்துதோன்றிஉந்தித்தானத்திற்குச்செல்லும். மூலாதாரம்துரியாதீதம்எனவும், உந்தித்தானம்துரியம்எனவும்படும்.

இச்சூக்குமைவாக்குஞானத்துக்குஏதுவாதலும், பரசரீரத்தினுள்ளாகநாதமாத்திரையாகவிளங்குதலுமாகியஇரண்டுஇலக்கணங்களையுடையது. உணர்வு- அறிவு, ஞானம்.

**பொழிப்பு:**ஆணவமலமறைப்பைநீக்குதற்பொருட்டுத்திருவருளால்வாக்குக்களும்கலைமுதலியதத்துவங்களும்ஆன்மாவைப்பொருந்தும். இவற்றால்ஆன்மஅறிவுவிளங்கப்பெறும். இவற்றைக்கூட்டிஅறிவைத்தருகின்றதிருவருளைஆன்மாக்கள்அறிந்துபொருந்தாதபடிஆணவமலம்மறைக்கும். மலமாயைகளின்இயல்புஇருளும்ஒளியும்போலமாறுபட்டதன்மையாகஇருக்கும்.

இனி, ஆன்மஅறிவுவிளங்கும்வகையும்அம்மாயாகாரியங்களின்செயலும்- மூலாதாரத்திலேவிளங்கும்விந்துவிலிருந்துசூக்குமைவாக்குத்தோன்றும். அதுஞானமாத்திரைக்கேதுவாகியும்பிரகாசமாயுமிருக்கும்.

## பைசந்திமத்திமைவைகரிவாக்குக்களின்தொழில்

38. வந்தடைந்துபின்னமாய்வன்னங்கடோற்றம்
வருமடைவுபடவொடுக்கிமயிலண்டசலநேர்
சிந்தைதனிலுணர்வாகும்பைசந்தியுயிரிற்
சேர்த்துவருமவைமருவுமுருவெவையுத்தெரித்து
முந்தியிடுஞ்செவியிலுறாதுள்ளுணர்வாயோசை
முழங்கியிடுமத்திமைதான்வைகரியிலுதானன்
பந்தமுறுமுயிரணைந்துவந்தமொழிசெவியின்
பாலணையநினைந்தபொருள்பகருந்தானே.

**பதவுரை:-**வந்துஅடைந்து -அந்தச்சூக்குமைவாக்குஉந்தித்தானத்தைச்சென்றடைந்து, வன்னங்கள்பின்னமாய்த்தோற்றம்வரும்அடைவுபடஒடுக்கி - அக்கரங்கள்வேறுவேறாகப்பிரிந்துதோன்றும்முறைமைபொருந்தியிருக்கும்படிஒடுக்கி, மயில்அண்டசலம்நேர் -மயிலின்முட்டைதரித்திடும்நீர்போல, சிந்தைதனில்உணர்வாகும் - இருதயதானத்திற்சிந்தையிலேநிருவிகற்பஉணர்வுக்குஏதுவாய்நிற்கும், பைசந்தி - அப்பொழுதுஅதுபைசந்திஎனப்படும், உயிரில்சேர்ந்துவரும்அவைமருவும்உருஎவையுந்தெரித்து- பின்புஅந்தவாக்கானதுபிராணவாயுவோடுகூடிவருகின்றஅக்கரங்கள்பொருந்தசூக்குமரூபங்கள்எல்லாவற்றையும்வேறுவேறாகப்பிரித்து, முந்தியிடும்செவியில்உறாது-முற்பட்டுவரும்செவிக்குக்கேளாமல், உள்உணர்வாய் -தான்மாத்திரம்உணரநிற்கும்செவிகற்பஉணர்வுக்குஏதுவாய், ஓசை - மெல்லோசையாய், முழங்கியிடும் - கண்டத்திலேதொனிக்கும், மத்திமை - அந்நிலையில்அதுமத்திமைஎனப்படும்,வைகரியில்- வைகரிஎனப்படும்நிலையில், உதானன்பந்தம்உறும்உயிர்அணைந்துவந்தமொழி - உதானவாயுவானதுஅகங்காரத்தாற்செலுத்தப்படும்பிராணவாயுவைக்கூடுதலாலேவந்தவாக்கு,செவியின்பால் அணைய - தன்செவிக்கும்பிறர்செவிக்குங்கேட்கும்படி, நினைந்தபொருள்- மனத்தின்நினைந்தஒருபொருளை,பகரும் - சொல்பவனுக்கும்கேட்பவனுக்கும்செவிகற்பஉணர்வுஉண்டாதற்குஏதுவாய்ச்சொல்லும்.

**குறிப்பு:** 1. பைசந்திமத்திமைவைகரிவாக்குக்கள்மூன்றும்சூக்குமைவாக்கின்விருத்திகளாம்.

2. வந்தடைந்து. . . .பைசந்தி :- சூக்குமைவாக்குஉந்தித்தானத்தைஅடைந்து, அதன்பின்இதயத்தானத்துக்குச்செல்லும். இந்தஇடத்தில்மயில்முட்டையின்நீர்பஞ்சவன்னங்களையும்சூக்குமரூபமாகஅடக்கியிருப்பதுபோல, எழுத்துக்கள்பிரிந்துதோன்றாதுமிகவுஞ்சூக்குமரூபமாயிருக்கும். இந்நிலையில்அவ்வாக்குப்பைசந்திஎனப்படும்.

எழுத்துக்கள்பிரிந்துதோன்றாதுசிந்தையின்கண்நிற்றலும், நிருவிகற்பஉணர்விற்குஏதுவாதலுமாகியஇரண்டும், பைசந்திவாக்கின்இலக்கணங்களாம்.

3. மத்திமை:-சூக்குமரூபமாய்அக்கரங்கள்பிரிந்துதோன்றிச்செவியிற்கேட்கப்படாததாய், சொல்லுவான்தன்னுள்ளேஉணரும்செவிகற்பஉணர்விற்குஏதுவாய், மெல்லோசையாய்க், கண்டத்தில்விளங்குவதுமத்திமைவாக்கு. சூக்குமரூபமாய்அக்கரங்கள்பிரிந்துதோன்றலும், செவிகற்பஉணர்வுக்கேதுவாய்உள்ளேஉணரப்படும்ஓசையாயிருத்தலும், இவ்வாக்கின்இலக்கணங்களாம்.

4. உயிரிற்சேர்ந்துவருமவைஎன்றதுவைகரியை.

5. முந்தியிடுஞ்செவியிலுறாது - பிறர்செவிக்குக்கேளாமல்.

6. வைகரி:- உதானவாயுவினால்உந்தப்பட்டுமத்திமைத்தானத்துச்சூக்குமரூபமாய்ப்பிரிந்துதோன்றியஅக்கரங்கள், பிராணவாயுவினால்உந்தப்பட்டெழுந்து, தன்செவிக்கும்பிறர்செவிக்குங்கேட்கப்பட்டுநினைந்தபொருளைச்சொல்லுஞ்சொல்லாய், சொல்வானுக்குங்கேட்பானுக்குஞ்செவிகற்பஉணர்வுஉண்டாதற்காரணமாயிருப்பதுவைகரிவாக்கு. பிராணவாயுவினால்உந்தப்பட்டுப்பிறர்செவிக்குக்கேட்கப்படுவதாயிருத்தலும்செவிகற்பஉணர்வுக்கேதுவாயிருத்தலும், இவ்வாக்கின்இலக்கணங்களாம்

உதானவாயுமத்திமைத்தானத்திலேதொழிற்படும். வைகரித்தானத்திலேபிராணவாயுதொழிற்படும்.

7. வைகரிமுதலியமூன்றுவாக்குக்களும்அழிந்துபோவன. சூக்குமைவாக்குசுத்தமாயாரூபமாய்அழிவின்றிநிலைபெற்றிருக்கும்.

**பொழிப்பு:-**

அந்தச்சூக்குமைவாக்குஉந்தித்தானத்தைஅடைந்துமயில்முட்டையில்நீர்போலஅக்கரங்கள்வேறுவேறாகப்பிரிந்துதோன்றும்முறைமைபொருந்தஒடுக்கிச்சிந்தையிலேநிருவிகற்பஉணர்வுக்குஏதுவாய்நிற்கும். அப்பொழுதுஅதுபைசந்திஎனப்படும்.

பின்புஅந்தவாக்கு. உதானவாயுவின்தொழிற்பாட்டால்அக்கரங்கள்பிரிந்துதோன்ற, பிறர்செவிக்குக்கேளாமல்உள்ளடங்கியஉச்சரிப்பாயும்மெல்லோசையாயும்கண்டத்திலேதொனிக்கும். அந்நிலையில்அதுமத்திமைஎனப்படும்.

பின்புஅந்தவாக்கு, மனத்துநினைந்ததொருபொருளைச்சொல்லும்தன்செவிக்கும்கேட்கும்,பிறர்செவிக்கும்கேட்கும்சொல்லாய், சொல்பவனுக்கும்கேட்பவனுக்கும்செவிகற்பஉணர்வுஉண்டாதற்குஏதுவாய்நிற்கும். அந்நிலையில்அதுவைகரிஎனப்படும்.

## ஆன்மஅறிவுவிளங்கும்வகையும், கலைவித்தைகளின்தொழிலும்

39. இத்தகைமையிறையருளாலுயிரறியுமறிவுக்

கீடாகவாடாதேயீரிரண்டினுரைத்த

வித்தைமுதலைவரான்விளங்குஞான

மேவியிடுமெனவுரைப்பரசுத்தமாயை

வைத்தகலைதான்மூலமலஞ்சிறிதேநீக்கி

மருவும்வகைதெரிவிக்கும்வாயில்களின்பயனைப்

புத்திதரவித்தையிடைநின்றறிவையுயிர்க்குப்

பொருந்தியிடும்வகைபுணரும்புனிதசத்திபுணர்ந்தே.

**பதவுரை:-**இத்தகைமை -இந்தமுறையிலே, இறைஅருளால்- பரமசிவனதுஅருளினால், உயிர்அறியும்அறிவுக்குஈடாக - ஆன்மாஅறியும்அறிவுக்குத்தக்கபடி, வாடாதோஈரிரண்டின் - தவிராமல்வரும்நான்குவாக்குக்களினாலும், உரைத்தவித்தைமுதல்ஐவரான் - முன்னேசொல்லியசுத்தவித்தைமுதலியதத்துவகர்த்தாக்கள்ஐவராலும், விளங்குஞானம்மேவியிடும்எனஉரைப்பர்- விளங்குகின்றவிடயஞானம்அவ்வான்மாவைப்பொருந்தும்என்றுஅறிவுடையோர்கூறுவர், அசுத்தமாயைவைத்தகலைதான்மூலமலம்சிறிதேநீக்கிமருவும்வகைதெரிவிக்கும் - (அஃதெங்ஙனமெனின்) அசுத்தமாயைதந்தகலையானதுஆணவமலத்தைச்சிறிதேநீக்கிவிடயங்களைப்பொருந்தும்படிஆன்மாவின்கிரியாசத்தியைவிளக்கிநிற்கும், வித்தை -வித்தையானது, வாயில்களின்பயனைப்புத்திதர- இந்திரியங்கள்வாயிலாகவரும்விடயங்களைப்புத்திநிச்சயித்துத்தன்பாற்கொடுக்க, இடைநின்று- தான்ஆன்மாவுக்கும்புத்திக்கும்இடையேநின்று, பொருந்தியிடும்வகை- அவ்விடயங்களைஆன்மாபொருந்தும்படி, அறிவைஉயிர்க்குப்புணரும்-

அவ்வான்மாவுக்குஅறிவைக்கூட்டிநிற்கும், புனிதசத்திபுணர்ந்தே - சிவசத்திஉடன்நின்றேஇவைநிகழ்வனவாம்.

**குறிப்பு:-** 1. . இத்தகைமையிறையருளால்வாடாதேயீரிரண்டின்:- சூக்குமைபைசந்திமத்திமைவைகரிஎன்னும்நான்குவாக்குக்களும்கிரியாசத்தியாற்செலுத்தப்பட்டுச்சுத்ததத்துவங்கள்ஐந்திலுமிருக்கும். அஃதாவது, சூக்குமைசிவதத்துவத்திலும், பைசந்திசத்திதத்துவத்திலும், மத்திமைசாதாக்கியதத்துவத்திலும்,வைகரிதன்செவிக்குக்கேட்கப்படும்சூக்குமவைகரிஎன்றும்,தன்செவிக்கும் பிறர்செவிக்குங்கேட்கப்படும்தூலவைகரிஎன்றும்இருதிறப்பட்டுச், சூக்குமவைகரிமகேசுவரதத்துவத்திலும், தூலவைகரிசுத்தவித்தையிலும்இருக்கும். மூலாதாரம்நாபிஇதயம்கண்டம்முகம்என்பனஇவற்றிற்குமுறையேதானங்களாம்.

2. உரைத்தவித்தைமுதலைவரான்:- இச்சாஞானக்கிரியைகள்சுத்தவித்தைமுதலியதத்துவகர்த்தாக்களைச்செலுத்த, தத்துவகர்த்தாக்கள்சுத்தவித்தைமுதலியசுத்ததத்துவங்களைச்செலுத்திநிற்பர்.

3. வைத்தகலைதான்மூலமலஞ்சிறிதேநீக்கி. . . . .பொருந்தியிடும்வகைபுணரும்:- சுத்ததத்துவங்கள்ஐந்தனுள், சத்திதத்துவம்கலையைஎழுப்ப, கலைஆணவமலத்தைச்சிறிதேநீக்கி, ஆன்மாவின்கிரியாசத்தியைவிளக்கிவினைக்கீடாகவரும்விடயபோகங்களைப்பொருந்தும்படிஅப்போகங்களிற் செலுத்திநிற்கும். ஆணவமலத்தைச்சிறிதேநீக்கிஆன்மாவின்கிரியாசத்தியைவிளக்குதலும், விடயபோகங்களிற்செலுத்துதலும், கலையின்தொழிலாம்.

சுத்தவித்தைவித்தையைஎழுப்ப, வித்தைஆன்மாவுக்கும்புத்திக்கும்இடையில்நின்றுபுத்தியின்வாயிலாகவந்தவிடயபோகங்களைஆன்மாப்பொருந்தும்படிஅவ்வான்மாவுக்குஅறிவைஉதிக்கச்செய்யும். ஆன்மாவின்ஞானசத்தியைச்சிறிதேவிளக்கிப்போகங்களிற்செலுத்துதல்வித்தையின்தொழிலாம்.

**பொழிப்பு:-**

நான்குவாக்குக்களினாலும்சுத்தவித்தைமுதலியதத்துவகர்த்தாக்கள்ஐவராலும்ஆன்மாஅறியும்அறிவுக்குத்தக்கபடிஅவ்வான்மாவுக்குவிடயஞானம்உண்டாகும். கலாதத்துவம்ஆணவமலத்தைச்சிறிதேநீக்கிஆன்மாவின்கிரியாசத்தியைவிளக்கிவிடயபோகங்களிற்செலுத்திநிற்கும்.வித்தைஆன்மாவின்ஞானசத்தியைவிளக்கிஅப்போகங்களிற்செலுத்திநிற்கும்.

## அராகம்நியதிகாலம்என்னுந்தத்துவங்களின்தொழில்

40.பேசரியவராகந்தங்கன்மத்துக்கீடாப்

பெற்றதனிலாசைதனைப்பெருகுவிக்குநியதி

தேசமிகுமரசர்தருமாணைசெய்தி

செய்தவரைத்துய்ப்பிக்குஞ்செய்திபோல

நேசமுறுதங்கன்மநிச்சயித்துநிறுத்து

நிகழ்காலங்கழிகாலமெதிர்காலமென்றே

ஓசைதரவருங்காலமெல்லைபலம்புதுமை

யுறுவிக்குமிறைசத்தியுடனாய்நின்றே.

**பதவுரை:-**பேசஅரியஅராகம்-சொல்லுதற்கரியஅராகதத்துவமானது. தம்கன்மத்துக்குஈடாப்பெற்றதனில்ஆசைதனைப்பெருகுவிக்கும் - ஆன்மாக்கள்தங்களுடையகன்மத்துக்கீடாகப்பெற்றபோகங்களிலேஇச்சையைமிகுவிக்கும், நியதி-நியதியானது, தேசமிகும்அரசர்தரும்ஆணை-தேசங்களைமிகுதியாகவுடையஅரசரால்கற்பிக்கப்பட்டஆணையானது, செய்திசெய்தவரைத்துய்ப்பிக்கும்செய்திபோல - யாதொருசெய்கைசெய்தவரைஅச்செய்கையின்பயனைஅனுபவிக்கச்செய்யும்முறைமைபோல, நேசம்உறும்தம்கன்மம்நிச்சயித்துநிறுத்தும் - ஆன்மாக்கள்முன்னேவிருப்பமுற்றுச்செய்தஅவரவர்கன்மங்களைஅவரவர்அனுபவிக்கும்படிநிச்சயம்பண்ணிநிறுத்தும், கழிகாலம்நிகழ்காலம்எதிர்காலம்என்றுஓசைதரவரும்காலம் - இறந்தகாலம்நிகழ்காலம்எதிர்காலம்எனச்சொல்லப்பட்டுவருங்காலதத்துவமானது, எல்லைபலம்புதுமைஉறுவிக்கும் - இறந்தகாலத்துஎல்லையினையும்நிகழ்காலத்துப்பலத்தினையும்எதிர்காலத்துப்புதுமையினையும்வரையறைசெய்துநிற்கும்,இறைசத்திஉடனாய்நின்றே - சிவசத்திகூடநின்றேஇவைநிகழும்.

குறிப்பு:-. 1. அராகந்தங்கன்மத்துக்கீடாகப்பெற்றதனிலாசைதனைப்பெருகுவிக்கும்-வித்தையின்வாயிலாகஆன்மாஅறிந்தபோகத்தில்அராகம்இச்சையைமிகுவிக்கும். இச்சாசத்திஈசுரதத்துவத்தைஎழுப்ப. ஈசுரதத்துவம்அராகத்தைஎழுப்ப,அராகம், ஆன்மாவுக்குஇச்சையைஎழுப்பும். அராகதத்துவம்வேண்டியதில்லை,விடயமேஆன்மாவுக்குஇச்சையைஎழுப்புமெனின், விடயங்களைஉள்ளபடிகண்டறிந்தாலும்விருத்தர்அவற்றில்ஆசையற்றிருக்கையாலே,விடயம்ஆசையைஎழுப்பமாட்டாது. ஆகையால்அராகதத்துவம்வேண்டப்படும்.

2. நியதிதேசமிகுமரசர்..........புதுமையுறுவிக்கும்:-கிரியாசத்திசத்திதத்துவத்தைஎழுப்ப, சத்திதத்துவம்காலத்தையும்நியதியையும்பிரேரிக்க, காலம்ஆன்மாவிற்குக்கன்மத்தைக்கூட்டிநிற்கும், நியதிகன்மத்தைவரைந்துஅதன்பயனைஆன்மாதப்பாதுஅனுபவிக்கச்செய்யும். அஃதாவது, ஒருவர்செய்தகன்மத்தின்பயன்வேறொருவரைஅடையாமலும், அவரவர்செய்தகன்மத்தின்பயன்அவரவரைவிட்டுநீங்காமலும்ஏறாமலும்குறையாமலும்பொருந்தச்செய்தலாம். அரசர்ஆணையில்லையேல்ஒருவன்செய்தபோகத்தைப்பெலவானொருவன்அனுபவித்தல்கூடும். அதுபோல. நியதியில்லையேல்ஒருவன்செய்தகன்மத்தைவேறொருவன்அனுபவித்தல்கூடும். ஆதலால்நியதிவேண்டியதாயிற்று.

காலம்சுகதுக்கபோகங்கள்அனுபவிக்கவேண்டியகாலவரையறையைச்செய்துகொண்டிருக்கும். கழிகாலஎல்லை - அனுபவித்துத்தொலைந்தவிடயபோகம்,எல்லை-அறுதி, முடிவு. நிகழ்காலப்பலம் - இப்பொழுதுஅனுபவிக்கப்படும்விடயபோகம். பலம் - பலன்,வினைப்பேறு. எதிர்காலப்புதுமை- இனிமேல்அனுபவிக்கப்படும்விடயபோகம். புதுமை-புதியன.

**பொழிப்பு**:-அராகம்வினைக்கேற்பவரும்போகங்களில்இச்சையைமிகுவிக்கும். நியதிதத்துவம்அவரவர்செய்தகன்மங்களைஅவரவரேஅனுபவிக்கும்படிநிச்சயஞ்செய்துநிறுத்தும். அதன்பின்காலமானதுஉயிர்கள்போகங்களைநுகரும்பொழுதுஇறந்தகாலம்நிகழ்காலம்எதிர்காலம்எனமுத்திறப் பட்டுநின்றுஇறந்தகாலத்துஎல்லையையும்நிகழ்காலத்துப்பலத்தையும்எதிர்காலத்துப்புதுமையையும்வரைய றைசெய்துநிற்கும்.

## புருடதத்துவமும்பிரகிருதியும்

41. ஐவகையாலுறுபயன்கணுகரவருங்கால
மதுபுருடதத்துவமென்றறைந்திடுவரறிந்தோர்
மெய்வகையகலாசுத்திதனினிதற்குஞ்சுத்தி
மேவியிடும்வகைதானும்விரும்பியநூல்விளம்புஞ்
செய்வகையின்றொடர்ச்சியிங்குத்தோன்றுவிக்குங்குணத்தின்
சேர்வுபுரிபிரகிருதிதிரிகுணமாமவைதாம்
இவ்வகையாற்சாத்துவிகராசததாமதமா
யியம்புவர்களொன்றிரண்டுகுணமேற்கையுடைத்தே.

**பதவுரை**:-ஐவகையால்உறுபயன்கள்நுகரவரும்காலம்அதுபுருடதத்துவம்என்றுஅறிந்தோர்அறைந்திடுவர் - கலைவித்தைஅராகம்நியதிகாலம்என்னும்ஐந்தின்உபகாரத்தால்தன்னிடத்துவந்துபொருந்துகின்றவினைப்போ

கங்களைஆன்மாஅனுபவிக்கக்கருதும்அவதரத்திலேஅதுபுருடதத்துவமாம்என்றுஅறிந்தோர்சொல்வார்கள்,மெய்வகையகலாசுத்திதனில்இதற்கும்சுத்திமேவியிடும்வகைதானும்விரும்பியநூல்விளம்பும்-சரீரத்தில்ஐவகையானகலாசோதனைசெய்யுமிடத்துஇந்தப்புருடதத்துவத்திற்குஞ்சுத்திசெய்யும்முறைமையினைவிரும்பப்பட்டஆகமங்கள்சொல்லும்,

செய்வகையின்தொடர்ச்சிஇங்குத்தோற்றுவிக்கும்குணத்தின்சேர்வுபுரிபிரகிருதிதிரிகுணமாம் -முன்செய்தநல்வினைதீவினையின்பயனாய்வரும்இன்பத்துன்பங்களைஇப்பொழுதுஉண்டாக்கும்குணங்களின்சமூகமாகியபிரகிருதியானதுமூன்றுகுணமாம், அவைதாம் -அந்தமூன்றுகுணங்களும், இவ்வகையால் -இச்செயல்வகையால், சாத்துவிகஇராசததாமதமாய்இயம்புவர்கள் -சாத்துவிககுணம்இராசதகுணம்தாமதகுணம்என்றுசொல்லுவார்கள். ஒன்றுஇரண்டுகுணம்ஏற்கைஉடைத்து -அவற்றுள்ஒவ்வொன்றும்இவ்விரண்டுகுணங்களைப்பொருந்தும்இயல்பினைஉடையதாம்.

**குறிப்பு:-** 1. ஐவகையாலுறுபயன்கணுகரவருங்காலமதுபுருடதத்துவம்:-ஆன்மாகலைமுதலானஐந்துதத்துவங்களினாலும்கட்டப்பட்டுக்கன்மபலன்களைப்புசிப்பதற்குவல்லமையுள்ளதாயிருக்கும்அவதரத்தில்புருடன்என்றும்பஞ்சகஞ்சுகன்என்றும்புருடதத்துவம்என்றும்பெயர்பெறும். பும்ஸ்த்துவமலம்சேர்ந்தமையாற்புருடதத்துவம்உண்டாயிற்று. கலைமுதலியஐந்துதத்துவங்களின்சேர்க்கையே (சமூகம்) பும்ஸ்த்துவமலம்எனப்படும். கலாதிபந்தம்வருவதற்குமுன்பும்ஸ்த்துவம்இல்லையாதலால், சகலருக்கேபும்ஸ்த்துவமுண்டாம்.

2. மெய்வகையகலாசுத்திதனினிதற்குஞ்சுத்திமேவியிடும்:-ஆசாரியர்தீக்கைசெய்யும்பொழுதுநிவிர்த்திமுதலியகலைகள்ஐந்தினையும்சீடனதுசரீரத்திலேஐவகைப்படுத்திக்கலாசோதனைசெய்வாராகையால், "மெய்வகையகலாசுத்தி" என்றார். சீடனதுசரீரம்முழந்தாள்முதற்பாதம்வரையில்நிவிர்த்திகலைக்குஎல்லையாகவும், நாபிமுதல்முழந்தாள்வரையில்பிரதிட்டாகலைக்குஎல்லையாகவும், இருதயம்முதல்நாபிவரையில்வித்தியாகலைக்குஎல்லையாகவும். புருவம்முதல்இருதயம்வரையில்சாந்திகலைக்குஎல்லையாகவும், சிகைமுதல்புருவம்வரையில்சாந்தியதீதகலைக்குஎல்லையாகவும்வகுக்கப்பட்டுக்கலாசோதனைசெய்யப்படும். அப்பொழுதுமற்றைத்தத்துவங்களுடன்இப்புருடதத்துவத்திற்கும்சுத்திசெய்யப்படும். அதனால்இப்புருடதத்துவமும்மற்றைத்தத்துவங்களோடுசேர்த்துஒன்றாகஎண்ணப்பட்டது. ஆயினும்இதுஒருதனித்தத்துவமன்று.

**நிவிர்த்திகலையிலடங்கியதத்துவம்முதலியன**

(1) தத்துவம் - பிருதிவி.

(2)புவனங்கள்- காலாக்கினிருத்திரபுவனம்முதல்பத்திரகாளி புவனம்வரையில் 108.

(3) வன்னம் - காரம்.

(4) பதங்கள் - ஓங்காரமுதல்பவபவபதம்வரையில்28.

(5) மந்திரங்கள்-சத்தியோசாதம்,இருதயம் 2

(6) தெய்வம் - பிரமா

**பிரதிட்டாகலையிலடங்கியதத்துவங்கள்முதலியன**

(1) தத்துவங்கள் - அப்புதத்துவம்முதல்பிரகிருதிதத்துவம்வரையிலுள்ளஆன்மதத்துவங்கள் 23.

(2) புவனங்கள் - அமரேசபுவனம்முதல்சீகண்டபுலனம்வரையில் 56.

(3) வன்னங்கள்-காரமுதல்,காரம்வரையில் 23.

(4) பதங்கள் - சர்வசர்வஎன்னும்பதம்முதல்வயாபின்என்னும் பதம்வரையில் 21.

(5) மந்திரங்கள் - வாமதேவமந்திரம். சிரோமந்திரம் 2.

(6) தெய்வம் - விஷ்ணு.

**வித்தியாகலையிலடங்கியதத்துவங்கள்முதலியன**

(1) தத்துவங்கள் -புருடதத்துவம்முதல்மாயாதத்துவம்வரையில் வித்தியாதத்துவங்கள் 7.

(2) புவனங்கள்-வாமபுவனம்முதல்அங்குட்டமாத்திரபுவனம் வரையில் 27.

(3) வன்னங்கள்- காரமுதல், காரம்வரையில் 7.

(4) பதங்கள் - வியோமின்பதம்முதல்ஓங்காரம்வரையில் 7.

(5) மந்திரங்கள் - அகோரம், சிகை. 2.

(6) தெய்வம் - உருத்திரன்

**சாந்திகலையிலடங்கியதந்துவங்கள்முதலியன**

(1) தத்துவங்கள்-சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம். 3.

(2) புவனங்கள்-வாமபுவனம்முதல்சதாசிவபுவனம்வரையில் 18.

(3) வன்னங்கள் - காரம் 3.

(4) பதங்கள் - தியாநாகாரபதம்முதல்வியோமவியாபிபதம் வரையில்11

(5) மந்திரங்கள்- தற்புருடம், கவசம், 2.

(6) தெய்வம்-மகேசுவரன்.

**சாந்தியதீதகலையிலடங்கியதத்துவங்கள்முதலியன:-**

(1) தத்துவங்கள்-சத்தி, சிவம். 2

(2) புவனங்கள் - நிவிர்த்திபுவனம்முதல்அநாசிரிதபுவனம்வரையில் 15.

(3) வன்னங்கள் - 16.

(4) பதம் - ஓங்காரம்.

(5) மந்திரங்கள் - ஈசாநமந்திரம், அஸ்திரமந்திரம்,சிவமந்திரம் 3.

(6) தெய்வம் -சதாசிவம்.

3. செய்வகையின்தொடர்ச்சியிங்குத்தோன்றுவிக்குங்குணத்தின்சேர்வுபுரிபிரகிருதி:- பிரகிருதிஅவ்வியத்தகுணவடிவாயுள்ளது; அஃதாவது, வளையல்கடுக்கன்முதலியபணிகளின்வடிவுசத்திரூபமாய்ப்பொன்னில்அடங்கியிருக்கிறதுபோல, முக்குணங்களும்விளங்காதுஅடங்கியிருக்கும்சமநிலை.
இப்பிரகிருதிவித்தியாதத்துவங்களுள்ஒன்றாய்மாயைஎனப்படும்.
இதுபஞ்சகஞ்சுகனானபுருடனுக்குப்போக்கியமானபுத்திஅகங்காரம்முதலியதத்துவங்கள்தோன்றுதற்குஆதார மானகுணதத்துவத்திற்குஉபாதானகாரணமாயிருக்கும்.
இதற்குவேறுதொழில்இல்லை"செய்வகையின்றொடர்ச்சி"
என்பதற்குப்புருடனுக்குப்போக்கியமானபுத்திமுதலியகருவிகள்தோன்றுதற்குஎன்றுபொருளுரைப்பினுமாம்.
சேர்வு- திரட்சி, கூட்டம். புரி - கட்டு.

4. ஒன்றிரண்டுகுணமேற்கையுடைத்து-பார்செய்.42

## பொழிப்பு:-

கலைமுதலியஐந்துதத்துவங்களினாற்பந்திக்கப்பட்டுப்போகங்களில்உன்முகமாய்ஆன்மாநிற்கும்பொழுது, அவ்வான்மாபுருடதத்துவம்எனப்பெயர்பெறும். கலாசுத்திசெய்யுமிடத்து, இப்புருடதத்துவத்திற்கும்சுத்திசெய்யப்படும்.

பிரகிருதி, சாத்துவிகம்இராசதம்தாமதம்எனமூன்றுகுணங்களாகப்பிரியும். அந்தமூன்றுகுணங்களும்தனித்தனிவேறும்இரண்டுகுணங்களைப்பொருந்தும்.

## முக்குணங்களின்தொழிலும்புத்தியின்தொழிலும்

42. அலகில்குணம்பிரகாசம்லகுதைவியாவிருதி
யடர்ச்சிமிகுங்கௌரவமநியமமிவையடைவே
நிலவியிடுமும்மூன்றுமுயிரொன்றிற்கலந்தே
நிற்குமிவைநிறைபுலனின்பயனெவையுங்கவருங்
குலவிவருபோகங்கொளிடமாமாறாக்
குறைவிலொளியாமலகில்புலனிடத்திலொருமை
பலவகையுமுடையதாய்ப்பரனருளாற்புந்தி
பஞ்சாசற்பாவகமும்பண்ணுவிக்குந்தானே.

**பதவுரை**:-அலகுஇல்குணம்- குணங்கள்எண்ணில்லாதன, பிரகாசம்லகுதை-பிரகாசமும்லகுதையும், வியாவிருதிஅடர்ச்சி-வியாவிருதியும்அடர்ச்சியும், மிகும்கௌரவம்அநியமம் - மிக்ககௌரவமும்அநியமமும், இவை - ஆகியஇவைகள், அடைவேநிலவியிடும் - முறையேசாத்துவிகஇராசததாமதகுணங்களைப்பொருந்திநிற்கும். மும்மூன்றும்உயிர்ஒன்றிற்கலந்தேநிற்கும் -இவைஒன்பதுகுணங்களும்ஒவ்வொருஉயிரிலும்கூடிநிற்கும், இவை- இம்முக்குணங்களும்(எதிர்நிரனிறையாக) நிறைபுலனின்பயன்எவையும்கவரும் - நிறைந்தஇந்திரியங்களால்வரும்விடயங்கள்எல்லாவற்றிலும்ஆசையைஉண்டாக்கும், குலவிவருபோகம்கொள்இடமாம்- கொண்டாடப்பட்டுவரும்போகங்களைப்பற்றச்செய்யும்,மாறாக்குறைவில்ஒளியாம் - ஒருகாலும்நீங்காதபூரணமானபிரகாசமாயிருக்கும், புந்தி- புத்தியானது,அலகுஇம்புலனிடத்தில்ஒருமைபலவகையும்உடையதாய் - எண்ணில்லாதவிடயங்களில்ஒற்றுமைஅநேகவிதங்களையும்உடையதாய், பரன்அருளால்- பரமசிவனதுஅநுக்கிரகத்தாலே, பஞ்சாசத்பாவகமும்பண்ணுவிக்குந்தானே- ஐம்பதுபாவங்களையுஞ்செய்துநிற்கும்.

**குறிப்பு**:- 1. அலகில்குணம்பிரகாசம்லகுதைவியாவிருதியடர்ச்சிமிகுங்கௌரவநியமமிவையடைவேநிலவியிடும்:- முக்குணங்களும்ஒத்துஒருகாலத்திலும்விளங்குவதில்லை.

ஒருகுணம்மற்றைக்குணங்கள்இரண்டையும்அடக்கித்தான்மேலிட்டுநிற்கும். அவ்வாறுநிற்கும்பொழுதுஅதில்இரண்டுகுணந்தோன்றிப்பிரதானகுணத்துடனேகூடமூன்றுகுணமாம். இப்படியேமூன்றுகுணமும்ஒன்பதுகுணமாம்.

**அவையாவன**:-சாத்துவிகம், இராசததாமதகுணங்களைஅடக்கித்தான்மேலிட்டிருக்கும்பொழுதுபிரகாசம்என்றும், இலகுதைஎன்றும்இரண்டு 'குணங்கள்தோன்றும்.பிரகாசம் -ஞானம்; இலகுதை-மனவாக்குக்காயங்களின்பிரவிர்த்தியின்மெத்தெனவு.

இராசதம், சாத்துவிகதாமதங்களைஅடக்கித்தான்மேலிட்டிருக்கும்பொழுதுவியாவிருதியும்அடர்ச்சியும்என்றுஇரண்டுகுணங்கள்தோன்றும். வியாவிருதி - சலனம்,அசைவு. அடர்ச்சி -குரூரஉரை, சிந்தனை,செயல்கள்.

தாமதம், சாத்துவிகஇராசதங்களைஅடக்கித்தான்மேலிட்டிருக்கும்பொழுது, கௌரவமும்அநியமமும்என்றுஇரண்டுகுணங்கள்தோன்றும். கௌரவம் - பெருமை. அநியமம் - தகாதகாரியத்தைச்செய்யவேண்டும்என்னும்சங்கற்பம்.

இங்ஙனம்ஆறுகுணங்களும்தோன்றிப்பிரதானகுணங்களுடனேகூடிஒன்பதுகுணங்களாம். இக்குணங்கள்ஒன்பதும்புத்திதத்துவத்துடனேகூடிஆன்மாவிடயங்களைஅறிவதற்குஉபகாரஞ்செய்துநிற்பனவாம்.

முக்குணங்களுக்கும்மேற்சொல்லியவிருத்திகளன்றிஅவற்றுள்வேறுவிருத்திகளுமுண்டு. சாத்துவிககுணவிருத்திகள்பதினாறு, இராசதகுணவிருத்திகள்ஒன்பது, தாமதகுணவிருத்திகள்ஒன்பது.

சாத்துவிககுணவிருத்திகள்பதினாறு: (1) தைரியம் (அசையாதுநிற்றல்) (2) மனம்உறுதியாய்நிற்றல் (3) சாமர்த்தியம் (4) மென்மை (5) நொய்ம்மை (6)மகிழ்ச்சி (7) நேர்மை (8) சுத்தி (9) புண்ணியமுயற்சி (10) பொறுமை(11)கிரகித்ததைமறவாதிருத்தல் (12) போதுமென்றமைந்தநன்மனமுடைமை (13)முத்திபெறவேண்டுமென்னும்மேலானஇச்சை (14) புறக்கரணங்களைஅடக்குதல் (15) அகக்கரணங்களைஅடக்குதல் (16) பெருங்கருணைஎன்பன. (பௌஷ்.430).

இராசதகுணவிருத்திகள்ஒன்பது:- (1) யான்எனதுஎன்னும்அபிமானம் (2)வீரத்தன்மை (3) கொடுமை (4) பெருமுயற்சி (5) வஞ்சனை (6) இடமுடைமை (7)இரக்கமின்மை (8) போகமுடைமை (9) இடம்பமுடைமைஎன்பன. (பௌஷ் 431.)

**தாமதகுணவிருத்திகள்ஒன்பது**: -

(1) பிரியமின்மை

(2) சோம்பல்

(3) உலோபமுடைமை

(4) கோட்சொல்லல்

(5) தன்னைப்பெரிதாகஎண்ணல்

(6) அதிகநித்திரை

(7) கர்வத்தால்வருஞ்சோம்பல்

(8) கேடுசெய்தல்

(9) மூடத்தன்மை (பௌஷ, 432).

முன்சொல்லியஒன்பதுகுணங்களும்இம்முப்பத்துநான்குவிகற்பங்களுள்அடங்கும். இங்ஙனம்மூன்றுகுணங்களும்ஒன்பதாகவும், முப்பத்துநான்காகவும், இன்னும்பலவாகவும்பெருகுதலின் "அலகில்குணம்" என்றார்.

2. மும்மூன்றும்உயிரொன்றிற்கலந்தேநிற்கும் - இக்குணங்கள்ஒன்பதும்சூக்குமதேகவழியாகஆன்மாவினிடத்தில்வியாபித்திருக்கும்.

3. நிறைபுலனின்பயனெவையுங்கவருங், குலவிவருபோகங்கொளிடமாமாறாக்குறைவிலொளியாம் - தமோகுணம்விடயபோகங்களில்ஆசையைஉண்டாக்கும். இராசதகுணம்விடயபோகங்களைப்பற்றச்செய்யும். சாத்துவிககுணம்அப்போகங்களைஅறியச்செய்யும். இவைமுக்குணங்களின்தொழிலாம்.

4. அலகில்புலனிடத்திலொருமைபலவகையுமுடையதாய்ப்பரனருளாற்புந்திபஞ்சாசற்பாவகமும்பண்ணுவிக்கும்: - முக்குணசொரூபமாயிருந்துஇந்திரியங்கள்வாயிலாகவரும்விடயங்களைப்பகுத்துணர்தலும்நிச்சயித்தலும்புத்தியின்தொழில்களாம். புத்திவிடயங்களில்பிரதிபிம்பரூபமாகப்பதிந்துபோக்கியமாகின்றமையால், "அலகில்புலனிடத்தில்ஒருமைபலவகையுமுடையதாய்" என்றார்.

பின்னும்இந்தப்புத்திதன்மாதிஎட்டுவிதப்பாவங்களையுடையதாயும், தன்மாதிபாவங்களிலுண்டானசித்திமுதலானஐம்பதுபிரத்தியயங்களோடுகூடினதாயுமிருக்கும்.

**எட்டுவிதப்பாவங்கள்**:-தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம். அநைசுவரியம்என்பன. அவற்றுள், தருமம்ஞானம்வைராக்கியம்ஐசுவரியம்என்னும்நான்கும்சாத்துவிகபாவங்கள். அவைராக்கியம்ஒன்றும்இராசதபாவம்,அதர்மம், அஞ்ஞானம்,

அறைசுவரியம்என்னும்மூன்றும்தாமசபாவங்கள். இவைபுத்தியில்வாசனாரூபமாயிருக்கும். இவைஆன்மக்குறியைப்பாவிக்கின்றமையால்பாவங்களாகும். பாவம் - குணம்.

**தன்மாதியிலுண்டானபிரத்தியயங்கள்:-**

தருமம்முதலியனமிகுந்துதூலரூபமாய்அநுபவிக்கப்படும்நிலையைஅடையும்பொழுதுபிரத்தியயங்களாகும். ஆன்மாவுக்குஅறிவைவருவிக்கின்றமையால்பிரத்தியயங்கள்எனப்படும்.

**பிரத்தியயம்** - அறிவு, அதுசித்திதுஷ்டிஅசத்திவிபர்யயம்எனநான்குவகை. அவற்றுள்சித்தியாவதுபுருடன்பிரகிருதிமுதலியவைகளைஅறிவிக்கும்புத்தியாகும். துஷ்டியாவதுதான்பயன்பெறாதிருக்கையிலும்பெற்றதாகஆன்மாவிற்குத்தோன்றும்புத்தியாகும். அசத்தியாவதுஅகக்கரணபுறக்கரணங்கள்இல்லாவிடில்விஷயமிருந்தும்அறியஇயலாதபுத்தி. விபர்யயமாவதுஅற்பமாகத்தோன்றும்பொதுமைகொண்டுஒன்றைவேறொன்றாகஅறியும்விபரீதபுத்தி.சித்தி-அறிவு, துஷ்டி-மகிழ்வு, அசத்தி - வலியின்மை, விபர்யயம்-விபரீதம், சித்திஎட்டு, துஷ்டிஒன்பது, அசத்திஇருபத்தெட்டு, விபர்யயம்ஐந்து, ஆகப்பிரத்தியயம்ஐம்பது. இந்தஐம்பதையுமே 'பஞ்சாசற்பாவகம்" என்றார். பஞ்சாசத்-ஐம்பது.

**பொழிப்பு:-**மூக்குணங்களுட்சாத்துவிகமானதுபிரகாசம்இலகுதைஎன்னும்இரண்டுகுணங்களையும், இராசதமானதுவியாவிருதிஅடர்ச்சிஎன்னும்இரண்டுகுணங்களையும், தாமதமானதுகௌரவம்அநியயம்என்னும்இரண்டுகுணங்களையும்உடையனவாம். இந்தமூவகைஒன்பதுகுணங்களும்உயிர்ஒவ்வொன்றிலும்பொருந்தியிருக்கும். இக்குணங்களின்தொழில்:- தமோகுணம்விடயபோகங்களில்இச்சையைஉண்டாக்கும். இராசதகுணம்விடயபோகங்களைப்பற்றச்செய்யும். சாத்துவிககுணம்அப்போகங்களைஅறியச்செய்யும்.

புத்திதத்துவமானதுமுக்குணசொரூபமாயிருந்துஇந்திரியங்கள்வாயிலாகவரும்விடயங்களைப்பகுத்து ணர்ந்துநிச்சயிக்கும்அன்றியும், ஐம்பதுபாவங்களையும்செய்துநிற்கும்.

## அகங்காரம்மனம்சித்தம்என்னும்தத்துவங்களின்தொழில்

43. ஆனதநுவதனிலுறுமநிலனையுமியக்கி
யாங்காரநீங்காதவகந்தைக்குவித்தா
யானலதுபிறரொருவரெனையொப்பார்புவியி
லில்லையெனுமியல்பினதாயிந்திரியம்புலன்கள்
தாநுகருமளவிலதின்முந்தியுறுமிச்சை
தானுருவாய்ச்சங்கற்பசதாகதியுந்தந்து

மானதமானதுநிற்குஞ்சிந்தைநினைவையம்

வந்துதருமனமொழியவகுப்பொணாதே.

**பதவுரை:-**ஆங்காரம்- அகங்காரதத்துவமானது,ஆனதநுஅதனில்உறும்அநிலனையும்இயக்கி-வினைக்கீடாகஉண்டானஉடம்பிலேபொருந்தியிருக்கும்பிராணாதிவாயுக்களையும்இயங்கச்செய்து, நீங்காதஅகந்தைக்குவித்தாய்-விட்டுநீங்காதநான்என்னும்செருக்குக்குமூலமாய். எனைஒப்பார்புவியில்யான்அலதுபிறர்ஒருவர்இல்லைஎனும்இயல்பினதாய்-என்னைஒப்பார்பூமியின்கண்யானேயல்லதுபிறர்ஒருவருமில்லைஎன்னும்இயல்பினையுடையதாய், இந்திரியம்புலன்கள்தாம்நுகரும்அளவில்-இந்திரியங்கள்விடயங்களைநுகரும்பொழுது, அதில்முந்திஉறும் -அவ்விடயங்களிலேமுற்பட்டுப்பொருந்தும், மானதமானது - மனதானது, இச்சைதான்உருவாய்-இச்சைதானேதனக்குவடிவாய்,சங்கற்பசதாகதியும்தந்துநிற்கும் -ஒன்றைச்சங்கற்பித்தலையும்ஓயாதசலனத்தையும்செய்யும், சிந்தைநினைவு -சித்தம்நினைவுமாத்திரமாய்நிற்கும், ஐயம்வந்துதருமனம்ஒழியவகுப்பஒணாதே -சந்தேகத்தைஉண்டாக்குகின்றமனத்தையொழியஅதனைவேறாகவகுத்துக்கூறவொண்ணாது.

**குறிப்பு:-** 1. ஆனதநுவதனிலுறும்அநிலனையுமியக்கி:-அகங்காரதத்துவம்சரீரத்துக்குள்ளிருக்கும்பிராணாகிபஞ்சவாயுக்களையும்தத்தம்தொழில்களிற்பிரவர்த்திக்கச் செய்யும். வாயுஒன்றாயிருந்தாலும்வியாபாரபேதத்தால்ஐந்தெனப்படும். இருதயதானத்திலிருப்பதுபிராணவாயு,குதத்தானத்திலிருப்பதுஅபானவாயு,நாபித்தானத்திலிருப்பதுசமானவாயு,சரீரமுழுவதுமிருப்பதுவியானவாயு,கண்டத்தானத்திலிருப்பதுஉதானவாயு, பிராணவாயுசரீரத்துக்குள்ளிருந்துஇடைகலைபிங்கலைநாடிகள்வழியாகக்கபாலத்தளவுஞ்சென்றுநாசியிற்பன்னிரண்டங்குலம்புறப்பட்டுநாலங்குலம்வெளியேபோய்எட்டங்குலம்உள்ளேஅடங்கும்; விடயங்களைவிசாரிக்கும்; புத்தியைப்பிரேரிக்கும்; பலத்தைச்செய்யும்: இவைபிராணவாயுவின்தொழில்களாம். மலசலங்களைக்கீழேதள்ளுதல்அபானவாயுவின்தொழிலாம். அன்னபானாதிகளின்சாரத்தைச்சரீரத்தில்எங்கும்சமமாகநிரப்புதல்சமானவாயுவின்தொழிலாம். அன்னபானாதிகளைஏற்றமும்குறைவுமாகச்செய்துவியாதியைஉண்டாக்குதல், தேகத்தைஇளைக்கச்செய்தல்வியானவாயுவின்தொழிலாம். புருடனுக்குப்பேச்சுஉண்டாகும்படிதேகத்திற்குள்ளிருக்கும்ஓசையைவாக்கிந்திரியத்தோடுகூட்டிஅக்கரரூபமாகச்செய்தல்உதானவாயுவின்தொழிலாம். இங்ஙனம்பஞ்சவாயுக்களும்தத்தம்தொழில்களைச்செய்யும்படிஇயக்குவதுஅகங்காரதத்துவமாம். பஞ்சவாயுக்களையும்இயக்குந்தொழில்சீவனம்என்றுசொல்லப்படும்.

2.நீங்காத அகந்தைக்குவித்தாய்...... இயல்பினதாய்- அகங்காரம்இப்பூமியில்எனக்குச்சமானமானவர்ஒருவருமில்லைஎனஅகந்தைப்படுவதற்குக்காரணமாயிருக்கும். அவ்வகந்தைஆன்மாவோடுவேற்றுமையின்றிமுத்திவரையும்நிற்றலால், "நீங்காதவகந்தை" என்றார். இந்திரியங்கள்வாயிலாகவந்தவிடயங்களிலொன்றைப்புத்திநிச்சயிக்குமிடத்து, அகங்காரம்நான்அறிந்தேனென்றுஅவ்விடயத்தைத்தொடர்ந்துஅபிமானிக்கும். இந்தஅபிமானத்தொழில்கர்வம்என்றுசொல்லப்படும். இங்ஙனம்அகங்காரத்தின்தொழில்கள்சீவனம்கர்வம்எனஇரண்டாம்.

3.இச்சைதானுருவாய்ச்சங்கற்பசதாகதியுந்தந்துமானதமானதுநிற்கும்:- மனம்இச்சைவடிவாயுள்ளது. அது, புத்திஅகங்காரதத்துவங்களைப்போலன்றிஆன்மஞானத்துக்கும்விடயஞானத்துக்கும்ஏதுவாயிருக்கும். புத்தியின்தொழில்அறிவாயும், அகங்காரத்தின்தொழில்செய்கையாயுமிருக்கும். மனத்தின்தொழில்உள்ளேசங்கற்பஞ்செய்தலும்புறத்தேஇந்திரியங்களைஅதிட்டித்தலுமாம். சங்கற்பம்- நினைவு; விருப்பம். இந்திரியங்களைஅதிட்டித்தல் - ஞானேந்திரியகன்மேந்திரியங்கள்பத்துக்கும்சத்தாதிவிடயங்களிலேபிரவிருத்தியைச்செய்தல்.

அன்றியும், இந்தமனம்அதிகவேகமுள்ளதாயும், அந்தந்தஇந்திரியங்களுக்குவிடயங்களில்ஊக்கத்தைக்கொடுப்பதாயுமிருக்கும். மதுரமும்வாசனையும்அழகும்மென்மையும்ஓசையுமுள்ளஒருவஸ்துவைப்புசிக்கும்பொழுதுஅந்தந்தவிடயங்களைக்கிரகிக்கும்இந்திரியங்களோடுசூக்குமகதியினால்ஒரேவேளையில்ஐம்புலனறிவையும்உண்டாக்குதலால், "சதாகதியுந்தந்து" என்றார்.இந்திரியங்களும்விடயங்களும்சேர்ந்திருந்தாலும்மனம்சேராவிடின்வெளியிந்திரியங்களுக்குவிடயப்பிரவிருத்திஇல்லையாதலால், விடயங்களில்ஊக்கத்தைஇந்திரியங்களுக்குமனமேகொடுக்கும்.

4. சிந்தைநினைவுஐயம்வந்துதருமனம்:- மனம்சித்தரூபமாய்நின்றுஎதிர்ப்பட்டஒருபொருளின்உண்மைஅறியாமற்பிண்டமாகஅறிந்துசிந்திக்கும். அந்தமனமேஅவ்வாறுசிந்தித்தபின்அப்பொருளின்கண்அதுவோஇதுவோஎன்றுசந்தேகித்துநிற்கும். மனத்தின்சந்தேகநிலையேசித்தமாம். சித்தம்என்றுஒருதனித்தத்துவமில்லை.

பொழிப்பு:-

அகங்காரமானதுபிராணாதிபஞ்சவாயுக்களையும்இயக்கிஎனக்குச்சமமானவர்ஒருவருமில்லையெனஅகந்தைகொள்ளற்குக்காரணமாயிருக்கும். இந்திரியங்கள்வாயிலாகவந்தவிடயங்களையான்என்றும்எனதென்றும்அபிமானிக்கும்.

மனமானதுஇச்சையேதனக்குவடிவாய்ஒன்றைச்சங்கற்பம்பண்ணுவதும்எப்பொழுதும்சலனப்படுவதுமாயிருக்கும்.

சித்தமானதுமனம்நினைந்தபொருளிலேதுணிவுபிறவாமல்இ ்துயாதோஎனச்சிந்தித்துக்கொண்டிருக்கும். இச்சித்தமானதுமனத்தின்தொழிலாகியஐயநிலையேயன்றிஒருதனித்தத்துவமன்று.

## ஞானேந்திரியகன்மேந்திரியங்களின்தொழில்

44. சொன்னமுறைசெவிதுவக்குநோக்குநாக்குத்
துண்டமிவையைந்திற்குந்தொகுவிடயமாக
மன்னியசத்தப்பரிசரூபரசகந்த
மருவியிடுமிவையடைவேவாக்குப்பாதம்
பின்னர்வருபாணிமிகுபாயுவினோடுபத்தம்
பேசலுறுமைந்திற்கும்பிறங்கொலிகொள்வசனம்
உன்னரியகமனதானவிசர்க்காநந்த
முற்றதொழில்பெற்றிடுவதுண்மையாமே.

**பதவுரை:-**சொன்னமுறை - முன்னேசொன்னபடி,செவிதுவக்குநோக்குநாக்குதுண்டம்இவைஐந்திற்கும்தொகுவிடயமாக - செவிமெய்கண்நாநாசிஎன்னும்இந்தஞானேந்திரியங்கள்ஐந்துக்கும்நெருங்கியவிடயங்களாக, மன்னியசத்தப்பரிசரூபரசகந்தம்இவைஅடைவேமருவியிடும் - நிலைபெற்றசத்தம்பரிசம்உருவம்இரதம்கந்தம்என்னும்இவைஐந்தும்முறையேபொருந்தும், வாக்குப்பாதம்பின்னர்வருபாணிமிகுபாயுவினோடுஉபத்தம்பேசல்உறும்ஐந்திற்கும் - வாக்குப்பாதம்பின்வருகின்றபாணிமிக்கபாயுஉபத்தம்என்றுசொல்லப்படுகின்றகன்மேந்திரியங்கள்ஐந்துக்கும், பிறங்குஒலிகொள்வசனம்உன்னஅரியகமனதானவிசர்க்கஆநந்தம் (அடைவே) உற்றதொழில் - விளங்குகின்றஓசைபொருந்தியவசனம்நினைத்தற்கரியகமனம்தானம்விசர்க்தம்ஆநந்தம்என்னும்இவைஐந்தும்முறையேபொருந்தியதொழிலாகும், பெற்றிடுவதுஉண்மையாம்- இத்தொழில்களைஅவைபெற்றிருப்பதுஉண்மையாகும்.

**குறிப்பு:-** 1. சொன்னமுறை:- தைசதவகங்காரத்திலேசோத்திராதிஐந்தும்தோன்றுமென்றுசொன்னபடி.(பார். செ. 26.)

2. செவிதுவக்குநோக்குநாக்குத்துண்டம்:- செவிமுதலியஐந்தும்ஆன்மாவின்ஞானசத்திவியாபாரத்துக்குத்துணைக்கருவிகளாயிருத்தலால்அவைஞானே

ந்திரியங்களென்றும்,வாக்காதிகள்ஐந்தும்ஆன்மாவின்கிரியாசத்திவியாபாரத்துக்குத்துணைக்கருவிகளாயிருத்தலால்அவைகன்மேந்திரியங்களென்றும்சொல்லப்படும்.

ஞானேந்திரியங்கள்கன்மேந்திரியங்களுக்குத்துணையாயிருக்கும். கன்மேந்திரியங்கள்ஞானேந்திரியங்களுக்குத்துணையாகா.

3. தொகுவிடயமாகமன்னியசத்தப்பரிசரூபரசகந்தமருவியிடுமிவையடைவே: செவிக்குவிடயம்சத்தம் (ஓசை); துவக்குக்குவிடயம்பரிசம் (குளிர்ச்சிமுதலானவை); கண்ணுக்குவிடயம்உருவம் (வெண்மைமுதலானவை); நாவிற்குவிடயம்இரதம் (மதுரம்முதலானவை;) நாசிக்குவிடயம்கந்தம் (வாசனை).

சத்தம்முதலியஐந்தும்விடயதன்மாத்திரைகள்எனவும், காரியதன்மாத்திரைகள்எனவும், பூதகுணங்கள்எனவும்சொல்லப்படும்.

காரணதன்மாத்திரைகள்ஐந்தும்பஞ்சபூதங்களுக்குக்காரணமாயும்இந்திரியங்கள்விடயங்களைவிடயிக்குமாறுதுணையாயும்நிற்பதன்றிஅவற்றிற்குவேறுதொழிலின்மையால், அவற்றைஇங்கேகூறாதொழிந்தனர்.இச்சத்தாதிவிடயங்களைஅறிவதேஞானேந்திரியங்களின்தொழிலாம்.

**ஞானேந்திரியங்கள்தொழிற்படும்முறை**

- **சுரோத்திரம்**ஆகாயம்பற்றுக்கோடாகச்செவிகளைப்பொருந்திநின்றுசத்தத்தைஅறியும்.
- **தொக்கு**வாயுபற்றுக்கோடாகச்சரீரத்தைப்பொருந்திநின்றுபரிசத்தைஅறியும்.
- **சட்சு**தேயுபற்றுக்கோடாகக்கண்களைப்பொருந்திநின்றுஉருவத்தைக்காணும்.
- **சிங்நுவை**அப்புபற்றுக்கோடாகநாவைப்பொருந்திநின்றுஇரதத்தைஅறியும்.
- **ஆக்கிராணம்**பிருதிவிபற்றுக்கோடாகமூக்கைப்பொருந்திநின்றுகந்தத்தைஅறியும். (பார்செ. 45. குறி. 2)

4. வாக்குப்பாதம்பின்னர்வருபாணி:- வாக்காதிகளின்தொழில்முறையேவசனம்முதலியஐந்துமாம். வசனம் (பேசுதல்) வாக்கின்தொழில்; கமனம்(நடை) பாதத்தின்தொழில்; தானம் (கொடை) பாணியின்தொழில்; விசர்க்கம் (மலம்கழித்தல்) பாயுவின்தொழில்: ஆநந்தம் (சந்தோஷித்தல்) உபத்தத்தின்தொழில்.

**வாக்காதிகள்தொழிற்படும்முறை:-**

- **வாக்கு**,ஆகாயத்தைப்பற்றுக்கோடாகக்கொண்டுநின்றுவசனிக்கும்.
- **பாதம்**,வாயுவைப்பற்றுக்கோடாகக்கொண்டுநின்றுகமனத்தைப் பண்ணும்.

- **பாணி**,தேயுவைப்பற்றுக்கோடாகக்கொண்டுநின்றுஇடுதல்ஏற்றலைச்செய்யும்.
- **பாயு**,அப்புவைப்பற்றிநின்றுமலத்தைக்கழிக்கும்.
- **உபத்தம்**, பிருதிவியைப்பற்றிநின்றுஆநந்தத்தைப்பண்ணும்.

**பொழிப்பு:**

சுரோத்திரம்தொக்குசட்சுசிங்நுவைஆக்கிராணம்என்னும்ஐந்துஞானேந்திரியங்களும்முறையேசத்தம்பரிசம்உருவம்இரதம்கந்தம்என்னும்விடயங்கள்ஐந்தையும்பொருந்திஅறியும்.

வாக்குபாதம்பாணிபாயுஉபந்தம்என்னும்ஐந்துகன்மேந்திரியங்களும்முறையேவசனம்கமனம்தானம்விசர்க்கம்ஆநந்தம்என்னும்ஐந்தொழில்களையும்செய்யும்.

## பஞ்சபூதங்களின்தொழில்

45. முந்தியவைம்பூதங்கள்வானாதியாக
முயங்கியநற்செவிநாசிகண்ணாமெய்ம்முறையால்
இந்தவயினின்றுவருமைம்புலனுமுயிர்தா
மெய்தும்வகைதம்முருவினிலங்கியிடும்புறத்து
வந்தடையவிடங்கொடுக்குநிரந்தரமாய்வானம்
வாயுமிகச்சலித்தெவையுந்திரட்டுந்தீவெம்மை
தந்தவைசுட்டொன்றுவிக்குநீர்குளிர்ந்துபதமே
தருமுரத்துத்தரிக்குமுந்துதரணிதானே

**பதவுரை**:-முந்தியஐம்பூதங்கள் - முன்சொல்லப்பட்டஐந்துபூதங்களும், வான்ஆதியாக -ஆகாயம்முதலாக, முயங்கியநல்செவிமெய்கண்நாநாசிஇந்தவயின்முறையால்நின்று - சரீரத்திற்பொருந்தியிருக்கும்நல்லசெவிமெய்கண்நாநாசிஎன்னும்இந்தஇடங்களில்நின்று, வரும்ஐம்புலனும்உயிர்தாம்எய்தும்வகை - இந்திரியங்களிடமாகவருகின்றசத்தாதிவிடயங்கள்ஐந்தையும்உயிர்அறியும்படிக்கு, தம்உருவின்இலங்கியிடும் - தத்தம்சொரூபத்தோடு (அகத்தே) விளங்காநிற்கும், வானம்புறத்துவந்துஅடையநிரந்தரமாய்இடம்கொடுக்கும்,ஆகாயமானதுபுறத்திலேமற்றைப்பூதங்கள்எல்லாம் தன்னிடத்திலேவந்தடையவெளியாய்இடங்கொடுத்துநிற்கும், வாயுமிகச்சலித்துஎவையும்திரட்டும் - வாயுவானதுமிகவுஞ்சலனமுடையதாய்எல்லாவற்றையும்திரட்டும்,தீவெம்மைதந்துஅவைவெப்பத்தைசுட்டுஒன்றுவிக்கும்- தேயுவானதுவெப்பத்தைக்கொடுத்துஅவற்றைச்சுட்டுஒன்றுவிக்கும். நீர்குளிர்ந்துபதமேதரும் -

அப்புவானதுகுளிர்ந்துபதஞ்செய்துநிற்கும். முந்துதரணிதான்உரத்துத்தரிக்கும் - முந்தியபிருதிவியானதுகடினமாய்எவற்றையுந்தாங்கிநிற்கும்.

**குறிப்பு:** 1. முந்தியஐம்பூதங்கள்வானாதியாக:- பஞ்சபூதங்கள்அகப்பூதம்அகப்புறப்பூதம்புறப்பூதம்எனமூவகைப்படும். இந்திரியங்களுக்குப்பற்றுக்கோடாயுள்ளன.அகப்பூதங்கள்சரீரமாயிருப்பனஅகப்புறப்பூதங்கள், சரீரமாவதுஆன்மாவுக்குப்போகம்தோன்றுதற்குக்கருவியாயிருப்பது. போகமாவதுசுகதுக்கம்என்னும்இரண்டனுள்ஒன்றுபுலப்படுதல். விடயமாயிருப்பனபுறப்பூதங்கள். அவைபுறத்தேகாணப்படும்மண்நீர்முதலியஐந்துமாம்.

2. **ஐம்புலனுமுயிர்தாமெய்தும்வகை:-**

**சத்தாதிவிடயங்களைஉயிர்அறியும்வகை:-**

- ஆகாயம்சுரோத்திரம்என்னும்ஞானேந்திரியத்திற்குப்பற்றுக்கோடாகச்செவிகளில்நின்றுஆன்மாசத்தத்தைஅறியும்படிசெய்யும்.
- **வாயு**தொக்குஎன்னும்ஞானேந்திரியத்திற்குப்பற்றுக்கோடாகச்சரீரத்தில்நின்றுபரிசத்தைஆன்மா அறியும்படிசெய்யும்.
- **தேயு**சட்சுஎன்னும்ஞானேந்திரியத்திற்குப்பற்றுக்கோடாகக்கண்களில்நின்றுஉருவத்தைஆன்மா அறியும்படிசெய்யும்.
- **அப்பு**சிங்ஙுவைஎன்னும்ஞானேந்திரியத்திற்குப்பற்றுக்கோடாகநாவில்நின்றுஇரதத்தைஆன்மாஅறியும்படிசெய்யும்.
- **பிருதிவி**ஆக்கிராணம்என்னும்ஞானேந்திரியத்திற்குப்பற்றுக்கோடாகநாசியில்நின்றுகந்தத்தைஆன்மாஅறியும்படிசெய்யும்.

இங்ஙனம்இந்திரியங்கள்வாயிலாகவந்தவிடயங்களைமனம்முதலியஅந்தக்கரணங்கள்பற்றிஅறிந்துஆன்மாவுக்குவிடயமாம்படிசெய்யும்.

3. தம்முருவினிலங்கியிடும்: - வானாதிஅகப்பூதங்கள்ஐந்தும்சத்தம்முதலியதன்மாத்திரைவடிவாய்ஞானேந்திரியங்களுக்குப்பற்றுக்கோடாக இருக்கும்என்பது. அ:்தாவது, ஆகாயம்சத்ததன்மாத்திரைவடிவாய்ச்சுரோத்திரம்என்னும்ஞானேந்திரியத்திற்குப்பற்றுக்கோடாகஇருக்கும். வாயுபரிசதன்மாத்திரைவடிவாய்தொக்குஎன்னும்ஞானேந்திரியத்திற்குப்பற்றுக்கோடாகஇருக்கும். மற்றவைகளும்இப்படியே.

புறத்து வந்தடைய. . . . . . . .முந்துதரணிதான்:- ஆகாயம்வெளியாகியகுணத்தையும்இடங்கொடுத்தலாகியதொழிலையுமுடையதாம். வாயுவானதுசலித்தலாகியகுணத்தையும்பரந்தவற்றைத்திரட்டுதலாகியதொழிலையுமுடையதாம். அக்கினியானதுசுடுதலாகியகுணத்தையும்எவற்றையும்ஒன்றுவிக்கும்தொழிலையுமுடையதாம். நீரானதுகுளிர்தலாகியகுணத்தையும்பதஞ்செய்தலாகியதொழிலையுமுடையதாம். மண்ணானதுவலிமைதருதற்கேதுவாகியகடினமாதலாகியகுணத்தையும்தரித்திடுதலாகியதொழிலையுமுடையதாம். இவைபுறப்பூதங்களின்குணமும்தொழிலுமாம்.

**பொழிப்பு:**ஆகாயம்முதலியஅகப்பூதங்கள்செவிமெய்கண்நாநாசிஎன்னும்இந்தஇடங்களில்ஞானேந்திரியங்களுக்குப்பற்றுக்கோடாகநின்றுசத்தம்முதலியவிடயங்கள்ஐந்தையும்ஆன்மாஅறியும்படிசெய்யும்.

புறப்பூதங்களுள், ஆகாயமானதுவெளியாய்மற்றைப்பூதங்கள்நான்கும்தன்னிடத்துவந்தடையஇடங்கொடுத்துநிற்கும், வாயுசலித்துத்திரட்டும். தேயுசுட்டுஒன்றுவிக்கும். அப்புகுளிர்ந்துபதஞ்செய்யும்.பிருதிவிஉரத்துத்தரிக்கும். இவைமுறையேபுறப்பூதங்களின்குணமும்தொழிலுமாம்.

## ஆன்மாதத்துவங்களோடுகூடிப்பிறந்திருந்துவினைப்பயனைஅநுபவிக்கும்வகை

46. இந்நிலையிலைந்துசுத்தமேழ்சுத்தாசுத்த
மெண்மூன்றுமசுத்தமெனுமிவைமுப்பத்தாறா
மன்னியதத்துவங்களிடைமயங்கிநெடுந்துயர்தா
மருவுமுருநிலையழியவரும்பொழுதுவரியார்
பன்னகமண்டசங்கனவுபடர்வகையேமுன்னம்
பசுரவருங்கலாதிநிலைபரவியசூக்குமமாந்
தன்னுருவினணைந்துபயனருந்தியரனருளாற்
றரையினிடைவருமென்றுசாற்றுநூலே.

**பதவுரை:-**இந்நிலையில் -இங்ஙனம்சொல்லிவந்தமுறைமையிலே, ஐந்துசுத்தம் - சுத்தவித்தைமுதலியஐந்தும்சுத்ததத்துவம், ஏழ்சுத்தாசுத்தம் - கலைமுதலியஏழும்சுத்தாசுத்ததத்துவம், எண்மூன்றுஅசுத்தம்-பிருதிவிமுதலியஇருபத்துநான்கும்அசுத்ததத்துவம், எனும்இவைமுப்பத்தாறாம்-என்றுசொல்லப்படும்இவைகளின்தொகைமுப்பத்தாறாம், மன்னியதத்துவங்களிடைமயங்கி - இங்ஙனம்பொருந்தியதத்துவங்களின்வழியேஆன்மாமயங்கி, நெடும்துயர்தாம்மருவும் - பெரியதுக்கத்தைஅநுபவிக்கும்-உருநிலைஅழியவரும்பொழுது- சரீரமானதுநிலைகுலையவருங்காலம்,

வரிஆர்பன்னகம்அண்டசம்கனவுபடர்வகையே -
வரிபொருந்தியபாம்புமுன்னைத்தோலைவிட்டுப்போதல்போலவும்முட்டையிற்செனித்தவைஅதனைவிட்டுப் போதல்போலவும்நனவின்கட்கண்டவற்றைக்கனாக்காணுங்காலத்துமறந்துஅறிவுவேறுபட்டாற்போலவும், முன்னம்பகரவரும்கலாதிநிலைபரவியசூக்குமமாம்தன்உருவின்அணைந்து- முன்னேசொல்லப்பட்டுவரும்கலையாதிதத்துவங்கள்கூடியசூக்குமமாகியதனக்குரியபுரியட்டகசரீரத்தோடுசுவர்க்கநரகங்களைஅடைந்துபூதசாரபூதவுடம்புகளைப்பொருந்தி, பயன்அருந்தி - இன்பத்துன்பங்களைஅநுபவித்து, அரன்அருளால்தரையினிடைவரும்என்றுசாற்றும்நூல் - சிவாநுக்கிரகத்தாலேபூமியின்கண்ணேமீளவும்வந்துபிறக்குமென்றுஆகமங்கள்சொல்லும்.

**குறிப்பு:-** 1. ஐந்துசுத்தம்:- சுத்தவித்தைமுதல்சிவதத்துவமீறாகவுள்ளஐந்தும்அங்குள்ளஆன்மாக்களுக்குச்சர்வஞ்ஞத்துவசர்வகர்த்திருத்துவங்களைஉண்டாக்குகின்றமையால்சுத்ததத்துவமெனப்படும். அசுத்ததத்துவங்களைப்பிரேரிக்கையால், பிரேரககாண்டம்எனப்படும். பிரேரகம் -ஏவுதல், செலுத்துதல். காண்டம்-கொத்து, கூட்டம். பிரேரித்தல்- சிவசத்திசுத்ததத்துவங்கள்வாயிலாகஅசுத்ததத்துவங்களைக்காரியப்படுத்துதல். இதுசுத்தாத்துவாஎன்றும்சொல்லப்படும்.

2. ஏழ்சுத்தாசுத்தம்:- சுத்தமாயைக்குக்கீழுள்ளமாயைமுதலியஏழுதத்துவங்களும்சுத்தாசுத்ததத்துவமென்றும், போககாண்டமென்றும், போசயித்திருகாண்டமென்றும், வித்தியாதத்துவமென்றும், மிச்சிரம்என்றும்மிச்சிராத்துவாஎன்றும்சொல்லப்படும்.

இவைஆன்மாக்களுக்குச்சிற்றறிவுசிறுதொழில்களை (கிஞ்சிஞ்ஞத்துவம், கிஞ்சித்கர்த்திருத்துவம்) விளக்குதற்குச்சாதனமாகையால்சுத்தமாயும், சூக்குமதேகத்தின்வழியாகக்குணரூபமாகியசுகதுக்கமோகங்களைஉண்டாக்குவதற்குச்சாதனமாகையால்அசுத்தமாயுமிருப்பதால்,சுத்தாசுத்தம்எனப்படும்சுத்ததத்துவங்களாலேபிரேரிக்கப்படுகையாலும்அசுத்தமாயையில் தோன்றுகையாலும்சுத்தாசுத்தம்எனப்படும்என்றும்சொல்லுவர்.

ஆன்மாக்களுக்குப்போகத்தைக்கொடுத்துப்புசிப்பிக்கையாற்போககாண்டம்எனப்படும், ஆன்மாக்களுக்குச்சகாயமாய்நின்றுபோகத்தைஉண்டாக்குவதாற்போசயித்திருகாண்டம்எனப்படும்.(போசயித்திரு-புசிப்பிப்பது)ஆன்மாக்களுக்குச்சிற்றறிவைஎழுப்பும்தத்துவங்களாதலால், வித்தியாதத்துவம்எனப்படும். வித்தை -அறிவு. மிச்சிரம் - கலப்பு, சுத்தமும்அசுத்தமும்கலந்தது.

3. எண்மூன்றுஅசுத்தம்: - பிரகிருதிக்குக்கீழாகியகுணதத்துவம்முதலியஇருபத்துநான்குதத்துவங்களும்அசுத்தமென்றும், போக்கியகாண்டமென்றும், அசுத்தாத்துவாஎன்றும், ஆன்மதத்துவம்என்றும்சொல்லப்படும்.

இவைஆன்மாக்களுக்குச்சாத்துவிகம்முதலியகுணங்களினாலேசுகதுக்கமோகங்களைஉண்டாக்குவதால்அசுத்தம்எனப்படும். புசிக்கப்படும்வஸ்துக்களாயிருத்தலாற்போக்கியகாண்டம்எனப்படும். போக்கியம்-புசிக்கப்படும்வஸ்து. ஆன்மாவோடுசம்பந்தப்பட்டிருத்தலால்ஆன்மதத்துவம்எனப்படும்.

4. இவைமுப்பத்தாறம்:- இந்தமுப்பத்தாறுதத்துவங்களுள்ளேசுத்ததத்துவம்ஐந்தும்சடமாயினும், சிற்சத்திக்குச்சுதந்திரவடிவாதலிற்சைதன்னியம்எனப்படும். சைதன்னியம்- அறிவுடைமை. புருடதத்துவம்சித்துடனேகூடிஅறிந்தும், அசித்துடனேகூடிஅறியாமலும்சார்ந்ததன்வண்ணமாய்நிற்றலாற்சித்தசித்துஎனப்படும். ஏனையமுப்பதும்அசித்துஎனப்படும்.

5.வரியார்பன்னகமண்டசங்கனவுபடர்வகை:-பன்னகஉவமைஉடல்வேறுபாட்டுக்கும், அண்டசஉவமைசுவர்க்கம்முதலியஇடவேறுபாட்டுக்கும். கனாஉவமைசரீரவேறுபாட்டால்அறிவுவேறுபடுதற்கும்கொள்ளப்பட்டன. பாம்புமுன்னையதோலைவிட்டுப்புதிதாகஒருதோலினைப்பற்றிப்போவதுபோலஉயிர்தூலசரீரத்தைவிட்டுச்சூக்குமசரீரத்தைப்பற்றிச்செல்லும், அவ்வாறுசென்றுநல்வினைதீவினைகளுக்கேற்றபடிசுவர்க்கநரகங்களில்அவற்றின்பயனைஅனுபவிக்கும்.முட்டையாகியமுன்பயின்றஇடத்தினைவிட்டுமரக்கொம்புகளில்வசிக்கும்பறவைகள்போல, உயிரும்தூலவுடம்பாகியமுன்பயின்றஇடத்தைவிட்டுச்சுவர்க்கநரகங்களிற்பூதசாரபூதவுடம்புகளுடன்வசிக்கும். நனவிலேதெரிந்ததுகனவிலேதெரியாததுபோல, தூலதேகத்தோடுசெய்தகாரியங்களைச்சூக்குமதேகத்தில்உயிர்கள்அறியாதிருக்கும்.

6. கலாதிநிலைபரவியசூக்குமமாந்தன்னுருவினணைந்து:- கலையாதிதத்துவங்கள்முப்பதுங்கூடியதுசூக்குமதேகம். அவைபூதம்ஐந்து, தன்மாத்திரைஐந்து, ஞானேந்திரியங்கள்ஐந்து, கன்மேந்திரியங்கள்ஐந்து, அந்தக்கரணம்மூன்று, குணம்ஒன்று, பிரகிருதிஒன்று, கலையாதிகள்ஐந்து. இவைஎட்டுவர்க்கமும்சேர்ந்ததுபுரியட்டகம்எனப்பெயர்பெறும். இவைஎட்டுவர்க்கமும், தன்மாத்திரைஐந்தும்மனம்புத்திஅகங்காரம்மூன்றுங்கூடியஎட்டினுள்அடங்குமாதலாற், பின்னையஎட்டும்புரியட்டகம்என்றும்சொல்லப்படும். (சி.சி.2.36, 64)

இச்சூக்குமதேகம்மோட்சபரியந்தம்ஆன்மாவைவிட்டுநீங்காதிருத்தலின், "சூக்குமமாத்தன்னுருவில்" என்றார்.

7. பயனருந்தியரனருளாற்றரையினிடைவரும்:-உயிர்தூலதேகத்தைவிட்டவுடன்சூக்குமதேகத்தோடுசென்று, வேறொருதூலதேகத்தைஎடுக்கும். அதுபுண்ணியபாவங்களுக்குத்தக்கபடிசுவர்க்கம்நரகம்பூமிஎன்னும்இடங்களிலுண்டாம்.

அதனால்தூலசரீரம்பூதபரிணாமம், பூதசாரம், பூதம்எனமூவகைப்படும். பூமியில்வருவதுபூதபரிணாமம், நரகத்தில்வருவதுபூதம், சுவர்க்கத்தில்வருவதுபூதசாரம், இந்தமூன்றும்பஞ்சபூதமயமானஉடம்புகளேயாம்.

உயிர்பூமியிலிருந்துநல்வினைதீவினைகளைச்செய்யும். அவ்விருவினையுள், புண்ணியகன்மம்பரிபாகமாயின்,அவ்வினையின்பயனைச்சுவர்க்கத்திற்சென்றுஅநுபவிக்கும். பாவகன்மம்பரிபாகமாயின், அவ்வினையின்பயனைநரகத்திற்சென்றுஅநுபவிக்கும். புண்ணியபாவமிரண்டும்ஏற்றக்குறைவாகப்பரிபாகமாயின், இவைஇரண்டின்பயனையும்பூமியிலேஅநுபவிக்கும்படிதூலதேகத்தைஎடுக்கும்.

பொழிப்பு:சுத்ததத்துவம்ஐந்து. சுத்தாசுத்ததத்துவம்ஏழு. அசுத்ததத்துவம்இருபத்துநான்கு. ஆகத்தத்துவம்முப்பத்தாறாம். ஆன்மாஇத்தத்துவங்களோடுகூடிமயங்கிப்பெருந்துன்பத்தைஅநுபவிக்கும். தூலசரீரம்அழியுங்காலத்துக்கலைமுதலியதத்துவங்களாலாகியசூக்கும்சரீரத்தோடுசென்றுசுவர்க்கம்நரகம்முதலியஇடங்களிற்பூதசாரம்பூதம்முதலியஉடம்புகளைஎடுத்து, நல்வினைதீவினைப்பயன்களைஅநுபவித்து, மறுபடியும்இப்பூமியில்வந்துபூதபரிணாமமாகியதூலவுடம்பைஎடுக்கும்.

## யோனிபேதம்

47. தோற்றியிடுமண்டசங்கள்சுவேதசங்கள்பாரிற்
றுதைந்துவருமுற்பிச்சஞ்சராயுசங்கணான்கின்
ஊற்றமிகுதாவரங்கள்பத்தொன்பதென்று
மூர்வபதினைந்தமரர்பதினொன்றேடுலவா
மாற்றருநீகுறைவனநற்பறவைகாணாற்காலி
மன்னியிடும்பப்பத்துமாநுடரொன்பதுமா
வேற்றியொருதொகையாகவியம்புவர்கவியோனி
யெண்பத்துநான்குநூறாயிரமென்றெடுத்தே.

**பதவுரை:** -அண்டசங்கள்சுவேதசங்கள்பாரில்துதைந்துவரும்உற்பிச்சம்சராயுசங்கள்நான்கின்தோற்றியிடும் -அப்படிப்பிறக்கும்பொழுதுஅண்டசங்கள்சுவேதசங்கள்என்னும்நான்கிலும்தோற்றியிடும்எழுவகைப்பிறப்புக்களில்,ஊற்றம்மிகுதாவரங்கள்பத்தொன்பதுஎன்றும் -நிலைபேறுமிக்கதாவரங்கள்பத்தொன்பதுநூறாயிரபேதமென்றும்,ஊர்வபதினைந்து -ஊர்வனபதினைந்துநூறாயிரபேதமென்றும்,அமரர்பதினொன்றோடு-தேவர்கள்பதினொருநூறாயிரபேதம்என்றும், உலவாமால்தரும்நீர்உறைவனநற்பறவைகள்நாற்காலிபப்பத்துமன்னியிடும் -

குறையாதவிருப்பத்தைத்தருகின்றநீரில்வாழ்வனநல்லபறவைகள்நாற்கால்மிருகங்கள்ஒவ்வொன்றும்பத்துநூறாயிரபேதமென்றும்பொருந்தியிடும். மாநுடர்ஒன்பதும் ஆ - இவற்றுடன்மாநுடயோனிஒன்பதுநூறாயிரம்பேதமுமாக, ஏற்றிஒருதொகையாகயோனிஎண்பத்துநான்குநூறாயிரம்என்றுஎடுத்துஇயம்புவர்கள் - கூட்டிஒருதொகையாகயோனிபேதம்எண்பத்துநான்குநூறாயிரபேதமென்றுஎடுத்துச்சொல்லுவர்பெரியோர்.

**குறிப்பு:-**1. அண்டசம் - முட்டையிற்றோன்றுவன.அவைஅரவு, தவளை, முதலை, ஆமை, அரணை, உடும்பு, மீன், ஓந்தி, பறவை,பல்லி,இப்பிமுதலியன. அண்டம்-முட்டை; சம் - பிறந்தது.

2. சுவேதசம் -வேர்வையிலேதோன்றுவன. அவைகிருமி, கீடம், விட்டில், பேன்முதலியன. சுவேதம் - வேர்வை.

3. உற்பிச்சம் - வித்துவேர்முதலியவைகளிலேதோன்றுவன. அவைமரம், பூண்டு, கொடிமுதலியன. உத்பித்- மேற்பிளந்துதோன்றுவது.

4. சராயுசம்- கருப்பையிலேதோன்றுவனஅவைநாற்கால்மிருகங்கள், மாநுடர், தேவர்முதலியோர். சராயு - கருப்பாசயப்பை.

5. யோனி- வடிவம், தேகம்

6.மாநுடரொன்பதும் ஆ-ஆகஎன்னும்செயவெனெச்சம்விகாரமாகி ஆ எனநின்றது.

**பொழிப்பு:-**

அண்டசம்சுவேதசம்உற்பிச்சம்சராயுசம்என்னும்நால்வகைத்தோற்றங்களையுடையஎழுவகைப்பிறப்புக்களிலே தாவரங்கள்பத்தொன்பதுநூறாயிரபேதமாம்; ஊர்வனபதினைந்துநூறாயிரம்; தேவர்கள்பதினொருநூறாயிரம்: நீர்வாழ்வனபறவைமிருகம்என்பனஒவ்வொன்றும்பத்துப்பத்துநூறாயிரம்; மாநுடர்ஒன்பதுநூறாயிரம். இங்ஙனமேயோனிபேதம்எண்பத்துநான்குநூறாயிரமாம்.

3.சுத்தாவத்தை

## இருவினையொப்பும்சத்திநிபாதமும்

48. இனையபலபிறவிகளினிறந்துபிறந்தருளா
லிருவினைகள்புரிந்தருந்துமிதுசகலமகலா
முனமருவுமிருபயனுமொருகாலத்தருந்த,
முந்துநுகருந்துபயனந்தமுறவந்த
வினையுமெதிர்வினையுமுடிவினையுதவுபயனா
னேராகநேராதன்மேவுங்கான்முற்

சினமருவுதிரோதாயிகருணையாகித்

திருந்தியசத்திதிபாதந்திகழுமன்றே.

**பதவுரை:-**அருளால்இனையபலபிறவிகளின்இறந்துபிறந்துஇருவினைகள்புரிந்துஅருந்தும்இதுசகலம்-பரமசிவனதுதிருவருளால்இப்படிப்பட்டபலபிறவிகளிலேபிறந்திறந்துநல்வினைதீவினைகளைச்செய்துஇன்பத்துன்பங்களைஅநுபவித்துவரும்இந்நிலைசகலாவத்தையாம், அகலாமுனம்மருவும்இருபயனும் -அநுபவித்துத்தொலையாதுமுற்பிறவிகளிற்பொருந்தியசஞ்சிதவினையின்பயனாகியஇன்பத்துன்பங்களும், ஒருகாலத்துஅருந்த - அதனோடுஒரேகாலத்தில்அருந்தத்தக்கதாக, முந்துநுகருந்துபயன்அந்தம்உறவந்தவினையும் -முற்பிறவிகளில்அநுபவிக்கும்பிராரத்தப்பயன்அநுபவித்தொழியும்பொழுதுவந்தேறிவிளைந்தசஞ்சிதவினையும், எதிர்வினையும்ஆகாமியவினையும், முடிவினைஉதவுபயனால் - சிவபுண்ணியம்தருகின்றபயனால், நேராகநேராதல்மேவும்கால்-சமத்துவத்தைஅடைதலாகியஇருவினையொப்புவரும்பொழுது, முன்சினம்மருவுதிரோதாயிகருணையாகி-இதற்குமுன்ஆன்மாக்களைஈடேற்றுதற்பொருட்டுக்கோபத்தைப்பொருந்திநின்றதிரோதானசத்தியானதுஅருட்சத்தியாய்மாறிநிற்கதிருந்தியசத்திநிபாதம்திகழும்- தீவிரதரசத்திநிபாதம்விளங்கும்.

**குறிப்பு:-**1. இனையபலபிறவிகளின்..........இதுசகலம்:-நால்வகைத்தோற்றமும்எழுவகைப்பிறப்பும்எண்பத்துநான்குநூறாயிரயோனிபேதமுமானபிறவிகளிலேஆன்மாக்கள்பிறந்திறந்து, மேலும்மேலும்நல்வினைதீவினைகளைச்செய்துஇன்பத்துன்பங்களைஅநுபவித்துவரும்நிலைகாரணசகலமாம்.

2.அகலாமுன்மருவுமிருபயனும்:-பலபிறவிகளில்அநுபவித்தொழியாதுஎஞ்சிநின்றசஞ்சிதவினையின்பயனாகியஇன்பத்துன்பங்கள்,அஃதாவதுபிராரத்தம்.

3. முந்துநுகருந்துபயன்அந்தமுறவந்தவினை:-சஞ்சிதவினை. நுகருந்து -நுகரும். உந்து -செய்யும்என்னும்வாய்ப்பாட்டுப்பெயரெச்சத்தினிறுதிநின்றஉம்விகுதியின்ஒருதிரிபு.

4. முடிவினையுதவுபயனால்நேராகநேராதல்மேவுங்கால்:- நல்வினைதீவினைகளிலும் (ஆகாமியம்), அவற்றின்விளைவாகியபுண்ணியபாவங்களிலும் (சஞ்சிதம்), இவற்றின்பயனாகியஇன்பத்துன்பங்களிலும் (பிராரத்தம்) ஒன்றில்விருப்பும்ஒன்றில்வெறுப்புமின்றி, ஆன்மஅறிவின்கண்ஒப்பவெறுப்புநிகழ்தல்இருவினையொப்புஎனப்படும்.இவ்விருவினையொப்புசரியைகிரியா

யோகசிவபுண்ணியங்களால்வருவதால் "முடிவினையுதவுபயன்" என்றார். முடிவினை - கன்மங்களுக்குமுடிவினைத்தரும்சரியைகிரியாயோகங்களாகியசிவபுண்ணியங்கள்.

5. முற்சினமருவுதிரோதாயிகருணையாகித்திருந்தியசத்திநிபாதம்திகழும்:- சஞ்சிதவினைப்பயனையும்பிராரத்தப்பயனையும்ஒருபிறப்பிலேஅநுபவித்துத்தொலைக்கும்படிஅக்கன்மங்கள் ஒத்தவிடத்திலே, தீவிரதரசத்திநிபாதம்உண்டாம். சத்திநிபாதம் - சிவசத்திபதிதல். சத்தி - சிவசத்தி; நி - உபசர்க்கம்; பாதம்-பதிதல்.

இருவினையொப்புவருங்காலம்மலபரிபாககாலமாதலால், இவ்விருவினையொப்பன்றிமலபரிபாகமும்சத்திநிபாதத்திற்குக்காரணமாம். மலபரிபாகமாவதுஆணவமலத்தினதுசத்திஆன்மஅறிவைமயக்கஇயலாதுவலிகுன்றிநிற்கும்அவதரம். மலம் - ஆணவமலம்: பரி-உபசர்க்கம்; பாகம் - திரிவு, பக்குவம்.

ஆணவமலம்பக்குவமாகும்பொருட்டுஅதற்குஅனுகூலமாய்நின்றுநடத்தியதிரோதானசத்தி, அம்மலம்பரிபாகம்எய்தியபொழுது, அக்கருணைமறமாகியசெய்கைமாறிக்கருணையெனப்படும்பராசத்திரூபமேயாய்ஆன்மாக்களிற்பதிதலால் "முற்சினமருவுதிரோதாயிகருணையாகி" என்றார்.

சத்திநிபாதம், மந்ததரம்மந்தம்தீவிரம்தீவிரதரம்எனநான்குவகை.அவற்றுள்மந்தரசத்திநிபாதமுடையோர்சமயதீக்கைபெற்றுப்புறத்தொழில்மாத்திரையானேசிவபெருமானுடையஉருவத்திருமேனியைநோக்கிவழிபடுதலாகியசரியைநெறியிலேதலைப்படுவர். மந்தசத்திநிபாதமுடையோர்இச்சரியையின்முற்றுதலாலேமந்தசத்திநிபாதமுண்டாய், விசேடதீக்கைபெற்றுப்புறத்தொழிலில்அகத்தொழில்மாத்திரையானேசிவபெருமானுடையஅருவுருவத்திருமேனியைநோக்கிவழிபடுதலாகியகிரியைநெறியிலேதலைப்படுவர். தீவிரசத்திநிபாதமுடையோர்இக்கிரியையின்முற்றுதலாலேதீவிரசத்திநிபாதமுண்டாய், அகத்தொழில்மாத்திரையானேசிவபெருமானுடையஅருவததிருமேனியைநோக்கிவழிபடும்யோகநெறியிலேதலைப்படுவர். இம்மூன்றின்முற்றுதலாலேஇருவினையொப்புமலபரிபாகம்பிறந்துதீவிரதரசத்திநிபாதமுண்டாகும். இத்தீவிரதரசத்திநிபாதமேஇங்கேகூறப்பட்டசத்திநிபாதமாம். முத்தியடைதற்குச்சிறந்ததாகையால், "திருந்தியசத்திநிபாதம்" என்றார். இத்தீவிரதரசத்திநிபாதமும்ஆன்மாக்களின்பக்குவவேறுபாட்டால்மந்ததரம்மந்தம்தீவிரம்தீவிரதரம்எனநான்காம். (பார். செ. 49).

**பொழிப்பு:-**

பலபிறவிகளிலேபிறந்திறந்துநல்வினைதீவினைகளைச்செய்துஇன்பத்துன்பங்களைஅனுபவித்துவரும்நிலைச கலாவத்தையாம்.

பிராரத்தப்பயனாகியஇன்பத்துன்பங்களிலும், சஞ்சிதவினையாகியபுண்ணியபாவங்களிலும், ஆகாமியமாகியநல்வினைதீவினைகளிலும், விருப்புவெறுப்பின்றிப்பிராரத்தப்பயனையும்சஞ்சிதவினைப்பயனையும்ஒருசெனனத்திலேஅருந்தத்தக்கதாக வருங்காலத்திற்தீவிரதரசத்திநிபாதமுண்டாம்.

### சத்திநிபாதவகையும், தீவிரதரபக்குவர்அடையும்பேறும்

49. நாடியசத்திநிபாதநாலுபாத
நண்ணும்வகையெண்ணரியஞானபாதங்
கூடுமவர்தமக்குணர்வாய்நின்றஞானக்
கூத்தனொருமூர்த்திகொடுகுறுகிமோக
நீடியகேவலசகலநிகழாவாறு
நிறுத்திமலமறுக்குமிதுநிலையார்சுத்தங்
கேடில்புகழ்தருஞ்சரியைகிரியாயோகக்
கேண்மையரேலிவையுணர்த்தக்கிளக்குநூலே.

**பதவுரை:-**நாடியசத்திநிபாதம்நண்ணும்வகைநாலுபாதம் - முன்னேஆராயப்பட்டசத்திநிபாதம்பொருந்தும்முறைமலபரிபாகத்துக்கேற்பமந்தரம்மந்தம்தீவிரம்தீவிரதரம்எ னநான்குவிதமாயிருக்கும்,எண்ணரியஞானபாதம்கூடும்அவர்தமக்கு - நினைத்தற்கரியதீவிரதரசத்திநிபாதம்பொருந்துமவர்களுக்கு, உணர்வாய்நின்றஞானக்கூத்தன்ஒருமூர்த்திகொடுகுறுகி - இதுவரையும்அறிவுக்கறிவாய்நின்றுஉணர்த்திவந்தஞானக்கூத்தன்ஒருகுருமூர்த்திவடிவம்கொண்டுஎழுந்தரு ளிவந்து, மோகம்நீடியகேவலசகலம்நிகழாவாறுநிறுத்திமலம்அறுக்கும்- மயக்கம்மிகுந்தகேவலாவத்தையும்விகற்பத்தையுடையசகலாவத்தையும்உண்டாகாதபடிஅருளில்நிறுத்திமல ங்களைப்போக்குவன். இதுநிலைஆர்சுத்தம் -இதுநிலைபெற்றசுத்தாவத்தையாம், கேடுஇல்புகழ்தரும்சரியைகிரியாயோகக்கேண்மையரேல் - கேடில்லாதபுகழைத்தருகின்றசரியைகிரியாயோகசம்பந்தமுள்ளவர்களாயின், இவைஉணர்த்தக்கிளக்கும்நூல்- மந்ததரம்முதலியஇந்நான்குபாதங்களின்முறைமையையும்அவர்களுக்குஅறிவிக்கச்சொல்லும்ஆகமம்.

**குறிப்பு:-**1. நாடியசத்திநிபாதம்நாலுபாதம்நண்ணும்வகை:- மேற்செய்யுளிற்கூறியஇருவினையொப்பில்உண்டாகும்சத்திநிபாதம்பக்குவத்துக்கேற்றபடிமந்ததரம்மந்தம்தீவிரம்தீவிரதரம்எனநான்குவகையாயிருக்கும். ஞானாசாரியர்கூறும்உபதேசமொழிகள்ஒருபிரகாரமாயிருப்பினும், பக்குவத்துக்கேற்பஞானம்ஏறுவதன்றிஒருபடித்தாய்ஏறாதாகையால், சத்திநிபாதம்நண்ணும்வகை" என்றார். (பார். செய். 69. குறிப்பு.) சத்திநிபாதவேறுபாட்டுக்குக்காரணம்மலபரிபாகமாம்.

2. மோகநீடியகேவலசகலம்: இங்கேகேவலசகலம்என்றதுபிறப்பிறப்புகளுக்குக்காரணமானகேவலசகலங்களை. மயக்கமாய்வந்தடுப்பதுகேவலம். விகற்பமாய்வந்தடுப்பதுசகலம். தானல்லாததேகத்தைத்தானென்றும், தனதல்லாதபோகத்தைத்தனதென்றும்கருதப்பண்ணுவதுமயக்கம். அத்தேகபோகங்களில்விருப்பும்வெறுப்பும்வரச்செய்வதுவிகற்பம். விருப்புவெறுப்புக்களால்இருவினைகளும், இவ்விருவினைகளாற்பிறப்பிறப்பும்விடாதுவரும்.ஆகவே, பிறப்பிறப்புகளுக்குகாரணமாயுள்ளனமயக்கமும்விகற்பமுமாகியகேவலசகலங்களாம்.

3. மலமறுக்கும்:- மும்மலங்களும்தீக்கையால்நீங்கும். முன்னேசொல்லப்பட்டதிருநோக்குமுதலியஎழுவகைத்தீக்கைகள் (செய். 8) சீடனதுஇயல்புக்கேற்பத்தனித்தனியாயும்சேர்த்தும்செய்யப்படும்.

4. நிலையார்சுத்தம்:- சுத்தாவத்தையானதுசீவன்முத்திபரமுத்திபேதத்தினாலேசீவன்முத்திசுத்தாவத்தைஎன்றும்பரமுத்திசுத்தாவத்தைஎன்றும்இருவகைப்படும். இங்கேகூறப்பட்டதுபரமுத்திசுத்தாவத்தையாம். இதுகாரணசுத்தம்.

5. சரியைகிரியாயோகக்கேண்மையர்:- சரியைகிரியாயோகநெறிகளில்நின்றுமுதிர்ச்சிபெற்றவர்.

**பொழிப்பு:**சத்திநிபாதம்பொருந்தும்முறைபக்குவத்துக்கேற்பமந்ததரம்மந்தம்தீவிரம்தீவிரதரம்எனநான்குவிதம். அவற்றுள், தீவிரதரபக்குவர்க்குப்பரமசிவன்குருமூர்த்தியாய்எழுந்தருளிவந்துகேவலசகலங்கள்நிகழாதபடிநிறுத்திமலத்தைநீக்கியருளுவர். இதுசுத்தாவத்தையாம். சரியைகிரியாயோகங்களைச்செய்துபுண்ணியப்பேறடைந்தோரேஇந்நான்குசத்திநிபாதத்துக்கும்உரியவராவர்.

## உண்மைமுத்தி

50. அரிவையரின்புறுமுத்திகந்தமைந்து
மறுமுத்திதிரிகுணமுமடங்குமுத்தி

விரவுவினைகெடுமுத்திமலம்போமுத்தி

விக்கிரகநித்தமுத்திவிவேகமுத்தி

பரவுமுயிர்கெடுமுத்திசித்திமுத்தி

பாடாணமுத்தியிவைபழிசேர்முத்தி

திரிமலமுமகலவுயிரருள்சேர்முத்தி

திகழ்முத்தியிதுமுத்தித்திறத்ததாமே.

**பதவுரை:-**அரிவையர்இன்புஉறும்முத்தி - மகளிரின்பத்தைஅனுபவிப்பதேமுத்திஎன்னும்உலோகாயதன்முத்தியும், கந்தம்ஐந்தும்அறும்முத்தி - உருவமாதிஐந்துகந்தங்களும்அறுவதேமுத்திஎன்னும் (பௌத்தரிற்) சௌத்திராந்திகள்முத்தியும், திரிகுணமும்அடங்கும்முத்தி - மூவகைக்குணங்களும்அடங்குவதேமுத்திஎன்னும் (ஆருகதரில்) நிகண்டவாதிமுத்தியும், விரவுவினைகெடும்முத்தி - பொருந்தியகன்மம்கெடுவதேமுத்திஎன்னும்பிரபாகரன்முத்தியும், மலம்போம்முத்தி - ஆணவமலங்கெடுவதேமுத்திஎன்னும்பேதவாதிகள்முத்தியும், விக்கிரகம்நித்தம்முத்தி- சரீரம்நித்தியமாயிருப்பதேமுத்திஎன்னும்உருவசிவசமவாதிகள்முத்தியும், விவேகம்முத்தி - பிரகிருதியையும்புருடனையும்விவேகித்தறிவதேமுத்திஎன்னும்சாங்கியன்முத்தியும், பரவும்உயிர்கெடும்முத்தி - வியாபித்திருக்கின்றஆன்மாக்கெடுவதேமுத்திஎன்னும்பாற்கரியன்முத்தியும்,சித்திமுத்தி - அட்டசித்திகளேமுத்திஎன்னும்சித்தர்முத்தியும், பாடாணம்முத்தி - உயிர்கல்லுப்போற்கிடப்பதேமுத்திஎன்னும்பாடாணவாதிமுத்திதியும்,இவை -ஆகியஇவைபத்தும், பழிசேர்முத்தி -குற்றத்தையுடையமுத்திகளாம், திரிமலமும்அகலஉயிர்அருள்சேர்முத்திதிகழ்முத்தி - மும்மலமும்விட்டுநீங்கஆன்மாசிவத்தினதுதிருவருளைச்சேர்கின்றமுத்தியேநிலைபெற்றுவிளங்கும்முத்தியாம், இதுமுத்தித்திறத்ததாம் -இதுவேமுத்திகளுள்சிறந்ததாம்.

**குறிப்பு: -** 1. அரிவையரின்புறுமுத்தி:- உலோகாயதர், கடவுள்ஆன்மாகன்மம்என்பனஇல்லை,இம்மையில்மங்கையரைக்கூடிஇன்பம்அநுபவித்தலேமுத்திஎன்பர்.

2. கந்தமைந்துமறுமுத்தி:- பௌத்தரிற்சௌத்திராந்திகர், பஞ்சகந்தங்களும்அழிவதேமுத்திஎன்பர். பஞ்சகந்தங்களாவன:- உருவம்வேதனைகுறிப்புபாவனைவிஞ்ஞானம்என்னும்ஐந்துமாம். கந்தம் -கூட்டம். (பார்.செய்.99,குறிப்புரை.)

3. திரிகுணமடங்குமுத்தி:- ஆருகதரில் (சமணரில்)நிகண்டவாதிகள், ஞானாவரணீயம்முதலியஎட்டும்பசிமுதலியபதினெட்டும்கந்தம்முதலியஆறும்ஆகியமூவகைத்தீக்குணங்களையும்உடலைவருத்தல்முதலியவற்றால்அடக்கினால், முத்திகூடும்என்பர்.

ஞானாவரணீயம்முதலியஎட்டுமாவன:- ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம்ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம்என்பன.

பசிமுதலியபதினெட்டாவன:- பசித்தல், தாகம்,பயம், செற்றம்உவகை, மோகம், சிந்தனை, பழித்தல், நோய், நசித்தல், வேர்வை, கேதம், மதம், வேண்டல், அதிசயித்தல், புசிப்பு, பிறப்பு, உறக்கம்என்பன.

கந்தம்முதலியஆறாவன:- கந்தம், ரசம், ரூபம், பரிசம், சத்தம், பரிணாமம்என்பன. (பார்சி. சி. பரபக், நிகண்டவாதி; சி. சி. சுபக். சூ. 8. செ. 12.)

கந்தம்முதலியவற்றைநீக்கி, உழவுதொழில்முதலியஅறுவகையையும், காமம், குரோதம்முதலியஅறுவகையையுங்கொள்வாருமுளர். (பார். சி. சி. பரபக். நிகண்ட. மறுப்பு.)

4. விரவுவினைகெடுமுத்தி:- கன்மநாசத்தில்ஆன்மாஅறியுந்தொழிலின்றிப்பாடாணம்போற்கிடப்பதேமுத்திஎன்பன்பிரபாகரன். (பார். சி. சி. பரபக். பிரபா.)

5. மலம்போமுத்தி- இரதகுளிகையாற்களிம்புகெடச்செம்புபொன்னாகிவிளங்குவதுபோலத், திருவருளால்ஆணவமலம்கெட, ஆன்மாநித்தியசுத்தனாய்விளங்குவதேமுத்திஎன்பர்பேதவாதிகள்.

6. விக்கிரகநித்தமுத்தி:- உருவசிவசமவாதிகள்நித்தியமங்களதிப்பியசரீரத்தைப்பெற்றிருத்தலேமுத்திஎன்பர். அன்றியும், "விக்கிரகநித்தமுத்தி" என்பதற்குக்கருமயோகிகள்கூறும்முத்திஎன்றுகூறுதலும்பொருந்தும்.அவர், அமிர்தபானம்முதலியகாயசித்தியாற்காயம்இறவாதிருத்தலேமுத்திஎன்பர்.

7.விவேகமுத்தி:- பிரகிருதிஎல்லாப்பொருள்களுக்குங்காரணமாய்முக்குணங்களும் 'சமத்துவப்பட்டுநின்றஅவதரமாய்அருவாயுள்ளது. புத்திமுதற்பிருதிவியீறானதத்துவம்இருபத்துமூன்றும்இதனிற்தோன்றும்காரியம். புருடன்இத்தத்துவங்கள்இருபத்துநான்கிற்கும்வேறாய், முத்தியிலும்பெத்தத்திலும்ஒருதன்மையனாய்ச், சுதனாய்த், தாமரையிலையில்நீர்போலஒன்றிலும்பற்றின்றிநிற்பன். அநாதியேபுத்தியைச்சார்ந்தஅவிச்சைவயத்தாற்பெத்தனானஅப்புருடனுக்குஇன்பத்துன்பஉணர்வுதோன்றும். பிரகிருதியையும்புருடனையும்பகுத்துணருங்கால்அவிச்சைநீங்கும். அதுவேமுத்திஎன்பர்சாங்கியர், பகுத்துணருதலாவது. இன்பத்துன்பங்கள்பிரகிருதிக்குண்டுஎன்றும்புருடனுக்கில்லைஎன்றும்அறிதல்.

அன்றியும், விவேகமுத்திஎன்பதற்குமாயாவாதிகள்கூறும்முத்திஎன்றுகூறுதலும்பொருந்தும். அவர். நின்மலமாயிருக்கும்ஆகாயம்மேகத்தாலேமறைக்கப்பட்டிருத்தல்போல.

சுத்தமாயிருக்கும்பிரமமும்மாயாவுபாதிகளாலேமறைக்கப்பட்டுஇந்தஉடலிலேசீவான்மாஎனநிற்கும், அந்தஆகாயத்திலேதோன்றிஅந்தமேகத்தைநீக்கும்காற்றுப்போலச், சீவான்மாவிடத்திலேதோன்றிமாயாவுபாதிகளைநீக்கும்விவேகஞானமேமுத்திஎன்பர்.

8. பரவுமுயிர்கெடுமுத்தி:- ஆன்மாவானதுதனதுஇச்சாஞானக்கிரியைகளோடுபிரமத்திற்சென்றழிந்துபிரமத்தினோடுஒன்றாவதேமுத்திஎன்பர்பாற்கரியர்.

9. சித்திமுத்தி - சித்தர், அணிமாமகிமாஇலகிமாகரிமாபிராப்திபிராகாமியம்ஈசத்துவம்வசித்துவம்என்னும்அட்டசித்திகளேமுத்திஎன்பர்.

அணிமாவாவது. மிகச்சிறியஉயிர்தோறும்தான்பரமாணுவாய்சென்றிருக்குஞ்சிறுமையாதல்.

மகிமாவாவது, பிருதிவிமுதற்சிவதத்துவம்ஈறாகஉள்ளமுப்பத்தாறுதத்துவங்களின்உள்ளும்புறமும்நிறைந்திருக்கும்பெருமையாதல் .

இலகிமாவாவது, மேருமலையைப்போலப்பாரமாயிருக்கும்யோகியைஎடுத்தாலும்இலகுவாயிருத்தல்.

கரிமாவாவது. அணுவைப்போல்இலகுவாயிருக்கும்யோகியைஎடுத்தாலும்மேருமலையைப்போலப்பாரமாயிருத்தல்.

பிராப்தியாவது, பாதாளத்தினின்றும்பிரமலோகத்திற்புகுதலும்மீண்டும்பாதாளத்தைஅடைதலுமாம்.

பிராகாமியமாவது, பரகாயத்திற்பிரவேசித்தலும். ஆகாயத்தில்இயங்குதலும்தான்இச்சித்தபோசும்அனைத்தையுந்தானிருக்குமிடத்தில்வருவித்தலுமாம்.

ஈசத்துவமாவது, முத்தொழில்களையும்தன்இச்சைப்படிசெய்து, சூரியன்முதலியசிகரங்கள்தன்ஏவல்கேட்பவாழ்தலாம்.

வசித்துவமாவது. இந்திராதிதேவர்களையும்அசுரர்களையும்மனிதர்களையும்பூதங்களையும்மிருகங்களையும்பறவைகளையும்தன்வசமாக்கிக்கொள்ளுதலாம்.

10. பாடாணமுத்தி!- பாடாணவாதிகள், சகசமலம்நீங்காதுசுட்டறிவுஞ்சுகதுக்கஅநுபவமுமற்று, ஆன்மாபாடாணம்போற்கிடப்பதேமுத்திஎன்பர்.

11. பழிசேர்முத்தி:- மேற்சொல்லப்பட்டமுத்திகளெல்லாம்முப்பத்தாறுதத்துவங்களுள்உட்பட்டவைகளாதலின், அவைகளெல்லாம்தத்துவநாசத்தில்அழிந்துபோவன. ஆகையால், அவைபழிசேர்முத்திகள்எனப்பட்டன.

12. திரிமலமுமகல:- மும்மலங்களும்அகலஎன்பதுஅவற்றின்குணங்கள்விட்டுநீங்கஎன்பதாம்.

ஆணவமலத்தின்குணங்கள்,

விகற்பம்கற்பம்குரோதம்மோகம்கொலைஅஞர்மதம்நகைஎனஎட்டுவகைஎன்றும்,

மோகம்மதம்இராகம்கவலைதாபம்வாட்டம்விசித்திரம்எனஎழுவகைஎன்றும்,

அவித்தைஅகங்காரம்அவாஆசைகோபம்எனஐந்துவகைஎன்றும்சொல்லப்படும்.

இவையெல்லாம்காமம்வெகுளிமயக்கம்என்னும்மூன்றிலும்அடங்கும்.

மாயாமலத்தின்குணங்கள், அஞ்ஞானம்பொய்அயர்வுமோகம்பைசுந்நியம்மாற்சரியம்பயம்எனஏழாம்.

கன்மமலத்தின்குணங்கள்,

இருத்தல்கிடத்தல்இருவினையியற்றல்விடுத்தல்பரநிந்தைமேவல்எனஆறாம்.

பொழிப்பு:இம்மையில்அரிவையரோடுஅநுபவிக்குஞ்சிற்றின்பபோகமேமுத்திஎன்றும்,

பஞ்சகந்தங்களும்அறக்கெடுதலேமுத்திஎன்றும்,முக்குணங்களும்அடங்குதலேமுத்திஎன்றும்.

கன்மங்கள்அழிதலேமுத்திஎன்றும், ஆணவமலம்நீங்கப்பெறுதலேமுத்திஎன்றும்.

சரீரம்நித்தியமாயிருப்பதேமுத்திஎன்றும்,

பிரகிருதியையும்புருடனையும்விவேகித்தறிதலாகியவிவேகஞானமேமுத்திஎன்றும்,

ஆன்மாகெடுதலேமுத்திஎன்றும்,அட்டசித்திகளேமுத்திஎன்றும்,

ஆன்மாகல்லுப்போற்கிடப்பதேமுத்திஎன்றும்பலவகையாகச்சொல்லும்முத்திகளெல்லாம்,

குற்றத்தையுடையமுத்திகளாம். ஆணவம்கன்மம்மாயைஎன்னும்மும்மலங்களும்நீங்க,

ஆன்மாசிவத்தினதுதிருவருளைக்கூடும்முத்தியேநிலைபெற்றுவிளங்கும்முத்தியாம்.

இதுவேமுத்திகளுட்சிறந்ததாம்.

பொதுவதிகாரம்முற்றுப்பெற்றது.

வினாக்கள்

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சிவன்ஐந்தொழிலும்செய்யகாரணம்யாவை? | K4 | CO2 | PO6 |
| 2 | தத்துவங்கள்தோன்றும்முறைகளைவிளக்குக. | K2 | CO3 | PO4 |
| 3 | பதியுண்மைக்குபரிகாரம்யாது? விளக்குக. | K4 | CO1 | PO3 |
| 4 | கன்மமலத்தின்இயல்பைஎடுத்துரைக்க. | K1 | CO2 | PO5 |
| 5 | பசுவிலக்கணம், பாசவிலக்கணம்விளக்குக. | K3 | CO5 | PO2 |

| வ.எண் | எட்டு மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | முத்தொழிலும்செய்யும்உரிமைசிவனுக்குஉண்டென்பதைநிறுவுக. | K2 | CO1 | PO5 |
| 2 | மாயைக்குறித்துசிவப்பிரகாசம்கூறும்செய்திகளைவிவரிக்க. | K3 | CO2 | PO3 |
| 3 | புண்ணியபாவங்கள்வரும்வழியையும்போம்வழியையும்தொகுத்துரைக்க. | k5 | CO5 | PO2 |
| 4 | உருவுடைமைபற்றிவரும்குற்றங்களைஎவ்வாறுபரிகரிக்க வேண்டுமென்பதைச்சிவப்பிரகாசம்வழிஆராய்க. | K4 | CO2 | PO1 |
| 5 | பஞ்சபூதங்களின்தொழிலைவிவரி. | K3 | CO3 | PO6 |

## அலகு - 4

## சிவப்பிரகாசம் 51 முதல் 75 பாடல்கள்

### உண்மையதிகாரம்

### இவ்வதிகாரத்தில்உணர்த்தப்படும்விஷயங்கள்

51. இங்கிவைபொதுவியம்புமென்பர்கவிதன்மேலான்மாத்
தங்கியவஞ்சவத்தைதன்னுண்மையுணர்த்துந்தன்மை
பொங்கொளிஞானவாய்மையதன்பயன்புனிதனாமம்
அங்கதிலணைந்தோர்தன்மையறைகுவனருளினாலே.

**பதவுரை**:-இங்குஇவைபொதுஇயம்பும்என்பர்கள்- இங்ஙனம்கூறப்பட்டஐம்பதுசெய்யுள்களும்பதிபசுபாசங்களின்பொதுவிலக்கணத்தைச்சொல்லும்என்பர்அறிவுடையோர், இதன்மேல் - இதற்குமேல்உண்மைஎன்றுவகுக்கப்படும்ஐம்பதுசெய்யுள்களினாலும், ஆன்மா (உண்மை) - ஆன்மவிலக்கணம்,தங்கியஅஞ்சுஅவத்தைதன்உண்மை - அவ்வான்மாப்பொருந்தியஐந்தவத்தைகளின்இலக்கணம், உணர்த்தும்தன்மைசிவன்கலையாதிதத்துவங்களைக்கூட்டிஆன்மாவுக்குஅறிவைஉணர்த்தும்தன்மை, பொங்குஒளிஞானவாய்மை - பேரொளியாயிருக்கும்சிவஞானத்தின்உண்மை, அதன்பயன் - அச்சிவஞானத்தாலுண்டாகியஆன்மதரிசனம்ஆன்மசுத்திஆன்மலாபம்என்னும்இவைகளின்இயல்பு, புனிதன்நாமம் - நின்மலனுடையதிருநாமமாகியஐந்தெழுத்தின்இயல்பு, அங்குஅதில், அணைந்தோர்தன்மை - அந்தச்சிவத்திலேஅணைந்தவர்களின்இயல்புஎன்னும்இவற்றை, அருளினாலேஅறைகுவன் - அருள்வழிநின்றுகூறுவாம்.

**குறிப்பு**:- 1. பதிபசுபாசங்களின்இயல்பைச்சிறப்புமுத்திவகையாற்கூறி, ஆன்மாபாசத்தினின்றுநீங்கிமுத்தியாகியநித்தியசுகம்எய்தும்முறைமையைக்கூறுதலால்,

இவ்வதிகாரம்உண்மையதிகாரம்எனப்பட்டது. உண்மை - பொதுவியல்புபோலஇடையேநீங்குதலின்றிஎக்காலத்தும்ஒருதன்மையாயுள்ளது. சிறப்பியல்பு.

2. தங்கியஅஞ்சவத்தைதன்னுண்மை:- சாக்கிரம்சொப்பனம்சுழுத்திதுரியம்துரியாதீதம்என்னும்அவத்தைகளையின்றிச்சகலநிலையில்ஆன்மாவுக்குத் தங்குமிடம்வேறின்மையால், "தங்கியவஞ்சவத்தை" என்றார். சாக்கிராவத்தையிலிருக்கும்பொழுதுஅதனுள்ளேதோன்றும்கருவிகள்மயமாயும், சொப்பனாஅவத்தையிலிருக்கும்பொழுதுஅங்குத்தோன்றும்கருவிகள்மயமாயும், இவ்வாறுஅவத்தைகள்தோறும்அங்கங்குள்ளகருவிகளைச்சார்ந்துவரலால், அவத்தைகளேஆன்மாத்தங்குமிடமாயின.

3. உணர்த்துந்தன்மை: - ஆணவமலத்தாலேமறைப்புண்டுகேவலப்பட்டுக்கிடக்கும்ஆன்மாவிற்குப், பரமசிவன்கலையாதிதத்துவங்களைமாயையினின்றும்தோற்றுவித்து,அதனாலேஆணவமலத்தைச்சிறிதுநீக்கி அறிவைஉண்டாக்கும்முறைமை.

4.ஞானவாய்மை:- திருவருளின்முறைமை.

**பொழிப்பு:**பொதுவதிகாரத்திற்கூறியஐம்பதுசெய்யுள்களும்பதிபசுபாசங்களின்பொதுவியல்பைக்கூறினவாம். இனி, ஆன்மவிலக்கணம், ஐந்தவத்தைகளின்தன்மை, உணர்த்தும்தன்மை, ஞானவாய்மை, ஞானத்தின்பயன், ஐந்தெழுத்துண்மை, அணைந்தோர்தன்மைஎன்னும்இவற்றைஅருள்வழிநின்றுகூறுவாம்.

## 1. ஆன்மவிலக்கணம்

1. ஆன்மாசகலகேவலப்படும்இயல்பினது. (52)
2. ஆன்மாஅறிவிக்கஅறியும்இயல்பினது, (53)
    a. ஆன்மாஅறிவுடைப்பொருள். (54)
    b. ஆன்மஅறிவினாற்சுட்டிஅறியப்பட்டபொருளெல்லாம் அசத்து,(55)
3. ஆன்மாசத்தையும்அசத்தையும்அறியும்இயல்பினது , (56-57)
    a. மேலதனைஉவமைமுகத்தால்விளக்கல், (58)
4. ஆன்மாசார்ந்ததன்வண்ணமாய்அறியும்இயல்பினது, (59)

### 1. ஆன்மாசகலகேவலப்படும்இயல்பினது

52. செறிந்திடுமூடலுண்மன்னிச்சேர்புலன்வாயில்பற்றி

அறிந்ததிலழுந்துமொன்றுமறித்திடாதறியுத்தன்மை

பிரிந்தடையஞ்சவத்தைபெருகியமலத்தாற்பேணி

உறுந்தனியதீதமுண்மையுயிர்க்கெனவுணர்த்துமன்றே.

**பதவுரை:-**செறிந்திடும்உடலுள்மன்னி- ஆன்மாவானதுகன்மத்துக்கீடாகப்பொருந்தினதூலசரீரத்திலேஇலாடத்தானத்திலேபொருந்திநின்று, சேர்புலன்வாயில்பற்றிஅறிந்துஅதில்அழுந்தும் - கன்மத்துக்குஈடாகவரும்சத்தாதிவிடயபோகங்களைஇந்திரியங்கள்வழியாகஅறிந்துபற்றிஅவ்விடயபோகங்களில்அழுந்திஅநுபவிக்கும்,ஒன்றும்அறிந்திடாது - அங்ஙனம்அநுபவிக்கும்தன்னையும்அநுபவிக்குமாறுசெலுத்திநிற்கும்திருவருளையும்அறியமாட்டாது, அறியும்தன்மைபிறிந்துஅடைஅஞ்சுஅவத்தை - அவ்வாறுஅறியும்தன்மையின்நீங்கிவருகின்றஐந்தவத்தையை, பெருகியமலத்தால்பேணி- மிகுத்தஆணவமலத்தின்செயலாற்பொருந்தி, தனிஅதீதம்உறும் - தனியேதுரியாதீதநிலையைஅடையும். உண்மைஉயிர்க்குஎனஉணர்த்தும் - இங்ஙனம்சகலகேவலப்படுதல்ஆன்மாவுக்குஇயல்பென்றுஆகமங்கள்சொல்லும்.

**குறிப்பு:-** 1. செறிந்திடுமுடலுண்மன்னி. . . . . . . .ஒன்றுமறிந்திடாது:- ஆன்மாஅறிவுடைப்பொருளாயினும்செம்பிற்களிம்புபோலஆணவமலம்தன்னோடுஉடனாய்நிற்றலால், தானாகஒன்றைஅறியஇயலாததாயிற்று. அவ்வான்மாவுக்குஅறிவைவிளக்கும்படிமுதல்வன்மாயாகாரியமாகியஉடம்பையும்கருவிகளையும்கொடுக்க, அஃதுஉடம்பினின்றுகருவிகள்வாயிலாகவிடயங்களைஅறிந்துபற்றி, அவ்விடயபோகங்களைஅனுபவிக்கும். தனுகரணங்களைப்பெறாவிடின்ஆன்மாஒருவிடயத்தையும்அறியுமாறில்லையாம். அவ்வாறுஅறிந்துபற்றிஅனுபவிக்கினும், அனுபவிக்கும்தன்னையும்தன்னைச்செலுத்திநிற்கும்திரோதானசத்தியையும்உணரமாட்டாது.

ஆன்மாவிடயங்களைஅறியும்முறை 63ம் செய்யுட்குறிப்புரையிற்காண்க.

2.அறியுந் தன்மை பிறிந்து. . . . . . .தனியதீதம்:- ஆன்மாநாதம்முதல்பிருதிவியிறுதியாகமுப்பத்தாறுதத்துவங்களுடனும்தாத்துவிகங்களுடனுங்கூடிஇலாடத்தானத்தைப்பொருந்திவிடயங்களைஅறிந்துஅனுபவித்துநிற்கும்அவதாரம்சகலாவத்தைஎனப்படும். இங்ஙனம்அறியுந்தன்மையைவிட்டுஇலாடத்தானத்திலிருந்துகீழ்நோக்கிச்சென்றுமுறையேசாக்கிரம்சொப்பனம்சுழுத்திதுரியம்துரியாதீதம்எனஐந்துஅவத்தைகளைப்பொருந்திமூலாதாரத்தைஅடையும். இங்கேகருவிகள்ஒன்றுமின்றிஆன்மாமாத்திரம்இருக்கும்,

இலாடத்தானத்திலிருந்துகீழ்நோக்கிச்சென்றுசாக்கிரம்முதலியஐந்தவத்தைப்படுதல்,சகலத்திற்கேவலம்எனப்படும்.

ஆன்மாஇலாடத்தானத்திற்சாக்கிராவத்தையுறும்பொழுது, சுத்ததத்துவங்கள்ஐந்தும், புருடன்நீங்கலாகக்கலாதிகள்ஆறும், பூதங்கள்ஐந்தும்தொழிற்படாதுநிற்கும். ஆதலால், "அறியுந்தன்மைபிறிந்து'. என்றார்.

சாக்கிரம்முதலியஐந்தவத்தைகளிலும்தொழிற்படுங்கருவிகளின்விவரம் 60ம் செய்யுளிற்காண்க.

ஐந்தவத்தைஉறுதற்குக்காரணம்ஆணவமலமாதலால் "பெருகியமலத்தாற்பேணி" என்றார்.

3.உண்மையுயிர்க்கு: - மேற்கூறியவாறுசகலகேவலப்படுதல்ஆன்மாவுக்குஇயல்புஎன்பது. உண்மை -இயல்பு. சகலகேவலநிலைகள்ஆன்மாவின்பொதுவியல்பு.

**பொழிப்பு:**ஆன்மாவானதுஇத்தூலதேகத்தில்இலாடத்தானத்தைப்பொருந்திநின்றுகன்மத்துக்கீடாகவரும்சத்தாதிவிடயபோகங்களைஇந்திரியங்கள்வாயிலாகஅறிந்துபற்றிஅவ்விடயபோகங்களைஅனுபவிக்கும். அங்ஙனம்அனுபவிக்குந்தன்னையும்அனுபவிக்குமாறுசெலுத்திநிற்கும்திருவருளையும்உணரமாட்டாது. அவ்வாறுஅறியும்தன்மையினீக்கிச்சாக்கிரம்சொப்பனம்முதலியஐந்தவத்தையைஆணவமலத்தின்செயலாற்பொருந்தி,மூலாதாரத்திற்கருவிகளொன்றுமின்றித்தான்மாத்திரமாயிருக்கும். இவ்வாறுசகலகேவலப்படுதல்ஆன்மாவுக்குஇயல்பாம்.

### 2. ஆன்மாஅறிவிக்கஅறியும்இயல்புடையது.

53. உருவுணர்விலாமையானுமோரொருபுலன்களாக
மருவிநின்றறிதலானுமனாதிகடம்மின்மன்னித்
தருபயனுகர்தலானுமுயிர்சடமாதலானும்
அருவினையுடலுளாவியறிவினாலறியுமன்றே.

**பதவுரை:-**உருஉணர்வுஇலாமையானும் - உடம்பேஅறியுமெனில், அதுஅறிவில்லாதசடப்பொருளாயிருத்தலானும், ஓரொருபுலன்களாகமருவிநின்றுஅறிதலானும் - ஐம்பொறிகளேஅறியுமெனின், அவைவிடயங்களைநுகருமிடத்துஒவ்வொருஇந்திரியம்ஒவ்வொருவிடயமாகப்பொருந்திநின்றுஅறிதலாலும், மனாதிகள்தம்மின்மன்னித்தருபயன்நுகர்தலானும் - மனம்முதலியஅந்தக்கரணங்கள்அறியுமெனின், அவையெல்லாம்சேர்ந்துஇந்திரியங்கள்வாயிலாகவரும்விடயங்களைப்புசிக்கையாலும், உயிர்சடமாதலானும் -பிராணவாயுஅறியுமெனின், அதுசடப்பொருளாயிருத்தலாலும்,

அருவினைஉடலுள்ஆவிஅறிவினால்அறியும்-

நீங்குதற்கரியவினைக்கீடாகஎடுத்ததேகத்துள்நிலைபெற்றுஆன்மாவானதுசிவன்அறிவிக்கஅறியும்.

**குறிப்பு:-** 1. மேற்செய்யுளிற்கூறியவாறுசத்தாதிவிடயங்களைஅறிவது, ஆன்மாவன்றுதேகம்இந்திரியம்முதலியனஎன்னும்மதத்தவர்கொள்கைகளைமறுத்து, சிவன்அறிவிக்கஅவ்வான்மாவிடயங்களைஅறியும்இயல்புடையதென்றுகூறுகின்றார்.

2. உருவுணர்விலாமையானும்:- தேகான்மவாதிகள்உடம்பேவிடயங்களைஅறியுமென்பர். சொப்பனம்சுழுத்திமுதலியஅவத்தைகளிலும்பிணமானவிடத்தும்உடம்புக்குஉணர்ச்சியில்லாதபடியினாலேஉடம்புசடப்பொருள்என்றும், அறியமாட்டாதென்றும், அவர்கொள்கையைமறுத்தவாறு.

3. ஒவ்வொருபுலன்களாகமருவிநின்றறிதலானும்:- இந்திரியஆன்மவாதிகள்இந்திரியங்களேவிடயங்களைஅறியும்என்பர். இந்திரியங்கள்தனித்தனியாகஒவ்வொருவிடயங்களைப்பற்றிஅறியும். ஒன்றுஉணரும்போதுஒன்றுஉணராது, ஐந்துஒக்கஉணரா -ஒன்றுஅறிந்ததைஒன்றுஅறியாது. ஆதலால்இந்திரியங்கள்அறியுமென்பதுபொருந்தாது. இவ்விந்திரியங்கள்ஐந்தினாலும்விடயங்களைஅறிவதுஇவற்றின்வேறாயுள்ளஆன்மாஎன்றுஅவர்கொள்கையைமறுத்தவாறு.

செவிமுதலியஇந்திரியங்கள்ஐந்தும்ஆகாயம்முதலியபஞ்சபூதங்களைப்பற்றுக்கோடாகக்கொண்டுவிடயங்களைஅறிதலால் "மருவிநின்றறிதலானும்என்றார்.

4.மனாதிகடம்மின் மன்னித்தருபயனுகர்தலானும்:- அந்தக்கரணான்மவாதிகள்அந்தக்கரணங்களேஅறியுமென்பர். அந்தக்கரணங்களும்இந்திரியங்களைப்போலஒன்றையொன்றறியாது. சித்தம்மனத்தைஅறியாது. மனம்புத்தியைஅறியாது, புத்திஅகங்காரத்தைஅறியாது.இவைஎல்லாஞ்சேர்ந்துஒருவிடயத்தைஅறியும், ஆகையால்அந்தக்கரணங்களேஅறியுமென்பதுபொருந்தாது. இவைநான்கினையும்துணையாகக்கொண்டறிவதுஇவற்றின்வேறாயுள்ளஆன்மாஎன்றுஅவர்கொள்கையைமறுத்தவாறு.

5. உயிர்சடமாதலானும்:- பிராணான்மவாதிகள்பிராணவாயுவேஅறியும்என்பர். சொப்பனம்சுழுத்திமுதலியஅவத்தைகளிலேபிராணவாயுஇன்பத்துன்பநுகர்ச்சியும்தொழிலுமின்றிஇயங்குதலால். அதுசடப்பொருளென்றும், அவ்வின்பத்துன்பங்களைநுகர்வதுஇப்பிராணவாயுவுக்குவேறாயுள்ளஆன்மாஎன்றும்அவர்கொள்கையைமறுத்தவாறு.

6. ஆவிஅறிவினால்அறியும்:-

தேகம்இந்திரியம்அந்தக்கரணம்பிராணவாயுஎன்னும்இவைஎல்லாவற்றிற்கும்வேறாய்நின்றுஇவற்றையும்விடயங்களையும்அறிவதுஆன்மா. அவ்வான்மாசிவன்அறிவிக்கஅறியும்இயல்புடையது.

**பொழிப்பு:**உடம்புஅறிவில்லாதசடமாகையாலும், இந்திரியங்கள்ஒவ்வொன்றாகஒவ்வொருவிடயங்களைஅறிதலாலும், அந்தக்கரணங்கள்எல்லாங்கூடிஒருவிடயத்தைஅறிதலாலும், பிராணவாயுசடமாதலாலும், விடயங்களைஅறிவதுஆன்மாவாம். அவ்வான்மாசிவன்அறிவிக்கஅறியும்.

## a. ஆன்மாஅறிவுடைப்பொருள்

54. அறிவெனில்வாயில்வேண்டாவன்றெனிலவைதாமென்னை
அறிவதையுதவுமென்னிலசேதனமவைதாமெல்லாம்
அறிபவனறியுந்தன்மையருளுவனென்னிலான்மா
அறிவிலதாகுமீசனசேதனத்தளித்திடானே.

**பதவுரை:**-அறிவுஎனில்வாயில்வேண்டா- ஆன்மாத்தானாகஎவற்றையும்அறியும்தன்மையுடையதெனில்இந்திரியங்கள்வேண்டுவதில்லை, அன்றெனில்அவைதாம்என்னை - ஆன்மாஅறியுந்தன்மைஇல்லாததெனில்,அத்தன்மையுடையஆன்மாவுக்குஇந்திரியங்கள்எதன்பொருட்டு, அறிவதைஉதவும்என்னில்-அவ்விந்திரியங்கள்ஆன்மாவுக்குஅறிவைக்கொடுக்குமென்னில், அவைதாம்அசேதனம்-அவைசடமாதலால்அறிவைக்கொடுக்கமாட்டா, எல்லாம்அறிபவன்அறியும்தன்மைஅருளுவன்என்னில்- எல்லாவற்றையும்அறிகின்றபரமசிவன்ஆன்மாவுக்குஅறியும்தன்மையைக்கொடுப்பரென்னில், ஆன்மாஅறிவுஇலதாகும் - ஆன்மாஇயற்கையில்அறிவில்லாதசடப்பொருளாகவேண்டும். ஈசன்அசேதனத்துஅளித்திடானே- பரமசிவன்அறிவில்லாதசடப்பொருளுக்குஅறிவைக்கொடுக்கமாட்டார்.

**குறிப்பு:-** 1. அறிவெனில்:- மேற்செய்யுளில்ஆன்மாஅறிவினால்அறியுமென்றுகூறியதற்கு, ஈசுவரவிவகாரவாதிகள்சிவசமவாதசைவர்முதலியோர், ஆன்மாத்தானேஎவற்றையும்அறியும், ஒருகருத்தாஅறிவிக்கவேண்டியதில்லைஎன்பர்.

2.அன்றெனில்:- நியாயவைசேடிகர்ஆன்மாஅறிவுடைப்பொருளன்றுஎன்றுசொல்வர்.

3. அறிவதையுதவும்:- சிவசங்கிராந்தவாதிகள்இந்திரியங்கள்ஆன்மாவுக்குஅறிவைக்கொடுக்குமென்பர்.

4. அறிபவனறியுந்தன்மையருளுவன்:- பரிணாமவாதிகள்ஆன்மாவுக்குஅறியுந்தன்மையைப்பரமசிவன்கொடுப்பர்என்பர்.

**பொழிப்பு:-**ஆன்மாத்தானேஎவற்றையும்அறியுந்தன்மையுடையதெனில், அறிகருவிகளானஞானேந்திரியங்கள்அதற்குவேண்டுவதில்லை. ஆன்மாஅறியுந்தன்மைஇல்லாததெனில், அதற்குஅவ்விந்திரியங்களாற்பயனில்லை. அவ்விந்திரியங்களேஆன்மாவுக்குஅறிவையுண்டாக்கும்என்னில், அவைசடமாதலால்அறிவைக்கொடுக்கமாட்டா.

இனிஎல்லாம்அறியவல்லசிவன்ஆன்மாவுக்குஅறியுந்தன்மையைக்கொடுப்பரென்னில், ஆன்மாஇயற்கையில்அறிவில்லாதசடப்பொருளாகவேண்டும்.

சிவன்இயல்புக்குமாறாகஅசேதனப்பொருளுக்குச்சேதனத்தன்மையைக்கொடுக்கமாட்டார்.

ஆதலால்ஆன்மாஇயற்கையில்அறிவுடைப்பொருளாம்.

### b. ஆன்மஅறிவினாற்சுட்டிஅறியப்பட்டபொருளெல்லாம்அசத்து

55. அறிவினாலறிந்தயாவுமசத்தாதலறிதியென்றும்
அறிவினாலறியொணாதேலாவதொன்றின்மைதொன்மை
அறிவுதானொன்றைமுந்தியதுவதுவாகக்காணும்
அறிவுகாணசத்துமற்றதறிவினுக்கறியொணாதே.

**பதவுரை:-**அறிவினால்அறிந்தயாவும்அசத்தாதல்அறிதி- ஆன்மஅறிவினால்அறியப்பட்டசுட்டுப்பொருளெல்லாம்அசத்தாய்அழிந்துபோவனவாம்எனஅறிவாயாக, என்றும்அறிவினால்அறியஒணாதேல்-எக்காலத்திலும்ஆன்மஅறிவினாற்சிவம்அறியப்படாதபொருளாயின், ஆவதுஒன்றுஇன்மை -அதனால்ஆகத்தக்கதுஒன்றுமில்லையாம், தொன்மைஅறிவுதான்ஒன்றைமுந்திஅதுவதுவாகக்காணும்அறிவுகாண்-பழைமையாகியஆன்மஅறிவாவதுஒருவிடயத்தைஇந்திரியங்களாலேமுற்பட்டுப்பொருந்திஅதனதன்வண்ணமாய்நின்றுசுட்டிஅறியும் அறிவாகும், அசத்து - அவ்வறிவாலறிந்தவிடயமேஅசத்தாகும், மற்றதுஅறிவினுக்குஅறியஒணாது- சிவம்ஆன்மஅறிவினாற்சுட்டிஅறியப்படாதது.

குறிப்பு:- 1. அறிவினாலறிந்தயாவுமசத்து:- இங்கேஅறிவுஎன்றதுகருவிகள்வாயிலாகஆன்மாவில்நிகழும்அறிவை. இதுசுட்டறிவுஎன்றும், பாசஞானம்என்றும். அளவையறிவுஎன்றும், கருவியறிவுஎன்றும்சொல்லப்படும்.

அசத்துஎன்றதுகாரியப்பிரபஞ்சமாகியதனுகரணபுவனபோகங்களை. இவைதோன்றியபொழுதுஉள்ளதுபோலக்காணப்பட்டு, அழிந்தபொழுதுஇல்லதாகக்காணப்படுதலால், நிலையில்லாதஅசத்தெனப்படும்.

2. தொன்மைஅறிவு - ஆன்மாவின்இயற்கைஅறிவு

3. காணும்அறிவு - சுட்டிஅறியும்அறிவு.

4. மற்றதறிவினுக்கறியொணாது:- 53ம் செய்யுளிற்கூறியவாறுஆன்மாவுக்குஅறிவித்தலைச்செய்யும்சிவன், விடயங்களைஅறிவதுபோலச், சுட்டிஅறியப்படும்பொருளெனநையாயிகர்முதலியோர்கூறுவர். அவர்கொள்கையைமறுத்துச்சுட்டறிவினால்அறியப்படும்பொருளெல்லாம்அசத்தாய்அழிந்துபோவனஎன்றார். அஃதாவதுபாசஞானபசுஞானங்களால்அறியப்படுவதுஅசத்து; சத்தாகியசிவம்பாசஞானபசுஞானங்களால்அறியப்படாததாய்ப், பதிஞானம்ஒன்றினால்அறியப்படும்பொருள்என்பது.

**பொழிப்பு:**சுட்டறிவினால்அறியப்பட்டபொருள்களெல்லாம்அசத்தாய்அழிந்துபோவனவாம். ஆன்மஅறிவுகருவிகளோடுகூடிஅதனதன்வண்ணமாய்நின்றுசுட்டிஅறியும்விடயங்களேஅசத்தாம். சிவம்ஆன்மஅறிவினால்அறியப்படாதது.

## 3.ஆன்மா சத்தையும்அசத்தையும்அறியும்இயல்பினது

56. எவ்வறிவசத்தறிந்ததெனிலுயிரறியாதீசன்
அவ்வறிவறியானல்லதசேதனமறியாதாவி
செவ்வியகருவிகூடிற்றெரிவுறதருளிற்சேரா
துவ்விருவகையதென்னிலொளியிடுளொருங்குறாவே.

**பதவுரை**:அசத்துஅறிந்ததுஎவ்வறிவுஎனில்-அந்தஅசத்தைஅசத்தென்றறித்ததுஎந்தஅறிவுஎனில், உயிர்அறியாது- அறிவித்தாலன்றிஅறியமாட்டாதஉயிரானதுதானாகஅசத்தைஅசத்தென்றுஅறியமாட்டாது, ஈசன்அவ்வறிவுஅறியான் - முற்றறிவுடையாஈசன்அதனைச்சுட்டிஅறியான், அல்லதுஅசேதனம்அறியாது- மற்றையதாகியபாசம்சடமாதலால்அதுவும்அறியமாட்டாது, ஆவிசெல்வியகருவிகூடின்தெரிவுஉறாது- உயிர்சிறந்தகருவிகளோடுகூடின்அறியுமெனில்தானாகஅறியமாட்டாதஉயிரும்சடமாகியகருவிகளும்கூடின் அறியமாட்டா, அருளிற்சேராது-உயிர்அருளோடுகூடிஅறியுமெனில், பெத்தநிலையில்உயிர்அருளோடுபொருந்தாது. ஆகையால்அந்நிலையில்உயிர்அறியமாட்டாது. உவ்விருவகையதுஎன்னில்-அருளும்கருவிகளுள்கூடிஅறியுமெனில், ஒளிஇருள்ஒருங்குஉறா - ஒளியும்இருளும்போலஅவைஇரண்டும்ஓரிடத்திற்கூடிநில்லா.

**குறிப்பு.-** 1. உயிரறியாது:-ஈசுவரவிவகாரவாதிகள்சிவசமவாதசைவர், ஐக்கியவாதசைவர்முதலியோர்,பிரபஞ்சம்அசத்துப்பொருளென்று, உயிர்அறியுமென்பர். மறுப்பு- அறிவித்தாலன்றிஅறியமாட்டாதஉயிர்தானாகப்பிரபஞ்சத்தைஅசத்தென்றுஅறியமாட்டாது.

2.ஈசனவ்வறிவறியான்:- சிவாத்துவிதசைவர்ஈசன்அறியும்என்பர். மறுப்பு, சிவம்வியாபகஅறிவாதலால்எவற்றினையும்ஒருங்கேஅறிந்துநிற்பதன்றிஏகதேசமாய்ச்சுட்டிஒன்றைஅறியுமாறில்லை, சுட்டிஅறிதலாவதுஇதுகுடம், இதுஆடைஎனநம்மனோர்சுட்டிஅறிதல்போலமுதல்வனும்பொருளைச்சுட்டிஅறிதல்.

3. அசேதனமறியாது:-சிவசமவாதிகள்இந்திரியங்கள்அறியுமென்பர். மறுப்பு - இந்திரியங்கள்சடமாகையால்தாமாகஅறியமாட்டா.

4. ஆவிசெவ்வியகருவிகூடிற்றெரிவுறா:-சங்கிராந்தவாதிகள்உயிருங்கருவிகளும்கூடிஅறியுமென்பர். மறுப்பு - ஆன்மாஅறிவித்தாலொழியஅறியமாட்டாதாகையாலும், கருவிகள்சடமாகையாலும், இவ்விரண்டும்கூடிஅறியமாட்டா.

5. அருளிற்சேரா:- சைவர்உயிரும்அருளுங்கூடிஅறியுமென்பர். மறுப்பு - பெத்தநிலையில்உயிர்அருளிற்பொருந்தாதாகையால், அந்நிலையில்உயிர்அறியமாட்டாது.

6. உவ்விருவகையதென்னிலொளியிருளொருங்குறா:- ஐக்கியவாதிகள்அருளும்கருவிகளுங்கூடிஅறியுமென்பர். மறுப்பு -ஒளியின்முன்இருள்நில்லாதவாறுபோல, அருளின்முன்கருவிகள்முனைத்துநில்லா. ஆகையால்இவ்விரண்டுங்கூடிஅறியமாட்டா.

**பொழிப்பு:**அசத்தைஅசத்தென்றறிந்ததுஎந்தஅறிவெனில்,
அறிவித்தாலன்றிஅறியமாட்டாதஉயிர்தானாகஅதனைஅறியமாட்டாது.
முற்றறிவுடையசிவன்அதனைச்சுட்டிஅறியவேண்டுவதில்லை.
கருவிகள்சடமாதலால்அவைகளும்அறியமாட்டா.

இனி, உயிர்கருவிகளோடுகூடிஅறியுமெனில், தானாகஅறியமாட்டாதஉயிரும்அறிவில்லாதகருவிகளும்கூடிஅறியமாட்டா.

உயிர்அருளோடுகூடிஅறியுமென்னில், பெத்தநிலையில்உயிர்அருளோடுபொருந்தாதாதலால், அந்நிலையில்உயிர்அறியமாட்டாது.

அருளும்கருவிகளும்கூடிஅறியுமென்னில், ஒளியும்இருளும்போலுமாதலின்அவைஇரண்டும்ஒருங்குகூடிநில்லா.

## இதுவுமது.

57.சத்திதுவென்றசத்துத்தானறியாதசத்தைச்
சத்தறிந்தகலவேண்டாவசத்திதுசத்திதென்றோர்
சத்திருளொளியலாக்கண்டன்மையதாமசத்தைச்
சத்துடனின்றுநீக்குந்தன்மையாற்சதசத்தாமே.

**பதவுரை:**அசத்துத்தான்சத்துஇதுஎன்றுஅறியாது- அசத்தாகியபாசம்அறிவில்லாதசடமாகையாற்சத்தாகியசிவத்தைஇதுசத்தென்று. அறியமாட்டாது, அசத்தைச்சத்துஅறிந்துஅகலவேண்டா- சத்தாகியசிவம்வியாபகஅறிவாதலான்அசத்தாகியபாசத்தைப்பகுத்தறிந்துநீங்கவேண்டியதில்லை, ஆதலால், அசத்துஇதுசத்துஇதுஎன்றுஓர்சத்து - அசத்தாகியபாசம்இதுஎன்றும்சத்தாகியசிவம்இதுஎன்றும்அறிகின்றஆன்மாவானது, இருள்ஒளிஅலாக்கண்தன்மையதாம்- இருளோடுகூடியவழிஇருளாகாமலும்ஒளியோடுகூடியவழிஒளியாகாமலும்இவ்விரண்டின்வேறாய்நிற்கும்கண்ணின்தன்மையைஒத்ததாம், அசத்தைச்சத்துடன்நின்றுநீக்குந்தன்மையால்சதசத்தாம் - அசத்தாகியபாசத்தைச்சத்தாகியசிவத்தோடுகூடிநின்றுநீக்கும்இயல்பால்சதசத்துஎனப்படும்.

**குறிப்பு:-** 1. சத்திதுவென்றசத்துத்தானறியாது:- அசத்துச்சடமாதலானும்சத்தின்முன்முனைத்துநில்லாமையானும்,சத்தாகியசிவத்தைஅறியுமாறில்லை. அசத்து-தனுகரணபுவனபோகங்கள். முனைத்துநிற்றல்- சுட்டி. அறியப்படுவதாய்முற்பட்டுநிற்றல்.

சிவசங்கிராந்தவாதிகள்தனுபுவனபோகங்களைசடப்பொருளெனஉடன்பட்டு, ஆன்மாவிளக்குப்போலவிகாரமின்றிஅறிவுமாத்திரையாய்நிற்பதன்றிஒன்றனைஅறியுமாறில்லைஎன்றும், அவ்வான்மாவின்சந்நிதியிற்கரணங்களேபெத்தநிலையில்விடயங்களைஅறிந்தாற்போல, முத்திநிலையிலும்சிவகரணங்களாய்நின்றுசிவத்தைஅறியும்என்றும்கூறுவர். அக்கரணங்கள், பிறிதொன்றினைஉணர்வதற்குக்கருவியாய்நிற்பனவன்றித்தமக்கெனஅறிவில்லாதசடப்பொருளாயிருத்தலானும், சிவத்தின்முன்முனைத்துநில்லாமையானும், அவைசத்தாகியசிவத்தைஅறியுமாறில்லைஎனஅவர்கூற்றையும்மறுத்தவாறு.

2. அசத்தைச்சத்தறிந்தகலவேண்டா:- சிவமாகியசத்தின்தன்மையேஉயிர்க்கும்தன்மையாவதன்றிவேறில்லையாகலிற், சத்தேஅசத்தைஅறியும்என்பர்சிவாத்துவிதசைவர்.

தன்னுள்வியாப்பியமானபசுபாசங்களோடுவேற்றுமையின்றிஉடனாய்நிற்குஞ்சிவத்துக்குச்சுட்டிஅறியும்படிவேறாய்க்கிடப்பதொன்றில்லை. ஆதலால், எல்லாப்பொருள்களோடும்கலந்துஉடனாய்நிற்கும்தன்மையராகியசிவன்அசத்தாகியபிரபஞ்சத்தைஅறியவேண்டின், உடனாய்நின்றுஎல்லாப்பொருளையும்ஒருங்கேஅறிவரேயன்றிநம்மனோர்போலவேறாய்நின்றுஒவ்வொன்றாய்ச்சுட்டிஅறியமாட்டார்என்றுஅவர்கொள்கையைமறுத்து, அசத்தைச்சத்தறிந்தகலவேண்டாஎன்பதைவலியுறுத்தியவாறு.

3. அசத்திதுசத்திதென்றோர்சத்திருளொளியலாக்கண்டன்மையதாம்:- சத்துஅசத்தைஅறிந்துஅனுபவியாது. அசத்துச்சத்தைஅறிந்துஅனுபவியாது. இவ்விரண்டினையும்அறிந்துஅனுபவிக்கும்இயல்புடையதுஇவற்றின்வேறாயஆன்மாவாம். அது, இருளில்மறைபட்டும்இருளல்லாமலும், ஒளியிற்பொருந்திஅறிந்தும்ஒளியல்லாமலும்இருக்கும்கண்இவைஇரண்டினையும்அறிந்துஅனுபவிக்குத்தன்மைபோலாம்.

4. அசத்தைச்சத்துடனின்றுநீக்குந்தன்மையாற்சதசத்தாம்:- ஆன்மாஅறிவிக்கஅறியுந்தன்மையுடையதாதலால், வியஞ்சகமுள்ளவிடத்துஅறிந்தும்வியஞ்சகமில்லாதஇடத்துஅறியாதுமிருக்கும்; பெத்தநிலையிற்கருவிகரணங்களையும்முத்திநிலையிலேதிருவருளையும்வியஞ்சகமாகக்கொண்டுஅறியும். வியஞ்சகம்- வெளிப்படுத்துவதாகியதுணைக்கருவி.

பெத்தநிலையில்ஆணவமலத்தால்மறைப்புண்டும், அசத்தாகியபாசத்தில்அழுந்திஆன்மாஎனஒன்றில்லைஎனும்படியும்இருத்தல்பற்றிஅசத்தாதற்கும், முத்திநிலையிற்சிவத்தோடுகூடிஅப்பாசத்தைஅசத்தென்றறிந்து, அதனினீங்கி, என்றும்ஒருதன்மையதாயும், சிவானந்தத்தைஅனுபவிக்கும்முதன்மையுடையதாயும்இருத்தல்பற்றிச்சத்தாதற்கும்பொதுவாய்நிற்றலின், ஆன்மாசதசத்துஎனப்படும்.

**பொழிப்பு:**அசத்தாகியபாசம்சடமாகையாற்சத்தாகியசிவத்தைஅறியமாட்டாது. சத்தாகியசிவம்வியாபகஅறிவாதலான்அசத்தாகியபாசத்தைப்பகுத்தறியாது. சத்தும்அசத்துமாகியஇரண்டினையும்அறியும்இயல்புடையதுஇவற்றின்வேறாயஆன்மாவாம். இவ்வான்மாதிருவருளோடுகூடியமுத்திநிலையிலேசத்துடன்நின்றுஅசத்தைநீக்கும்தன்மையால்சதசத்துஎனப்படும்.

## மேலதனைஉவமைமுகத்தால்விளக்கல்

58. கண்ணொளிவிளக்களித்துக்காட்டிடுமென்னின்முன்னங்
கண்ணொளியொன்றுமின்றாம்விளக்கொளிகலந்தவற்றைக்
கண்ணொளியகலநின்றேகண்டிடும்வேறுகாணா
கண்ணொளிவிளக்கின்சோதிகலந்திடுங்கருத்தொன்றன்றே.

**பதவுரை**:கண்ஒளிவிளக்குஅளித்துக்காட்டிடும்என்னின்- கண்ணுக்குஒளியைவிளக்குக்கொடுத்துப்பொருள்களைகாட்டுமென்றுசொல்லின், முன்னம்கண்ஒளிஒன்றும்இன்றாம்- விளக்குக்காட்டுவதற்குமுன்புகண்ணுக்குஓர்ஒளியும்இல்லைஎன்றுமுடியும், விளக்குஒளிகலந்தவற்றைக்கண்ஒளிஅகலநின்றேகண்டிடும்- விளக்கொளிகலந்தபொருள்களைக்கண்ணின்ஒளியானதுவேறாகநின்றேகாணும், வேறுகாணா - இப்படிவேறாகநின்றுகாண்கையிலும்விளக்கொளியோடுகூடிக்காண்பதொழியக்கண்ணொளிதனித்துநின்றுகாணமாட்டாது, கண்ஒளிவிளக்கின்சோதிகலந்திடும்- கண்ணொளிவிளக்கொளியோடுகலந்துநிற்கும், கருத்துஒன்றுஅன்று-அவ்வாறுகலந்துநிற்பினும்கருதுமிடத்துஅவைஒன்றல்ல.

பொருள்வேறுபாட்டால்இரண்டாம்.

குறிப்பு- 1. கண்ணொளிவிளக்களித்துக்காட்டிடுமென்னின்............ அகலநின்றேகண்டிடும்:- மேற்செய்யுளிற்கண்ணானதுஒளியையும்இருளையும்அறிவதுபோலச்சத்தையும்அசத்தையும்அறிவதுஆன்மா என்றுகூறப்பட்டதைஒத்துக்கொள்ளாது, ஆன்மாவுக்குஅறியுந்தன்மைஇல்லை, சிவனேஅதற்குஅறியுந்தன்மையைக்கொடுப்பன்என்பர்பரிணாமவாதிகள். விளக்கொளிகலந்தபொருள்களைக்கண்ணொளிஇவற்றின்வேறாய்நின்றுஇவ்விரண்டினையும்காண்பதனால்,கண்ணுக்குத்தனக்கெனஒளிஉண்டென்பதுபோல, ஆன்மாசத்தையும்அசத்தையும்இவற்றின்வேறாய்நின்றுஇவ்விரண்டினையும்அறிவதனால், அவ்வான்மாவுக்குஇயல்பிலேஅறியுந்தன்மைஉண்டென்றுஅவர்கொள்கையைமறுத்து "ஆன்மாவறிவுடைப்பொருள்" என்று 54-ம் செய்யுளிற்கூறியதைஉவமைமுகத்தால்வலியுறுத்திவிளக்கியவாறு.

2.வேறுகாணா:- ஆன்மாவுக்குஇயற்கைஅறிவுண்டாயினும், விளக்கொளியின்உபகாரமின்றிப்பொருள்களைக்காணமாட்டாதகண்போல,

திருவருளின்உபகாரமின்றிச்சத்தையும்அசத்தையும்அவ்வான்மாஅறியமாட்டாதுஎன்பது. "அறிவினாலறியும்" என்று 53-ம் செய்யுளிற்கூறியதைஇவ்வுவமைமுகத்தால்விளக்கியவாறு.

3. கண்ணொளிவிளக்கின்சோதிகலந்திடும்:- கண்ணொளியானதுவிளக்கொளிகாட்டியபொருளோடுகலந்துநின்றுஅப்பொருளைக்காணும்பொழுது, விளக்கொளிஇருந்தும்இல்லாததுபோலஅக்கண்ணுக்குப்புலப்படாதிருக்கும். அதுபோல, ஆன்மாஅசத்தாகியபிரபஞ்சத்தில்அழுந்திநிற்கும்பொழுது, சத்தாகியசிவம்இருந்தும்இல்லாததுபோலஅவ்வான்மாவுக்குத்தோன்றாதிருக்கும்.

இனி, கண்ணொளியானதுவிளக்கொளியோடுகலந்துநிற்கும்பொழுது, அப்பொருள்களிருந்தும்இல்லாததுபோலஅக்கண்ணுக்குப்புலப்படாதிருக்கும். அதுபோல, ஆன்மாசிவத்தோடுகலந்துநிற்கும்அவதரத்தில், அசத்தாகியபிரபஞ்சம்இருந்தும்இல்லாததுபோலஅவ்வான்மாவுக்குத்தோன்றாதிருக்கும்.

இந்தஉவமையால்மேற்செய்யுளில்"அசத்தைச்சத்துடனின்றுநீக்குந்தன்மை" என்றுசொல்லியதுவிளக்கப்பட்டது.

4.கருத்தொன்றன்று:- சிவமும்ஆன்மாவும்அத்துவிதமாய்க்கலந்துநிற்கும்முறைமைபிரித்தறியவாராது. ஆயினும்அவைஒன்றன்று. பொருள்வேறுபாட்டால்இரண்டாம். கருத்து - நோக்குமிடத்து. ஆராயுமிடத்து.

**பொழிப்பு:**விளக்கேகண்ணுக்குஒளியைக்கொடுத்துப்பொருள்களைக்காட்டுமென்னில், அதன்முன்புகண்ணுக்குஇயற்கையில்ஒளிஇல்லைஎன்றுமுடியும். விளக்கொளிகலந்தபொருள்களைக்கண்ணொளியானதுவேறாய்நின்றுகாணும், அங்கனம்காண்கையிலும்விளக்கொளியோடுகூடிக்காண்பதொழியக், கண்ணொளிதனித்துநின்றுகாணமாட்டாது, கண்னொளிவிளக்கொளியோடுகலந்துநிற்கும்; அவ்வாறுநிற்பினும்அவைஒன்றல்ல. பொருள்வேறுபட்டால்இரண்டாம்.

## 4.ஆன்மா சார்ந்ததன்வண்ணமாய்அறியும்இயல்பினது

59. ஓரிடத்திருத்தன்மாயாவுருநிறைந்திடுதலொன்றாம்
பேரிடத்துறைதறானேபிறங்கறிவாகிநிற்றல்
சோர்வுடைச்சடநிகழ்த்தலெனுமிவைசொல்லார்நல்லோர்
ஓரிடத்துணருமுண்மையொளிதருமுபலம்போலும்

பதவுரை: ஓர்இடத்துஇருத்தல்-ஆன்மாதேகத்திலேஓரிடத்திருந்துஅறிதலும், மாயாஉருநிறைந்திடுதல்-மாயாகாரியமானதேகத்திலேநிறைந்துநின்றுஅறிதலும், ஒன்றாம்பேரிடத்துஉறைதல் -

எவ்விடத்தும்பூரணமாய்நின்றறிதலும், தானேபிறங்குஅறிவாகிநிற்றல் - ஒருகருத்தாஅறிவியாமல்தானேவிளங்குகின்றஅறிவாய்நின்றறிதலும், சோர்வுடைச்சடம்நிகழ்த்தல்- அறிவில்லாதசடப்பொருள்களாகியமனம்முதலியகருவிகள்அறிவைக்கொடுக்கஅறிதலும், எனும்இவைநல்லோர்சொல்லார்- என்னும்இக்கொள்கைகளைநல்லோராகியசைவசித்தாந்திகள்சொல்லார்கள், உணரும்உண்மைஓரிடத்து - ஆன்மாஅறியும்தன்மையைவிசாரிக்குமிடத்து, ஒளிதரும்உபலம்போலும் - ஒளியைத்தரும்படிகக்கற்போலச்சார்ந்ததன்வண்ணமாய்நின்றறியும்.

குறிப்பு: 1. ஓரிடத்திருத்தல்:- மிருதிநூலார்ஆன்மாசரீரத்திலேஇதயத்தானத்திலேமிகச்சிறியதாய்இருக்கும், அதன்அறிவுஎங்கும்வியாபிக்கும்என்பர்.

மறுப்புஓரிடத்திருக்குமாயின்உருவமுமுடையதாய்அழிந்துபோவதுமாயிருக்கும். அன்றியும், குணமானதுஅக்குணத்தையுடையபொருளளவிலேநிற்பதன்றிஅப்பொருளின்வேறாய்வியாபித்துநிற்றல்செல்லாமையால், ஓரிடத்திருக்கும்ஆன்மாஎங்கும்வியாபித்தறியும்என்றல்கூடாது,

2.

மாயாவுருநிறைந்திடுதல்சமணர்ஆன்மாசரீரமெங்கும்நிறைந்துநின்றுஅறியும்என்பர்.மறுப்புசரீரமெங்கும்ஆன்மாநிறைந்துநிற்குமாயின், சொப்பனம்முதலியஅவத்தைகள்உண்டாகாதிருக்கவேண்டும். அன்றியும், சாக்கிராவத்தையிலும்ஒவ்வொன்றாகஅறியாமல்ஏககாலத்தில்ஐம்பொறியிலும்அறிவுநிகழ்தல்வேண்டும். அன்றியும்பெரியதேகத்திற்குப்பெரியஅறிவும்சிறியதேகத்திற்குச்சிறியஅறிவுமாதல்வேண்டும்; உடம்பில்ஓர்அங்கங்குறையஉயிரிலும்ஒருபங்குகுறையவேண்டும்; உடம்புஅழியுங்கால்உயிரும்அழியவேண்டும். ஆதலால்அவர்மதமும்அடாது.

3. ஒன்றாம்பேரிடத்துறைதல்:- ஐக்கியவாதிகள்ஆன்மாமுதல்வனைப்போலஎவ்விடத்தும்வியாபியாய்நின்றறியும்என்பர். மறுப்பு - ஆன்மாசாக்கிரம்முதலியஐந்தவத்தைகளிலும்தங்குதலாலும், பிறப்பிறப்பாகியவரவுபோக்குகளைப்பொருந்துதலாலும், ஐம்பொறிவழியாய்வரும்ஐந்துவிடயங்களையும்ஒன்றொன்றாகஅறிவதன்றிஏககாலத்தில்ஒருங்கேஅறியாமையாலும், ஆன்மாவியாபியாய்நின்றறியும்என்பதுபொருந்தாது.

4. தானேபிறங்கறிவாகிநிற்றல்:- சிவசமவாதசைவரும்ஈசுவரவவிகாரவாதசைவரும்ஐக்கவாதசைவரும்ஆன்மாத்தானேஅறியும், ஒருவர்அறிவிக்கவேண்டுவதில்லைஎன்பர். மறுப்பு -அப்படிஅறியுமாயின். சத்தாதிவிடயங்களைஅறியுமிடத்துப்பொறிகளைக்கொண்டும்அந்தக்கரணங்களைக்கொண்டும்அறியவேண்டுவதில்லை. ஆதலால்அவர்மதமும்அடாது.

5. சோர்வுடைச்சடநிகழ்த்தல்:- நியாயவைசேடிகர்ஆன்மாஅறிவில்லாதபொருள்,மனம்முதலியகருவிகள்ஆன்மாவுக்குஅறிவைக்கொடுக்குமென்பர். மறுப்பு -அறியாமையுடையஆன்மாகருவிகளினால்அறிவுடையதாய்வரமாட்டாது.

6.ஓரிடத்துணருமுண்மையொளிதருமுபலம்போலும்;

படிகம்தன்னைச்சார்ந்தபொருளின்வண்ணமாய்விளங்குவதுபோல,

ஆன்மாவும்அசத்தொடுசார்ந்தவிடத்துஅசத்தாயும்சத்தொடுசார்ந்தவிடத்துச்சத்தாயும்இவ்வாறுசார்ந்ததன்வண்ணமாய்நின்றுஅறியும்இயல்புடையதுஎன்பதாம்.

7. அறிவிக்கஅறியும்இயல்பு,

சத்தையும்அசத்தையும்அறியும்இயல்புசார்ந்ததன்வண்ணமாய்நின்றுஅறியும்இயல்பு,

ஆகியஇவைமூன்றும்ஆன்மாவின்சிறப்பிலக்கணங்களாம்.

**பொழிப்பு:**ஆன்மாவின்இயல்புணர்ந்தவர்கள்ஆன்மாதேகத்தில்ஓரிடத்திலிருந்துஅறியும்என்றும்,

தேகமுழுவதும்நிறைந்துநின்றுஅறியும்என்றும்எவ்விடத்தும்வியாபியாய்நின்றறியும்என்றும்,

அறிவிக்கஅறிதலின்றித்தானேஅறியும்என்றும்,

மனம்முதலியகருவிகள்அறிவைக்கொடுக்கஅறியும்என்றும்சொல்லார்.

ஆன்மாஅறியுந்தன்மைஎப்படியெனின்,

தன்னைஅடுத்தபொருள்களின்நிறங்களையேதன்னிறமாகக்கொண்டுகாட்டும்படிகம்போலச்சார்ந்தன்வண்ணமாய்நின்றறியும்.

## II. ஐந்தவத்தையினிலக்கணம்

1. காரியகேவலம், (60)
2. காரியசகலமும்காரியசுத்தமும், (61).
3. காரணாவத்தைகளின்இயல்பு. (62).

## 1. காரியகேவலம்

60. எண்ணவொன்றிலாததீதமெய்தியதுரியத்தொன்று
நண்ணிடுஞ்சுழுத்திதன்னினயந்துளதொன்றுபின்னும்
அண்ணிடுங்கனவுதன்னிலாறேழாஞ்சாக்கிரத்தின்
கண்ணுறுமஞ்சாறாயகருவிகண்மருவுந்தானே.

**பதவுரை**:அதீதம்எண்ணஒன்றிலாவது - துரியாதீதத்திலேஎன்னுதற்குஒருகருவியுமின்றிப்புருடன் மாத்திரமிருக்கும், எய்தியதுரியத்துஒன்றுநண்ணிடும் - அதன்பின்பொருந்தியதுரியத்திற்பிராணவாயுஎன்னும்ஒருகருவிபொருந்தும், சுழுத்திதன்னின்நயந்துஉளதுஒன்று - சுழுத்தியிலேவிரும்பியிருப்பதுசித்தம்என்னும்ஒருகருவியாம், கனவுதன்னில்ஆறுஏழாம்- சொப்பனத்திலேசத்தாதிஐந்தும்வசனாதிஐந்தும்மனம்புத்திஅகங்காரம்மூன்றுமாகியபதின்மூன்றுகருவிகளும் பொருந்தும், பின்னும்அண்ணிடும் -இவையன்றிஎஞ்சியஒன்பதுவாயுக்களும்பொருந்தும், சாக்கிரத்தின்கண்அஞ்சுஆறுஆயஉறும் - சாக்கிரத்தில்ஞானேந்திரியங்கள்ஐந்தும்கன்மேந்திரியங்கள்ஐந்தும்பொருந்தும். கருவிகள்மருவுந்தானே - இங்ஙனம்கருவிகள்புருடனைப்பொருந்தித்தொழிற்படும்.

**குறிப்பு:-** 1. காரணாவத்தைகேவலம்சகலம்சுத்தம்எனமூன்றென்றுபொதுவதிகாரத்திற்கூறப்பட்டது. இவற்றின்காரியமும், கேவலம்சகலம்சுத்தம்எனமூன்றாம். இக்காரியகேவலசகலசுத்தங்கள்ஒவ்வொன்றும்சாக்கிரம்சொப்பனம்சுழுத்திதுரியம்துரியாதீதம்என்னும்ஐந்தவத்தைகளைஉடையதாயிருக்கும். அதனால், காரியாவத்தைபதினைந்தாம். காரியகேவலம்சகலத்திற்கேவலம்என்றும்கீழாலவத்தைஎன்றும்சொல்லப்படும்.

காரியகேவலம்ஐந்தும்இச்செய்யுளாற்கூறி, காரியசகலம்ஐந்தும்காரியசுத்தம்ஐந்தும்வருஞ்செய்யுளாற்கூறுகின்றார்.

2. எண்ணவொன்றிலாததீதம்:- துரியாதீதத்தானமாகியமூலாதாரத்திலேகருவிகளொன்றுமின்றிப்புருடன்மாத்திரமிருக்கும்.

3. துரியத்தொன்று:- துரியத்தானமாகியஉத்தியிலேபிராணவாயுஎன்னும்ஒருகருவிபுருடனைப்பொருந்திநின்றுதொழிற்படும்.

4. சுழுத்திதன்னினயந்துளதொன்று:- சுழுத்தித்தானமாகியஇருதயத்திலேபிராணவாயுசித்தம்என்னும்கருவிகள்இரண்டும்புருடனைப்பொருந்திநின்றுதொழிற்படும்.

5. கனவுதன்னிலாறேழாம்பின்னும்அண்ணிடும்:-சொப்பனத்தானமாகியகண்டத்திலே, பிராணவாயுசித்தம்என்னும்கருவிகளோடு, சத்தாதிஐந்தும், வசனாதிஐந்தும், மனம்புத்திஅகங்காரம்மூன்றுமாகியபதின்மூன்றுகருவிகளும், ஒன்பதுவாயுக்களும், புருடனைச்சேர்ந்துநின்றுதொழிற்படும்.

சத்தாதி- விடயதன்மாத்திரைஐந்துஎஞ்சியஒன்பதுவாயுக்கள் - அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்என்பன.

6. சாக்கிரத்தின்கண்அஞ்சாறாயஉறும்:- சாக்கிரத்தானமாகியஇலலாடத்திலே, கண்டத்திலேதொழிற்படுங்கருவிகளோடு, ஞானேந்திரியகன்மேந்திரியங்கள்பத்தும்புருடனைச்சேர்ந்துதொழிற்படும்.

அஞ்சுஆறுஆயகருவிகள் - அஞ்சுஎன்னும்நெறியாய்வந்தகருவிகள். இக்கீழாலவத்தையிலேநிகழுஞ்சாக்கிரத்திற்தொழிற்படுங்கருவிகள்முப்பத்துநான்கனுள், அந்தக்கரணமும், ஞானேந்திரியகன்மேந்திரியங்களுமாகியபதினான்கும்அகக்கருவிகளாம். சத்தாதிஐந்தும், வசனாதிஐந்தும். வாயுக்கள்பத்துமாகியஇருபதும்புறக்கருவிகளாம். ஏனையபுறக்கருவிகள்நாற்பதும், பூதங்கள்ஐந்தும்தன்மாத்திரைகள்ஐந்தும், தமதுசத்திமடங்கித்தொழிற்படா. சிவதத்துவமும், கலாதிகளும்அவத்தைக்குஏதுவாகா

7. இச்செய்யுள்சகலத்திற்கேவலாவத்தையைமுதனூலிற்போலஅதீதம்முதலாகஉணர்த்திற்று. (பார்.சி.போ. 4.3, "ஒன்றணையா").

**பொழிப்பு:**கீழாலவத்தையிலேநிகழும்துரியாதீதத்திற்கருவிகளொன்றுமின்றிப்புருடன்மாத்திரமிருக்கும். துரியத்திற்பிராணவாயுபுருடனைப்பொருந்தித்தொழிற்படும். சுழூத்தியில்அதனோடுசித்தமும்பொருந்தித்தொழிற்படும். சொப்பனத்தில்அவ்விரண்டினோடுசத்தாதிஐந்தும், வசனாதிஐந்தும், மனம்புத்திஅகங்காரம்மூன்றும்.வாயுக்கள்ஒன்பதும்பொருந்தித்தொழிற்படும். சாக்கிரத்தில்அவற்றோடுஞானேந்திரியங்கள்ஐந்தும், கன்மேந்திரியங்கள்ஐந்தும்பொருந்தித்தொழிற்படும்.

## 2. காரியசகலமும்காரியசுத்தமும்

61. இவ்வகையவத்தைதன்னிலெய்திடுங்கரணமெல்லா
மெய்வகையிடத்திலுற்றுமேவுமாகண்டுமிக்க
பொய்வகைப்பவமகற்றப்புரிந்திடிலருளாலாங்கே
ஐவகையவத்தையுய்க்குமறிவினாலறிந்துகொள்ளே.

**பதவுரை**:இவ்வகைஅவத்தைதன்னில்எய்திடும்கரணம்எல்லாம்- இந்தஐந்துவகையானஅவத்தைகளிற்பொருந்துகின்றகருவிகள்யாவும், மெய்வகைஇடத்தில்உற்றுமேவுகண்டு- சரீரத்தின்கூறுபாடானஇல்லாடத்தானத்திலேஐந்தவத்தையும்அடைந்துவிடயங்களைக்கிரகிக்கும்முறைமை யினைநீஅறிந்து, மிக்கபொய்வகைப்பலம்அகற்றப்புரிந்திடில்- மிகவும்பொய்யானஇந்தவிடயத்தோற்றரவுகளைஒழிக்கும்படிஞானாசாரியர்அருளியமுறையிற்சாதனைசெய்

யின்,அருளால்ஆங்கேஜவகைஅவத்தைஉய்க்கும் -
திருவருளின்உபகாரத்தால்அவ்விடத்திலேநின்மலசாக்கிரம்முதலியசுத்தாவத்தைகள்ஐந்தும்செலுத்தப்படும்.
அறிவினால்அறிந்துகொள் - இவற்றைஞானாசாரியரதுஉபதேசத்தால்வரும்அநுபவஅறிவால்அறிக.

**குறிப்பு:-**1. இவ்வகைஅவத்தைதன்னிலெய்திடுங்கரணமெல்லாமெய்வகையிடத்திலுற்று:-
மேற்செய்யுளிற்கூறியவாறுஇல்லாடத்தானத்தினின்றுஅங்கங்கேஅவத்தைப்பட்டுக்கீழ்ச்சென்றுமூலாதாரத்தைஅடைந்தபின்,
பின்னும்அவ்வாறேஅங்கங்கேஅவத்தைப்பட்டுமேற்சென்றுஇலலாடத்தானத்தைஅடைந்தபுருடன்,
அச்சாக்கிராவத்தையின்கண்ணும்சாக்கிரசாக்கிரம், சாக்கிரசொப்பனம், சாக்கிரசுழுத்தி, சாக்கிரதுரியம்,சாக்கிரதுரியாதீதம்எனஐந்தவத்தையும்படும். இந்தஐந்தவத்தைகளும்காரியசகலம்என்றும், சகலத்திற்சகலம்என்றும்,மத்தியாலவத்தைஎன்றும்,நிலையிற்படுமவத்தைஎன்றும்சொல்லப்படும்.

சாக்கிரசாக்கிரத்திற்சிவதத்துவம்முதற்சுத்தவித்தியாதத்துவம்இறுதியாகஐந்துகருவிகளும்,
சாக்கிரசொப்பனத்தில்சிவத்துவமுதல்ஈசுரதத்துவம்இறுதியாகியநான்குகருவிகளும்,
சாக்கிரசுழுத்தியிற்சிவதத்துவம்முதல்சாதாக்கியதத்துவம்இறுதியாகியமூன்றுகருவிகளும்,சாக்கிரதுரியத்திற்சிவதத்துவம்சத்திதத்துவம்என்னும்இரண்டுகருவிகளும்,
சாக்கிரதுரியாதீதத்திற்சிவதத்துவம்என்னும்ஒருகருவியும்கலாதிகளைச்செலுத்திநிற்கும்.

மேவுமாகண்டு:-
கருவிகளால்விடயங்களைஅறியுந்தோறும்அக்கருவிகள்அதிநுணுக்கமாய்இடையீடின்றிநிகழ்வதைநுண்ணுணர்வால்நீகண்டுஎன்பதாம். அஃதாவது,
சாக்கிரசாக்கிரம்முதலியஐந்தவத்தையிலும்ஆன்மாஅந்தக்கரணங்கள்வாயிலாகஅவ்வப்பொறிகளால்அவ்வவ்விடயங்களைஉணர்ந்து, அவ்வப்போதுஅவ்வவ்விடயங்களினின்றுநீங்குதலைக்காணல்.மேவும் ஆ -
மேவுமாறு.

3. மிக்கபொய்வகைப்பவமகற்றப்புரிந்திடில்:-
இந்தமத்தியாலவத்தையில்ஆன்மபோதமானதுபஞ்சவிடயங்களையும்பற்றுவதும்விடுவதுமாகஇடைவிடாதுசுழலும், பற்றுவதும்விடுவதும்நினைப்புமறப்பாகியசகலகேவலங்களாம்.
அங்ஙனஞ்சகலகேவலப்படுவதுஆன்மாவின்இயற்கைக்குணமன்றுஎன்றும்,
இந்திரியங்களையும்கரணங்களையும்கூடியவிடத்துத்தோன்றியவிடயபோதம்என்றும்அறிந்து,
இக்கருவிகளும்அவற்றாற்பற்றியவிடயங்களும்தாக்காவண்ணம்தனதுஅறிவைமடக்கிப்புருவமத்தியிலேநிறுத்திப்பஞ்சாக்கரத்தைமுறைப்படிஓதிவரின்,

அஃதுஅக்கருவிகளும்விடயங்களும்ஆன்மாவைமயக்காவண்ணம்ஒழித்துஞானத்தைவிளக்கிப்பூரணநிலையிற்செலுத்துதல்சுத்தாவத்தையாம்.

4. ஐவகையவத்தையுய்க்கும்:- சுத்தாவத்தையாவதுகேவலசகலம்இரண்டும்தாக்காதுவிடச்சிவனருட்சார்பினில்ஆன்மாநிலைபெற்றுநிற்றல், இதுகாரியசுத்தாவத்தைஎன்றும், நின்மலாவத்தைஎன்றும்சொல்லப்படும். இந்தநின்மலாவத்தையில், நின்மலசாக்கிரம்நின்மலசொப்பனம், நின்மலசுழுத்தி, நின்மலதுரியம், நின்மலதுரியாதீதம்எனஐந்துஅவத்தைகளுண்டாம். அவற்றுள்அருளாலேதன்னைஅறிவதுநின்மலசாக்கிரம். அருளாலேதன்னைஅறிந்தபின்தனக்கொருசேட்டையின்றி,அந்தஅருளேதனக்குஆதாரமாய்அவ்வருளிலேதான் அசைவறநின்றுஅவ்வருளைத்தரிசிப்பதுநின்மலசொப்பனம், ஆன்மாவின்இச்சாஞானக்கிரியைகள்தோன்றாதுஅவ்வருளேதானாகிஎதிரீடுசிறிதுமின்றியிருக்கும்அவதரம்நின்மலசுழுத்தி.மலவாசனைசற்றுமின்றிஆனந்தவொளி (சுகப்பிரபை) தோன்றுமிடம்நின்மலதுரியம். ஆநந்தாநுபவத்தைப்பெற்றுஅவ்வாறுநந்தானுபவத்தைஅறிந்ததானுமின்றி, ஆநந்தமாய்நின்றமுதலுமின்றி, அவ்வாநந்தமேதானாய்அதீதப்பட்டவிடம்நின்மலதுரியாதீதம். இஃதன்றியும், இவற்றிற்குவேறும்பலவாகப்பொருள்கூறுவர். பார். சி. சி. 4.36.மறை ஞானதேவிகாலோத்தரம். (செ.31)

**பொழிப்பு:**மேற்கூறியஐந்தவத்தைகளிலும்தொழிற்படுங்கருவிகளெல்லாம்இல்லாடத்தானத்திலேஐந்தவத்தையையும்பொருந்திடவிடயங்களைக்கிரகிக்கும்முறைமையைநீஅறிந்து, அவ்விடயத்தோற்றரவுகள்ஒழியும்படிஞானாசாரியர்உபதேசித்தமுறைப்படிசாதனைசெய்துவரின், அவ்வில்லாடத்தானத்திலேநின்மலசாக்கிரம்முதலியஐந்தவத்தைகளும்நிகழும்.

## 3. காரணாவத்தைகளின்இயல்பு

62. நீக்கமிலதீதமாசுநிறைந்தகேவலமாநீர்மை
சாக்கிரங்கலாதிசேர்ந்தசகலமாந்தன்மையாகும்
ஊக்கமிலிரண்டுங்கூடாதொழியவோர்நிலையினீடுஞ்
சாக்கிராதீதஞ்சுத்தத்தகைமையதாகுந்தானே.

**பதவுரை**:நீக்கமில்அதீதம்-காரியகேவலத்திற்கருவிகள்சுழன்றுஅஞ்ஞானம்நீங்காததுரியாதீதமானது. மாசுநிறைந்தகேவலமாம்நீர்மை - ஆணவமலம்நிறைந்திருக்கின்றகாரணகேவலத்தின்தன்மையைஒக்கும். சாக்கிரம் - காரியசகலத்திற்சாக்கிரமானது, கலாதிசேர்ந்தசகலமாம்தன்மையாகும்- கலையாதிதத்துவங்கள்சேர்ந்துதொழிற்படும்காரணசகலத்தின்தன்மையாயிருக்கும். ஊக்கம்இல்இரண்டும்கூடாதுஒழியஓர்நிலையில்நீடும்சாக்கிராதீதம் -

மயக்கவிகற்பங்களைச்செய்கின்றகேவலசகலம்என்னும்இரண்டும்வலிகெட்டுத்தாக்காதுவிடஒப்பற்றஅருள்நிலையில்நிலைபெற்றிருக்குஞ்சாக்கிராதீதமானது, சுத்தத்தகைமையதுஆகும்-பரமுத்தியானதுகாரணசுத்தாவத்தையின்தன்மையதாகும்.

**குறிப்பு:** 1. நீக்கமிலதீதம்:- 60-ம் செய்யுளிற்கூறியகீழாலவத்தையிலேநிகழும்துரியாதீதஅவத்தை.

2. மாசுநிறைந்தகேவலம்:- ஆன்மாவானதுதனதுஇச்சாஞானக்கிரியைகளின்நிகழ்ச்சிசிறிதுமின்றி, ஆணவமலத்தாலேமுழுதும்மறைக்கப்பட்டுத்தான்மாத்திரமாயிருக்கும்காரணகேவலநிலை. பார். செ. 33.

3.சாக்கிரம்:- 61-ம் செய்யுளிற்கூறியமத்தியாலவத்தையிலேநிகழும்சாக்கிராவத்தை.

4. கலாதிசேர்ந்தசகலம்:-காரணசகலம், அஃதாவது, ஆன்மாகலாதிகளுடனேகூடிநின்றுசிருட்டிதொடங்கிக்கன்மத்துக்கீடாகநாநாயோனிகளிலும்புகுந்துசுவர்க்கநரகங்களைஅநுபவித்துச்சர்வசங்காரமளவும்சனனமரணப்பட்டுத்திரியும்அவதரம். (பார்.செ. 48.)

3. சாக்கிராதீதம்:- சகலகேவலங்களிற்பொருந்தாமலும், தற்போதமுனைப்பின்றியும், சிவத்தோடுஏகனாகிநிற்கும்நிலை. (பார். செ. 80)

6.காரியாவத்தைகளைக்கூறுமுகத்தாற்காரணாவத்தைகளின்தன்மைகள்விளக்கப்பட்டன .

**பொழிப்பு:**காரியகேவலத்திலேதுரியாதீதமானதுகாரணகேவலத்தின்தன்மையைஒக்கும்.

காரியசகலத்திற்சாக்கிரமானதுகாரணசகலத்தின்தன்மையாயிருக்கும்.

காரியசுத்தத்திற்சாக்கிராதீதமானதுபரமுத்தியானசுத்தாவத்தையின்தன்மையதாயிருக்கும்.

## III.உணர்த்துந்தன்மை

1. ஆன்மாவிடயங்களைஅறியும்முறைமை, (63).
2. சிவன்அறிவிக்கஆன்மாஅறிதல், (64)
    - பிறர்கொள்கைகளைமறுத்தல். (65)
    - அறிவிக்கஅறியும்வகையைஉவமைமுகத்தால்விளக்குதல், (66 - 67)

## 1.ஆன்மா விடயங்களைஅறியும்முறைமை

63.மருவியபொறியிலொன்றுமாபூதமைந்திலொன்றுங்
கருவிகணான்குநீங்காக்கலாதிகளைந்துங்கூடி
ஒருபுலனுக்குமிந்தவொழுங்கொழிந்துயிருமொன்றைத்
தெரிவுறாதவனோழிந்தத்திரள்களும்செயலிலாவே

**பதவுரை:**மருவியபொறியில்ஒன்றும்-தத்தமக்கானவிடயங்களைப்பொருந்தியஐம்பொறிகளில்ஒன்றும். மாபூதம்ஐந்தில்ஒன்றும்- பெரியபூதங்கள்ஐந்தில்ஒன்றும், கருவிகள்நான்கும்-அந்தக்கரணங்கள்நான்கும்,நீங்காதகலாதிகள்ஐந்தும்கூடி - விட்டுநீங்காதகலாதிகள்ஐந்தும்ஆகியபதினொருதத்துவங்களையுங்கூடி, ஒருபுலன்நுகரும் - ஆன்மாஒருவிடயத்தைப்புசிக்கும்,இந்தஒழுங்குஒழிந்துஉயிரும்ஒன்றைத்தெரிவுறாது-இந்தமுறையைவிட்டுஆன்மாவும்ஒன்றைஅறியமாட்டாது, அவன்ஒழிந்துஅத்திரள்களும்செயல்இலாவே-அவ்வான்மாவைஒழிந்துஅந்தத்தத்துவங்களும்தொழிற்படுவனவல்ல.

**குறிப்பு:** 1. இச்செய்யுள்முதல் 67-ஆம் செய்யுள்இறுதியாகியஐந்துசெய்யுள்களாலும்சிவன்அறிவிக்கஆன்மாவிடயங்களைஅறியும்என்பதைஉணர்த்துகிறார்.

2.மருவிய பொறியிலொன்றும்:-ஆன்மாவிடயங்களைஅறியும்பொழுதுஞானேந்திரியங்களைத்துணையாகக்கொண்டுஅவற்றைஅறியும். அங்ஙனமாயினும், அவ்விந்திரியங்கள்ஐந்தும்ஒரேசமயத்தில்ஒருவிடயத்தைஅறிவனவல்ல; தனித்தனியேஅவ்வவ்விடயத்துக்கேற்றஅவ்வவ்விந்திரியமேஅவ்வவ்விடயத்தைஅறிதற்குத்துணையாய்நிற்கும். ஆகையால் "மருவியபொறியிலொன்றும்" என்றார்.

3. மாபூதமைந்திலொன்றும்:- பூதம்என்றதுஅகப்பூதங்களை. அவற்றுள்ஒவ்வொன்றும், அவ்வப்பூதங்களுக்குரியஇந்திரியங்கள்ஒவ்வொன்றுக்கும்பற்றுக்கோடாகநின்றுவிடயங்களைஅறியுமாறுசெய்யும்,பூதங்களின்துணையில்லாதவழி, இந்திரியங்கள்விடயங்களைஅறியுமாறில்லையாம். அஃதாவது, சுரோத்திரஇந்திரியம்ஆகாயம்என்னும்பூதத்தினிடமாகநின்றுசத்தம்என்னும்விடயத்தைஅறியும். இப்பூதத்தின்துணைஇல்லையாயின்சத்தம்என்னும்விடயம்புலப்படுமாறில்லையாம். இங்ஙனம்ஏனையபூதங்களுக்கும்கண்டுகொள்க.

4. நீங்காக்கலாதிகள்:- அந்தக்கரணங்களைவிட்டுநீங்காதகலாதிகள். கலைசித்தத்துக்குஉட்கருவியாய்நின்றுபோகங்களிலேநினைவைஎழுப்பும். நியதிபுத்திக்குஉட்கருவியாய்நின்றுபோகங்களைநிச்சயித்துஅறுதிப்படுத்தும், வித்தைஅகங்காரத்துக்குஉட்கருவியாய்நின்றுபோகங்களிலேஅறிவைஎழுப்பும். அராகம்மனத்துக்குஉட்கருவியாய்நின்றுபோகங்களிலேஆசையைஎழுப்பும்.ஆதலால் "நீங்காக்கருவிகள்" என்றார்.

5. ஒருபுலன்நுகரும்:-ஆன்மாவிடயங்களைநுகரும்முறை.இச்சாஞானக்கிரியைகள்என்னும்சிவசத்திகள்சிவதத்துவங்களைச்செலுத்

த. சிவதத்துவங்கள்கலாதிகளைச்செலுத்த, கலாதிகள்ஆன்மாவின்இச்சாஞானக்கிரியைகளைஎழுப்ப, ஆன்மாவின்இச்சைஅந்தக்கரணங்களிடத்தும், ஞானம்ஞானேந்திரியங்களிடத்தும். கிரியைகன்மேந்திரியங்களிடத்தும்நின்றுவிடயங்களைஅறிந்துபற்றிஅவற்றில்அழுந்தும்.

சிவசத்திகள்சிவதத்துவங்களைச்செலுத்தும்முறை:-இச்சாசத்திஈசுவரதத்துவத்தைச்செலுத்தும். கிரியாசத்திசத்திதத்துவத்தையும்சாதாக்கியதத்துவத்தையும்செலுத்தும். ஞானசத்திசிவதத்துவத்தையும்சுத்தவித்தையையும்செலுத்தும்.

சிவதத்துவங்கள்கலாதிகளைச்செலுத்தும்வகை :- நாதவடிவாகியசிவதத்துவம்புருடனைப்பிரேரிக்கும். விந்துவடிவாகியசத்திதத்துவம்காலத்தையும்நியதியையும்கலையையும்பிரேரிக்கும். சாதாக்கியதத்துவம்மூலப்பிரகிருதியைப்பிரேரிக்கும். ஈசுவரதத்துவம்அராகத்தைப்பிரேரிக்கும். சுத்தவித்தைவித்தையைப்பிரேரிக்கும்.

கலாதிகள்ஆன்மாவின்இச்சாஞானக்கிரியைகளைஎழுப்பும்வகை :- கலைஆன்மாவின்கிரியையைஎழுப்பும். வித்தைஅறிவைஎழுப்பும். அராகம்ஆசையைஎழுப்பும். காலம்கன்மத்தைக்கூட்டிநிற்கும். நியதிஅக்கன்மத்தைவரைந்துநிற்கும். புருடன்ஆசைப்பட்டபதார்த்தங்களில்மயங்கும். பிரகிருதிபோகங்களிலேஅழுந்துவிக்கும்

இங்ஙனம்ஆன்மாபஞ்சவிடயங்களையும்ஞானேந்திரியங்களால்அறிந்துகன்மேந்திரியங்களால்பற்றிஅந்தக்கரணங்களால்அவற்றில்அழுந்தும்முறையைக்கண்டுகொள்க.

**பொழிப்பு:**ஆன்மாஒருவிடயத்தைநுகரும்பொழுதுஐம்பொறிகளிலொன்றும், பஞ்சபூதங்களிலொன்றும், அந்தக்கரணங்கள்நான்கும், கலாதிகள்ஐந்தும்ஆகியபதினொருதத்துவங்களையும்பொருந்திநின்றுஅவற்றின்உதவியால்நுகர்ச்சிசெய்யும். இந்தமுறைமையிலன்றிஆன்மாஒன்றைஅறியமாட்டாது. ஆன்மாஇல்லாமல்அத்தத்துவங்களும்தொழிற்படமாட்டா.

## 2. சிவன்அறிவிக்கஆன்மாஅறிதல்

64. தனக்கெனவறிவிலாதான்றானிவையறிந்துசாரான்
தனக்கெனவறிவிலாதவாயிறானறியாசாரத்
தனக்கெனவறிவிலாதான்றத்துவவன்னரூபன்
தனக்கெனவறிவானாலிச்சகலமுநுகருந்தானே.

**பதவுரை**:தனக்குளனஅறிவுஇலாதான்தான்இவைஅறிந்துசாரான் -
தானாகஅறியஇயலாதஆன்மாதானேஇந்தத்தத்துவங்களைஅறிந்துகூடமாட்டாது.
தனக்குளனஅறிவுஇலாதவாயில்தான்சாரஅறியா-
தமக்கெனஓர்அறிவுமில்லாதசடமானஇந்திரியம்முதலியவைகளும்தாமாகஆன்மாவைக்கூடஅறியா,
தனக்குளனஅறிவுஇலாதான்தத்துவவன்னரூபன்-
தானாகஅறியஇயலாதஆன்மாதத்துவங்களின்சொரூபமேதன்சொரூபமாகக்கொண்டுநிற்பவன்,தனக்குளனஅறிவானால்இச்சகலமும்நுகரும்தானே -
ஆதலால்தானாகஅறியும்இயல்புடையசிவன்அக்கருவிகளைக்கூட்டஅவன்செயலால்அக்கருவிகளோடுகூடிநின்றுஎல்லாவற்றையும்புசிப்பன்.

**குறிப்பு:** 1. முற்செய்யுளிற்கூறியவாறுஆன்மாவும்கருவிகளுந்தம்மிற்கூடிவிடயங்களைஅறியுமாயின், கருத்தாஒருவர்அறிவிக்கவேண்டுவதில்லைஎன்னும்ஆசங்கைக்குவிடைகூறுகின்றார்

2. தனக்கெனஅறிவிலாதான்:- ஆன்மாசிற்றறிவுடையனாயினும், அறிவித்தாலறியும்இயல்புடையனாதலின், "தனக்கெனவறிவிலாதான்" என்றார்.(பார். . 53.)

3. தத்துவவன்னரூபன்:- பஞ்சவன்னங்களைஅடுத்தபடிகம்போல, ஆன்மாதன்னைஅடுத்தகருவிகளின்மயமாய்இருக்கும்இயல்புடையன்என்பது. (பார்.செ.59.)

4. இச்சகலமும்:- சத்தாதிவிடயங்களையெல்லாம்.

**பொழிப்பு:**ஒருவர்உணர்த்தினாலன்றித்தானேஉணரமாட்டாதஉயிர்இத்தத்துவங்களைத்தான்அறிந்துசாரமாட்டாது. சடமாகியஅத்தத்துவங்களும்தாமாகஉயிரைச்சாரஅறியா. உயிர்தன்னாற்சாரப்பட்டதத்துவங்களின்சொரூபமேதன்சொரூபமாகக்கொண்டுநிற்கும். ஆதலால், இயற்கைஉணர்வினனாகியமுதல்வன்அக்கருவிகளைக்கூட்ட, அவன்செயலால்அக்கருவிகளோடுகூடிநின்றுஆன்மாபோகங்களைநுகரும்.

## பிறர்கொள்கைகளைமறுத்தல்

65. கண்டறிபுலன்கள்காணுங்கருத்தினாலொருத்தன்ஞானம்
கொண்டுளமறியுமென்னிற்கொள்பவன்முதலியாகும்
மண்டியவுணர்வுயிர்க்காமன்னிநின்றறியுமென்னில்
உண்டிடவேண்டுவானுக்கொருவன்வேறுண்டலாமே.

**பதவுரை**:கண்டுஅறிபுலன்கள்கருத்தினால்காணும்-
இந்திரியங்கள்வாயிலாகக்கண்டும்கேட்டும்உண்டும்உயிர்த்தும்உற்றும்அறியப்படும்ஐவகைவிடயங்களையும்

ஆன்மாமனத்தைத்துணையாகக்கொண்டுஅறியும்அதுபோல,

ஒருத்தன்ஞானம்கொண்டுஉளம்அறியும்,என்னில் -

ஒப்பற்றசிவனுடையஞானத்தைத்துணையாகக்கொண்டுஆன்மாவிடயங்களைஅறியும்என்னில்,

கொள்பவன்முதலியாகும் - இப்படிஅறிந்துகொள்ளும்ஆன்மாவேகருத்தாவாவன்என்னும்குற்றமாம்,

மண்டியஉணர்வுஉயிர்க்காமன்னிநின்றுஅறியும்என்னில் -

சிவனுடையபூரணஞானமானதுஆன்மாவிற்பொருந்திநின்றுஆன்மாவுக்காகஅறியும்என்னில்,

உண்டிடவேண்டுவானுக்குவேறுஒருவன்உண்டலாம்-

பசியாலுண்ணவிரும்பினஒருவனுக்காகவேறொருவன்உண்ணல்போலாம். ஆதலால். அதுவும்குற்றமாம்.

**குறிப்பு:** 1. கண்டறிபுலன்கள். . . . . . . .உளமறியுமென்னில் - ஆன்மாமனத்தைத்துணையாகக்கொண்டுவிடயங்களைஅறிந்தாற்போலச், சிவன்விகாரமறநிற்கஅவனருளைக்கொண்டுஆன்மாமுதன்மையாகிநின்றறியும்என்பவர்அவிகாரவாதிகள்.

2. மண்டியவுணர்வு..... அறியுமென்னில்:- ஆன்மாவுக்குச்சிற்றறிவுதானுமில்லை. சிவனேஅவ்வான்மாவைப்பொருந்திநின்றுஅவனுக்காகஅறிவர்என்பர்பரிணாமவாதிகள். மண்டியஅறிவு- மிகுந்தஅறிவு, பூரணஞானம்.

**பொழிப்பு:**ஐம்பொறிகள்வாயிலாகவரும்விடயங்களைஆன்மாமனத்தைத்துணையாகக்கொண்டுஅவற்றைஅறியுமாறுபோல, ஆன்மாவும்சிவஞானத்தைத்துணையாகக்கொண்டுவிடயங்களைஅறியுமென்னில், ஆன்மாவேகருத்தாவாவன். ஆகையால்அதுபொருந்தாது.

சிவனுடையஞானம்ஆன்மாவிற்பொருந்திநின்றுஆன்மாவுக்காகஅறியுமென்னில், பசியினாலுண்ணவேண்டியஒருவனுக்காகமற்றொருவன்உண்டதுபோலமுடியும். ஆதலால்அதுவும்பொருந்தாது.

ஆகையாற்சிவன்அறிவிக்கஆன்மாவிடயங்களைஅறியும்.

### அறிவிக்கஅறியும்வகையைஉவமைமுகத்தால்விளக்குதல்

66. இருணனியிரவிதான்வந்திரித்தலுமிரவிலெண்ணும்
பொருணிலைகண்டுமாந்தர்பொருந்திடுமாறுபோல
மருணிலையெங்குநீங்கமகிழ்ந்துயிர்தன்னுண்மன்னும்
அருளையுமொழியஞாலத்தறிந்தவாறறியுமன்றே.

**பதவுரை:**இரவிதான்வந்துஇருள்நனிஇரித்தலும் - ஆதித்தன்வந்துஇருளைமிகவும்நீக்கியபொழுது, இரவில்எண்ணும்பொருள்நிலைகண்டுமாந்தர்பொருந்திடுமாறுபோல-

அவ்விராக்காலத்தில்காணவேண்டுமெனஎண்ணியிருந்தபொருள்களின்நிலையைக்கண்டுமாநுடர்அவற்றைஅடையுமாறுபோல,மருள்நிலைஎங்கும்நீங்கஉயிர்மகிழ்ந்து -கலையாதிகருவிகளாற்கேவலநிலைமுற்றும்நீங்கியபொழுதுஆன்மாவிடயங்களைக்கண்டுமகிழ்வுற்று, தன்னுள்மன்னும்அருளையும்ஒழிய-தன்னுள்ளேநிலைபெற்றிருக்கும்திருவருளின்உபகாரத்தையும்மறந்து, ஞாலத்துஅறிந்தவாறுஅறியும்-பூமியின்கண்மாநுடர்அறிந்தாற்போலதானாகவேதன்செயலால்அறிந்ததாகக்கருதிஅறியும்.

**குறிப்பு:** 1. மனிதர்இராக்காலத்தில்ஒருபொருளினிலையைக்கண்டுஅடையமாட்டார்கள்.இருள்அவரதுகண்ணொளியையும்பொருளையும்மறைத்துநிற்கும். அதனால்அப்பொருளிருக்கும்இடத்தைக்கண்டுஅடையமுடியாமல்மயங்கிவருந்துவர். அவ்விராக்காலம்கழிந்துசூரியன்உதித்தவுடனேஅதன்சகாயத்தாற்கண்ணும்ஒளிபெறும், சூரியவொளியும்பொருளைக்காட்டும்.அதனால்அவர்அப்பொருளைக்கண்டறிந்துபொருந்துவர்.பொருந்தினும்தம்செயலாற்கண்டதேஎனநினைத்தலன்றிச்சூரியனதுஉபகாரத்தாற்கண்டதாகநினையார். உயிர்களின்செயலும்அத்தன்மையதேயாம். கேவலத்தில்ஆணவமலமானதுஆன்மாவின்அறிவைமயக்கிநிற்கும்,அதனால்ஆன்மாஅறிவுமிழந்துவிடயங்களையும்காணமாட்டாதுமயங்கியிருக்கும். முதல்வன்கலாதிதத்துவங்களைத்தோற்றுவித்துவிளக்கஞ்செய்துஉபகரித்தலால், ஆன்மாஏகதேசமாய்அறிவுவிளங்கப்பெற்றுஅக்கருவிகளோடுகூடிவிடயங்களைஅறிந்துஅவற்றைஅநுபவிக்கும். ஆயினும்தன்செயலாலேதானாகஅறிந்துஅநுபவிப்பதாகநினைக்குமேயன்றித்தன்னுள்ளேநின்றுஉணர்த்திஉபகரிக்கும்திருவருளின்உபகாரத்தைஅறியமாட்டாது.

2. ஞாலத்துஅறிந்தவாறு:-சூரியஉதயத்தில்சூரியனதுஉபகாரத்தாற்பொருள்களைக்காணினும்,மனிதர்அவ்வுபகாரத்தைக்கருதாதுதாமாகக்கண்டதாகக்கருதுவதுபோல்.

**பொழிப்பு:**இராக்காலத்திலேமறைத்துநின்றஇருளைச்சூரியன்உதித்துநீக்கியபொழுது, மனிதர்தாம்அவ்விராக்காலத்தில்அடையவேண்டும்எனஎண்ணியிருந்தபொருள்களின்நிலையைக்கண்டுஅறிந்துஅடைவர். அப்படிக்கண்டறிந்ததுசூரியனதுஉபகாரத்தால்என்றுநினையார். அதுபோல, கேவலமறைப்பிலிருந்தஉயிர்கலையாதிகருவிகளால்அவ்விருள்நீங்கப்பெற்றுத்திருவருள்உபகாரத்தைமறந்துதானாகவேதன்செயலால்அறிவதாகக்கருதிஅறியும்.

## இதுவுமது

67.அறிந்திடுமனாதிவாயிலானவையவன்றனாலே
அறிந்திடுமென்றுமொன்றுமறிந்திடாவவைபோலியாவும்
அறிந்திடுமறியுந்தன்மையறிந்திடாகன்மத்தொன்மை
அறிந்தவைநுகருமாறுமருளுவனமலன்றானே.

**பதவுரை**:அறிந்திடும்மனாதிவாயிலானவைஅவன்றனாலேஎன்றும்அறிந்திடும் -விடயங்களைஅறிகின்றமனம்முதலியஅந்தக்கரணங்களும்இந்திரியங்களுமானவைகள்ஆன்மாவினாலேஅவ் விடயங்களைஎப்பொழுதும்அறியும், ஒன்றும்அறிந்திடா-அப்படிஆன்மாவினால்அறிகிறோமென்பதைஅவற்றிலொன்றும்அறியமாட்டா, அவைபோல்யாவும்அறிந்திடும்-அக்கரணங்களையும்இந்திரியங்களையும்போலஆன்மாக்களும்சிவனால்யாவற்றையும்அறிந்திடும், அறியுந்தன்மைஅறிந்திடா -அப்படிச்சிவனால்அறிகின்றோமென்னும்தன்மையைஅறியமாட்டா. கன்மத்தொன்மைஅறிந்துஅவைநுகருமாறும்அருளுவன்அமலன்தானே -முன்செய்தவினைப்பகுதிகளைஅறிந்துகருவிகளைக்கூட்டிஅவ்வினைப்பயன்களைஅநுபவிக்கும்படியும்செய்வர்நின்மலராகியசிவனே.

### பொழிப்பு

:அந்தக்கரணங்களும்ஐம்பொறிகளும்ஆன்மாவினதுசகாயத்தால்விடயங்களைஎப்பொழுதும்அறியும். அப்படிஆன்மாவினால்அறிகின்றோம்என்பதைஅவற்றில்ஒருகருவியும்அறியமாட்டாது. அதுபோலஆன்மாக்களும்சிவன்அறிவிக்கயாவற்றையும்அறியும். அப்படிச்சிவனால்அறிகின்றோமென்பதைஅறியமாட்டா. கன்மப்பகுதிகளைஅறிந்துகருவிகளைக்கூட்டிஅக்கன்மப்பயன்களைஅநுபவிக்கும்படிசெய்பவர்நின்மலனாகிய சிவனாம்.

## IV. ஞானவாய்மை

1. ஞானம்வரும்முறை (68)
2. ஞானத்தினியல்பு. (69-70)

### 1. ஞானம்வரும்முறை

68. காட்டிடுங்கரணமொன்றுமில்லையேற்காணொணாதாம்
நாட்டியவிவற்றான்ஞானநணுகவுமொண்ணாமுன்னம்

ஈட்டியதவத்தினாலேயிறையருளுருவாய்வந்து

கூட்டிடுமிவற்றைநீக்கிக்குரைகழல்குறுகுமாறே

பதவுரை: காட்டிடும்கரணம்ஒன்றும்இல்லையேல்காணஒணாதாம் - காட்டும்அறிகருவிகளாகியகரணங்கள்ஒன்றுமில்லையாயின்ஆன்மாவால்ஒன்றையும்அறியவொண்ணாதாம். நாட்டியஇவற்றால்ஞானம்நணுகவும்ஒண்ணா- இங்கேசொன்னஇக்கருவிகளாலேஉண்மைஞானத்தைஅடையவும்இயலாது, முன்னம்ஈட்டியதவத்தினாலேஇறைஅருள்உருவாய்வந்து- முற்சென்மங்களிலேசெய்தசரியைகிரியாயோகங்களின்பயனால்இருவினையொப்பும்சத்திநிபாதமும்வரஅதுவரையில்உண்ணின்றுஉணர்த்தியபரமசிவன்திருவருளேதிருமேனியாகக்கொண்டுகுருமூர்த்தியாய்எழுந்தருளிவந்து,இவற்றைநீக்கி - தீக்கைசெய்துஇக்கருவிகளைநீக்கி, குரைகழல்குறுகுமாறு - பரமசிவனதுதிருவடியைஅடையும்படி, கூட்டிடும் - ஞானம்பற்றச்செய்தருளுவர்.

**குறிப்பு:-** 1. காட்டிடுங்கரணமொன்றும்........ஞானநணுகவுமொண்ணா:- ஆன்மாபெத்தநிலையிற்கருவிகளைக்கூட்டிஉணர்த்தஉணருமேயன்றி, அக்கருவிகளின்சேர்க்கையின்றிஉணரமாட்டாது. இக்கருவிகளோடுகூடிஅறியும்அறிவுபாசஞானம்பசுஞானமாகியஏகதேசஞானமேயாம். முற்றுணர்வாகியமெய்ஞ்ஞானம் (பதிஞானம்) இவற்றால்வரமாட்டாது. அன்றியும்அவைஅம்மெய்ஞ்ஞானத்துக்குத்தடையாயுமிருக்கும்.

2. முன்னமீட்டியதவத்தினாலே. . . . . . .குரைகழல்குறுகுமாறு:- ஆன்மாகருவிகரணங்களைப்பெற்றுஅவற்றால்வரும்சிற்றறிவுசிறுசெயல்களால்வினைகளைச்செய்தும், வினைப்பயனைஅனுபவித்தும்பிறந்திறந்துவரும்பொழுதுசத்துவகுணசம்பந்தம்முதலியவற்றாலும், திருவருளின்துணையினாலும், சரியைகிரியாயோகங்களைச்செய்யநேரும். அப்படிச்செய்துமுதிர்ச்சிபெற்றஅத்தவவிசேடத்தால்முன்னேசொன்னபடிஇருவினையொப்பும்சத்திநிபாதமும்வந்தெய்தும். (பார். செ. 48) அப்பொழுது, அதற்குமுன்னேகருவிகரணங்களைக்கொண்டுமறைந்துஉண்ணின்றுஉணர்த்தியபரமசிவன், திருவருளேதிருமேனியாகக்கொண்டுகுருமூர்த்தியாய்வெளிப்பட்டுவந்துதீக்கைசெய்துஉண்மைஞானத்தைஅருளிஆன்மவியல்பைஉணர்த்துவர். அவ்வாறுணர்த்தப்பட்டஆன்மா, கருவிகள்சடமாகியபொய்ப்பொருளென்றும், தான்அவற்றின்வேறாகியசித்துப்பொருளென்றும்அறிந்து, அக்கருவிகளால்மயக்குறாதுநீங்கப்பெறும். அதன்பின், இதுகாறும்அக்கருவிகளேதாரகமாகநின்றஆன்மா, சிவபெருமான்திருவடியைத்தாரகமாகத்தலைப்படும். (பார். செ.8)

பரமசிவன்குருமூர்த்தியாய்வருவரெனஇங்கேகூறியதுசகலவர்க்கத்துயிர்களுக்குஅருள்செய்யும்முறைமையையாம். விஞ்ஞானாகலருக்குப்பரமசிவன்அறிவுக்கறிவாய்நின்றுஉணர்த்துவர். பிரளயாகலருக்குநாற்புயம்திரிநேத்திரம்நிலகண்டம்முதலியஉறுப்புகளையுடையஸ்ரீகண்டவடிவேகுருவடிவாகக்காட்டிநின்றுஉணர்த்துவர்.

சகலருக்குமானுடவடிவாய்க்குருமூர்த்தியைஇடமாகக்கொண்டுஆவேசித்துநின்றுஅருள்செய்வர்.

சிவன்வடிவங்கொள்ளுமுறைஅதிட்டானபக்கமெனவும்ஆவேசபக்கமெனவும்இருவகைப்படும்.

அனந்தாதிகிருத்தியகர்த்தாக்களைநிலைக்களமாகக்கொள்ளுதல்அதிட்டானபக்கம். மெய்கண்டதேவர், உமாபதிசிவன்முதலியகுருமூர்த்திகளைநிலைக்களமாகக்கொள்ளுதல்ஆவேசபக்கம்

**பொழிப்பு** :அறிகருவிகளாகியகரணங்கள்இல்லையாயின், ஆன்மாஒன்றையும்அறியவியலாது. இக்கரணங்களாலேஉண்மைஞானம்உதிக்கவுமாட்டாது.

இச்கரணங்களைக்கொண்டுபிறவிகள்தோறும்ஈட்டியசரியைகிரியாயோகவிசேடத்தினாலேபரமசிவன்திருவருளேதிருமேனியாகக்கொண்டுகுருமூர்த்தியாய்எழுந்தருளிவந்துஇக்கரணங்களைநீக்கித்திருவடிநீழலைஅடையும்படி, அந்தஉண்மைஞானத்தைக்கொடுத்தருளுவர்.

## 2. ஞானத்தினியல்பு

69.பன்னிறங்கவருந்தொன்மைப்படிகநீடொளியும்பன்மை
மன்னிலங்கியம்புந்தந்தவளரொளிபோலவையந்
தன்னகம்பயிலுநற்சிற்சடங்களின்றன்மைதாவா
நன்னலம்பெறநிறைந்தஞானமேஞானமென்பர்

**பதவுரை**:பல்நிறம்கவரும்தொன்மைப்படிகம்நீடுஒளியும்பன்மைமன்இலங்குஇயல்பும்தந்தவளர்ஒளிபோல - பலநிறங்களையும்கவருகின்றபழையபளிங்குக்குமிக்கஒளியையும்பலநிறங்கள்பொருந்திவிளங்கும்தன்மையையும்கொடுத்தஆதித்தனதுபேரொளிபோல,

வையம்தன்அகம்பயிலும்,நற்சித்சடங்களின்தன்மைதாவாநல்நலம்பெறநிறைந்தஞானமேஞானம்என்பர்- பூமியினிடத்துப்பொருந்திக்காரியப்படும்நல்லசித்தும்சடமுமாகியபொருள்களின்தன்மைகளைத்தான்பொருந்தாதுநல்லபயனைப்பெறுமாறுஎங்கும்பரிபூரணமாய்நிறைந்தசிவஞானமேஉண்மைஞானம்என்றுசொல்வர்பெரியோர்.

**குறிப்பு:-** 1.

சூரியன்கீழ்த்திசைமேற்றிசைகளில்சார்ந்துநிற்கும்பொழுதுஅதன்ஒளிபடிகத்திற்படஅப்படிகமானதுதன்னைவந்தடுத்தபொருள்களினதுநிறங்களைத்தன்னிறமாகக்கவர்ந்துவிளங்கும்.

சூரியன்உச்சியில்வந்தபொழுதுஅதனதுஒளியிற்பொருந்திநின்றபடிகம்தனதுஒளியைமாத்திரம்உடையதாகிநிற்கும். இப்படிப்படிகம்இருவகைஒளியையும்பெறுதற்குஏதுவாகநின்றதுசூரியனதுஒளியேயாம். ஆயினும், அவ்வொளிமற்றைப்பொருள்களின்நிறங்களையாவதுபடிகத்தின்நிறத்தையாவதுதான்பொருந்துவதில்லை. தான்எப்பொழுதும்தன்னொளியோடுசுயம்பிரகாசமாகவேநிற்கும். அதுபோல, ஆன்மாத்தன்னால்சாரப்பட்டகருவிகளால்வரும்அறிவைப்பெறச்செய்வதும், அக்கருவிகளைவிட்டுநீங்கித்தன்னியல்பாகியஆன்மசொரூபத்தைப்பெறச்செய்வதும்மேலாகியசிவஞானமேயாம். அவ்வாறுகருவிகளும்ஆன்மாவும்தன்னாற்காரியப்படுத்தப்படினும், அவற்றின்தன்மைகளைஅந்தஞானம்பொருந்தமாட்டாது. தான்சுயம்பிரகாசமாகவேநிற்கும். அப்படிப்பட்டஞானமேஞானம்என்றுசிறப்பித்துச்சொல்லும்இயல்பினதாம்.

2. படிகம்ஆன்மாவுக்குவமை. வன்னங்கள்பாசத்துக்குவமை. சூரியவொளிதிருவருள்ஞானத்துக்குவமை.

3.நன்னலம்பெற:- முத்தியின்பம்பெறுமாறுமலபரிபாகம்வந்தஆன்மாக்கள் (நற்சித்து) திருவருள்ஞானத்தைப்பெறும்படிஎன்றுபொருளுரைப்பினுமாம்.

பொழிப்பு:

படிகமானதுதன்னைஅடுத்தபலபொருள்களின்நிறங்களையும்தன்னிறமாகக்கொள்ளும்படிசெய்வதும், அந்நிறங்களைவிட்டுத்தனதுசொந்தநிறத்தையேகொள்ளும்படிசெய்வதும்ஆதித்தனதுஒளியேயாம். அப்படிச்செய்யும்அவ்வொளி, தான்அவற்றின்தன்மைகளைப்பொருந்தமாட்டாது. அதுபோலப்பூமியிலேதன்னிடத்துப்பொருந்திக்காரியப்படும்சித்தும்சடமுமாகியபொருள்களின்தன்மைகளைத் தான்பொருந்தாது,முத்தியின்பம்பெறுமாறுஎங்கும்பரிபூரணமாய்விளங்குகின்றசிவஞானமேமேலாகியஞானமாம்.

## இதுவுமது

70.மாயைமாமாயைமாயாவருமிருவினையின்வாய்மை
யாயவாருயிரின்மேவுமருளினிலிருளாய்நிற்கும்
மாயைமாமாயைமாயாவருமிருவினையின்வாய்மை
யாயவாருயிரின்மேவுமருளினிலொளியாய்நிற்கும்.

**பதவுரை**:மாயைமாமாயை - அசுத்தமாயையும்சுத்தமாயையும், மாயாவரும்இருவினையின் - ஒழியாமல்வரும்புண்ணியபாவங்களுமாகியஇவற்றின், வாய்மைஆய-உண்மையேயாய்நின்று (போகங்களைஅனுபவிக்கும்),ஆர்உயிரின்மேவும் -அரியஉயிரினிடத்திலேபொருந்திய, மருளினால் - மருள்நிலையில், இருளாய்நிற்கும் -அந்தஞானம்வெளிப்படாதுமறைந்துநிற்கும். மாயைமாமாயை - அசுத்தமாயையும்சுத்தமாயையும், மாயாவரும்இருவினையின்-

ஒழியாமல்வரும்புண்ணியபாவங்களுமாகியஇவற்றின், வாய்மைஆய - உண்மையைஅறிந்து (அவற்றினீங்கிநிற்கும்) -ஆர்உயிரின்மேவும்-அரியஉயிரினிடத்திலேபொருந்திய, அருளினில் - அருள்நிலையில், ஒளியாய்நிற்கும் - அந்தஞானம்வெளிப்பட்டுப்பிரகாசமாய்நிற்கும்.

**குறிப்பு :-** 1. மாயைமாமாயை.... இருளாய்நிற்கும்:- ஆன்மாசார்ந்ததன்வண்ணமாய்நின்றுஅறியும்இயல்புடையது. அவ்வான்மாமாயாகன்மங்களைக்கூடியவிடத்துஅவற்றின்இயல்பையும்ஆன்மாவாகியதனதுஇயல்பையும்சிவத்தின்இயல்பையும்அறியாது, அம்மாயாகன்மங்கள்வசத்ததாய்நின்றுபோகங்களைஅனுபவிக்கும். அங்ஙனம்நிற்பதுமலமறைப்பினாலாம். அந்நிலையில்ஆணவமலம்மேலிட்டுச்சிவஞானந்தோன்றாதுநிற்குமாதலால் "இருளாய்நிற்கும்" என்றார்.

கன்மம்பிரவாகம்போலத்தோன்றியும்அழிந்தும்மாறிமாறிவருதலால் "மாயாவருமிருவினை" என்றார். (பார். செ.28.கு.3.)

மருள் - ஆணவமலமறைப்பினாற்சிவஞானத்தைஅறியவியலாதஆன்மாவின்அஞ்ஞானநிலை.

2. மாயைமாமாயை ... ஒளியாய்நிற்கும்:- ஆன்மாமாயாகன்மங்களோடுகூடிஇன்பத்துன்பங்களைநுகர்ந்துவரும்காலத்திலேஇருவினையொப்பும்மலபரிபாகமும்உண்டாகும். அப்பொழுதுஞானாசாரியரதுஅனுக்கிரகத்தால்அம்மாயாகன்மங்களின்இயல்பையும், தனதுஇயல்பையும். சிவத்தின்இயல்பையும், அவ்வான்மாஅறியும். அங்ஙனம்அறிந்தஆன்மாஅம்மாயாகன்மங்களினின்றுநீங்கிநிற்கும். அந்நிலையிற்சிவஞானம்மேலிட்டுப்பிரகாசித்துநிற்குமாதலால், 'ஒளியாய்நிற்கும்" என்றார்.

வாய்மையாய:- நான்காம்அடியிலுள்ள "ஆய"-ஆராய்ந்தறியும். ஆயும்என்பதுஆயஎனத்திரிந்துநின்றது.ஆய்தல் - ஆராய்ந்தறிதல்.

**பொழிப்பு:**மாயைகன்மங்களோடுகூடியஆன்மாவின்மருள்நிலையிற்சிவஞானம்வெளிப்படாதுமறைந்துநிற்கும். அவற்றின்இயல்புகளைஅறிந்துநீங்கியஅருள்நிலையில்அதுவெளிப்பட்டுப்பிரகாசமாய்நிற்கும்.

## V. ஞானத்தால்வரும்பயன்

**பயன்வகுத்துக்கூறல், (71).**

1.ஆன்மதரிசனம்,

- ஞானதரிசனத்தில்ஆன்மதரிசனமும்தத்துவசுத்தியும்நிகழ்தல்.(72).

2.ஆன்மசுத்தி

- சிவதரிசனத்தில்ஆன்மசுத்திநிகழ்தல்.(73).

- ஞேயத்தைப்பற்றியஆசங்கையும்மறுப்பும்.(74)
- ஞானமேஞேயத்தைத்தரிசிப்பிக்கும், (75)
- சிவசமவாதிகள்ஆசங்கை, (76).
- சிவசமவாதிகள்ஆசங்கைக்குவிடை, (77).
- ஆன்மசுத்தியின்பயன், (18)
- ஐக்கியவாதிகள்ஆசங்கைக்குவிடை, (79).
- சாக்கிராதீதம் (80).
- கருவிகளைஒடுக்குதற்குஉபாயம், (81).
- தற்போதம்ஒழித்தற்குஉபாயம்.(82).

3. ஆன்மலாபம்.

- ஞானத்தின்வகை, (83),
- ஞானநிட்டை, (84).
- உபாயநிட்டை, (85).
- பாவனையாற்சிவத்தைஅடையஇயலாமை,(86)
- அத்துவிதநிலை,(87).
- ஆணவமலநீக்கம், (88).
- கன்மமலநீக்கம், (89).

## பயன்வகுத்துக்கூறல்

71. தேசுறமருவுமான்மதெரிசனமான்மசுத்தி
ஆசிலாவானமலாபமாகமூன்றாகுமூன்றும்
பாசமதகலஞானம்பற்றறான்பணியைநீத்தல்
ஏகினேயத்தழுந்தலெனுமிவற்றடங்குமன்றே.

**பதவுரை**:தேசுஉறமருவும்ஆன்மதெரிசனம்ஆன்மசுத்திஆசுஇலாஆன்மலாபம்ஆகமூன்றாம்-ஞானத்தைஅடைதலினால்வரும்பயன்விளக்கம்மிகப்பொருந்தியஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, குற்றமற்றஆன்மலாபம்எனமூன்றாம், மூன்றும்-இந்தமூன்றும், பாசம்அதுஅகலஞானம்பற்றல் - பாசமானதுநீங்கஞானத்தைத்தரிசித்தல். தான்பணியைநீத்தல்-தன்செயலைவிடுத்தல், ஏசில்நேயத்துஅழுந்தல் - குற்றமற்றஞேயத்தழுந்துதல், எனும்இவற்றுஅடங்கும்-என்றுசொல்லப்பட்டஇம்மூன்றனுள்ளும்அடங்கும்.

**குறிப்பு**:-ஞானம்பற்றல் - ஞானதரிசனம், சிவரூபம், அருள்தரிசனம்.

**பொழிப்பு**:ஆன்மாஞானத்தைஅடைதலினால்வரும்பயன்ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, ஆன்மலாபம்எனமூன்றாம். அவைஞானதரிசனம், தான்பணியைநீத்தல், ஞேயத்தழுந்தல்என்னும்இவற்றில்அடங்கும்.

### 1. ஆன்மதரிசனம்

### ஞானதரிசனத்தில்ஆன்மதரிசனமும்தத்துவசுத்தியும்நிகழ்தல்

72.தன்னறிவதனாலேதுந்தனக்கறிவில்லையேனுந்
தன்னறிவாகவெல்லாந்தனித்தனிபயனருந்தும்
தன்னறிவறியுந்தன்மைதன்னாலேதனையறிந்தால்
தன்னையுந்தானேகாணுந்தானதுவாகிநின்றே.

**பதவுரை**:தன்அறிவதனால்ஏதும்அறிவுதனக்குஇல்லைஏனும் -ஆன்மாத்தன்னுடையஇயற்கைஅறிவினால்எதனையும்அறியும்இயல்புதனக்குஇல்லையாயினும், தன்அறிவாக-தன்னுடையஅறிவினாலேஅறிந்துஅனுபவிப்பவனாகக்கருதி, பயன்எல்லாம்தனித்தனிஅருந்தும் -கருவிகள்வாயிலாகவரும்போகங்கள்எல்லாவற்றையும்ஒவ்வொன்றாகஅனுபவிக்கும், தன்னாலேதனைஅறிந்தால்- சிவஞானத்தாலேஅந்தஞானத்தைஅறிந்தால், தன்அறிவுஅறியுந்தன்மை -தனதுஅறிவானதுகருவிகளோடுகூடிநின்றுவிடயங்களைஅறியும்முறைமையையும், தன்னையும் -ஆன்மாவாகியதனதுஇயல்பையும், தான்அதுவாகிநின்று- தான்அந்தச்சிவஞானத்தோடுகூடிநின்று, தானேகாணும் -அவ்வான்மாவேதரிசிக்கும்.

**குறிப்பு**:-1. தன்னறிவதனாலேதுந்..........தனித்தனிபயனருந்தும் : -சிவன்நால்வகைவாக்குகளாலும்கலையாதிதத்துவங்களாலும்ஆன்மஅறிவைவிளங்கச்செய்து, விடயபோகங்களைஆன்மாநுகரும்படிசெய்வர். ஆன்மாஅங்ஙனம்நுகருங்கால், திருவருளால்அறிந்துஅருந்துகிறேன்என்பதனைஅறியாது; தன்அறிவினாலேதான்அறிந்துதான்அருந்துகிறேன்எனநினைக்கும். மலமறைப்புடையபெத்தநிலையில்ஆன்மாவின்இயல்புஇதுவாம்.

2. தன்னறிவறியுந்தன்மை:- மலபரிபாகம்வந்துதிருவருள்தோன்றியவிடத்து, ஆன்மாதன்னாலறியப்பட்டவிடயங்களைக்கருவிகளைக்கொண்டறிந்ததென்றும், அக்கருவிகள்மாயாகாரியமென்றும், சடமென்றும், தனக்குஅந்நியமென்றும், தனக்குஅவ்வாறறிவித்ததுதிருவருளென்றும், அக்கருவிகளைப்போலச்சடமுமன்றித்திருவருளைப்போலப்பேரறிவுமன்றிநின்றுஅறிந்தஅறிவுதான்என்றும்,

கருவிகளையும்திருவருளையும்தன்னையும்அந்தஅருளாலேகாணப்பெறும். இங்ஙனம்தன்னறிவிலேவிளங்கக்காண்பதுஆன்மரூபம். இதுநின்மலசாக்கிரம்.

3. தன்னாலேதனையறிந்தால்:- அருளாலேஅருளைஅறிந்தால். 'அவனருளாலேஅவன்றாள்வணங்கி' என்பதும்இது.

4. தன்னையுந்தானேகாணுந்தானதுவாகிநின்று:-- ஆன்மாவின்செயல்தோன்றாதுஅருளில்வியாப்பியமாய்நின்றுஎன்பது.

மேற்கூறியவாறுகருவிகள்முப்பத்தாறும்தானல்லஎன்றும்தனதல்ல' என்றும்அருளால்அறிந்தஆன்மா, தனக்கெனச்செயலொன்றுமின்றிஅவ்வருளோடுகூடிநிற்றல்ஆன்மதரிசனமாம். இங்ஙனம்ஞானதரிசனத்தில்ஆன்மதரிசனமும்,தத்துவசுத்தியும்நிகழுமாறுகாண்க. இதுநின்மலசொப்பனம்.

**பொழிப்பு:-**ஆன்மாதன்னுடையஅறிவினால்ஒன்றைஅறியுந்தன்மைதனக்கில்லையாயினும், கருவிகள்வாயிலாகப்போகங்களைநுகரும்பொழுது, தன்னறிவுகொண்டுஅறிந்ததாகவேகருதிஒவ்வொன்றையும்அனுபவிப்பவன். சிவனருளாலேஅவ்வருளைஅறிந்தால்தனதுஅறிவானதுகருவிகளோடுகூடிநின்றுவிடயங்களைஅறியும்முறைமையையும்ஆன்மாவாகியதனதுஇயல்பையும், அவ்வருளோடுகூடிவேறறநின்றுஅவ்வான்மாவேதரிசிக்கும்.

## 2. ஆன்மசுத்தி

### சிவதரிசனத்தில்ஆன்மசுத்திநிகழுதல்

73. தத்துவமானவற்றின்றன்மைகளுணருங்காலை
உய்த்தறிந்திடவுதிப்பதொளிவளர்ஞானமாகும்
அத்தன்மையறியுமாறுமகன்திடவதுவாயான்மாச்
சுத்தமாஞ்சுத்தஞானத்தொருமுதறோன்றுமன்றே.

பதவுரை: தத்துவமானவற்றின்தன்மைகள்உணரும்காலை - தத்துவங்களின்இயல்பைவிசாரித்தறியும்பொழுது,உய்த்துஅறிந்திடஉதிப்பது- அவைதனக்குஅந்நியமானசடப்பொருளென்றுஆராய்ந்தறிந்திடத்தோன்றுவது,ஒளிவளர்ஞானம்ஆகும் - பிரகாசம்மிக்கசிவஞானமாம், அத்தன்மைஅறியுமாறும்அகன்றிட- அப்படிஅறிகின்றசுட்டுப்போதமும்விட்டுநீங்க, அதுவாய்ஆன்மாச்சுத்தமாம் -

அந்தஞானமேதானாய்ஆன்மாச்சுத்தியைஅடையும், சுத்தஞானத்துஒருமுதல்தோன்றும் - அப்பொழுதேஅந்தநின்மலமாயுள்ளஞானத்திற்குமுதலாகியஞேயம்தோன்றும்.

**குறிப்பு:**-1. தத்துவமானவற்றின்றன்மைகள்............ஒளிவளர்ஞானமாகும்:-சிவஞானம்தோன்றும்பொழுது, பிருதிவிமுதல்நாதமீறாகியமுப்பத்தாறுதத்துவங்களும்மாயாகாரியமென்றும், நிலையில்லாதசடப்பொருளென்றும்தனக்குஅந்நியமானவையென்றும்ஆன்மாஅறியும்என்பது.

உய்த்தறிதல் - புத்தியைச்செலுத்திஅறிதல், ஆராய்ந்தறிதல்.

2. அத்தன்மையறியுமாறுமகன்றிடவதுவாயான்மாச்சுத்தமாம்:- சுட்டறிவினால்அறியப்படும்ஏகதேசக்காட்சியாகியபிரபஞ்சப்பற்றுப்பஞ்சாக்கரத்தைவிதிப்படிஉச்சரிப்பதனால்பற்றறக்கழியும்.
அப்பற்றுக்கழிந்தவிடத்துஆன்மாதனக்கொருசெயலுமில்லதாய்த்தற்போதநிகழ்ச்சியின்றித்திருவருளையேதாரகமாகக்கொண்டுஅவ்வருளிலடங்கிஅவ்வருளேதானாகிநிற்றல்ஆன்மசுத்தியாம். இதுநின்மலசுழுத்தி.

3. சுத்தஞானம்-நின்மலமாயுள்ளபரை. ஆன்மாவின்அறிவிச்சைசெயல்கள்தொழிற்படாதுநின்றவிடத்தில், அவ்வான்மாவோடுகூடியஅருள்சுத்தஞானம்என்றும்பரைஎன்றும்சொல்லப்படும்.

4. ஒருமுதறோன்றும் - சிவதரிசனம், சிவதரிசனமாவது,சிவனுடையதிருவடிதிருமுகம்திருமுடிகளினுடையஉண்மையைச்சந்தேகவிபரீதமறஅறிந்துதெளிந்து, சகலகேவலங்களிற்பொருந்தாமல், இக்கேவலசகலம்இரண்டும்நீங்கினவிடத்துவிளங்குவதானஅகம்பிரமஞானத்திலும்பொருந்தாமல், தன்செயலற்று, எல்லாம்அந்தஞானசத்தியின்செயலேயாய், அந்தஞானத்தைஎங்கும்கண்டனுபவித்தலாம். யான்எனதுஎன்னும்தற்போதமுனைப்பின்றிஅனுக்கிரகசத்திபிரகாசித்துநின்றஅவதரம்திருவடியாம். எங்கும்சிவமாய்த்தோன்றுவதுதிருமுகமாம். அஃதாவது, தன்னைத்தாக்குவனவானவிடயபோகங்களைஅவன்அவள்அதுவாய்நோக்குமிடமெல்லாம்அவன்அனுக்கிரகத்தையேகண்டனுபவிப்பதாம். சிவானந்தத்தில்பரவசப்படுதல்திருமுடியாம். (பார். உண்மைநெறி விளக்.4)

**பொழிப்பு** :தத்துவங்களின்இயல்பைவிசாரித்தறியும்பொழுது, அவைதனக்குஅந்நியமானசடப்பொருளென்றுஅறிவதுசிவஞானத்தின், உபகாரத்தாலாம். அப்படிஅறிகின்றதற்போதமும்விட்டுநீங்க, ஆன்மாஅந்தஞானமேயாய்ச்சுத்தியடையும். அப்பொழுதேஅந்தஞானத்துக்குமுதலாகியஞேயம்தோன்றும்.

## ஞேயத்தைப்பற்றியஆசங்கையும்மறப்பும்.

74.உறைதருமுணர்வுமன்றியதன்முதலுள்ளதென்றிங்

கறைவதென்னென்னிலண்ணலருளெனுமதுவேயன்றி

நிறையொளிமுதலதன்றிநின்றிடாநிமலனாகும்

இறையவன்முதலவன்றவிலங்கருள்சத்தியாமே.

**பதவுரை** :உறைதரும்உணர்வும்அன்றிஅதன்முதல்உள்ளதென்றுஇங்குஅறைவதுஎன்என்னில் - ஆன்மாவோடுபொருந்தியிருக்கும்ஞானமுமல்லாமல்அதற்குமுதலாகியஞேயமும்உண்டென்றுஇவ்விடத்துச் சொல்லுவதென்னையென்றுகேட்கில்.- அதுவேஅண்ணல்அருள்எனும் - அந்தஞானமேமுதல்வனுடையஅருள்என்றுசொல்லப்படும், அன்றி - அன்றியும், நிறைஒளிமுதலதுஅன்றிநின்றிடா- நிறைந்தஒளியானதுஅதன்முதலாகியஆதித்தனையொழிந்துநிற்கமாட்டாது. அதுபோலஞானமாகியகுணமும்குணியாகியமுதல்வனையன்றிநில்லாதுநிமலனாகும்இறையவன்முதல், இலங்குஅருள்அவன்தன்சத்தியாம் -நின்மலனாகியசிவன்முதலாம்; அவனிடத்துவிளங்கும்அருள்அவனுடையசத்தியாம்.

**குறிப்பு:-** 1. ஞானத்துக்குமுதலாய்ஒருஞேயம்தோன்றுவதென்னை ? ஞானம்தோன்றியபொழுதேஆன்மாஅந்தஞானத்தோடுகூடிஞானமேதானாய்நிற்கும்என்பர்சிவசங்கிராந்தவாதிகள்.

**பொழிப்பு** :அந்தஞானத்தையன்றிஅதற்குஒருமுதலுமுண்டென்றுகூறுவதுஎன்னையெனில், சிவத்தினதுஅருளேஅந்தஞானமாம். அன்றியும், ஒளியானதுஅதன்முதலாகியஆதித்தனையன்றிநில்லாதவாறுபோல, சிவத்தையன்றிஅருளும்நில்லாது. ஆகையால்நின்மலராகியசிவன்முதலாம். அவரிடத்துவிளங்கும்அருள்அவரதுசத்தியாம்.

## ஞானமேஞேயத்தைத்தரிசிப்பிக்கும்

75. சுத்தமாஞ்சத்திஞானச்சுடராகுஞ்சிவமொழிந்தச்

சத்திதானின்றாமுன்னைத்தகவிலாமலங்கள்வாட்டி

அத்தனையருளுமெங்குமடைந்திடுமிருளகற்றி

வைத்திடுமிரவிகாட்டும்வளரொளிபோன்மகீழ்ந்தே.

**பதவுரை**:சுத்தமாம்சத்திஞானச்சுடராகும்-நின்மலமாகியஅந்தச்சத்திஞானப்பிரகாசமாயிருக்கும், அச்சத்திதான்சிவம்ஒழிந்துஇன்றாம்- அதுதான்சிவத்தையொழிந்துதனித்தொருமுதலாய்நிற்கமாட்டாது.எங்கும்அடைந்திடும்இருள்அகற்றிவைத்திடும்இரவிகாட்டும்வளர்ஒளிபோல்-

எங்கும்செறிந்திருக்கும்இருளைநீக்கிவைக்கின்றசூரியனைக்காட்டும்மிக்கபிரகாசத்தைப்போல,முன்னைத்தக வுஇலாமலங்கள்வாட்டிஅத்தனைமகிழ்ந்துஅருளும் -

அந்தச்சத்திஆன்மாவைஅநாதியிலேபந்தித்துநின்றஇழிந்தமும்மலங்களையும்போக்கிஅவ்வான்மாவைச்சுத்த மாக்கித்தனக்குமுதலாகியசிவனைஅவ்வான்மாவுக்குக்கிருபையுடனேமகிழ்ந்துதரிசிப்பிக்கும்.

**பொழிப்பு:**அந்தச்சத்தியானதுஞானப்பிரகாசமாயிருக்கும்.

சிவமின்றிஅந்தச்சத்திதனித்துஒருமுதலாய்நிற்கமாட்டாது.

அச்சத்திஆன்மாவைப்பந்தித்தமும்மலங்களையும்வாட்டிச்சிவத்தைஆன்மாவுக்குத்தரிசிப்பிக்கும்.

அதுஎங்கும்நிறைந்தபேரிருளைநீக்கிச்சூரியனைக்காட்டுகின்றஅதன்பிரகாசம்போல்வதாம்.

வினாக்கள்

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஞானம்வரும்முறையைவிளக்குக. | K3 | CO1 | PO6 |
| 2 | ஆன்மசுத்தியைஎடுத்துரைக்க. | K2 | CO2 | PO4 |
| 3 | ஞானத்தினால்வரும்பயன்கள்யாவை? | K4 | CO2 | PO3 |
| 4 | ஆன்மவிலக்கணத்தைவிளக்குக. | K5 | CO3 | PO5 |
| 5 | ஆன்மாவின்இயல்பைசிவப்பிரகாசம்வழிவிளக்குக | K2 | CO4 | PO2 |

| வ.எண் | எட்டு மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஆன்மாவிடயங்களைஅறியும்முறைமையைவிவரி. | K2 | CO1 | PO5 |
| 2 | ஞானத்தின்இயல்பைத்தொகுத்துரைக்க. | K3 | CO3 | PO3 |
| 3 | ஐந்தவத்தையின்இலக்கணத்தைவிளக்குக. | k2 | CO4 | PO2 |
| 4 | காரணாவத்தைகளின்இயல்பைஎடுத்துரைக்க. | K1 | CO2 | PO1 |
| 5 | சிவப்பிரகாசம்உண்மையதிகாரத்தில்கூறப்படும் செய்திகளைத்தொகுத்துரைக்க. | K4 | CO3 | PO6 |

## அலகு - 5

### சிவசமவாதிகள்ஆசங்கை.

76. புகலருமசத்தர்தம்பாற்பொருந்தியவலகையேபோல்
அகிலமுமுணருமீசனருளுயிர்மேவலாலே
சகலமுநிகழவேண்டுந்தலைவனைந்தொழிலுந்தானே
இகலறவியற்றல்வேண்டுமென்றதுநன்றியின்றே .

**பதவுரை**:புகல்அரும்அசத்தர்தம்பால்பொருந்தியஅலகையேபோல்- தமக்கெனஅறிவுஞ்செயலும்உண்டென்றுசொல்லுதற்கரியவலியில்லாதவரிடத்தேபொருந்தியபிசாசின்குணஞ் செயல்களெல்லாம்அவரிடத்துநிகழ்வதுபோல, அகிலமும்உணரும்ஈசன்அருள்உயிர்மேவலாலே - எல்லாவற்றையும்உணரும்சிவனுடையஅருள்ஆன்மாவிலேபொருந்துதலால், சகலமும்நிகழவேண்டும் -

சிவனுக்குரியசர்வஞ்ஞத்துவம்முதலியகுணங்களெல்லாம்அந்தஆன்மாவிலும்நிகழவேண்டும், தலைவன்ஐந்தொழிலும்தானேஇகல்அறஇயற்றல்வேண்டும் - முதல்வனுக்குரியஐந்தொழில்களைஉயிரும்மாறுபாடறச்செய்தல்வேண்டும், என்றது-என்றுசொன்னது, நன்றிஇன்று - நன்மையுடைத்தன்று.

குறிப்பு:- 1. பேய்பிடித்தவனிடத்திலேபேயின்குணங்களும்செயலும்விளங்கினாற்போல, சிவனருளைப்பெற்றஆன்மாவிடத்திலும்சிவனுக்குரியகுணமும்செயலும்விளங்கும்என்றும், அவ்வான்மாக்கள்பஞ்சகிருத்தியமும்செய்வர்என்றும்சிவசமவாதிகள்கூறுவர்.

**பொழிப்பு:**பேய்பிடித்தவனிடத்திலேபேயின்குணமும்தொழிலும்தோன்றினாற்போலச், சிவனருளைப்பெற்றஆன்மாவிடத்திலேசிவனுடையமுற்றறிவுமுதலியகுணங்களும், பஞ்சகிருத்தியமும்உண்டாகுமென்பதுபொருந்தாது.

## சிவசமவாதிகள்ஆசங்கைக்குவிடை.

77. இன்றுநோக்குரைநடக்குமியல்பிலோற்கினையவாய்ந்து
நின்றதோரலகைசேர்ந்தானிகழ்வதெனதுபோலுள்ளத்
தொன்றியவுணர்வுதமபாலுள்ளதுநிகழ்த்துமீசன்
தன்றொழினடாத்துமேனிதனக்கெனக்கொண்டுதரனே

**பதவுரை**:இன்றுநோக்குஉரைநடக்கும்இயல்புஇலோற்கு - இப்போதுபார்வையும்பேச்சும்நடக்குமியல்பும்இல்லாதஒருவனிடத்திலே, இனையவாய்ந்துநின்றதோர்அலகைசேர்ந்தால்நிகழ்வதென்- இவையெல்லாம்குறைவற்றுப்பொருந்திநிற்கும்ஒருபேய்சேர்ந்தால்அவனிடத்திலேஉண்டாவதுஎன்? அவன்கண்குருடுநீங்கிஒன்றைப்பார்க்குமா? வாய்ஊமைநீங்கிப்பேசுமா? கால்முடம்நீங்கிநடக்குமா? இல்லை. ஆகையால், பேயின்தன்மைபிடியுண்டவனுக்குஉண்டாகாது: அவனிடத்துள்ளவைகளைவிளக்கும். அதுபோல்உள்ளத்துஒன்றியஉணர்வுதம்பால்உள்ளதுநிகழ்த்தும் - அத்தன்மைபோலஆன்மாவிடத்திலேபொருந்தியஅருளும்அவ்வான்மாவிடத்தில்உள்ளதையேவிளங்கச்செய்யும், ஈசன்தனக்கெனமேனிதானேகொண்டுதன்தொழில்நடாத்தும்- பரமசிவன்தமக்கென்றுஒருதிருமேனியைத்தாமேகொண்டுபஞ்சகிருத்தியத்தையும்நடத்துவர்.

**குறிப்பு:-** 1. இன்றுநோக்குரைநடக்குமியல்பிலோற்கு...... நிகழ்வதென்:- குருடுஊமைமுடம்எனப்படும்அங்கம்குறைபாடுகளுள்ளஒருவனைஅக்குறைகளில்லாதஒருபேய்பிடித்தால்,

அவனைப்பார்க்கும்படியும்பேசும்படியும்நடக்கும்படியும்செய்யாது, அவனிலேதொழிற்பட்டுநிற்குங்குணங்களைவிளக்கிநிற்கும்; தனக்குரியஆற்றல்களைஅவனனுக்குஉண்டாக்குவதில்லை. அதுபோல, ஆன்மாவைத்திருவருள்பொருந்தினால், அவ்வான்மாவின்அறிவிச்சைசெயல்களைவிளக்கிநிற்குமேயன்றித்தனக்குரியசர்வஞ்ஞத்துவம்முதலியகுணங்களைஅவ்வான்மாவுக்குஉண்டாக்கமாட்டாது.

இனையவாய்ந்து -இனைய - இத்தன்யையானவைகள், வாய்தல் - அமைதல், பொருந்தல்,

2. உள்ளத்தொன்றியஉணர்வு:-உயிருக்குயிராய்நிற்கும்திருவருள்.

3. ஈசன்றன்றொழினடாத்துமேனிதனக்கெனக்கொண்டு:- ஆன்மாவின்அறிவுஇச்சைசெயல்களைமறைத்தபாசத்தைநிக்கி, அவற்றைவிளக்கிச்சிவத்தைக்காட்டுதலேசிவனதுஅருள்செய்யும்உபகாரம். பரமசிவன்அவ்வான்மாக்கள்பொருட்டுப்பஞ்சகிருத்தியஞ்செய்யவேண்டியவிடத்து, தமதுஅருளினாலாயதிருமேனிகொண்டுதமக்கெனக்கொண்டஅத்திருமேனியினின்றுசெய்வர்.

**பொழிப்பு:**குருடனாயும்ஊமையாயும்முடவனாயுமிருக்கும்ஒருவனைக்கண்ணும்வாயும்காலும்குறைவற்றிருக்கும்ஒருபேய்பிடித்தவிடத்து, அவன்ஒன்றைக்காணவும்பேசவும்நடக்கவும்செய்யாது,அவனிடத்துஉள்ளதையேவிளங்கச்செய்யும். அதுபோல, ஆன்மாவினிடத்துப்பொருந்தியஅருளானதுஅவ்வான்மாவின்அறிவிச்சைசெயல்களையேவிளக்கிநிற்கும்சிவன்ஐந்தொழிலுஞ்செய்யுமிடத்துதமக்கெனத்திருமேனிகொண்டு, அம்மேனியின்வாயிலாகத்தொழில்செய்வர்

## ஆன்மசுத்தியின்பயன்.

78.இந்திலைதன்னின்மன்னியெய்திடுங்கலாதிபோதந்
தன்னவவறிந்துநிற்குந்தகவிலாமலங்கணீத்த
அந்திலைகரணமாகரவகையதிலறிவடங்கி
மன்னிடவியாபியாயவான்பயன்றோன்றுமன்றே.

**பதவுரை**:இந்நிலைதன்னில்மன்னிஎய்திடும் - இச்சகலாவத்தையில்ஆன்மாவைப்பொருந்தித்தொழிற்படும், கலாதிபோதம்தன்அளவுஅறிந்து - கலையாதிதத்துவங்களால்வரும்ஏகதேசஅறிவின்இயல்பைஉணர்ந்து, நிற்கும்தகவுஇலாமலங்கள்நீத்தஅந்நிலை - அவ்வேகதேசஅறிவைச்செய்துநிற்கும்இழிந்தமலங்களைநீக்கியஅருள்நிலையில்,

கரணம்ஆகாவகைஅதில்அறிவுஅடங்கி -

அம்மலங்களின்வாசனைதாக்காதபடிஅந்தஅருள்வியாபகத்துள்ளாகஆன்மாஅடங்கி, மன்னிட -

அவ்விடத்துத்தோன்றும்சிவத்தில்நிலைபெற்றுநிற்க, வியாபியாயவான்பயன்தோன்றும் -

அதன்வியாபகஅறிவாகியமேலானபயன்தோன்றும்.

**குறிப்பு:-**1. ஆன்மசுத்தியின்பயன்பாசநீக்கமும், ஆன்மாவின்வியாபகஅறிவுவிளங்கித்தோன்றலுமாம்.

2. இந்நிலைதன்னின்மன்னி ...... தன்னளவறிந்து:- கலையாதிதத்துவங்களால்வரும்அறிவுபாசஞானம்எனப்படும். ஏகதேசஅறிவுஎன்றும், இந்தஏகதேசஅறிவுக்குக்காரணமாயிருப்பதுமும்மலங்கள்என்றும்அறிதல்கலாதிபோதம்தன்னளவறிந்துஎன்பதற்கு; கலையாதிதத்துவங்களால்வரும்ஏகதேசஅறிவின்இயல்பையும், ஆன்மாவாகியதனதுஇயல்பையும்அறிந்துஎனப்பொருள்கொள்ளினும்அமையும்.

3. மலங்கணீத்தஅந்நிலை - மும்மலங்களும்நீங்கப்பெற்றதுரியநிலைஎனப்படும்அருள்நிலை.

4. கரணமாகாவகைஅதிலறிவடங்கிமன்னிட:- மும்மலங்கள்நீங்கியவிடத்தும்அவற்றின்வாசனைதாக்காதொழியாது. அவ்வாசனைதாக்காதபடிதான்பணிநீத்துஏகனாகிநிக்கவேண்டும். தான்பணிநீத்தல்இறைபணிநிற்றல்என்றும்சொல்லப்படும்.

தான்பணிநீத்தலாவதுஆன்மாவின்இச்சாஞானக்கிரியைகளின்தொழிற்பாடின்றி, நிகழ்வனவெல்லாம்சிவபெருமானதுஇச்சாஞானக்கிரியைகளின்நிகழ்ச்சியேஎனக்கண்டுதிருவருள்வியாபகத்துள்ளாகஆன்மாஅடங்கிநிற்றலாம்.

ஏகனாகிநிற்றலாவதுஆன்மாதானெனவேறுகாணப்படுமாறின்றிச்சிவனோடுஒற்றுமைப்பட்டுநிற்றலாம்.

தான்பணிநீத்தலால்மாயைகன்மங்களின்வாசனைதாக்காதொழியும்.ஏகனாகிநிற்றலால்யான்எனதுஎனப்பகுத்துக்காணும்மயக்கவுணர்விற்குஏதுவாகியஆணவமலவாசனைநீங்கும். அதுநீங்கினாலன்றிப்பரமசிவனதுதிருவடியாகியசிவானந்தத்தைஅனுபவித்தல்கூடாது.ஏகனாகிக்நிற்றல், (பார்.செ. 80.)

5. வியாபியாயவான்பயன்றோன்றும்-தான்பணிநீத்துஏகனாகிநிற்றலால்மும்மலங்களாகியபாசநீக்கமுண்டாம். இப்பாசம்நீங்கியநிலைதுரியநிலைஎனப்படும்அருள்நிலையாம். இந்நிலையில்ஆன்மாவின்வியாபகஅறிவுவிளங்கித்தோன்றும்.இவ்வறிவுவிளக்கம்பாசநீக்கத்தினும்மேலானபயனாதலால்,"வான்பயன்" என்றார்.

**பொழிப்பு** :கலாதிதத்துவங்களால்வரும்ஏகதேசஅறிவின்இயல்பைஉணர்ந்து, அவ்வேகதேசஅறிவுக்குக்காரணமானமலங்கள்நீங்கப்பெற்றஅருள்நிலையில்,

அம்மலங்களின்வாசனைதாக்காதபடிஅவ்வருள்வியாபகத்துள்ளாகஆன்மாஅடங்கிச்சிவத்தோடுஏகனாகிநிற்பின், அதன்வியாபகஅறிவுவிளங்கித்தோன்றும்.

### ஐக்கியவாதிகள்ஆசங்கைக்குவிடை.

79. அடைபவர்சிவமேயாகுமதுவன்றித்தோன்றுமென்ற
கடனதேதென்னின்முன்னங்கண்டிடார்தம்மைப்பின்னுந்
தொடர்வருமருளினாலுந்தோன்றுமாகாணாராயின்
உடையவனடிசேர்ஞானமுணர்தலின்றணைதலின்றே.

**பதவுரை**:அடைபவர்சிவமேஆகும்.அதுவன்றித்தோன்றும்என்றகடன்அதுஏதெனில் - அங்ஙனம்அருளைஅடைபவர்சிவமாய்விடுதலேயன்றிஅவ்விடத்துமற்றுமொருபயன்தோன்றுமென்றமுறைமைஏதென்னில், முன்னம்தம்மைக்கண்டிடார் - பெத்தநிலையில்ஆன்மாக்கள்மலமறைப்பினால்வியாபகமாகியதமதுசொரூபத்தைஅறியாதிருந்தனர், பின்னும்தொடர்வுஅரும்அருளினாலும்தோன்றுமாகாணாராயின் - இச்சுத்தநிலையிலும்எய்தற்கரியஅருளின்உபகாரத்தாலும்தமதுவியாபகஅறிவுவிளங்கும்படிகாணாராயின், உடையவன்அடிசேர்ஞானம்உணர்தல்இன்றுஅணைதல்இன்று - பரமசிவனதுதிருவடியாகியசிவாநந்தத்தைப்பெறுதற்கேதுவாகியசிவஞானத்தைஅறிதலும்இல்லை,அத்திருவடியைக்கூடுதலுமில்லையாம்.

**பொழிப்பு**:திருவருளைஅடைபவர்சிவமாய்விடுதலேயன்றிஅவ்விடத்துவேறுமொருபயன்தோன்றுமென்றமுறைமையேதென்னில்,
பெத்தநிலையில்ஆன்மாக்கள்மலமறைப்பினால்வியாபகமாகியதமதுசொரூபத்தைஅறியாதிருந்தனர்.
சுத்தநிலையிலும்திருவருளின்உபகாரத்தால்தமதுவியாபகஅறிவுவிளங்கும்படிகாணாராயின்,
பரமசிவனதுதிருவடியைப்பெறுதற்குஏதுவாகியசிவஞானத்தைஅறிதலுமில்லை,
அத்திருவடியைக்கூடுதலுமில்லையாம்.

### சாக்கிராதீதம்

80. பொற்புறுகருவியாவும்புணராமேயறிவிலாமைச்
சொற்பெறுமதீதம்வந்துதோன்றாமேதோன்றிநின்ற
சிற்பரமதனாலுள்ளச்செயலறுத்திடவுதிக்குந்
தற்பரமாகிநிற்றல்சாக்கிராதீதந்தானே.

**பதவுரை**:பொற்புஉறுகருவியாவும்புணராமே-பொலிவினையுடையகருவிகள்முப்பத்தாறும்பொருந்திவிகற்பியாமலும், அறிவிலாமைச்சொல்பெறும்அதீதம்வந்துதோன்றாமே - அறியாமைஎன்னும்சொல்லைப்பெறும்கேவலம்வந்துமூடிமயங்காமலும், தோன்றிநின்றசிற்பரம்அதனால் - தன்னிடத்தேதோன்றிநின்றமேலானஞானசத்தியின்அனுக்கிரகத்தால், உள்ளச்செயல்அறுத்திட - தற்போதச்சேட்டையைஒழித்துநிற்க, உதிக்கும்தற்பரமாகிநிற்றல்-அப்பொழுதுதோன்றும்சிவத்தோடுஏகனாகிநிற்றல். சாக்கிராதீதம் - சாக்கிராதீதமாம்.

**குறிப்பு:-**1. பொற்புறுகருவியாவும்புணராமே:-விகற்பத்தைச்செய்யும்கருவிகள்முப்பத்தாறுடனுங்கூடிச்சகலப்படாமல்என்பது.

2. அறிவிலாமைச்சொற்பெறுமதீதம்வந்துதோன்றுமே - கேவலப்படாமல்என்பது.

3. சிற்பரம்-அனுக்கிரகஞானசத்தி, பராசத்தி

4. உள்ளச்செயலறுத்திட - தன்செயலற்றுநிற்க. இறைபணிநிற்க, உள்ளச்செயல்- ஆன்மாவின்செயல்.

5. தற்பரமாகிநிற்றல்- ஏகனாகிநிற்றல். ஆணவமலவாசனைநீக்கிச்சிவாநந்தத்தைஅநுபவித்தற்குஏகனாகிநிற்றல்சிறந்தசாதனமாம். இதுவேசாக்கிராதீதம்எனப்படும். (பார்.செ.78)

தற்பரம் - தனக்குப்பரம். தன் - ஆன்மா; பரம்-மேலானபொருள்சிவம்.

**பொழிப்பு:**சகலகேவலப்படாமலும், தற்போதச்சேட்டையின்றியும், சிவத்தோடுஏகனாகிநிற்றல்சாக்கிராதீதமாம்.

## கருவிகளைஒடுக்குதற்குஉபாயம்

81. ஒடுங்கிடாகரணந்தானேயொடுங்குமாறுணர்ந்தொடுக்க
ஒடுங்கிடுமென்னினின்றதொடுங்கிடாகாணமெல்லாம்
ஒடுங்கிடவொடுங்கவுள்ளவுணர்வுதானொழியும்வேறாய்
ஒடுங்கிடினன்றிமற்றவுண்மையையுணரொணாதே.

**பதவுரை**:கரணம்தானேஒடுங்கிடா - கருவிகள்தாமாகவேஒடுங்கமாட்டா, ஒடுங்குமாறுஉணர்ந்துஒடுக்கஒடுங்கிடும்என்னில் - அவைஒடுங்கும்வழியைஅறிந்துஒடுக்கஒடுங்குமென்றுநீசொல்லின், நின்றதுஒடுங்கிடா - இச்சாஞானக்கிரியைகளாய்ச்சீவித்துநின்றஉனதுபோதம்ஒடுங்காது, கரணம்எல்லாம்ஒடுங்கிடஒடுங்க -

கருவிகளெல்லாம்ஒடுங்கஒடுங்கப்போதமும்ஒடுங்குமென்றுசொல்லின், உள்ளஉணர்வுதான்ஒழியும் - அப்போதுஉனக்குள்ளஅறிவுங்கெட்டுக்கேவலமும்வந்துமூடும்,- வேறாய்ஒடுங்கிடின்அன்றிமற்றஉண்மையைஉணரொணாது- ஆதலால்அக்கருவிகளைஅந்நியமாகக்கண்டுதிருவருளில்ஒடுங்கினாலன்றிஅந்தச்சிவத்தைஅறிந்துஅனுபவிக்கமுடியாது.

**குறிப்பு**:- 1. அந்தக்கரணம்பொறிவழிச்சென்றுபிரபஞ்சத்தைநாடும்பொழுதும், அங்ஙனம்சொல்லாதவிடத்துஅவ்வாசனையால்உள்ளேஅசையும்பொழுதும், தற்போதத்தினால்அடக்கினால்அவைஅடங்காதுமேன்மேல்எழும். அக்கரணங்களைப்போதத்தால்அடக்கினும், அப்போதம்அடங்காதுநிற்கும். ஆகவே, கரணங்களின்தொழிற்பாட்டைத்திருவருளால்அடக்குவதன்றிப்போதத்தால்அடக்கஇயலாதுஎன்பதாம்.

பொழிப்பு : கருவிகள்தாமாகவேஅடங்கா. தற்போதத்தால்அடக்கலாமெனில், போதம்அடங்காதுநிற்கும். கருவிகள்அடங்கவேபோதமும்அடங்குமெனின், உள்ளசிற்றறிவுங்கெட்டுக்கேவலம்வந்துமூடும். ஆகையால்,கருவிகளைத்திருவருளில்ஒடுக்கினாலன்றிஅவைஒடுங்காவாம்; சிவனையும்அறிந்துஅனுபவிக்கஇயலாதாம்.

## தற்போதம்ஒழித்தற்குஉபாயம்

82. பற்றிடுங்கருவியாவும்படர்ந்துணர்வழிக்குங்காலை
உற்றறிந்திடுவதொன்றினுணர்வினினுண்மையாகும்
மற்றதுபகல்விளக்கின்மாய்ந்திடவருவதுண்டேற்
பெற்றிடுமதனைமாயப்பிறப்பினையறுக்கலாமே.

**பதவுரை**:பற்றிடும்கருவியாவும்படர்ந்துஉணர்வுஅளிக்கும்காலை- விடயங்களைப்பற்றுங்கருவிகளெல்லாம்புறத்தேசென்றுஆன்மாவுக்குஅறிவைக்கொடுக்கும்காலத்து, ஒன்றின்உற்றுஅறிந்திடுவது-அவ்விடயங்களில்ஒன்றைப்பொருந்திஅதனைச்சுட்டிஅறிதல். உணர்வினின்உண்மையாகும்- ஆன்மபோதத்தின்இயல்பாம், அதுபகல்விளக்கின்மாய்ந்திடவருவதுஉண்டேல்- அந்தப்போதம்பகற்காலத்தில்எரியும்விளக்குப்போலச்சீவியாமல்நிற்கும்முறைமைகூடுமாயின், அதனைப்பெற்றிடும்- அப்போதுசிவத்தைஅடையும். மாயப்பிறப்பினைஅறுக்கலாம் - மயக்கத்தைச்செய்யும்பிறவியையும்அறுக்கலாம்.

**குறிப்பு**:-1. பற்றிடுங்கருவி: விடயங்களைப்பற்றும்ஞானேந்திரியங்கள்.

2. பகல்விளக்கின்மாய்ந்திடவருவதுண்டேல்: பகல்விளக்குத்தான்கெடாதுதன்ஒளிகெட்டுநிற்கும். அதுபோல, ஆன்மாவும்தான்கெடாதுதன்இச்சாஞானக்கிரியைகளாகியபோதங்கெட்டுநிற்றல், அரிதாகலின் "வருவதுண்டேல்" என்றார்.

3. பெற்றிடுமதனை:- சிவத்தோடுஏகனாகிநிற்கும்என்பது.

## பொழிப்பு

:ஐம்பொறிகளும்புறத்தேசென்றுசத்தாதிவிடயங்களைப்பற்றிஆன்மாவுக்குஅறிவைக்கொடுக்குங்காலத்து, அவ்விடயங்களில்ஒன்றைப்பொருந்திஅதைச்சுட்டிஅறிதல்ஆன்மபோதத்தின்இயல்பாம். பகற்காலத்தில்எரியும்விளக்குப்போலஅப்போதஞ்சீவியாதுஒழியப்பெறின், ஆன்மாசிவத்தைஅடையும். அதனாற்பிறப்பினையும்அறுக்கலாம்.

### 3.ஆன்மலாபம்

### ஞானத்தின்வகையும், வீடுபேற்றுக்குச்சிறந்தசாதனங்களும்இவைஎனல்

83. முந்தியவொருமையாலேமொழிந்தவைகேட்டல்கேட்டல்
சிந்தனைசெய்தலுண்மைதெளிந்திடலதுதானாக
வந்தவாறெய்தநிட்டைமருவுதலென்றுநான்காம்
இந்தவாறடைந்தோர்முத்தியெய்தியவியல்பினோரே.

**பதவுரை**:முந்தியஒருமையாலேமொழிந்தவைகேட்டல் - முற்பிறப்பிற்செய்தசரியைமுதலியவற்றின்முதிர்ச்சியாலுண்டானஒற்றுமையால்ஆசாரியர்உபதேசித்தஉபதேசமொழிகளைக்கேட்டலும், கேட்டல்சிந்தனைசெய்தல் - கேட்டபொருளைச்சிந்தித்தலும், உண்மைதெளிந்திடல் - அந்தப்பொருளின்உண்மையைத்தெளிந்துஅறிதலும், அதுதான்ஆகவந்தஆறுஎய்தநிட்டைமருவுதல்- சிவம்தானாகவந்தஅத்துவிதநிலைபொருந்தும்படிநிட்டைகூடுதலும், என்றுநான்காம் - என்றுஞானம்நான்குவிதமாம். இந்தவாறுஅடைந்தோர்முத்திஎய்தியஇயல்பினோர் - இந்தமுறைப்படிகேட்டுச்சிந்தித்துத்தெளிந்துநிட்டைகூடினவரேமுத்தியைப்பெற்றஇயல்பினையுடையோர்.

**குறிப்பு:-**1. ஆன்மலாபம், சிவப்பேறு, நிட்டை, சுவானுபூதிஎன்பனஒருபொருட்சொற்கள்.

2. முந்தியவொருமையாலேமொழிந்தவை:- முற்பிறவிகளிலோஈட்டியசரியைகிரியையோகங்களின்முதிர்ச்சியினால்இருவினையொப்பும்மலபரிபாகமும்பிறந்துசத்திநிபாதம்உண்டாகும். அப்பொழுதுபதிபசுபாசங்களின்இயல்புகளைஅறிவிக்கும்ஞானாசாரியர்எங்குளர்என்றுதேடும்கருத்துப்பிறக்கும்.

இப்பக்குவத்தைஎதிர்பார்த்துஇதுவரையும்உள்ளேநின்றுஉணர்த்திவந்தபரமசிவன்அப்போதுஆசாரியவடிவங் கொண்டுஎழுந்தருளிவந்து, சிவதீக்கைசெய்து, பதிபசுபாசங்களின்இயல்புகளைஉணர்த்துவர். அதனால்மாணாக்கனிடத்தில்ஞானம்பிரகாசிக்கும்.

அந்தஞானம்மாணாக்கனின்பக்குவஉயர்ச்சிதாழ்ச்சிகளுக்கேற்பஏறுவதன்றிஒருபடித்தாய்ஏறாது.

அப்பக்குவவேறுபாட்டால்அந்தஞானம்கேட்டல்சிந்தித்தல்தெளிதல்நிட்டைஎனநான்குவகையாயிருக்கும்.

3. கேட்டல் - பதிபசுபாசங்களின்இயல்புகளைஆசாரியர்வாயிலாகக்கேட்டல். பதிபசுபாசங்களின்இயல்புகளைஅறிதலாவது:- தனுவாதிபிரபஞ்சம்சடப்பொருள்என்றும், ஆன்மாவுக்குஅந்நியமானதுஎன்றும், ஆன்மாதூலசித்துஎன்றும், மலமறைப்பினாலேதனதுஇயல்பைஅறியாதுபிரபஞ்சத்தில்வசப்பட்டுத்துன்புறுகின்றதுஎன்றும். பதிசூக்குமசித்துஎன்றும், எங்கும்வியாபகமுள்ளதுஎன்றும், உயிர்க்குயிராயிருக்கும்இயல்புடையதுஎன்றும்எல்லாவற்றையும்ஒருங்கேஓரியல்பாய்அறியும்பேரறிவுடைய துஎன்றும்அறிதலாம்.

இங்ஙனம்ஆசாரியர்கூறும்மொழிகளைக்கேட்கும்மாணாக்கனுக்குக்கேட்டல்அறிவுஉண்டாகும்.

இதனால்வரும்அனுபவஞானமாவது:-

பதிஉயிருக்குயிராயும்எங்கும்வியாபகமாயுமிருக்கும்நிலையும்,அப்பதிவியாபகத்துக்குள்ஆன்மாவியாப்பியமா யிருக்கும்நிலையும்,

அவ்வான்மாவிற்பிரபஞ்சம்வியாப்பியமாயிருக்கும்நிலையும்நிருவிகற்பமாகத்தோன்றுதல்.

4. கேட்டல்சிந்தனைசெய்தல்:-

தீவிரதரபக்குவமுடையமாணாக்கனுக்குஆசாரியர்உபதேசத்தாலுண்டாகியகேட்டல்என்னும்ஞானம்மந்தமாத லின்றிமுதிர்ந்துமுறுகிவிளையும்.அப்பொழுதுதான்கேட்டபொருளைச்சிந்திக்குமாறுஅதன்முறைமையைத்தன துஆசாரியரிடம்கேட்டு, அப்பொருளின்கண்மனம்ஒருப்பட்டுநிட்டைகூடுதற்குஆசையுடையவனாவன், அவ்வாறுவரப்பெறின், பிரபஞ்சத்தில்விருப்புவெறுப்பின்றிச்சிந்தித்தல்தொழில்ஒன்றையேமேற்கொண்டு, வேறொன்றினும்பற்றின்றிப்பேரறிவாகியசிவமும்சிற்றறிவாகியதானும்ஆதித்தனொளியும்கண்ணொளியும் போலஅத்துவிதமாய்க்கலந்துநிற்பன.

அந்நிலையிலேதானொருபொருள்உண்டென்றுஅறியாதுசிவத்தோற்றம்ஒன்றேகாணப்பெறுவன்.

இக்காட்சிநிருவிகற்பம்சவிகற்பம்என்னும்இரண்டிற்கும்இடையாயிருக்கும்.

இவைசிந்தித்தல்என்னும்ஞானத்தின்முறையும்அதன்கண்நிகழும்அனுபவமுமாம்.

5. உண்மைதெளிந்திடல்:-

ஆசாரியரதுஅனுக்கிரகத்தாலேகேவலசகலங்களாகியஇருவகைப்பாசங்களும்நீங்கிக்,கேட்குமுறையில்கேட்டு

ச், சிந்திக்கும்முறையில்சிந்தித்துப்,பின்அன்புசெய்து, கருவிகள்தாக்காதுஅடங்கிநிற்கப்பெறுவார்க்கு, முதல்வனியல்பு. கேட்டகாலத்துப்பொருட்டன்மைபற்றிப்பேதமாய்த்தோன்றிச், சிந்தித்தகாலத்துக்கலப்புப்பற்றிஅபேதமாய்த்தோன்றித், தெளிந்தகாலத்துஇவ்விரண்டுமின்றிஎவற்றிலும்ஒற்றித்துநின்று (உடனாய்) ஒன்றினும்பற்றிலதாகவேறுதோன்றும்.

இவைதெளிதல்என்னும்ஞானத்தின்முறைமையும்அதன்கண்நிகழும்அனுபவமுமாம்.

6. அதுதானாகவந்தவாறு:- தத்துவமசிஎன்னும்மகாவாக்கியம். தத்துவமசி - அதுநீயாகின்றனை. இந்தமகாவாக்கியம்தீவிரதரபக்குவருக்குஉபதேசிக்கப்படுவது.

7. நிட்டை- பார். செ. 84.

8. கேட்டல்முதலியநான்கும்ஞானத்திற்சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில்யோகம், ஞானத்தில்ஞானம்என்றுசொல்லப்படும்.

9. ஞானத்திற்கேற்பமுத்தியும்அபரமுத்திபரமுத்திஎனஇருவகைப்படும். கேட்டல்சிந்தித்தல்தெளிதலிலேநின்று, அவ்வளவில்யாக்கைநீங்கப்பெற்றவர், அபரமுத்திஅடைவர். அவற்றோடுநிட்டையுங்கைவரப்பெற்றுஇம்மையிற்றானேசீவன்முத்தராய்விளங்கியவர், தேகாந்தத்திற்பரமுத்திஅடைவர், ஞானநிட்டைசெய்துகொண்டுபிராரத்ததேகத்தோடுபயிலுஞ்சிவஞானிகள்சீவன்முத்தர்எனப்படுவர். இவர்பரமுத்திஅடைதற்குரியவர்.

அபரமுத்தித்தானமாவதுசுத்தவித்தை, ஈசுரம், சதாக்கியம், சத்தி, சிவம்என்னும்தத்துவங்களாம். கேட்டல்என்னும்ஞானமுடையோர்சுத்தவித்தையைஅடைவர். சிந்தித்தல்என்னும்ஞானமுடையோர்ஈசுரதத்துவத்தைஅடைவர். தெளிதல்என்னும்ஞானமுடையோர்சாதாக்கியதத்துவத்தைஅடைவர். ஞானத்தில்ஞானமாகியநிட்டைபூரணமுறாதுஇடையேதேகம்நீங்கப்பெற்றோர்சத்திசிவதத்துவங்களைஅடைவர்.ஞானத்தில்முடிந்தஞானமுடையசிவானுபூதிச்செல்வரேஅந்தப்பரமுத்திக்குஉரியர்.

அபரமுத்திப்பெரும்போகத்தைவிரும்பாதுபரமுத்திஒன்றையேகாதலித்துநிற்கும்உத்தமருக்கு, இப்பிறவிநீங்கினும், அடுத்துவரும்பிறவியிலேஅவ்வுண்மைஞாலம்நிகழ்ந்து, பரமுத்தியும்சித்திக்கும்.

**பொழிப்பு** :கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைஎனஞானம்நான்குவகை. இந்தமுறையிலேநின்றுகேட்டுச்சிந்தித்துத்தெளிந்துநிட்டைகூடினவர்களேமுத்தியைப்பெற்றவராவர்.

## ஞானதிட்டை.

84. பாசமாஞானத்தாலும்படர்பசுஞானத்தாலும்

ஈசனையறியவொண்ணாதிறையருண்ஞானநண்ணித்

தேகறுமதனான்முன்னைச்சிற்றறிவொழிந்துசேர்ந்து

நேசமோடுயர்பரத்துநிற்பதுஞானதிட்டை

பதவுரை: பாசமாம்ஞானத்தாலும்படர்பசுஞானத்தாலும்-கருவிகளால்வரும்பாசஞானத்தினாலும்அக்கருவிகள்நீங்கினவிடத்துவிரிந்தநான்பிரமம்என்னும்பசுஞானத்தாலும், ஈசனைஅறியஒண்ணாது-சிவனைஅறியக்கூடாது, இறைஅருள்ஞானம்நண்ணி -சிவனுடையதிருவருளாகியஞானத்தைப்பொருந்தி, தேசுஉறும்அதனால்முன்னைச்சிற்றறிவுஒழிந்து-பிரகாசம்பொருந்தியஅந்தஞானத்தினாலேபழையஆன்மபோதம்நீங்கி, உயர்பரத்துசேர்ந்துநேசமோடுநிற்பது-அந்தஞானத்திற்குமேலானசிவத்திலேஅத்துவிதமாய்க்கலந்துஅன்புசெய்து (சிவாநந்தத்தைஅனுபவித்து) நிற்பது, ஞானநிட்டை - ஞானநிட்டையாம்

குறிப்பு:-1. பாசமாஞானத்தாலும்:-பாசஞானமானதுசொற்பிரபஞ்சமும்பொருட்பிரபஞ்சமுமாகியஇருவகைப்பிரபஞ்சங்களின்வாயிலாய்ஆன்மாவின்கண்நிகழும்ஏகதேசஞானமாம்.

வைகரிமுதலியநால்வகைவாக்கின்பகுதியவாகியவேதசாத்திரங்களும்மிருதிகளும்புராணங்களும்மற்றைக்கலைஞானங்களும்அசபையும்சொற்பிரிபஞ்சமாம்.

பிருதிவிமுதல்நாதமீறாகியமுப்பத்தாறுதத்துவங்களும்பொருட்பிரபஞ்சமாம். அசபை - ஒருமந்திரம்.

2.படர்பசு ஞானத்தாலும்:- பசுஞானமாலதுநான்பிரமம்என்னும்ஞானம். அதுஆன்மபோதத்தால்வருவது. பாசங்களின்இயல்பைஉணர்ந்துதன்னைஅவற்றின்வேறாகக்கண்டு, அவையெல்லாம்தன்கீழ்வியாப்பியமென்றறிந்துநீங்கித்தான்மேற்படும்பொழுது, அவற்றிற்குமேலாயபிரமம்தானேஎனச்சடுதியில்வரும்ஞானமாம்.

3. இறையருண்ஞானம்:-பதிஞானம்எனப்படும்பதிஞானமாவதுதிருவருள், மேற்சொல்லியஇருவகைஞானத்தினாலும்சிவனைஅறியமுடியாதுபதிஞானம்ஒன்றினாலேசிவனைஅறியலாம், அஃதாவதுதிருவருளைக்கூடிச்சிவனைஅறிலதுஎன்பதாம். "அவனருளாலேஅவன்முன்வணங்கிஎன்றதுமதுவே.

4. சேர்ந்துநேசமோடுயர்பரத்துநிற்பதுஞானநிட்டை:-பெத்தநிலையில்ஆன்மாவின்அறிவிச்சைசெயல்கள்விடயங்களைஅறிந்துபற்றிஅவற்றில்அழுந்திநின்றதுபோல, முத்திநிலையிலும்அவைதொழிற்பட்டுநிற்கும். அஃதெப்படியெனில், முதல்வன்ஆன்மாக்களோடுஅத்துவிதமாய்க்கலந்துநின்று,

அறிவித்தும்அறிந்தும்உபகரித்துவரும்பெருங்கருணையைநோக்குதல்அறிவின்தொழிலாம். அங்ஙனமறிந்துஅம்முதல்வனிடத்தில்செல்லும்இச்சை (அன்பு) அதிகப்படுதல்இச்சையின்தொழிலாம். அவ்வன்புமிகுதியால்திருவடியாகியசிவானந்தத்தைஅனுபவித்தல்கிரியையின்தொழிலாம். இங்ஙனம்ஆன்மாவின்அறிவிச்சைசெயல்கள்மூன்றும்முத்திநிலையிலேதொழிற்படுமாதலால் "சேர்ந்துநேசமோடுநிற்பது" என்றார். ஞானநிட்டைதுரியாதீதநிலை.

**பொழிப்பு**:பாசஞானத்தினாலும்பசுஞாலத்தினாலும்சிவனைஅறியக்கூடாது. சிவஞானத்தைப்பொருந்தி, அதன்உபகாரத்தாலேதற்போதம்நீங்கி, அந்தஞானத்துக்குமேலானசிவத்திலேஅத்துவிதமாய்க்கலந்துஅன்புசெய்து. சிவானந்தத்தைஅனுபவித்துநிற்பதுஞானநிட்டையாம்.

## உபாயநிட்டை

85. விளம்பியவகையினிட்டைமேவிடலரிதேன்முன்னம்
அளந்தறிவளித்தவற்றினளவுமற்றவற்றினாலே
உளங்கொளுந்தனையுமுள்ளபடியுமுற்றுணர்ந்துசெவ்வே
தளர்ந்திடாதுவப்பமற்றத்தன்மையதாகுந்தானே

**பதவுரை**:விளம்பியவகையின்நிட்டைமேலிடல்அரிதேல்முன்சொன்னமுறைமையிலேநிட்டைகூடுதல்அரிதாயின், முன்னம்அளந்துஅறிவுஅளித்தவற்றின்அளவும் - பெத்தநிலையிலேவிடயங்களைஅறிந்துஆன்மாவுக்குஅறிவித்துநின்றகருவிகளின்இயல்பையும், அவற்றினாலேகொள்ளும்உளம்தனையும் - அக்கருவிகள்வாயிலாகஅறியும்ஆன்மாவாகியதனதுஇயல்பையும், உள்ளபடியும்- ஆன்மாவோடுகலந்துநின்றுஅறிவித்தும்அறிந்தும்உபகரித்துவரும்பரமசிவனதுஅத்துவிதநிலையையும், உற்றுஉணர்ந்து -திருவருளைக்கூடிநின்றறிந்து, தளர்ந்திடாதுசெவ்வேஉவப்ப - அவ்வத்துவிதநிலையைமறவாதுகடைப்பிடித்துநின்றுவிரும்பவே, அத்தன்மையதுஆகும் - முன்சொல்லப்பட்டநிட்டையின்முறைமைகூடும்.

**குறிப்பு:-**1. முன்னம்அளந்தறிவளித்தவற்றினளவு-பார். செ. 72. கு. 2. அளத்தல்-அறிதல்.

2. உளங்கொளுந்தனையும் - ஆன்மாஅறிவிக்கஅறியும்இயல்புடையதுஎன்பதையும்.

3. உள்ளபடியும்உற்றுணர்ந்துசெவ்வேதளர்ந்திடாதுவப்ப: காட்டக்காணும்தன்மையுடையகண்ணுக்குஉருவத்தைக்காணும்படிகாட்டியும், அக்கண்ணோடுகலந்துநின்றுஅவ்வுருவத்தைக்கண்டும்ஆன்மாஉபகரிப்பதுபோலஅறிவிக்கஅறியும்தன்மையு

டையஆன்மாவுக்குவிடயங்களைஅறியும்படிஅறிவித்தும், அவ்வான்மாவொடுகலந்துநின்றுவிடயங்களைஅறிந்தும்முதல்வன்உபகரித்துவருவன். இதுபெத்தமுத்திஇரண்டிலும்ஒருதன்மையாய்நிகழும்.இவ்வாறுஅத்துவிதமாய்நின்றுஉபகரித்துவரும்பெருங்கருணையைமறவாதுகடைப்பிடித்துநின்றுசெய்யும்அன்பினால், சிவாநந்தானுபூதியாகியநிட்டைகைகூடும்என்பது.

உற்றுணர்தல் - சேர்ந்தறிதல், பொருந்தியறிதல்.செவ்வே - நேரே, உறுதியாய்ப்பற்றி, கடைப்பிடித்து,தளர்ந்திடாது - சோர்வின்றி, மறவாது, இடையீடின்றி

**பொழிப்பு:**முன்சொன்னமுறையிலேநிட்டைகூடுதல்அரிதாயின்முதல்வனதுஅத்துவிதநிலையைமறவாதுபத்திசெய்தலால், அவன்திருவடியைக்கூடுதலாகியநிட்டைகைகூடும்.

## பாவனையாற்சிவத்தைஅடையஇயலாது

86. பாவிக்கின்மனதிவேண்டும்பயனிலைகரணநீத்துப்
பாவிப்பனென்னிலென்னபழுதுளபாலகத்தாற்
பாவிக்கவொண்ணானென்றுபாவிப்பனென்னினீயென்
பாவிக்கவேண்டாவாண்டபரனருள்பற்றினோர்க்கே.

**பதவுரை:**பாவிக்கின்மனதிவேண்டும் - அந்தச்சிவத்தைப்பாவனையாற்பெறலாம்என்னின்அதற்குமனம்முதலியகருவிகள்வேண்டும், பயன்இலை- கருவிகளுக்குளட்டாதவராகையால்அந்தப்பாவனையாற்பயனில்லை, கரணம்நீத்துப்பாவிப்பன்என்னில்- கருவிகளைநீக்கிநின்றுபாவிப்பேனென்னில், என்ன - கருவிகள்நீங்கியவிடத்துஒன்றையும்அறியுமாறில்லையாதலின்பாவிப்பதெப்படி? பழுதுஉள - அன்றியும்கேவலம்வந்துதலைப்படும், பாவகத்தால்பாவிக்கஒண்ணான்என்றுபாவிப்பன்என்னின்- பாவனையாற்பாவிக்கஎய்தாதவரென்றுபாவிப்பேன்என்றுசொல்லில், நீஎன் - நீசெய்யும்பாவனையாவதுஎன்ன? ஆண்டபரன்அருள்பற்றினோர்க்குப்பாவிக்கவேண்டா- அடிமையாகக்கொண்டசிவனதுஅருள்பெற்றவர்க்குப்பாவனைவேண்டியதில்லை, அவ்வருளேசிவனைப்பெறுவிக்கும்.

**குறிப்பு:**-1

யோகமதத்தவர்யோகநூலிற்கூறும்தியானபாவனைகளால்சிவனைஅறியலாமென்பர்.தியானபாவனையினால் மனம்முதலியகருவிகளைக்கொண்டறியலாம்என்னின், அக்கருவிகளால்அறியப்பட்டயாவும்அசத்தாம்.

சிவன்சித்துப்பொருளாதலால், அக்கருவிகளைக்கொண்டுஅவரைஅறியஇயலாது. அதலால்அப்பாவனையால்பயனில்லை.

இனி, அப்பாவனைசுருவிகளோடுகூடிச்செய்யாது. கருவிகளைநீக்கிநின்றுசெய்யும்பாவனையாம்என்னின்; கருவிகள்நீக்கியவிடத்துஒன்றையும்அறியுமாறின்றித்துரியாதீதமாகியகேவலாவத்தைபொருந்துமாதலால், அப்பாவனையாலும்பயனில்லை.

இனி, கருவிகளைக்கொண்டும்பாவியாது, கருவிகளில்நீங்கியும்பாவியாது,பாவனையால்பாவிக்களய்தாதவர்என்றுபாவிப்பேன்என்னின்,அதுபோலிப்பாவனையாய்ப்பாவனாதீதம்போலப்பாவனைமாத்திரமேயன்றிஅதனால்பயனொன்றுமில்லையாம்.

ஆதலால், மேற்கூறியபாவனைகளைஒழித்துத்திருவருளால்சிவனைப்பாவனைசெய்தால், அத்திருவருளேசிவனைஅடைவிக்கும்.

**பொழிப்பு:**பாவனைகளாற்சிவனையடைதல்அரிது. சிவத்தினதுஅருளைப்பெற்றஅடியாருக்குஒருபாவனையும்வேண்டியதில்லை. அவ்வருளேசிவத்தைஅடைவிக்கும்.

## அத்துவிதநிலை

87. ஒன்றிரண்டாகியொன்றினொருமையாமிருமையாகி
ஒன்றினொன்றழியுமொன்றாதென்னினொன்றாகாதியின்
ஒன்றிரும்புறழினன்றாமுயிரினைந்தொழிலும்வேண்டும்
ஒன்றிநின்றுணருமுண்மைக்குவமையாணவத்தொடொன்றே.

**பதவுரை**:ஒன்றுஇரண்டாகிஒன்றின்ஒருமையாம் - பிரமமாகியஒருபொருளேபிரமமும்சீவர்களும்எனஇரண்டாகஎண்ணப்பட்டிருந்துமுத்திநிலையில்அவ்விரண்டும்ஒன்றாய்விடும்என்னின்சீவர்களும்பிரமமும்ஒருதன்மையுடையராகவேண்டும். அப்படியில்லாமையால்அதுபொருந்தாது. இருமையாகிஒன்றின்ஒன்றுஅழியும்- அநாதியிலேஆன்மாவும்சிவமும்வேறுவேறாயிருந்துமுத்தியிலேஒன்றாகும்என்னின்அநாதியிலேவேறுவேறாயிருந்தமுதல்இரண்டில்ஒன்றுஅழியும். ஆகையால்அதுவும்பொருந்தாது, ஒன்றாதுஎன்னின்ஒன்றாகா - சிவனும்ஆன்மாவும்முத்தியிலும்ஒன்றாதுபேதமாயிருக்கும்என்னின்அதுஅத்துவிதநிலையாகாது. ஆகையால்அதுவும்பொருந்தாது, தீயின்ஒன்றுஇரும்புஉறழின்அன்றாம் - தீயிற்பொருந்தியஇரும்புதீயானாற்போலச்சிவத்திற்பொருந்தியஆன்மாவும்சிவத்தில்குணங்களைப்பொருந்தப்

பெறும்எனின்அப்படியன்று. ஏனெனின், உயிரின்ஐந்தொழிலும்வேண்டும் - சிவனுக்குரியஐந்தொழிலும்ஆன்மாவிடத்திலும்காணப்படவேண்டும். ஆகையால்அதுவும்பொருந்தாது, ஒன்றிநின்றுஉணரும்உண்மைக்குஉவமை - ஆன்மாசிவத்தோடுகூடிநின்றுபேரானந்தத்தைஅனுபவிக்கும்முத்திநிலைக்குஉவமைகூறில், ஆணவத்தோடுஒன்றே -பெத்தநிலையில்ஆணவமலத்தோடுகூடிஅதுவாகவேயிருந்ததன்மையாம்.

**குறிப்பு:-** 1. ஒன்றிரண்டாகியொன்றினொருமையாம்:-ஒன்றுஇரண்டாகிஒன்றும்என்பவர்ஏகான்மவாதிகள். இவர்பிரமம்ஒன்றேசத்தாகியபொருள்என்றும், அதுமாயோபாதியினாற்சீவர்களாகிப்பலபடவிரியும்என்றும். பின்புவேதாந்தஞானத்தினால்மாயோபாதிஒழிந்துநீரும்நீரும்சேர்ந்தாற்போலப்பிரமத்தில்ஒன்றாகும்என்றும்கூறுவர்.

2. இருமையாகிஒன்றினொன்றழியும்:- இருமையாகிஒன்றும்என்பவர்ஐக்கியவாதிகள். இவர்சிவமும்உயிரும்வேறுவேறுஎன்றும், உயிர்மாயையும்கன்மமும்என்னும்இரண்டுபாசமுடையதுஎன்றும், மாயாபாசமறைப்பினால்ஞானமின்றியிருக்கும்என்றும், இருவினையும்ஒத்தபொழுதுஅப்பாசம்நீங்கிச்சிவத்தோடுஐக்கியமுற்றுஏகமாய்விடும்என்றும்கூறுவர்.

3. ஒன்றாதென்னினொன்றாகா:- ஒன்றாதுஎன்பவர்பேதவாதிகள். இவர்ஆன்மாஎப்பொழுதும்சிவத்தின்வேறுஎன்றும், முத்தியிலும்சுத்தமானநித்தியசரீரத்தைப்பெற்றுவேறாயிருக்குமென்றும்கூறுவர்.

4. தீயினொன்றிரும்புறழின்:- தீயின்ஒன்றுஇரும்புஉறழும்என்பவர்சிவசங்கிராந்தவாதிகள். இவர்தீயிற்சேர்ந்தஇரும்புதீயானாற்போல, முத்தியில்ஆன்மாசிவத்தோடுகூடிச்சிவத்தின்குணங்களைப்பெற்றுச்சிவமாய்விளங்கும்என்பர். சிவத்தின்குணங்கள்ஆன்மாவிற்கலக்கப்பெறுமென்பதுஇவர்கொள்கை. சங்கிராந்தம்கலப்பு,உறழ்தல் - உவமையாதல்.

5. ஒன்றினின்றுணருமுண்மைக்குவமையாணவத்தொடன்றே :- மேற்கூறியவாதிகள்கூறும்முத்திநிலையெல்லாம்பொருந்தாதுபிழைபடுதலிற், சித்தாந்தத்தில்கூறும்முத்திநிலையேஉண்மையானதாம். அம்முத்திநிலையைஉவமையால்விளக்குமிடத்துஆன்மாபெத்தத்தில்ஆணவமலத்தோடுபிரிவின்றியிருந்துஅவ்வாணவமலமொன்றேயன்றிவேறொன்றுமில்லையெனும்படிஇருந்தாற்போல,இம்முத்திநிலையிற்சிவத்தோடுகூடிஅச்சிவத்தில்வேறறநின்றுசிவானந்தத்தைநுகர்ந்திருத்தலாம். மலமும்ஆன்மாவும்ஒன்றாகாமல்இரண்டாகாமல்ஒன்றுஇரண்டுமன்றாகாமலிருக்கும்தன்மைபோலாம்.

**பொழிப்பு:**பிரமமாகியஒருபொருளேபிரமமும்சீவர்களுமெனஇரண்டாகஎண்ணப்பட்டிருந்து,முத்திநிலையில் அவ்விரண்டும்ஒன்றாய்விடுமென்னின், சீவர்களும்பிரமத்தின்இயல்புடையராகவேண்டும். அப்படியில்லாமையால், அதுபொருந்தாது.

வேறாகியசிவமும்ஆன்மாவும்முத்திநிலையில்ஒன்றாகுமென்னின், இரண்டுபொருள்ஒன்றாவதில்லை. அன்றியும்ஒன்றுஅழியவேண்டியதாகும்.

சிவமும்ஆன்மாவும்ஒன்றாவதில்லையெனின், சிவத்தோடுஆன்மாஒன்றுதலேமுத்தியென்பதற்குமாறாய்ச்சிவமும்ஆன்மாவும்கூடமாட்டாஎனமுடியும்.

தீயிற்பொருந்தியஇரும்பைப்போலச்சிவத்திற்பொருந்தியஆன்மாசிவத்தின்குணங்களைப்பொருந்தப்பெறுமெனின், ஒருபொருளின்குணம்மற்றொருபொருளுக்குவருதலில்லையாம். வருமெனின், சிவனுக்குரியஐந்தொழில்ஆன்மாவிடத்தும்காணப்படவேண்டும். ஆசையால், இவையெல்லாம்பொருந்துவனவல்ல.

ஆன்மாசிவத்தோடுபொருந்திநின்றுசிவானுபவத்தைப்பெறும்முத்திநிலைக்குஉவமைகூறின்ஆன்மாபெத்தநிலையில்ஆணவமலத்தோடுபொருந்திநின்றதுஎப்படியோஅப்படியேயாம்.

## ஆணவமலநீக்கம்

88. அழிந்திடும்பாசமென்னினித்தமென்றுரைத்தல்வேண்டா
அழிந்திடாதென்னின்ஞானமடைவதுகருதவேண்டா
அழிந்திடுஞ்சத்திநித்தமழிந்திடாதொழியின்முன்னர்
அழிந்திடுமிருளுநாசமடைந்திடாமிடைந்திடாவே.

**பதவுரை:**பாசம்அழிந்திடும்என்னின்-இந்தஅத்துவிதநிலையில்ஆணவமலம்அழிந்துவிடும்என்னில், நித்தம்என்றுஉரைத்தல்வேண்டா - பதிபசுபாசம்மூன்றும்நித்தம்என்றுஆகமங்கள்சொல்லல்வேண்டுவதில்லை. அழிந்திடாதுஎன்னின்- அழியாதென்னில், ஞானம்அடைவதுகருதவேண்டா- ஞானம்பெறுவதைநினைக்கவேண்டுவதில்லை. அப்படியாயின்அழிவதுஏதெனின், சத்திஅழிந்திடும்நித்தம்அழிந்திடாது - ஆன்மாவின்அறிவைமறைக்கின்றமலத்தின்காரியமானசத்தியேஅழியும். அதுவன்றிஅதன்நித்தியத்தன்மைஅழியாது. அஃதுஎதுபோல்எனின், ஒளியின்முன்னர்அழிந்திடும்இருள்நாசமும்அடைந்திடாமிடைந்திடா- ஆதித்தஒளியின்முன்நில்லாதஇருள்நாசமடைவதுமில்லை. அவ்வொளியின்முன்முனைத்துநிற்பதுமில்லை.(அதுபோலும்என்க.)

**குறிப்பு:-**1. அழிந்திடும்பாசமென்னின்:- பேதவாதிகள்செம்புகளிம்புகுளிகையினாலேஅழிந்து,பொன்னானதுபோல, ஆன்மாவைப்பந்தித்தஆணவமலமும்அருளினாலேஅழிந்துபோகஆன்மாசிவமயமாய்விடும்என்பர். அப்படியாயின், மலம்அநித்தியப்பொருளாய்ஆகமவிதிக்குமாறுபாடாகுமென்றுஅவர்கொள்கையைமறுத்தவாறு.

2. அழிந்திடாதென்னின். . . . . . .:- முத்திநிலையிலும்ஆணவமலம்நீங்குமாறில்லைஎன்பவர்பாடாணவாதசைவர்.

**பொழிப்பு:**ஆணவமலமானதுமுத்திநிலையில்அழிந்துவிடுமென்னின், அதுநித்தம்என்பதுபொருந்தாது. முத்திநிலையில்அழியாதென்னின், ஞானம்பொருந்தமாட்டாது. உண்மைஎப்படியெனின், மலம்நித்தமாயிருக்கஅதன்சத்தியேவலிஅழியும்என்பதாம்.

## கன்மமலநீக்கம்

89. எல்லையில்பிறவிநல்குமிருவினையெரிசேர்வித்தின்
ஒல்லையினகலுமேன்றவுடற்பழவினைகளுட்டுந்
தொல்லையின்வருதல்போலத்தோன்றிருவினையதுண்டேல்
அல்லொளிபுரையுஞானத்தழலுறவழிந்துபோமே.

**பதவுரை:**எல்லைஇல்பிறவிநல்கும்இருவினை - அளவில்லாதசனனங்களைத்தரும்புண்ணியபாவங்களானசஞ்சிதவினை, எரிசேர்வித்தின்ஒல்லையில்அகலும் - அக்கினியிற்சேர்ந்தவித்துப்போலஆசாரியனதுதிருநோக்கால்விரைவிலேநீங்கும், என்றஉடல்பழவினைகன்ஊட்டும் - முதல்வன்என்றுகொண்டஉடம்புஇடமாகவரும்பிராரத்தவினைஉடம்புள்ளளவும்நின்றுபுசிப்பிக்கும், தொல்லையில்வருதல்போலத்தோன்றும்இருவினையதுஉண்டேல் - முற்சனனங்களிற்பிராரத்தகன்மம்புசிக்கையில்ஆகாமியகன்மம்ஏறினாற்போலஇப்பொழுதும்தோன்றுகின்றஆகாமியம்உண்டாயின், அல்ஒளிபுரையும்ஞானத்தழல்உறஅழிந்துபோம் - இருளைக்கொடுக்கும்சூரியனைஒத்தஞானாக்கினிவந்துபொருந்தஅதுஅழிந்துபோம்.

**குறிப்பு** :1. ஏன்றவுடற்பழவினைகள் - ஞானதீக்கையிலேஉடல்பொருள்ஆவிமூன்றும்ஞானாசாரியருக்குத்தானஞ்செய்யப்பட்டமையால்,

'ஏன்றவுடற்பழவினைகள்' என்றார். பொருள் - உடலுக்கமைக்கப்பட்டவினை. உடற்பழவினை - உடலுக்கமைக்கப்பட்டபிராரத்தவினை. ஏன்ற- ஏற்றுக்கொண்ட.

2. புரையும்-புரைத்தல், ஒத்தல்.

3. ஆணவமலமும்கன்மமலமும்மேலேசொல்லியவாறுநீங்கவே, மாயாமலமும்அழியுமென்பதாயிற்று.

**பொழிப்பு:**அளவில்லாதபிறவிகளைத்தருதற்கேதுவாயிருக்கின்றபுண்ணியபாவவடிவாயுள்ளசஞ்சிதவினைவறுத்தவித்துப்போலஆசாரியனதுதிருநோக்கால்நீங்கும்.

உடலுக்குரியபிராரத்தவினைஉடலுள்ளளவும்நின்றுஅனுபவத்தினால்ஒழியும், அப்பிராரத்தப்பயனைநுகரும்பொழுதுவந்தேறும்ஆகாமியவினைஒளிமுன்இருள்போனஞானத்தால்அழியும்.

## VI. புனிதநாமம் (ஸ்ரீபஞ்சாக்கரம்)

1. மலவாசனைதாக்காமைக்குஉபாயம், (90)
2. சூக்குமபஞ்சாக்கரத்தின்பொருளும்அதனைக்கேட்டற்குரியவரும். (91).
3. பஞ்சாக்கரமகிமை, (92)

### 1. மலவாசனைதாக்காமைக்குஉபாயம்.

90. பந்தமானவையறுத்துப்பவுதிகமுழலுமெல்லைச்
சந்தியாதொழியாதிங்குத்தன்மைபோல்வினையுஞ்சாரும்
அந்தமாதிகளில்லாதவஞ்செழுத்தருளினாலே
வந்தவாறுரைசெய்வாரைவாதியாபேதியாவே.

**பதவுரை:**பந்தமானவைஅறுத்துப்பவுதிகம்உழலும்எல்லை - ஞானாசாரியரதுதீக்கையாலேமும்மலபந்தங்களும்ஒழியப்பெற்றுப்பூதசம்பந்தமானதேகம்சஞ்சரிக்கும்பொழுது ,சந்தியாதொழியாது -மலவாசனைதாக்காதொழியாது; அதுபற்றி, இங்குத்தன்மைபோல்வினையும்சாரும் - பெருங்காயம்வைத்தெடுக்கப்பட்டபாத்திரத்தில்அதன்வாசனைமங்கிமெலிதாய்வீசுமாறுபோலப்பிராரத்தவினையும்மங்கிமெலிதாய்வந்துதாக்கும்,அந்தம்ஆதிகள்இல்லாதஅஞ்செழுத்து - முதலும்முடிவும்இல்லாதஸ்ரீபஞ்சாக்கரத்தை, அருளினாலேவந்தவாறுஉரைசெய்வாரை - அருளேதிருமேனியாகக்கொண்டெழுந்தருளிவந்தஞானாசாரியராலேஉபதேசமானபடிஉச்சரிப்பவரை, வாதியாபேதியா - அவ்வாசனைகள்தாக்கவும்மாட்டா, பிறழச்செய்யவும்மாட்டா.

**குறிப்பு:-** 1. புனிதநாமம்- பரமசிவனுடையதிருநாமம்,திருமந்திரமாகியஸ்ரீபஞ்சாக்கரம். இதுநம்பனாமம், நாதனாமம், நக்கனாமம், நந்திநாமம், வரதனாமம்என்னும்பெயர்களாலும்விளங்கும்.

2. பந்தமானவையறுத்துப்பவுதிகமுழலுமெல்லை......... ஞானாசாரியராலேமும்மலங்களும்நீங்கப்பெற்றுத்தான்பணியைநீத்துநிற்கும்ஞானிகளுக்கும்மலவாசனைதாக்கும். அஃதாவது, தானல்லாதஉடம்பைத்தானென்றும், தனதல்லாதபோகத்தைத்தனதென்றும், மாறுபாடாகக்கருதப்பண்ணும்மயக்கவுணர்விற்குக்காரணமாகியஆணவமலவாசனைதாக்குதல்,அதுபற்றிஅவ்வுடம்பிற்குரியபிராரத்தவினையின்அனுபவமும்மயங்கிப்போய்மெலிதாய்வந்துதாக்கும். இப்பிராரத்தநுகர்ச்சியில்நான்எனதுஎன்பனஎழுமாதலால், அவைமலவாசனையாய்ஆகாமியத்தையும் விளைவிக்கும்.இவற்றின்வாசனைதாக்காமைக்குஉபாயம்என்னவெனில், ஸ்ரீபஞ்சாக்கரத்தைஓதிஏகனாகிஇறைபணிநிற்றலாம்.

இந்நிலையில்ஓதப்படும்பஞ்சாக்கரமுறைமையைக்குருமுகத்தாலறிக.

3. பஞ்சாக்கரம்சாதகரின்பக்குவதாரதம்மியத்தின்படிஉபதேசிக்கும்சோபானக்கிரமத்தில், முறையேதூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம், மகாமனுஎன்னும்ஐந்துவகையாய்விளங்கும். அவற்றுள்,

நகரத்தைமுதலிலும், யகரத்தைஇறுதியிலும்வைத்துச்செபிப்பதுதூலபஞ்சாக்கரம்எனப்படும். இதுஅவரவர்களின்சமயாசாரகன்மாநுட்டானங்களுக்குஇன்றியமையாதது,முத்தியில்விருப்பமுடையோருக்குத்தக்கதன்று.

நகாரமகாரங்களைஇறுதியிலும், சிகாரவகாரங்களைமுதலினும்,யகாரத்தைஇடையிலும்கொண்டிருப்பதுசூக்குமபஞ்சாக்கரம்எனப்படும். இதனைமுத்திபஞ்சாக்கரம்என்றும்சிலர்சொல்வர்.

சிகாரவகாரங்கள்இரண்டும்முறையேஎதிர்நிரனிறையாகநிற்க, யகாரமானதுநடுவேநிற்பதுகாரணபஞ்சாக்கரம்எனப்படும். இதுஅதிசூக்குமபஞ்சாக்கரம்என்றும்,முத்திபஞ்சாக்கரம்என்றும்,இருதலைக்கொள்ளிஎன்றும், இருதலைமாணிக்கம்என்றும்சொல்லப்படும்.

இக்காரணபஞ்சாக்கரமாகியசிகாரவகாரயகாரங்களுள்ளே, யகாரமாகியஆன்மாவனதுசிகாரமாகியசிவத்தினால்வகாரமாகியஅருளிலேஇலயப்பட்டுநிற்க, அருளும்சிவமுமாகியவகாரம்சிகாரம்என்னும்இரண்டுமாத்திரமாய்நின்றுவிளங்குவதேமகாகாரணபஞ்சாக்கரம்எனப்படும்.

மகாகாரணபஞ்சாக்கரமாகியவகாரசிகாரம்இரண்டினுள், வகாரமாகியஅருளையும்தன்னிடத்துஇலயப்படுமாறுஅடக்கிக்கொண்டு,

சிகாரமாகியபதிஎழுத்துமாத்திரமாய்த்தனித்துநிற்பதேமகாமனுஎனப்படும். இதுநாயோட்டுமந்திரம்எனவும், இறையெழுத்துஎனவும், பெருவெழுத்துஎனவும்பிரமபீஜம்எனவும்சொல்லப்படும்.

4. ஆதியந்தமில்லாதபரமசிவனுடையதிருநாமமும்ஆதியந்தமில்லாததுஎன்பார், "அந்தமாதிகளில்லாதவஞ்செழுத்து" என்றார்.

5. உரைசெய்வாரை:- உச்சரிக்கும்முறைமானதம்,மந்தம், உரைஎனமூவகைப்படும். அவற்றுள்சுத்தமானதம்எனப்படும்அறிவால்கணித்தலைநோக்கியே "உரை" என்றார்.

**பொழிப்பு**

:மலமாயைகன்மங்களாகியபந்தங்கள்நீங்கிப்பிராரத்தவினைக்கீடாகச்சரீரம்சஞ்சரிக்கும்பொழுதுமலவாசனை தாக்காதொழியாது. அதுபற்றிப்பிராரத்தவினையும்மெலிதாய்வந்துதாக்கும். ஞானாசாரியர்உபதேசப்படிஸ்ரீபஞ்சாக்கரத்தைஉச்சரிப்பவரைஅவ்வாசனைகள்தாக்கவும்மாட்டா; ஆகாமியவினைஏறாதாதலின், அவர்நிற்கும்நிலையினின்றுபிறழச்செய்யவுமாட்டா.

## 2. சூக்குமபஞ்சாக்கரத்தின்பொருளும்அதனைக்கேட்டற்குரியவரும்

91. திருவெழுத்தைந்திலான்மாத்திரோதமாசருள்சிவஞ்சூழ்
தரநடுநின்றதொன்றாந்தன்மையின்றென்மையாகி
வருமநமிகுதியாலேவாசியிலாசையின்றிக்
கருவழிச்சுழலுமாறுங்காதலார்க்கோதலாமே.

**பதவுரை** :திருஎழுத்துஐந்தில்- சூக்குமபஞ்சாக்கரமாகியசிவயநமஎன்னும்அக்கரங்கள்ஐந்தில், திரோதம்ஆசு- திரோதானசத்தியும்ஆணவமலமும்பின்னும், அருள்சிவம் - அருளும்சிவமும்முன்னுமாகச், சூழ்தர- சூழ்ந்துநிற்க, நடுநின்றது - நடுவேநின்றது,ஆன்மா - ஆன்மாவாம், ஒன்றாம்தன்மையின் - இங்ஙனம்இருவகைக்கும்நடுவாகிஒன்றாயிருக்குந்தன்மையோடு, தொன்மையாகிவரும்மனமிகுதியாலே- அநாதியாய்வரும்மலதிரோதங்களின்மேலீட்டினாலே (அவ்வான்மாவிடயபோகங்களில்அழுந்தி), வாசியில்ஆசையின்றி - அருளிலும்சிவத்திலும்விருப்பின்றிக், கருவழிக்சுழலும் - கருவழிப்பட்டுப்பிறந்திறந்துஉழலும், மாறும்காதலார்க்குஓதலாம் - விடயபோகங்களில்வெறுப்பும்முத்தியின்பத்தில்விருப்பமும்உடையவருக்குஇப்பஞ்சாக்கரத்தைஉபதேசிக்க லாம்.

**குறிப்பு** :-1. ஒன்றாந்தன்மை:-பிறப்பினைவிளைக்கும்நகாரமகாரங்கள்ஒருபுறமாகவும், வீட்டினைவிளைக்கும்சிகாரவகாரங்கள்மற்றொருபுறமாகவும்சூழ்ந்துநிற்க,

ஆன்மாஇவ்விருவகைக்கும்நடுவேநின்றுசார்ந்ததன்வண்ணமாய்அவத்தையுறுதலால், 'ஒன்றாத்தன்மை' என்றார்.

**பொழிப்பு** :சூக்குமபஞ்சாக்கரத்திலேதிரோதமும்மலமும்ஒருபுறமாகவும், அருளும்சிவமும்மற்றொருபுறமாகவும்சூழ்ந்துநிற்க, இவற்றின்நடுவேநிற்பதுஆன்மாவாம், இங்ஙனம்நடுவேநிற்பதினாலும், மலதிரோதங்களின்மயக்கமிகுதியினாலும், விடயபோகங்களில்அழுந்தி, அருளிலும்சிவத்திலும்விருப்பின்றிப்பிறந்திறந்துழலும், விடயபோகங்களில்வெறுப்புண்டாகிமுத்தியில்விருப்பமுடையோருக்குஇப்பஞ்சாக்கரத்தைஉபதேசிக்கலாம்:

## 3. பஞ்சாக்கரத்தின்மகிமை

92. ஆசுறுதிரோதமேவாதகலுமாசிவமுன்னாக
ஓசைகொளதனினம்மேலொழித்தருளோங்குமீள
வாசியையருளுமாயமற்றதுபற்றாவுற்றங்
கீசனிலேகமாகுமிதுதிருவெழுத்தினீடே

**பதவுரை**:ஆசுஉறுதிரோதம்மேவாதுஅகலுமா- ஆணவமலமும்அதனோடுகூடிநின்றுபாகம்வருத்தும்திரோதாயியும்உன்னைப்பொருந்தாமால்நீங்கும்படி, சிவமுன்னாகஓசைகொள் - சிகாரவகாரங்கள்முதலாகவைத்தோதப்படுஞ்சூக்குமபஞ்சாக்கரத்தைச்செபிப்பாயாக, அதனின் - அங்ஙனஞ்செபித்தலினால், நம்மேல்ஒழித்துஅருள்ஓங்கும்நகாரமாகியதிரோதானசத்திஅதன்பின்னுள்ளமகாரமாகியமலத்தைஒழித்துஅருட்சத்தியாய்விளங்கும், மீளவாசியைஅருளும்- பின்புவகாரமாகியஅந்தஅருட்சத்தியேசிகாரமாகியசிவத்தைத்தரும். எங்ஙனமெனில்,மாய - மகத்தானஆன்மாவானது,மற்றதுபற்றா - அந்தஅருள்பற்றுக்கோடாகநின்று, அங்குஉற்று - அவ்வருளிலேஅடங்கிஅதுவேயாய், ஈசனில்ஏகமாகும்-சிவத்திலேஒன்றுபடும், திருவெழுத்தின்ஈடுஇது- பஞ்சாக்கரத்தின்மகிமைஇதுவாம்.

**குறிப்பு**:-1. ஆசுறுதிரோதமேவாதகலுமா ......!- சூக்குமபஞ்சாக்கரத்தைச்செபித்தலினால்ஆணவமலம்பரிபாகமெய்திநீங்கும். அப்பொழுதுமலத்தைப்பரிபாகம்வருத்தியதிரோதானசத்திஅருட்சத்தியாய்மாறிஆன்மாவிற்பதியும். அதன்பின்சோபானமுறையால்ஞானாசாரியரின்உபதேசங்களுண்டாம். அவைகாரணம், மகாகாரணம்,மகாமனுஎன்னும்பஞ்சாக்கரங்களாம்.

இவற்றால்வரும்அனுபவங்கள்அருள்பற்றுக்கோடாகநிற்றலும், அதனில்அடங்கிநிற்றலும், சிவத்தோடுஏகனாகிநிற்றலுமாம்.

2. நம்மேல்:- நகரத்துக்குப்பின்வரும்மகரம். மேல் - பின் .

3. மாய - ஆன்மாமலத்தினீங்கிநின்றமையால், மாயஎனப்பட்டது. மா- மகத்தான.ய - ஆன்மா.

**பொழிப்பு** :ஆணவமலமுந்திரோதமும்நீங்கும்பொருட்டுச்சூக்குமபஞ்சாக்கரத்தைச்செபிக்கவேண்டும். அங்ஙனம்செபித்தலினால்திரோதானசத்திமலத்தைநீக்கிஅருட்சத்தியாய்மாறிநின்றுபிரகாசிக்கும். பின்பு, ஆன்மாஅவ்வருள்தாரகமாகஅதனில்அடங்கிஅதுவேயாய்ச்சிவத்தோடுஏகமாகும். பஞ்சாக்கரமகிமைஇதுவாம்

## VII. அணைந்தோர்தன்மை

1. சீவன்முத்தர்நிட்டைகூடிஞேயத்தழுந்துவர், (93)
2. அவர், விதிவிலக்குகளைத்தாமாகச்செய்வதும்விடுவதுமின்றிச்
சிவமொன்றையேகண்டிருப்பர், (94)
3. அவர்ஆனந்தக்களிப்புடன்வாழ்வர், (95)
4. அவர்செய்யும்யோகம், (96).
5. அவர்செய்யுங்கிரியை, (97).
6. அவர்செய்யுஞ்சரியை, (98).

### 1. சீவன்முத்தர்நிட்டைகூடிஞேயத்தழுந்தவர்

93. தீங்குறுமாயைசேராவகைவினைதிரிவிதத்தால்
நீங்கிடநீங்காமூலநிறையிருவிரியநேயத்
தோங்குணர்வகத்த 'டங்கியுளத்துளின்பொடுங்கநேரே
தூங்குவர்தாங்கியேகத்தொன்மையிற்றுகளிலோரே.

**பதவுரை**:தீங்குஉறுமாயைசேராவகை- குற்றத்தையுடையமாயாகாரியங்கள்வந்துசேராதபடி, வினைதிரிவிதத்தால்நீங்கிட-சஞ்சிதம்முதலியமூவினைகளும்மூவிதத்தால்ஒழிந்திட, நீங்காமூலநிறைஇருள்இரிய- விட்டுநீங்காதமூலமலமாகியபேரிருளும்அகன்றுபோக, நேயத்துஓங்குஉணர்வுஅகத்துஅடங்கி-சிவத்திற்பிரகாசமானஅருளிலேதாம்அடங்கி, ஏகத்தொன்மையின்தாங்கி - அவ்வருளோடுபிரிவின்றியிருக்கும்சிவத்தினால்தாங்கப்பட்டு,உளத்துள்இன்புஒடுங்க -

தம்மறிவினுள்ளேபேரின்பம்அடங்க, நேரேதூங்குவர்- மலவாசனைசிறிதும்தாக்காதுஏகமாகிஆனந்தமுறுவர், துகளிலோர் - பாசத்தினீங்கியசீவன்முத்தர்,

**குறிப்பு** :-1. தீங்குறுமாயைசேராவகைவினைதிரிவிதத்தால்நீங்கிட - சஞ்சிதம்தீக்கையாலும், பிராரத்தம்அனுபவத்தாலும், ஆகாமியம்ஞானத்தாலும்ஒழியும். சஞ்சிதமும்ஆகாமியமும்ஒழியவே, மறுசனனங்கள்இல்லையாய்,

அவற்றிற்குவேண்டப்படும்மாயாகாரியங்களானதநுகரணபுவனபோகங்களும்வேண்டப்படா.

பிராரத்தப்பயனாகியஇன்பதுன்பங்கள்அனுபவிக்கும்காலத்துமாயைஅவற்றிலேமயங்கச்செய்யும்.

இந்தமாயாகாரியமானமயக்கவாசனையும்தான்பணிநீத்துஅருள்வழிநிற்போரைமயக்காதொழியும், ஆகவே, மூவினைகளும்ஒழிந்தவிடத்துமாயையும்ஒழியும்.மாயையானதுபொய்யானபோகங்களைமெய்யென்றுஎண்ணச்செய்துமயக்குதலால்“தீங்குறுமாயை“என்றார்.

2. மூலநிறையிருளிரிய:- ஒளிமுன்இருள்போல, ஞானம்பிரகாசித்தவிடத்துஆணவமலம்நீங்குமென்பது.

3.நேயத்தோங்குவுணர்வகத்தடக்கி......துகளிலோர்-ஏகனாகிஇறைபணிநிற்கச்சிவானந்தம்தோன்றும்.

அச்சிவானந்தத்தைஅனுபவித்துநிற்பர்சீவன்முத்தர்என்பது, நேயம்... ஞேயம்,சிவம்.

**பொழிப்பு** - சீவன்முத்தர்மும்மலங்களும்நீங்கப்பெற்றுத்தான்பணிநீத்துச், சிவத்தோடுஏகமாகிநின்று, பேரானந்தத்தைஅனுபவிப்பர்என்பதாம்.

**2.அவர்,**

**விதிவிலக்குகளைத்தாமாகச்செய்வதும்விடுவதுமின்றிச்சிவமொன்றையேகண்டிருப்பர்.**

94. குறிப்பிடங்காலந்திக்காசனங்கொள்கைகுலங்குணஞ்சீர்
சிறப்புறுவிரதஞ்சீலந்தபஞ்செபந்தியானமெல்லாம்
மறுத்தறவொழிதல்செய்தன்மருவிடாமன்னுசெய்தி
உறக்குறுபவர்போல்வாய்மையொழிந்தவையொழித்துபோமே

**பதவுரை** :குறிப்பிடம் - நிட்டைக்குயோக்கியமாகக்குறிக்கும்புண்ணியத்தலங்களும், காலம்-இன்னகாலம்இதுசெய்யவேண்டும்என்னும்காலசங்கற்பமும், திக்கு - இன்னதிக்குநன்றுஇன்னதிக்குத்தீதுஎன்னும்திக்குக்கற்பனையும், ஆசனம்-பத்மாசனம்முதலானஆசனங்களில்இன்னஆசனத்திலேஇருக்கவேண்டும்என்னும்ஆசனநியமமும், கொள்கை-சமயக்கோட்பாடுகளும். குலம் -சாதியபிமானமும்,குணம்-சமயாசாரகுலாசாரங்களைப்பற்றிவரும்விருப்புவெறுப்புக்களும், சீர்-வேஷம்ரூபம்முதலியசிறப்புக்களில்வைக்கும்அபிமானமும், சிறப்புஉறுவிரதம் -

சிறப்பினையுடையவிரதங்களும், சீலம்- நல்லொழுக்கமும், தவம்-பஞ்சாக்கினியில்நடுநிற்றல்முதலியதவங்களும். செபம்- செபங்களும், தியானம் -ஆறாதாரங்களிலேதியானிக்கும்தியானங்களும், எல்லாம் -ஆகியஇலையெல்லாம். மறுத்துஅறஒழிதல்செய்தல்மருவிடா- தாமாகமறுத்துத்தீரவிடுதலும்செய்தலும்பொருந்தா, வாய்மைஒழிந்தவை- உண்மைப்பொருளாகியசிவத்தைக்கண்டிருக்கும்செயலொழிந்தனவாகிய, 'மன்னுசெய்தி - ஏனையநியமச்செயல்களெல்லாம், உறக்குஉறுபவர்போல் -நித்திரைசெய்கின்றவர்கைப்பொருள்போல், ஒழிந்துபோம் -தாமாகவேஒழிந்துபோம்.

**குறிப்பு:-** 1. குறிப்பிடம்-காசிமுதலியதலங்களும்கங்கைமுதலியதீர்த்தங்களும்நல்லன, மற்றையதீயனஎன்றுகருதல்.

2 ஆசனம் -சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம்முதலாயின.

3. சீர்-விபூதி, உருத்திராக்கம், காஷாயம், தண்டு, கமண்டலம்முதலியசிறப்புக்களில்அபிமானம்.

**பொழிப்பு:**சீவன்முத்தர்முன்புள்ளநியமங்களைச்செய்வதுமில்லை,

தாமாகவிடுவதுமில்லை,அவர்சிவமாகியமெய்ப்பொருளொன்றையேகண்டுகொண்டிருப்பர்,ஏனையநியமங்களெல்லாம்தாமாகஒழிந்துபோம்.

### 3. அவர்ஆநந்தக்களிப்புடன்வாழ்வர்

95.அகம்புறமென்றிரண்டாலருச்சனைபுரியுமிந்தச்
சகந்தனிலிரண்டுமின்றித்தமோமயமாகியெல்லாம்
நிகழ்ந்திடமகிழ்ந்துவாழுநீர்மையார்போலஞானந்
திகழ்ந்தகம்புறமெனாதசெம்மையார்நன்மையாரே.

பதவுரை : அகம்புறம்என்றுஇரண்டால்அருச்சனைபுரியும்இந்தச்சகம்தனில் -அகப்பூசைபுறப்பூசைஎன்றுஇருவிதமாகஅருச்சனைபண்ணிப்போகமோக்ஷமிரண்டினில்தாம்இச்சித்ததைப்பெற்றுக்கொள்ளும்இந்தப்பூமியின்கண்ணே,இரண்டும்இன்றி -அவ்விருவிதபூசைகளுமின்றி, தமோமயமாகி -அஞ்ஞானமேதமக்குவடிவாகி, எல்லாம்நிகழந்திட -வினைக்கீடாகநிகழ்வனவெல்லாம்நிகழத்தாம்அவற்றைக்கருதாது, மகிழ்ந்துவாழும்நீர்மையார்போல-தாம்கருதியபொருளொன்றிலேசந்தோஷமுற்றுவாழும்உலகத்தவரைப்போல, ஞானம்திகழ்ந்து -ஞானம்பிரகாசித்தவிடத்து, அகம்புறம்எனாதசெம்மையார் -அதனைஅகம்என்றும்புறம்என்றும்பிரித்தறியாதுஎங்கும்ஒருதன்மைத்தாகக்கண்டு,

அந்தஞானமேதமக்குவடிவாய்,

பிராரத்தவினைக்கீடாகநிகழ்வனவெல்லாம்நிகழத்தாம்அவற்றைக்கருதாது,தாம்கருதியசிவம்ஒன்றிலேஏகமாகிநின்றுசிவானந்தத்தைஅனுபவிக்கும்சிறப்புடையோர், நன்மையார் - அந்தஉண்மைஞானத்தைப்பெற்றசீவன்முத்தர்,

**குறிப்பு:-**1. தமோமயம்-அஞ்ஞானவடிவு.தமம்- ஆணவமலம்,அஞ்ஞானம், மயம் - வடிவம்.

2. மேற்கூறியமூன்றுசெய்யுள்களாலும்சீவன்முத்தரதுஞானத்தின்நிலைஉணர்த்தப்பட்டது

**பொழிப்பு** :சீவன்முத்தர்திருவருளைஎங்கும்ஒருதன்மைத்தாகக்கண்டு, அவ்வருளேதமக்குவடிவாய்ப்பிராரத்தவினைக்கீடாகநிகழ்வனவெல்லாம்நிகழ, அவற்றாலேதாக்கப்படாது, சிவத்திலேஏகமாகிப்பேரானந்தமுற்றிருப்பர்.

## 4. அவர்செய்யும்யோகம்

96. அண்டமேவிடவனைத்துமனைத்தையுமண்டமேவிக்
கொண்டல்போலெவையுஞானக்குறைவிலாநிறைதலாலே
கண்டதோர்பொருளையந்தக்கருத்தினாற்காணிற்றானே
அண்டநாயகனார்மேனியானதேலையமின்றே.

**பதவுரை** :அனைத்தும்அண்டம்மேவிட - பிருதிவிமுதலியநான்குபூதங்களும்ஆகாயத்தைப்பொருந்திநிற்க, அண்டம்அனைத்தையும்மேவிக்கொண்டல்போல் - அந்தஆகாயம்அவையெல்லாவற்றையும்கவளீகரித்துக்கொண்டுநிற்றல்போல, எவையும்ஞானம்குறைவிலாநிறைதலாலே - சராசரங்களனைத்திலும்திருவருள்பூரணமாய்நிறைந்திருக்கையால்,கண்டதோர்பொருளைஅந்தக்கருத்தினால் காணில்-தோன்றியஒருவிடயத்தைஅத்திருவருள்வடிவாகக்காணில், தானேஅண்டநாயகனார்மேனி - தானும்உலகநாயகரானசிவத்தின்திருமேனியாய்நிற்பன், ஆனதேல் - அவ்வாறுநிற்பின், ஐயமின்று - அந்தஞானநிலையைஅடைதலில்ஐயமின்று.

**குறிப்பு:-** 1. பிரபஞ்சவாதனையால்மேற்கூறியஞானநிலைவழுவினவிடத்து, அவ்வாதனையைநீக்கிக்கொள்வதற்குச்சீவன்முத்தர்செய்யும்யோகம்இதுவென்றுஇச்செய்யுளாற்கூறினார். இதுஞானத்தில்யோகம்எனப்படும்.

2. நாயகனார்மேனி :- சிவத்தின்திருமேனியாகியதிருவருள் "கருணைதிருவுருவாகி" என்றதும்இது. (பார். செ. 14.)

**பொழிப்பு:**சராசரங்களனைத்திலும்திருவருள்கலந்துவியாபகமாய்நிற்றலால், தனக்குஎதிர்ப்படும்பொருள்களைஅத்திருவருள்வடிவாகக்காணில்தானும்அவ்வருள்வடிவாகிஅந்தஞானநிலையைஅடைவன்.

## 5. அவர்செய்யுங்கிரியை

97. மண்முதற்கரணமெல்லாமறுவசத்தாக்கிஞானக்
கண்ணினிலூன்றியந்தக்கருத்தினாலெவையுநோக்கி
எண்ணியஞ்செழுத்துமாறியிறைநிறையுணர்ந்துபோற்றல்
புண்ணியன்றனக்குஞானபூசையாலுப்புகலுமன்றே.

பதவுரை: மண்முதல்கரணம்எல்லாம் - பிருதிவிமுதலியதத்துவங்கள்எல்லாம், மறுஅசத்தாக்கி - தனக்குவேறானசடப்பொருளெனக்கண்டுநீக்கி, ஞானக்கண்ணினில்ஊன்றி - அப்படிக்காணச்செய்தஅருளிலேநிலைபெற்றுநின்று, அந்தக்கருத்தினால்எவையும்நோக்கிஅந்தஅருட்கண்ணால்எவற்றையும்பார்த்து, அஞ்செழுத்துமாறிஎண்ணி- பஞ்சாக்கரத்தைமாறிச்செபித்து, இறைநிறைஉணர்ந்துபோற்றல் - சிவத்தினதுஅத்துவிதநிலையைநினைந்துதுதித்தல், புண்ணியன்தனக்குஞானபூசையாய்ப்புகலும்- சிவனுக்குஞானபூசைஎன்றுஆகமம்சொல்லும்.

**குறிப்பு:-** 1. பிரபஞ்சவாதனையால்மேற்கூறியயோகநிலைகுலைந்தவிடத்து, அவ்வாதனையைநீக்கிக்கொள்வதற்குச்சீவன்முத்தர்செய்யும்கிரியைஇதுவென்றுஇச்செய்யுளாற்கூறினார். இதுஞானத்திற்கிரியைஎனப்படும்.

2. மண்முதற்கரணமெல்லாமறுவசத்தாக்கல்:- முப்பத்தாறுதத்துவங்களும்தனக்குஅந்நியமானசடப்பொருள்களென்றுஅருளால்அறிந்துஅவற்றினீங்கிநிற்றல். இதுபஞ்சசுத்திகளுள்பூதசுத்திஎனப்படும்.

3. ஞானக்கண்ணினிலூன்றல்:- திருவருளோடுகூடிநிற்றல். திருவருளைத்தாரகமாகக்கொண்டுநிற்றல். இதுஆன்மசுத்திஎனப்படும்.

4. அந்தக்கருத்தினாலெவையுநோக்கல் :- தற்போதத்தைப்பின்னிட்டுஅருளைமுன்னிட்டுஎவற்றையும்காண்டல்,வினைக்கீடாகநிகழ்வனவெல்லாவற்றையும்திருவருட்செயலாகக்காண்டல், "அருளாலெவையும்பாரென்றான்" என்னும்தாயுமானசுவாமிகள்வாக்கும்இக்கருத்துடையது. (தாயு, ஆனந்தக்களி) இதுதிரவியசுத்திஎனப்படும்.

5. மாறிஅஞ்செழுத்துஎண்ணல்:- காரணபஞ்சாக்கரத்தைச்செபித்தல். இதுமந்திரசுத்திஎனப்படும்.

6. இறைநிறைபோற்றல்:- பரமசிவன்சர்வவியாபியாய்ச்சடமுஞ்சித்துமாகியஎல்லாப்பொருள்களோடும்கலந்துநிற்கும்அத்துவிதநிலையைஉணர்தல். இதுஇலிங்கசுத்திஎனப்படும்.

**பொழிப்பு** :பிரபஞ்சப்பற்றைவிட்டு, அருள்வழிநின்று, நிகழ்வனவெல்லாவற்றையும்அவ்வருட்செயலாகக்கண்டு, பஞ்சாக்கரமோதி, முதல்வனதுஅத்துவிதநிலையைநினைந்துதுதித்தல்ஞானபூசையாம்.

## 6. அவர்செய்யும்சரியை

98. தொண்டர்கடாமும்வானோர்தொழுந்திருமேனிதானும்
அண்டருங்கண்டிலாதவண்ணலேயெனவணங்கி
வெண்டரளங்கள்சிந்தவிழிமொழிகுளறமெய்யே
கண்டுகொண்டிருப்பர்ஞானக்கடலமுதருந்தினோரே.

**பதவுரை** :தொண்டர்கள்தாமும் - சிவனடியாரும்,வானோர்தொழும்திருமேனிதானும் - தேவர்கள்வணங்கும்சிவலிங்கமும், அண்டரும்கண்டிலாதஅண்ணலேஎனவணங்கி - தேவரும்காண்டற்கரியசிவபிரானேஎன்றுவணங்கி, விழிவெண்தரளங்கள்சிந்த - கண்கள்வெண்மையானமுத்துப்போலும்நீர்த்துளிசிந்த, மொழிகுளற-வாக்குத்தழுதழுப்ப, மெய்யேகண்டுகொண்டுஇருப்பர்-உண்மைப்பொருளாகியசிவத்தையேகண்டுகொண்டிருப்பர், ஞானக்கடல்அமுதுஅருந்தினோர் - ஞானக்கடலிலேவிளைந்தபேரின்பமாகியஅமுதத்தைப்புசித்தசீவன்முத்தர்

**குறிப்பு:**-1. தொண்டர்கள்தாமும்:- சிவஞானிகள்சிவனடியாரைச்சிவனெனவழிபடுவதேதெனில், அவ்வடியாரின்வேடமும்பாவனையும்செயலும்தன்மையுமேஅதற்குக்காரணமாம். வேடம் - பரமசிவனதுதிருவேடமாகியதிருநீறு, உருத்திராக்கம்முதலியன. பாவனை- அவர்செய்யும்சிவோகம்பாவனை. செயல்- இதயத்தானத்தில்ஒருகுறியின்கண்வைத்துப்பரமசிவனைஎண்ணுஞ்செயல்.தன்மை - அவ்வாறுகூடுங்காலத்துக்குறியும்குறிக்கின்றதாமுமின்றிநிற்கும்தன்மை.

2.வானோர் தொழுந்திருமேனி:- சிவபூசைத்தொண்டுபயன்படுதல்பூமியின்கண்அல்லதுமற்றையஉலகங்களிற்கூடாதாகையால், பிரமா, விட்டுணுமுதலியதேவர்களும்இப்பூமியின்கண்ணேவந்துசிவனைஅர்ச்சித்துமுத்தியைப்பெறுவர்.ஆகையால், “வானோர்தொழுந்திருமேனி“என்றார்.

3.அண்டருங்கண்டிலாதவண்ணல் -தேவர்கள்பதிஞானம்இல்லாதவர்ஆகையாலே, தாங்கள்செய்தபசுபுண்ணியத்தின்பயனைச்சுவர்க்கலோகத்தில்அனுபவிப்பார்களன்றிச்சிவனைஅறியார்என்பது.

4. வெண்டரளங்கள்சிந்தவிழிமொழிகுளற - விழிகளில்நீர்ததும்பலும், நாக்குத்தழுதழுத்தலும், அன்பின்மேலீட்டினால்வருங்குணங்களாம்.

5.

பாலானதுபசுவினுடையதேகமெல்லாம்வியாபித்திருந்தாலும்வேறிடங்களிற்காணப்படாமல்கன்றைக்கண்டபொழுதுமுலையிலேவிம்மிஒழுகுவதுபோல, பரமசிவனும்அன்பினால்வழிபடும்ஞானிகளுக்குஅவ்வன்பேதாமாய்எப்போதும்சிவலிங்கம்முதலியதிருமேனிகளில்வெளிப்பட்டுநின்றுஅருள்செய்தலினால், அச்சிவஞானிகள்அத்திருமேனிகளைச்சிவமேயெனக்கண்டுவழிபடுவர்.

யோகிகளுக்கும்கிரியையாளருக்கும்கறந்தவிடத்துத்தோன்றும்பால்போலவும், விறகைக்கடைந்தவிடத்துத்தோன்றும்அக்கினிபோலவும்அத்திருமேனிகளில்அப்போதப்போதுதோன்றிநின்றுஅருள்செய்வர்.

சரியையாளருக்குஅத்திருமேனிகள்வெளிப்படாதுநின்றுஅருள்செய்வர்.

சொரூபசிவமும், தடத்தசிவமும், பரஞானத்தையுடையாரும், சிவலிங்காதிமூர்த்தங்களும், சிவபத்தர்பொருட்டாகஅப்போதப்போதுவெளிப்பட்டருளும்மூர்த்தங்களும்ஆகியஇவைஎல்லாம்குருமூர்த்தங்களேயாதலின், இச்செய்யுளிலேதொண்டர்களையும்சிவலிங்கத்தையும்கூறி, ஞானகுருவைக்கூறாதொழிந்தனர். ஆகவே, சிவனடியாரையும், சிவலிங்கத்தையும், ஞானகுருவையும்சிவனெனக்கண்டுவணங்குவர்சீவன்முத்தர்என்பதுஇச்செய்யுளின்கருத்து

**பொழிப்பு**:ஞானக்கடலிலெழுந்தசிவாநந்தஅமிர்தத்தைப்பருகியசீவன்முத்தர்சிவனடியார்களையும்சிவலிங்கம்முதலாகியதிருமேனிகளையும்சிவமென்றுகண்டுவணங்கிக்கண்களில்ஆநந்தஅருவிசொரியநாத்தழுதழுப்பஉரைதடுமாறஆனந்தவெள்ளத்துள்அமிழ்ந்திஅச்சிவமொன்றையேதரிசித்திருப்பர்.

99. நிலவுலோகாயதாதிநிகழ்சிவாத்துவிதாந்தத்துட்
குலவினரளவளாவாக்கொள்கையதாகிவேதத்
தலைதருபொருளாயின்பாய்த்தாவில்சற்காரியத்தாய்
மலைவறுமுணர்வாற்பெத்தமுத்திகண்மதித்தாமன்றே.

**பதவுரை**:நிலவுஉலோகாயதஆதிநிகழ்சிவாத்துவிதஅந்தத்துள்குலவினர் - விளங்குகின்றஉலோகாயதம்முதலாகவழங்கிவரும்சிவாத்துவிதசைவம்ஈறாகவுள்ளசமயங்களில்நிற்பவரது,

அளவுஅளாவாக்கொள்கையதாகிபிரமாணங்களைத்தழுவாதகோட்பாட்டைஉடையதாய், வேதத்தலைதருபொருளாய் -வேதத்தின்சிரமாகியஉபநிடதங்கள்தரும்பொருளாய்,இன்பாய்-பேரின்பத்தைவிளைவிப்பதாய், தாவுஇல்சற்காரியத்தாய் - கேடில்லாதசற்காரியஇயல்புகூறுவதாய், மலைவுஅறும்உணர்வால்-மலைவற்றிருக்கின்றசைவசித்தாந்தஅறிவால், பெத்தமுத்திகள்-பெத்தமுத்திநிலைகளை,மதித்தாம் - வரையறுத்துச்சொன்னோம்.

**குறிப்பு:**நிலவுலோகாயதாதிநிகழ்சிவாத்துவிதாந்தம்:-

உலோகாயதம்முதற்சிவாத்துவிதசைவம்ஈறாகக்கூறப்படும்சமயங்களெல்லாம்புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம்எனநான்குவகைப்படும். அவற்றுள்,

**புறப்புறச்சமயம்** -உலோகாயதம், மாத்தியமிகம்யோகாசாரம்சௌத்திராந்திகம்வைபாடிகம்என்னும்நால்வகைப்பௌத்தம், ஆருகதம்எனஅறுவகைப்படும்.

புறச்சமயம் -தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம்,சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம்எனஅறுவகைப்படும்.

**அகப்புறச்சமயம்**- பாசுபதம், மாவிரதம், காபாலம். வாமம், வைரவம், ஐக்கியவாதசைவம்எனஅறுவகைப்படும்.

**அகச்சமயம் -** பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்தவாதசைவம், ஈசுவரவவிகாரவாதசைவம்சிவாத்துவிதசைவம்எனஅறுவகைப்படும்.

## புறப்புறச்சமயம்

1. **உலோகாயதம்** : உலோகாயதநூலிற்கூறப்படும்பொருள்களாவன:-பிரத்தியட்சப்பிரமாணம்ஒன்றேஉள்ளது. பிருதிவி, அப்பு, தேயு, வாயுஎன்னும்நான்கேதத்துவங்கள். இவைநித்தப்பொருள்கள். இவற்றின்கூட்டமேஉடம்பு. வெற்றிலைபாக்கும்சுண்ணாம்பும்கூடியவிடத்துச்சிவப்புநிறம்ஒன்றுதோன்றுமாறுபோல, அப்பிருதிவிமுதலியநான்கின்கூட்டரவில்ஓர்உணர்வுஉண்டாகும். அவ்வுணர்வுஉடம்புவளரவளரும், தேயத்தேயும், ஆகலின், உடம்புக்குவேறேஆன்மாஉண்டென்பதும்பொய்; உடம்பிற்குஇன்பத்துன்பங்கள்இயல்பாயுள்ளன, இவற்றிக்குக்காரணம்வினைஎன்பதும்பொய்; காணப்படாமையாற்கடவுள்உண்டென்பதும்பொய்: இம்மையில்மங்கைப்பருவத்துமகளிரைமணந்துஉண்டுஉடுத்துவாழ்வதேசுவர்க்கஇன்பம்.

அதுபெறாதுபகைவராலும், நோய்வறுமைமுதலியவற்றாலும், வருந்துவதேநரகத்துன்பம். இவற்றின்வேறாய்ச்சுவர்க்கநரகங்கள்உளஎன்பதும்பொய்,என்பனமுதலியன.

உலோகாயதநூல்செய்தவர்பிருகற்பதிபகவான்.உலோகாயதர்காட்சிவாதிகள்எனப்படுவர்.

2. **பௌத்தம்**பௌத்தநூலிற்கூறப்படும்பொருள்களாவன:- பிருதிவிமுதற்புத்திதத்துவம்ஈறாகத்தத்துவம்இருபத்துமூன்று. இவற்றுட்புத்திதத்துவம்பிரதானமானது. பஞ்சபௌதிகமானசரீரத்திற்புத்திதத்துவமேஉள்ளது. இந்தப்புத்திதத்துவம்முதலியஎல்லாப்பொருளும்கணந்தோறும்தோன்றிஅழியும். இவ்வாறன்றித்திரமாகியஆன்மாஎன்பதும்ஈசுரன்என்பதும்இல்லைமுத்தியாவதுநீரோட்டம்போலஅநித்தியமாய்அனுபவிக்கப்படும்ஞானசந்ததியேயாம். இன்பதுன்பத்தொடர்ச்சியின்றிச்சுத்தமானஞானசத்ததியேமுத்திஎன்பாரும்,முறைமுறையாய்வளராநின்றதீபம், எண்ணெயும்திரியும்தேய்ந்தவிடத்துக்கெடுவதுபோலஞானசந்ததியினதுநாசமேமுத்திஎன்பாரும்உளர். சந்ததி - தொடர்ச்சி

பௌத்தநூலாகியபி-க நூல்செய்தவர்புத்தக்கடவுள். பௌத்தர்கணபங்கவாதிகள்எனப்படுவர். கணபங்கம் - கணந்தோறும்தோன்றிஅழிதல்,

இந்தப்பௌத்தர், மாத்தியமிகர்யோகாசாரர்சௌத்திராந்திகர்வைபாடிகர்எனநால்வகைப்படுவர். இவருள்,

(a) **மாத்தியமிகர்**- உலகத்துப்பொருள்கள்உள்பொருளாயின், அழியா; இல்பொருளாயின், தோன்றா: உள்ளவும்இல்லவும்எனின், முரணும்,இரண்டும்அல்லவெனின்உணர்ச்சிகூடா. இந்தநான்குபாகுபாடும்இல்லாமையின், எல்லாப்பொருளும்சூனியம்என்றும், மயக்கத்தால்காட்சிப்பொருள்போலப்புலப்படுகின்றனஎன்றும்சொல்வர். இவர்சூனியவாதிகள்எனப்படுவர்.

(b) **யோகாசாரர்**- வட்டம்சதுரம்கறுப்புசிவப்புமுதலியவடிவினதாய்அகத்தேதோன்றும்ஞானம்சாராரம்எனவும், பந்தம்நீங்கியவிடத்துஅங்ஙனம்வேறுபாடின்றித்தொடர்ச்சியாய்எழுவதாகியஞானம்நிராகாரம்எனவும்,இப்படிப்பட்டஞானமேயன்றிவேறுபொருளில்லைஎனவும்கூறுவர்.இவர்விஞ்ஞானவாதிகள்எனப்படுவர்.

(c) **சௌத்திராந்திகர்** - சகம்முழுதும்அகம்புறம்என்னும்இருவகைச்சமுதாயத்துள்அடங்கும்என்றும், அவற்றுள், புறச்சமுதாயம்நிலம்முதலாயின. அவற்றிற்குக்காரணம்பரமாணுக்கள். அவைநிலவணு, நீரணு, தீயணுவளியணுஎனநால்வகைப்படும். அவைஎல்லாம்சேர்ந்தவிடத்துப்புறச்சமுதாயம்தோன்றும்என்றும், அகச்சமுதாயம்சித்தமும்சித்தப்பகுதியும். அவற்றிற்குக்காரணம்கந்தங்கள், அவைஉருவம்வேதனைஞானம்குறிவாசனைஎனஐவகைப்படும். அவற்றுள்,

உருவகந்தமாவதுஉடல்பொறிமுதலாயின, ஞானகந்தமாவதுஉருவகந்தத்தைஉணரும்உணர்வு.இந்தஉணர்வாற்றோன்றும்இன்பதுன்பங்கள்வேதனைக்கந்தம்.சாத்தன்கொற்றன்முதலியபெயர்குறிக்கந்தம், ஞானகந்தம்பிரவிருத்திஞானம்என்றும், ஆலயவிஞ்ஞானம்என்றும்இருவகைப்படும். அவற்றின்வரசனைவாசனைக்கந்தம். இவ்வைந்தும்ஒருங்குகூடுதலால்அகச்சமுதாயம்தோன்றும்என்றும், இவ்வைந்துகந்தங்களும்தொடர்ச்சியாய்அழிவதேபந்தம்என்றும், முற்றும்ஒழிவதேமுத்திஎன்றும்சொல்வர்.

சமுதாயம்-கூட்டம், கந்தம்-சமூகம், கூட்டம். பிரவிருத்திஞானம் - சவிகற்பமாய்விரியும்ஞானம். ஆலயவிஞ்ஞானம் - அங்ஙனம்விரியாதுஒடுங்கும்ஞானம். ஆ-முழுதும், லயம் - ஒடுங்கல். வாசனை-செயல்.

(d) **வைபாடிகர்** -மஞ்சளும்சுண்ணாம்பும்கூடியவிடத்துஓர்சிவப்புநிறம்தோன்றுமாறுபோல, காணப்பட்டபொருள்களும்இந்திரியவிடயமானஅறிவுங்கூடியவிடத்துப்பிரபஞ்சப்பொருள்கள்பொருந்தித்தோன்றும். இதுவேஞானதரிசனம்என்பர்.

சௌந்திராந்திகரும்வைபாடிகரும்சமுதாயவாதிகள்எனப்படுவர்.

2. **ஆருகதம் (சமணம்)**ஆருகதநூலிற்கூறப்படும்பொருள்களாவன: சீவனும், அசீவனும், ஆச்சிரவமும், சமுவரமும், நிர்ச்சரமும், பந்தமும். வீடும்எனப்பதார்த்தங்கள்ஏழு.இவற்றுள்,

சீவன், அநாதிசித்தனும்முத்தனும்பெத்தனும்எனமூவகைப்படும். இவற்றுள், அநாதிசித்தன்அருகக்கடவுள்,முத்தன்,மோகம், அந்தராயம், கோத்திரம்,நாமம், ஆயுஷ்யம், வேதநீயம்,தரிசனாவரணீயம், ஞானாவரணீயம்என்னும்பந்தத்தினின்றுநீங்கினவன். பெத்தன்அவற்றுள்கட்டுண்டவன்இச்சீவன்எடுத்தஉடம்பளவுக்கேற்பவியாபியாய்நிற்பன்.

அசீவன், புற்கலமும்ஆகாயமும்தன்மமும்அதன்மமும்எனநான்குவகைப்படும். அவற்றுள், புற்கலம்-பிருதிவிமுதலியநான்குபூதமும்மரம்புல்லுமுதலியநிலையியற்பொருளும், கருப்பைமுட்டைமுதலியவற்றிற்பிறக்கும்இயங்கியற்பொருளும்எனஅறுவகைப்படும். இவற்றிற்குக்காரணம்பரமாணுக்கள். ஆகாயம்உலகாகாயமும்உலகங்கடந்தஆகாயமும்எனஇருவகைப்படும். தன்மம்நன்மையைப்பயப்பது. அதன்மம்தீமையைப்பயப்பது.

ஆச்சிரவமாவதுபொறிவழிச்செல்லுதல்,

சமுவரமாவதுஅங்ஙனம்செல்லாதபடிதடுத்துமுத்திக்குக்காரணமாவது. அதுநிலத்தில்எறும்புமுதலியனஇறவாமல்வழிபார்த்துமெல்லநடத்தலும், இனியவைகூறுதலும், நியமஉணவும்முதலாயினவாம்.

நிர்ச்சரமாவதுசுடுபாறையில்கிடத்தல், தலைமயிர்பறித்தல்முதலியதவம்.

பந்தமாவதுசீவனுடையசுதந்திரத்தைஅடக்கிப்பிறவியிற்சுழல்விக்கும்மோகம்முதலியஎண்குணங்களுமாம்.

வீடாவதுசீவன்,மோகம்முதலியவற்றின்நீங்கிச்சுதந்திரம்பெற்று, உலகங்கடந்தஆகாயத்தைநோக்கிமேலேசெல்லுதலாம்.

இவ்வெழுவகைப்பதார்த்தங்களும்அநேகாந்தவாதத்தாற்கூறப்படும். அஃதாவது. உடம்புஎடுத்தற்குமுன்சீவன்உண்டோஇல்லையோஎன்றுவினாவுங்கால், உண்டாம்,இல்லையாம்,உண்டும்இல்லையுமாம்,சொல்லொணாததாம், உண்டுமாம்சொல்லொணாததுமாம், இல்லையுமாம்சொல்லொணாததுமாம், உண்டும்இல்லையுமாம்சொல்லொணாததுமாம்எனஎழுவகையால்உத்தரம்இறுத்தல். சொல்லொணாதது- உளதும்இலதும்அல்லாதது. ஆம்என்பதுசற்றுஎன்னும்பொருளுடையஓரிடைச்சொல். இங்ஙனம்பலவகையாய்இறுத்தலால்ஆருகதம்அநேகாந்தவாதம்எனப்படும். இந்நூல்செய்தவன்அருகன்.

## புறச்சமயங்கள்

4. **தருக்கம்**வைசேடிகமும்நையாயிகமும்எனஇருவகைப்படும்.

(a) **வைசேடிகம்**, வைசேடிகநூலிற்கூறப்படும்பொருள்களாவன:- திரவியம்குணம்தொழில்சாதிவிசேடம்சமவாயம்இன்மைஎனப்பதார்த்தம்எழுவகைப்படும். இவற்றுள்

திரவியம், நிலம்நீர்தீவளிஆகாயம்காலம்திசைஆன்மாமனம்எனஒன்பதுவகைப்படும். அவற்றுள், நிலம்முதலியநான்கும்அநித்தப்பொருள். அவற்றின்காரணங்களாகியநால்வகைப்பரமாணுக்களும்ஆகாயம்முதலியஐந்தும்நித்தப்பொருள்கள். அவற்றுள், ஆகாயம்காலம்திசைமூன்றும்தனித்தனிவியாபகமாயுள்ளன. ஆன்மாக்கள்வியாபகமாய்எண்ணிறந்தனவாம். மனம்அணுவளவாய்ஆன்மாக்கடோறும்வெவ்வேறாயிருக்கும். ஆன்மா, பரமான்மா, சீவான்மாஎனஇருவகைப்படும். பரமான்மாமுற்றுணர்வுடையவன், எல்லாம்வல்லவன்,அவனுடையஇச்சைப்படிஉலகம்தோன்றிஒடுங்கும். சீவான்மாக்கள்சிற்றறிவுடையனவாய்வினைக்கீடாகப்பிறந்திறந்துஇன்பத்துன்பங்களைஅனுபவிப்பன. ஆன்மாக்களுக்குமனத்தோடுகூடாதவிடத்துஅறிவில்லை. இங்ஙனம்திரவியம்ஒன்பதும்அறிக.

குணங்களாவனதிரவியம்பற்றுக்கோடாகநிகழ்வன. அவை, உருவம்சுவைநாற்றம்ஊறுமுதலியனவாகஇருபத்துநான்குவகைப்படும். அவற்றுள்,

புத்திஇன்பம்துன்பம்விருப்புவெறுப்புமுயற்சிஅறம்பாவம்என்னும்எட்டுக்குணமும், பாவனைஎன்னும்வாதனையும்சீவான்மாக்களுக்குச்சிறப்புக்குணங்கள். இவற்றுள், புத்திவிருப்புமுயற்சிமூன்றும்பரமான்மாவுக்குச்சிறப்புக்குணங்கள்.

தொழிலாவன, எழும்பல்வீழ்தல்வளைதல்நிமிர்தல்நடத்தல்எனஐவகைப்படும்.

சாதியாவது, பலபொருட்டுப்பொதுவாகியதன்மை.

விசேடமாவதுஒவ்வொருபொருட்கேஉரியதன்மை.

சமவாயமாவது, அவயம்முதலியவற்றிற்குஅவயவிமுதலியவற்றோடுநீக்கமின்றிஉளதாகியஇயைபு.

இன்மையாவது, முன்னின்மையும்அழிபாட்டின்மையும்என்றுமின்மையும்ஒன்றினென்றின்மையும்எனநான்குவகைப்படும்.

இந்தஎழுவகைப்பொருள்களின்சிறப்பியல்புபொதுவியல்புவேற்றியல்புகளைஉணாவே, உடம்புமுதலியவற்றின்வேறாகியஆன்மாவின்இயல்புவிளங்கும். அதனால்உடம்புமுதலியவற்றைநான்என்றுஎண்ணியமித்தையுணர்வுகழியும். அதனால்முயற்சியின்மையின், அறம்பாவங்களில்லையாய்ப்பிறவிஒழியும். அதனால்துன்பஇன்பங்கள்இலவாய், உடம்புஎடுத்துக்கொண்டவினைப்பயன்நுகர்ச்சியால்கழிந்தவிடத்து. இறுதித்துன்பங்கெட்டுமனத்தோடுகூடுதற்குஏதுவின்மையின், அறிவின்றிப்பாடாணம்போற்கிடப்பதேமுத்திஎன்பன.வைசேடிகநூல்செய்த்வர்கணாதமுனிவர்.

**(b)** **நையாயிகம்** -நையாயிகநூல், பதார்த்தஇலக்கணமும்முத்திஇலக்கணமும்வைசேடிகநூலிற்கூறியவாறேகூறி, பிரமாணம்முதலியபதார்த்தங்கள்பதினாறுஎன்றும், ஈசுரன்செய்விப்பவன்என்றும்கூறும்.

இந்நூல்செய்தவர்அக்கபாதமுனிவர். இந்நூலிற்கூறும்தருக்கம்எல்லாநூல்கட்கும்உபகாரமாம்.

**5.மீமாஞ்சை** -மீமாஞ்சைநூல்செய்தவர்சைமினிபகவான். இந்தநூல்வேதத்தின்ஆராய்ச்சிசெய்யும்நூல். இதிற்கூறப்படும்பொருளாவன:-வேதம்ஒருவராற்செய்யப்பட்டதன்று, நித்தியமாயுள்ளது. பிரபஞ்சம்தோன்றிஅழிதலின்றிநித்தமாயுள்ளது. இட்டிமுதலியகன்மங்கள்செய்யவேண்டுவன. கன்மம்செய்தவனுக்குஅந்தக்கன்மமேசுவர்க்கம்முதலியபயன்களைக்கொடுக்கும், ஆன்மாக்கள்பலவாய்நித்தமாய்வியாபகமாயுள்ளன. இவ்வான்மாக்களுக்குவேறாய்ஈசுரன்ஒருவன்இல்லைஎன்பன.

இந்நூலிற்கூறப்படும்பிரமாணங்கள்பிரத்தியட்சம், அநுமானம், உபமானம், அருத்தாபத்தி, சத்தம்எனஐந்தாம்.

இந்நூல்கூறும்நியாயங்கள்எல்லாநூல்கட்கும்உபகாரமாம்.

மீமாஞ்சமதம், பட்டாசாரியம்என்றும்பிரபாகரம்என்றும்இருவகைப்படும். அவற்றுள், பட்டாசாரியமதம்கன்மமேபயன்கொடுக்கும்என்றும், முத்தியில்ஆனந்தம்உண்டென்றும்சொல்லும்.

**பிரபாகரமதம்**,கன்மநாசத்தில்அபூருவம்எனஒன்றுதோன்றிநின்றுபயன்கொடுக்கும்என்றும், பாடாணம்போற்கிடப்பதேமுத்திஎன்றும்கூறும். அபூருவம் - ஒருவன்செய்தபுண்ணியபாவங்கள்ஒழிந்தவிடத்திலேஅவற்றினாற்சமஸ்காரரூபமாகத்தோன்றிநின்றுமறுமையிற்பலங்கொடுப்பது. சமஸ்காரம்-மறைந்திருத்தல்.

**6.ஏகான்மவாதம்** - மாயாவாதமும்பாற்கரியவாதமும்கிரீடாப்பிரமவாதமும்சத்தப்பிரமவாதமும்எனநான்குவகைப்படும். அவற்றுள்.

(a) **மாயாவாதமாவது** -சச்சிதானந்தமாய்நித்தமாய்வியாபகமாய்நிற்பதுபிரமம். இப்பிரமம்ஒன்றேமெய்ப்பொருள். ஏனையஎல்லாம்பிரமத்தின்விவர்த்தனமாய்இப்பியில்வெள்ளிபோலஅவிச்சையினாற்காணப்படுவனவாகலின்பொய். இங்ஙனம்தோன்றும்உலகத்திற்குமுதற்காரணமாகியபிரகிருதிமாயைபிரமம்போலச்சத்துமன்றிமுயற்கோடுபோலஅசத்துமன்றிஅநிருவசனமாயிருக்கும். இந்தமாயைக்குவேறாகியபிரமரூபமேயான்எனவேதாந்தஞானத்தால்அறிவதேமுத்திஎன்பதாம், விவர்த்தனம்-திரிவு, விரிவு. அநிருவசனம் -சொல்லொணாதது.

(b) **பாற்கரியவாதமாவது**- பிரமமேசடமும்சித்துமாகியஉலகங்களாய்ப்பரிணமித்தது. அங்ஙனம்பரிணமித்துவிகாரப்பட்டமையைஅறியாமையினாற்பந்தமாயிற்று.மெய்ப்பொருள்ஒன்றே. வேதாந்தஞானத்தால்உடம்பிற்குவேறாகியஆன்மரூபம்விளங்கும். அதுவேபரப்பிரமம்என்றறிந்துஅதனிடத்துஇலயித்தலேமுத்திஎன்பதாம்.

(c) **கிரீடாப்பிரமவாதமாவது** - பிரமமேநான், நான்ஒருபடித்தன்றிப்பலவேறுவகைப்பட்டவிகாரப்பொருள்களோடுகூடிப்பலவாற்றால்விளையாடுகின்றேன்என்றுஇவ்வாறறிவதேமுத்திஎன்பதாம்.

(d) **சத்தப்பிரமவாதமாவது**- காரணமாகியபரப்பிரமம்பிரளயகாலத்தில்சத்தவடிவாயிருக்கும்அதுஅவிச்சையினாற்சடமுஞ்சித்துமாய்உலகங்களாய்விரியும். முடிவில்சத்தமாத்திரையேஉள்ளதுஎன்றுஇங்ஙனம்அறிவதேமுத்திஎன்பதாம்.

இங்ஙனம்நால்வேறுவகைப்பட்டஏகான்மவாதநூல்செய்தவர்வியாசமுனிவர்.

**7.சாங்கியம்**- சாங்கியநூலிற்கூறப்படும்பொருள்களாவன:- பிரகிருதிநித்தமாய்வியாபகமாய்ச்சடமாய்எல்லாப்பொருட்குங்காரணமாய்ச்சாத்துவிகம்இராசதம்தாமதம்என்னும்முக்குணங்களும்சமமாய்நின்றஅவதரமாய்அருவாயுள்ளது. இந்தப்பிரகிருதிஇருபத்துநான்காம்தத்துவம். இதினின்றுதோன்றும்காரியம்புத்திமுதற்பிருதிவியீறானஇருபத்துமூன்றுதத்துவங்கள். இந்தஇருபத்துநான்குதத்துவங்களுக்கும்வேறாய்நித்தமாய்வியாபகமாய்அருவாய்நாநாபேதமாய்முற்றுணர்வுந்தொழிலுமின்றிஅறிவுமாத்திரமாயிருக்கும்ஆன்மாக்கள்இருபத்தைந்தாம்தத்துவம். இந்தஇருபத்தைந்தாம்தத்துவமாகியபுருடன்முத்தியிலும்பெத்தத்திலும்வேறுமையின்றிஒருதன்மையனேயாம். புருடனுக்குமலினமென்பதில்லை. தாமரையிலைநீர்போலயாதினும்ஒட்டின்றிநிற்பன். அநாதியேபுத்தியைச்சார்ந்தஅவிச்சைவயத்தாற்பெத்தனெனப்பட்டுஇன்பத்துன்பஉணர்வுதோன்றும், பிரகிருதியையும்புருடனையும்பகுத்துணரவேஅவிச்சைநீங்கும்.அதுவேமுத்திஎனப்படும். ஆன்மாக்களுக்குவேறாய்இறைவன்ஒருவன்உண்டென்பதுபொய்என்பனமுதலியன.

இந்நூல்செய்தவர்கபிலமுனிவர்.

இதனுள்கூறும்சற்காரியவாதம்சைவம்முதலியசற்காரியவாதநூல்களுக்குஉபகாரமாம். இதனுள்கூறும்அத்தியாசவாதம்மாயாவாதத்துக்குஉபகாரமாம். அத்தியாசவாதம் - விபரீதவாதம்.

8. **யோகம்** -பாதஞ்சலநூல், பிரகிருதியும்பிராகிருத்தங்களும்ஆன்மாக்களும்பெத்தமுத்திகளும்சாங்கியநூலிற்கூறியவாறேகூறி, விவேகஞானம்போலயோகமும்யோகாங்கமும்முத்திக்குக்காரணம்என்றும், இருபத்தாறாந்தத்துவமாகாஈசுரன்ஒருவன்உண்டென்றும், அவன்எல்லாவற்றையும்அதிட்டித்துநின்றுசெய்வோனாதலானும், ஆன்மஞானத்தைஉபதேசிப்பவனாதலானும், ஆன்மாக்களுக்குவேறுஎன்றும்சொல்லும்.இந்நூல்செய்தவர்பதஞ்சலிமுனிவர்.

9. **பாஞ்சராத்திரம்** : பாஞ்சாரத்திரத்திற்கூறப்படும்பொருள்களாவன :- இருபத்துநான்காம்தத்துவமாகியகுணதத்துவத்தின்மேலுள்ளஇருப்பத்தைந்தாம்தத்துவத்தில்வாசுதேவன்என்றஒருவன்உளன். அவனேபரம்பொருள். அந்தப்பரம்பொருளினின்றும்கிருட்டிணன்அநிருத்தன்மகரத்துவசன்இரௌகிணேயன்என்னும்நால்வர்உலகங்களைப்படைத்தற்பொருட்டுத்தோன்றினர். இந்தநான்குவியூகராற்சடமுஞ்சித்துமாகியஎல்லாஉலகங்களும்படைக்கப்பட்டன. ஆதலால்எல்லாம்வாசுதேவன்பரிணாமமேயாம். வேதங்களில்உறுதிப்பயனில்லை.

பாஞ்சராத்திரத்தில்உறுதிப்பயன்உண்டு. ஆதலால்பாஞ்சராத்திரத்தின்முறையேதீக்கைசெய்துகொண்டு, வாசுதேவனைவழிபட்டுவாசுதேவனுருவில்இலயமாதலேமுத்திஎன்பன.

இந்நூல்செய்தவன்வாசுதேவன்.

## அகப்புறச்சமயம்

10. **பாசுபதம்** -பாசுபதநூலிற்கூறப்படும்பொருள்களாவன:- ஆன்மாக்கள்பலவாய்நித்தமாய்வியாபகமாயுள்ளன. இவ்வான்மாக்களுக்குஆணவமலம்என்பதொன்றில்லை. மாயைகன்மங்கள்என்றுஇரண்டுபாசங்கள்உண்டு. அப்பாசங்களால்சுகதுக்கங்களைஅனுபவிக்கும். இவற்றில்வெறுப்புத்தோன்றிச்சாத்திரமுறையாலேதீக்கைபெற்றவனிடத்தில்ஈசனுடையஞானம்போய்ப்பற்றும். அப்போதுகுடும்பபாரத்தைப்புதல்வரிடத்துவைத்துவிட்டுத்துறவறத்தில்செல்வார்போல, ஈசனும்தன்னுடையகுணங்களைஅவன்பாற்பற்றுவித்துத்தான்அதிகாரத்தினின்றும்ஒழிவுபெற்றுஇருப்பன்என்பன.

இந்நூல்செய்தவர்மாயைஎன்னும்தத்துவத்தில்வைகும்ஓர்உருத்திரர்.

இம்மதத்தவர்சங்கிராந்தசமவாதிகள்எனவும்படுவர்.

11.**மாவிரதம்** -
மாவிரதநூல்பாசுபதர்கூறியமுறையேமாயைகன்மங்களுடன்ஆணவமலம்உண்டென்றுசொல்லிஆன்மாக்களுக்குப்பெத்தத்தும்முத்தியிலும்ஞானசத்தியேயன்றிக்கிரியாசத்திஇல்லைஎன்றும்சாத்திரத்திற்கூறியபடியேதீக்கைபெற்றுஎலும்பணிதல்முதலியசரியைகளைஅனுட்டிப்போர்முத்தராவர்என்றும். இந்தமுத்தருக்குச்சிவனோடுசமமானஎல்லாக்குணங்களும்உண்டென்றும்கூறும்.

இந்நூல்செய்தவர்வித்தைஎன்னும்தத்துவத்தில்வைகும்ஓர்உருத்திரர்.

இம்மதத்தவர்உற்பத்திவாதிகள்எனவும்படுவர்.

11.**காபாலம்**-காபாலிகநூல்,
ஆன்மஇலக்கணமும்பந்தஇலக்கணமும்பாசுபதர்மாவிரதர்கூறியபடிகூறிச்சாத்திரத்திற்கூறியமுறையேதீக்கைபெற்றுப்பச்சைக்கொடிஒன்றைக்கையிற்பிடித்துக்கொண்டுநாடோறும்மனிதர்தலையோட்டிற்பிச்சையேற்றுஉண்ணவேண்டும்என்றும்,
உன்மத்தராய்ச்சிவன்ஆவேசித்தலால்எல்லாக்குணங்களும்பெற்றுச்சிவசமமாவர்என்றும்சொல்லும்.இந்நூல்செய்தவர்காலம்என்னும்தத்துவத்திலுள்ளஓர்உருத்திரர்.இம்மதத்தவர்ஆவேசவாதிகள்எனவும்படுவர்.

13. **வாமம்** -வாமநூல்சடமுஞ்சித்துமாகியஎல்லாஉலகும்சத்தியின்பரிணாமம்என்றும், இந்நூலில்விதித்தமுறையேஒழுகிச்சத்தியில்இலயித்தலேமுத்திஎன்றும்கூறும்.

இந்நூல்செய்தவர்சித்தபுருடர்

14. **வைரவம்** -பெரும்பாலும்வாமமதத்தோடொத்துச்சிறுபான்மைஆசாரங்களால்வேறுபட்டுவைரவரேபரம்பொருள்எனக்கொண்டுவைரவபதத்திற்சேர்வதேமுத்திஎன்பதாம்.

15. ஐக்கியவாதம்பார். செ. 34.

## அகச்சமயம்

16.**பாடாணவாதமாவது** - ஆன்மாவிற்குஆணவமலம்சகசமாய்அநாதியேயுள்ளது. அதனால்மாயைகன்மங்கள்ஆன்மாவைப்பொருந்தும். இறைவன்இருவினைக்கீடாகச்சரீரங்களைக்கொடுப்பன். ஆன்மாஅவற்றைப்பொருத்திஇன்பத்துன்பங்களைஅனுபவிக்கும்.

அப்பொழுதுஆன்மாவின்அறிவைஆணவமலம்மறைக்கும்அதனால்பிறவித்துன்பம்அதிகரிக்கும்பாசஞானமெல்லாம்தன்கீழ்வியாப்பியம்என்றறிந்துநீங்குதன்மாத்திரையேமுத்திமுத்தியிலும்ஆன்மாஆணலமலம்நீங்காதுசுட்டறிவும்சுகமுமற்றுப்பாடாணம்போல்கிடக்கும்என்பதாம்.

17. **பேதவாதமாவது**-மும்மலங்களும்செம்பிற்களிம்புபோலஆன்மாக்களுக்குஅநாதியேஉள்ளன. அவற்றால்ஆன்மாச்சுகதுக்கங்களைஅனுபவிக்கும்.

கரணங்களில்சென்றஅறிவுபக்குவம்வந்தவிடத்துஅவ்வாறுசெல்லாதுதன்னிடத்தேவந்துஒடுங்கிநிராதாரமாய்நிற்கும்.

இரசகுளிகையினாற்செம்புகளிம்புநீங்கிப்பொன்னாயவாறுபோலஆன்மாவும்இறைவன்திருவருளால்மும்மலங்களும்நீங்கிப்பெறுவானும்பேறுமாயிருக்கும்என்பதாம்.

18. **சிவசமவாதமாவது**- பதிஞானம்பசுஞானம்பாசஞானம்என்னும்மூன்றும்அநாதியேஉள்ளன. பாசஞானமாகியஇந்திரியங்கள்விடயங்களைவிளக்கப்பசுஞானம்அவற்றைப்புசிக்கும்.

இவ்விருஞானங்களும்நீங்கியவிடத்துஆன்மாஒன்றையுஞ்சுட்டிஅறியாதுஅறிவுமாத்திரையாயிருக்கும்.

அப்பொழுதுவேட்டுவன்புழுவைஎடுத்துக்கொள்வதுபோலப்பதிஞானம்ஆன்மாவைஎடுத்துக்கொள்ளும்.

புழுவேட்டுவனைநினைத்துஅதன்வடிவாகி, மேலும்அதன்தொழிலையும்செய்தல்போல, ஆன்மாவும்அப்பதியைநினைந்துஅதன்வடிவாகி,

மேலும்அப்பதிசெய்யும்பஞ்சகிருத்தியத்தையும்செய்யும்என்பதாம்.

19. **சிவசங்கிராந்தவாதமாவது**-
ஆன்மாவின்சந்நிதியிலேகாந்தபசாசம்போலஉடல்இயங்குமிடத்துஅதன்கணின்றுகருவிகளேவிடயங்களைஅனுபவிக்கும். மலம்நீங்கியவிடத்துக்கண்ணாடியில்முகவொளிதோற்றுமாறுபோல, முதல்வனதுதிருவருள்ஆன்மாவினிடத்துச்சங்கிரமித்துத்தோன்றும், அப்பொழுதுஉப்பளத்திலிட்டவையெல்லாம்உப்பாமாறுபோலஆன்மாச்சிவமேயாய்அவ்வான்மாவின்சந்நிதியில்அறிவனவாகியபசுகரணங்களும்சிவகரணங்களாய்மாறிச்சிவத்தைஅறியும்என்பதாம்.

20. **ஈசுவரவவிகாரவாத**மாவது -
பலதுளையுடையகுடத்திலேற்றியதீபம்போலநவத்துவாரமுடையஉடம்பில்ஆன்மாஅறிவாய்நிற்கும். நிற்பினும், அவ்வப்பொறிகள்அளவாய்அவ்வவற்றைக்கூடிஅறியும், அதுமலபரிபாகமும்சத்திநிபாதமும்சேர்ந்தவிடத்துமுதல்வனதுதிருவருளால்ஞானத்தைப்பெற்று, வெய்யிலிலேதிரிந்தானொருவன்மரநிழல்கண்டுஆறுவதுபோல. அம்முதல்வனதுதிருவடிநிழலைஅடையும். இங்ஙனம்கூடியவிடத்து, உயிர்முதல்வனதுஉபகாரத்தைஅவாவாதுஎன்பதாம்.

21. **சிவாத்துவிதசைவ**மாவது:- பதிபசுபாசங்களின்இயல்பும்தத்துவங்களுக்குத்தோற்றவொடுக்கங்களும், அஞ்சவத்தைப்படும்வேறுபாடுகளும், அனைத்தும்சித்தாந்தசைவரோடொப்பக்கொண்டு, பசுபாசங்கள்பதிவியாபகத்தின்வியாப்பியமாய்நிற்பனவன்றித்தனித்தபொருள்களல்ல, சிற்சத்தியின்பரிணாமமே. பதிபசுபாசங்களுக்குத்தம்முள்வேற்றுமைகுணகுணிகட்குளதாகியவேற்றுமைபோலஉட்பேதமேயன்றிப், புறப்பேதமன்று. மரத்தில்வியாப்பியமானசவடுகொம்புமுதலியனஎல்லாம்மரமேயாம்போலச்சதசத்தும்அசத்துமாகியஅனைத்தும்சத்தெனவேபடும். ஆகையால், பதித்தன்மையின்வேறாய்ப்பசுவுக்குஅறியுந்தன்மைஇன்று, சத்தாகியபதிப்பொருளேஆன்மாவினிடமாகநின்றுஅறியும்என்பதாம்.

சிவாத்துவிதசைவம்நிமித்தகாரணத்துக்குப்பரிணாமங்கூறுவதாகலின், அது**நிமித்தகாரணபரிணாமவாதம்**எனவும்கூறப்படும்.

22. **அளவளாவா**:-பிரமாணங்களைத்தழுவாதஅளவு - பிரமாணம். அளாவுதல் - தழுவுதல், கொண்டாடல்.

23. சற்காரியத்தாய்:- சற்காரியவாதம், உள்ளதுகாரியப்படுமென்றுசொல்லுதல். இச்சற்காரியவாதம்சைவசித்தாந்தம்கூறுவது.

24. மலைவு -மாறுபாடு.

**பொழிப்பு:**உலோகாயதம்முதற்சிவாத்துவிதசைவமீறாகியசமயத்தவரால்கொண்டாடப்படாதகோட்பாடுகளையுடையதாய், வேதாந்தமாகியஉபநிடதங்களின்உண்மைப்பொருளாய், பேரின்பத்தைவிளைவிப்பதாய்,

சற்காரியவியல்புகூறுவதாய், மலைவற்றிருக்குஞ்சைவசித்தாந்தஉணர்வால், பெத்தமுத்திநிலைகளைஇந்நூலிற்சொன்னோம்.

100.திருவருள்கொடுத்துமற்றிச்சிவப்பிரகாசநன்னூல்
விரிவதுதெளியுமாற்றால்விளம்பியவேதுநோக்கிப்
பெருகியவுவமைநான்கின்பெற்றியினிறுவிப்பின்முன்
தருமலைவொழியக்கொள்வோன்றன்வயிற்சாற்றலாமே.

**பதவுரை**:திருவருள்கொடுத்து- தீக்கையாகியதிருவருளைக்கொடுத்து, இச்சிவப்பிரகாசநன்னூல்- இந்தச்சிவப்பிரகாசமாகியநன்னூல், விரிவதுதெளியும்ஆற்றால் - (சுருங்கியடங்கியிருக்கும்பொருள்களின்) விரிவைஐயந்திரிபறஅறியும்வழியால், விளம்பியஏதுநோக்கி - சொல்லப்பட்டஇயல்பேதுமுதலியஏதுக்களைஆராய்ந்துநோக்கி, பெருகியஉவமைநான்கின்பெற்றியில்நிறுவி -(நூல்களிற்சொல்லப்பட்டுப்) பரந்தஉவமைகள்நான்காலும்பெறும்பொருள்களிலேகருத்தைநிறுத்தி, பின்முன்தரும்மலைவுஒழிய - பின்சொன்னவையும்முன்சொன்னவையும்தம்முட்காட்டும்முரண்நீங்குமாறு, கொள்வோன்தன்வயின்சாற்றலாம் - கேட்டுஇனிதுணர்ந்துகொள்வோனாகியநன்மாணவனிடத்திலேசொல்லலாம்

**குறிப்பு:-**1.திருவருள்கொடுத்து -ஞானதேசிகருடையதிருவருளாகியதீக்கையின்றி, இந்நூற்பொருள்நன்குபுலப்படாதாதலால், "திருவருள்கொடுத்து" என்றார். "அருளினாலாகமத்தேயறியலாம்" என்றுசிவஞானசித்தியார்கூறும். (சி. சி. மங்கலவா.)

2. சிவப்பிரகாசநன்னூல் - சிவம்பிரகாசமாமாறுசெய்துசிவப்பேறுஎனப்படும்நன்மையைப்பயத்தலால் "சிவப்பிரகாசநன்னூல்" என்றார்.

3. விரிவதுதெளியும்ஆற்றால் - விரிவு, இங்கேகூறியசுருக்கங்களினின்றுதோன்றிவிரியும்பொருள்கள். இங்கேகூறியதுவிரிவன்று; விரிவாயின்இலகுவிற்புலப்படும். தெளியும்ஆறுவேண்டுவதில்லை, தெளிதல்- அறிதல்ஆறு - வழி.

4. விளம்பியஏதுநோக்கி:-நூல்களிலேசொல்லப்பட்டஏதுக்கள்மூன்று. அவைஇயல்பேது, காரியவேது, அநுபலத்தியேதுஎன்பன.

மாமுதலியசொற்கள்மரம்முதலியபொருள்களைஉணர்த்துதற்கண்வேறுகாரணமின்றிஅச்சொற்களின்இயல்பால்உளதாகியஆற்றலைஇயல்பேதுஎன்றும்,

புகைமுதலியஏதுக்கள்நெருப்புமுதலியதத்தங்காரணங்களைஉணர்த்துதலைக்காரியவேதுஎன்றும்.

குளிரின்மைமுதலியகாரியங்களினின்மைகள்பனியின்மைமுதலியகாரணங்களினின்மைகளையும்,

பனியின்மைமுதலியகாரணங்களினின்மைகள்குளிர்வாராமைமுதலியகாரியங்களினின்மையும்உணர்த்துதலைஅநுபலத்தியேதுஎன்றும்கூறுவர். இயல்பு - இயற்கை,காரியம்-ஆக்கப்படுவது,அநுபலத்தி - அறியாமை.

5. பெருகியவுவமைநான்கின்பெற்றியினிறுவி:-உவமைநான்காவன - வினையுவமை, பயனுவமை, மெய்யுவமை, உருவுவமைஎன்பன. அவற்றுள், வினையுவமையாவதுதொழில்காரணமாகவரும்உவமை. (உதாரணம்) புலிபோலப்பாய்ந்தான்என்பது. இதுபாய்தலாகியதொழில்காரணமாகவந்ததுபயனுவமையாவதுபயன்காரணமாகவரும்உவமை, பயனாவதுசெயல்காரணமாகத்தோன்றும்காரியம். (உதாரணம்) "மாரியன்னவண்மை"என்பது.இதுபயன்காரணமாகவந்தது. இங்கேமாரியால்வரும்பயனும்வண்மையால்வரும்பயனும்ஒத்தல்அறிக. மாரி - மேகம். வண்மை - கொடைமெய்யுவமையாவதுவடிவங்காரணமாவரும்உவமை, (உதாரணம்) துடியிடைஎன்பது. இதுவடிவம்காரணமாகவந்தது. மெய்-வடிவம்,இங்கேதுடியின்வடிவமும்பெண்ணுடையஇடைஎன்னும்உறுப்பின்வடிவமும்ஒத்தறிக. துடி -உடுக்கு, வாச்சியம்.

உருவுவமையாவது, நிறங்காரணமாகவரும்உவமை. உரு -நிறம், வண்ணம். (உதாரணம்) கார்க்குழல்என்பது. இதுகருமைஎன்னும்நிறம்காரணமாகவந்தது. கார்-மேகம்,குழல் - பெண்மயிர், "வினைபயன்மெய்யுருவென்றநான்கே -வகைபெறவந்தவுவமத்தோற்றம்" (தொல்காப்.உவமவியல்) இவைகளைச்சிறிதுவேறுபடுத்தியுங்கூறுவர்.

பதிபசுபாசம்என்னும்திரிபதார்த்தங்களையும்அநுமானித்துநிச்சயித்தறிதற்குஇன்றியமையாதனஆதலால், ஏதுவையும்உவமையையும்விதந்துகூறினார்இந்நூலாசிரியர். "ஏதுவுமோதுநால்வகையுவமையும்" எனச்சங்கற்பநிராகரணத்துக்கூறுதலும்காண்க. (சங்கற்ப. பாயிரம்) "ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்சோதிக்கவேண்டா" (தேவாரம். திருநாவு. பொது. திருப்பாசுரம்)என்பதினாலும்அறிக.

உவமைநான்கின்பெற்றி - உவமைநான்கினின்றும்பெற்றபொருள். பெற்றி-பேறு.

6. பின்முன்தரும்மலைவு:-பின்சொன்னபொருளும்முன்சொன்னபொருளும்ஒன்றற்கொன்றுபொருந்தாதனவாகக்காட்டும்மலைவு.மலைவு- விரோதம்.

7. கொள்வோன்:- சீடனாகியமாணவகன். இந்நூற்பொருளைக்கேட்டுச்சிந்தித்துத்தெளியும்மாணவகன்மலபரிபாகமும்சத்திநிபாதமும்வரப்பெற்றபரிபக்குவன்என்பது, "திருவருள்கொடுத்து" என்பதனாற்புலப்படும்.

சைவசித்தாந்தநூல்அந்தப்பக்குவமுடையானுக்கேசொல்லற்பாலது, 'சைவம்... சத்திநிபாதர்க்குநிகழ்த்தியது(சி.சி.8.15)

**பொழிப்பு:**கூறப்படும்பொருள்களைஆசாரியன்ஏதுக்களாலும், உவமைகளாலும்நிச்சயித்து, மலைவறக்கொள்ளும்பரிபக்குவமுடையமாணவனுக்கு, இந்நூலைத்திருவருள்கொடுத்துக்கூறலாம்.

உண்மையதிகாரம்முற்றுப்பெற்றது.

## மாதிரிவினாக்கள்

வினாக்கள்

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஞானம்வரும்முறையைவிளக்குக. | K3 | CO1 | PO6 |
| 2 | ஆன்மசுத்தியைஎடுத்துரைக்க. | K2 | CO2 | PO4 |
| 3 | ஞானத்தினால்வரும்பயன்கள்யாவை? | K4 | CO2 | PO3 |
| 4 | ஆன்மவிலக்கணத்தைவிளக்குக. | K5 | CO3 | PO5 |
| 5 | ஆன்மாவின்இயல்பைசிவப்பிரகாசம்வழிவிளக்குக | K2 | CO4 | PO2 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சிவனைஅணைந்தோர்தன்மையைவிவரி. | K4 | CO1 | PO5 |
| 2 | பாவனையால்சிவத்தைஅடையஇயலாதுஎன்பதைநிறுவுக. | K2 | CO3 | PO3 |
| 3 | பஞ்சாக்கரமகிமையைவிவரிக்க. | k3 | CO3 | PO2 |
| 4 | சாக்கிராதீதம் - விவரி | K1 | CO4 | PO1 |
| 5 | சிவசமயவாதிகளின்ஆசாங்கையைதொகுத்துரைக்க | K4 | CO3 | PO6 |

முனைவர் ரெ.சுகிதாராணி

உதவிப் பேராசிரியர்

தமிழியல் துறை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

அலைபேசிஎண் : 9487185553

**Email ID : suhitharani@gmail.com**

| Textbooks | |
|---|---|
| • | .உண்மமவிளக்கம்–மனவாசகங்கடந்தார். |
| • | சிவப்பிரகாசம்-உமாபதிசிவாச்சா◌ா◌ியார். |
| **ReferenceBooks** | |
| • | கி.லஷ்மணன்-இந்தியதத்துவஞானம்,பழனியப்பாபிரதர்ஸ்,பசன்மன. |
| • | மசவ சித்தாந்த சாத்திரங்கள் (பமய்கண்ட சாத்திரங்கள் ) - முமனவர் பழ.முத்தப்பன், உமா பதிப்பகம்,பசன்மன. |
| • | சைவ சித்தாந்த உமரநமட - உ.மவ.சாமிநாமதயர், உ.மவ.சாமிநாமதயர் நூல் நிமலயம்பசன்மன. |

| | |
|---|---|
| • | சைவ சித்தாந்தம்-ஓர்அறிமுகம்,டாக்டர்.ந.சுப்புபரட்டியார்,பூம்புகார்பதிப்பகம். |
| • | சைவ சித்தாந்தவிளக்கம்-ஆ.ஆனந்தராசன்,நர்மதாபதிப்பகம், |

| RelatedOnlineContents[MOOC,SWAYAM,NPTEL,Websitesetc.] |
|---|
| WebSources |
| • www.tamilvu.org<br>• www.tamildigitallibrary.in<br>• https://www.tamiluniversity.ac.in/english/library2-/digital-library/<br>• https://www.tamilelibrary.org/<br>• www.projectmadurai.or<br>• http://www.tamilvu.org/ta/library-libcontnt-273141<br>• https://www.tamildigitallibrary.in/ |

| ExpectedCourseOutcomes–எதிர்பார்க்கப்படும்கற்றல்அமடவுகள் | | |
|---|---|---|
| OntheSucessfulcompletionoftheCourse,Studentswillbeableto | | |
| இப்பாடத்மதக்கற்பதால்பின்வரும்பயன்கமளமாணவர்அமடவர் | | |
| CO1 | சைவ சித்தாந்ததை அறிதல் | K4 |
| CO2 | வைதீகத்தில் நின்றும் மாறுபட்ட அவைதீகத் தத்துவங்களை அறிந்து வைதீகத்தோடு ஒப்பிட்டும் பார்த்தல் | K5,K6 |

| | | |
|---|---|---|
| CO3 | ஐவகை தரிசனம் உரகியல் அறிவு பெறுதல் | K3 |
| CO4 | வேதாந்த கருத்துகளை வழி வாழ்வியலை அணுகுதல் | K3 |
| co5 | சைவ சித்தாந்தம் என்னும் அறிவு நிலை தத்துவத்தை வழிபாடடு முறையோடு ஒப்பீட்டு சிவனை சினனாக்குதல் | K2 |

| | PO1 | PO2 | PO3 | PO4 | PO5 | PO6 | PO7 | PO8 | PO9 | PO10 | PSO1 | PSO2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CLO1 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 3 | 3 |
| CLO2 | 2 | 2 | 2 | 3 | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | 2 | 2 |
| CLO3 | 3 | 3 | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | 3 | 3 | 3 | 3 |
| CLO4 | 3 | 2 | 3 | 3 | 3 | 3 | 2 | 2 | 2 | 2 | 3 | 2 |
| CLO5 | 2 | 2 | 3 | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | 3 | 3 | 2 |